அவர்கள்
அன்பளிப்பு

1399

கணபதிதுணை.

# கச்சிக்கலம்பகம்.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
சென்னை-20.

இரண்டாம்பதிப்பு.

பூண்டி

அரங்கநாதமுதலியாரால்

இயற்றப்பட்டது.

---

சென்னபுரி:

ஊ-புஷ்பரதசெட்டியாரவர்களது

கலாரத்நாகர அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1890.

(*Registered Copyright.*)

UII

O., IKAH I

CO

இ.ஃ.

1901ஆம் ஜூலை. 10௳ புத்தகம் வாங்கியது.

கிரயம். ரூ. 1-0-0

உ

கணபதிதுணை.

# கச்சிக்கலம்பகம்.

காப்பு.

நேரிசை வெண்பா.

தங்கச் சிலையேடுந் தந்தவெழுத் தாணியுங்கொள்
துங்கக் கரிமுகத்துத் தூயவனென் - சங்கையொழித்
தேடெழுத் தாணி யெடுத்தறியே னிந்நூலைப்
பாடவளிப் பானற் பதம்.

---

நால்வர்துதி.

ஆசிரியவிருத்தம்.

தறையின்மிசைத் தமிழ்பெருகச் சைவநெறி தழைப்பவவ
தரித்த சால்பின்
மறையுறைவா மொருநால்வர் பதமலரைச் சிரங்கொண்டு
மடத்தைப் போக்கிக்
குறைவறுநாற் றோற்றத்தி னுளதாய துயரகலக்
குறிப்ப னன்றோ
பிறைசுமந்த சடையானொன் பிழைசுமந்த கலம்பகத்தைப்
பெறச்செய் வாரோ.

---

ஒருபோகு மயங்கிசைக் கொச்சகக்கலிப்பா.

இதுதரவு.

பூமேவு நான்முகனும் புயங்கவணை மாதவனு
மாமேவு நினதுமுடி மலரடிகா ணாத்திறத்தை
ஆராயு மறிவினரோ யம்பலக்கூத் தாட்டினையும்
வாரார்ந்த தனத்துமையாண் மகிழ்ந்துறையு மாட்டினையுங்
கழையிழைத்த வில்லானின் கண்ணினூறு கேட்டினையும்
பிழையிழைத்த முப்புரத்தார் பீடழிந்த பாட்டினையும்
அறமேய மால்விடையா யம்புதமா யம்பாகித்
திறமேய தேவியுமாய்ச் சேர்ந்தவருங் கூட்டினையுங்

கல்லடித்தார் சிலையடித்தார் கண்பறித்தார் முதலடியார்
தொல்லைநிலம் பிறவாமே துயரறுத்த பீட்டினையும்
பாற்கடலி னமுதெழுமுன் பகைத்தெழுந்த வாலத்திற்
கேற்கவிட மமைத்தமரர்க் கின்புறச்செ யூட்டினையுங்
கிழக்குவடக் கறியாத கீழ்மையருஞ் சிறப்பெய்தி
வழக்குமிடப் புரியுணர்வு வாய்ப்பளித்த தீட்டினையு
மறிபவரா மன்றியெம்போ லறிவற்ற சிறியவர்வீ
டுறுவகைமற் றில்லையென வுணர்ந்தெளிது காட்சிதரீஇ
மாகம்பத் தொடுமிறைஞ்சி வழிபாடு செயவுமையோ
டேகம்பத் தொருமாவி னினிதுவீற் றிருந்தருள்வோய்!

### ஈரடித்தாழிசைகள் - அ.

இடங்கர்வாய்ப் பட்டகளிற் றின்னுயிரைப் புரந்தசெயல்
கடல்வீழ்த்த நாவரையன் கன்மிதத்தற் கொப்பாமோ (க)

கைகைக்குக் கானடந்த காகுத்தன் பொறையினுநீ
வைகைக்கு மண்சுமந்த வண்மைமிகப் பெரிதன்றோ (உ)

கம்பத்த னுயிராமயக் கடுஞ்சமர்செய் கைவலியென்
கம்பத்தன் சிலையெடுக்கத் தலைநெரித்த கால்வலிக்கே (ங)

கொம்பனையாள் கல்லுருவிட் டின்னுருவங் கொண்டதினுஞ்
சம்பந்த னென்பைப்பெண் ணாக்கியது சால்புடைத்தே (ச)

அம்பொன்றாற் புணரிநீர் சுவறச்செ யாற்றலினும்
நம்பொன்றாப் புரமூன்றை நகைத்தழித்தன் மேன்மையதே (ரு)

எழுவிடையைத் தழுவிமண மெய்துமொரு செயலினுஞ்சீர்
மொழியரைய னமணாகரி முனிவொழித்த தற்புதமே (சு)

அண்டரிள மடவாரை யணைந்தவபி ராமமென்றோ
பண்டிருடி மனைவியர்கள் பாடழிந்த வனப்பினுக்கே (எ)

பற்குனற்கு மாயன்சு பத்திரையைத் தந்தவகை
சற்குணற்குப் பரவைதரு தண்ணளிக்கு நேராமோ (அ)

### அராகம் - சு.

உரையிட வரியதொ ரனலுரு வொளிதர
வரைமக ளிடமுறு வகைபுரி யளியினை (க)

நிழலிடு தருவடி நிலைபெறு கருணையை
வழிபடு மவர்பெற வருள்பர வெளியினை (உ)

பகலவ னனலவ னிறைமதி பரிவுறு
தகவமை யுரைமிகு தமனிய வொளியினை (ங)

பழமறை யொலிகெழு பலதல மருள்பய

# கச்சிக்கலம்பகம்.

' பெயர்த்தும்வந்த

### ஈரடித்தாழிசைகள் - அ.

நறைபூத்த மலர்க்கொன்றை நளினத்தின் மாண்டதுவே
பிறைபூத்த செஞ்சடையாய் பிறங்குபுய முற்றபினே (க)

பணியணிந்தாய் மற்றதைவிற பற்றியிசைத் தாய்கயிருத்
திணியவைத்தாய் மந்தரத்தே நஞ்சுணவுஞ் சிறப்பாமோ (உ)

மாலுலகங் காக்கநர மடங்கலுருக் கொளவம்மா
லாலுலகுக் கானதுய ரகற்றவலார் வேறுளரோ (ங)

மகிழிருந்தாய் மனையென்றே மாசுணமேற் றுயின்றானுக்
ககங்கனியச் சங்காழி யாண்டகைமுன் னருளியதே (ச)

கவுணியருக் கணிமுத்தங் காதலினீந் தருள்செயலக்
கவுணியருக் கணிமுத்தங் கனிந்திட்ட பரிசன்றே (ரு)

மதிவேணி மிசைமேவ மலர்விழியு மதியான
விதிசாறற வறியேமுன் மேனியழ கியம்புவதே (சு)

மூலைக்குறியும் வளைக்குறியுங் கொண்டதற்பின் முதலவனே
இலைக்குறியுங் குணமுமென லெவ்வண்ண மியைந்திடுமே (எ)

மாவடிக்கீ ழுறமுயுன் மலரடிக்கே மங்கலச்சொற்
பாவமைக்க நாவளிப்பாய் பழமறைசொல் பரமேட்டி (அ)

### நாற்சீரீரடியம்போதரங்கம் - உ.

கரந்தயங் கனன்மழு வேந்தி நெற்றியிற்
புரந்தெறு சுடாக்கணும் பூண்ட மேன்மையை (க)

கூற்றினைக் குமைத்திடு கோலத் தாளினை
யாற்றினை யருணட மாடும் பான்மையை. (உ)

### நாற்சீரோரடி யம்போதரங்கம் - ச.

ஏரோழ் புவனம் பரிந்து ணேற்றினை (க)
காரூா சடையிற் கரக்கு மாற்றினை (உ)
பாரரா பெரியோர் பணியுஞ் சாற்றினை (ங)
தேரரா தெளிவறு செருக்கை மாற்றினை. (ச)

### முச்சீரோரடி யம்போதரங்கம் - அ.

புரமெரி படநகை கொண்டனை (க)
புரிதவ மழிவகை கண்டனை (உ)
புரையறு தசைமிகை யுண்டனை (ங)
புணாவுற வருமறை விண்டனை (ச)
மணிமிட றுர்தரு மிருளினை ' (ரு)
மலைவளர் காதலி மருளினை (சு)
மறையொளிர் தோமறு பொருளினை (எ)
மகிழொடு மாவம ரருளினை. (அ)

### இருசீரோரடி யம்போதரங்கம் - கசு.

| | | | |
|---|---|---|---|
| சடையுறு செல்லினை | (க) | அமுதகு பாவினை | (௯) |
| விடையுறு மெல்லினை | (உ) | அனலுறு கோவினை | (க0) |
| கலையளை சொல்லினை | (௩) | சிலையில வாவினை | (கக) |
| சிலைவளை வில்லினை | (௪) | தலைநதி மேவினை | (கஉ) |
| மலைவலி புல்லினை | (௫) | மறைபடு நாவினை | (க௩) |
| வழிபெறு மல்லினை | (௬) | உலகுணு மேவினை | (க௪) |
| களமில கல்லினை | (எ) | கரிவளர் காவினை | (க௫) |
| பரவெளி யில்லினை | (அ) | கதிதரு மாவினை | (க௬) |

**தனிச்சொல்.** எனவாங்கு.

### நேரிசையாசிரியச் சுரிதகம்.

ஆரண வகில காரண பூரண
நாரண னறியா நாயக வேயக
முத்தே யறத்தின் வித்தே முக்கட்
சித்தே சத்தே யெத்தே வரும்பணி
அத்தா வன்று யளிக்கொரு வைப்பே
கத்தா வெனக்கூய்க் கண்ணீர் ததும்ப
உள்ளநெக் குருக வுரோமஞ் சிலிர்ப்ப
விள்ளற் கருநின் மேன்மையைப் புகழும்
பாவலர் தமக்குப் பழவது கூல
மேவலர் வோற வீறிய சீல
மாதுமை பங்குறு மாண்புடைச் சீரிய
தீதெமை யணுகாத் திறமரு ளாசிரிய
நால்வ ரிசைத்தமிழ் நலனறி நாத
மால்வரை மங்கை மணாள நீத
கொன்றைத் தொடையணி கோனே பசுபதி
குன்றைக் குழைத்த கோதறு குணநிதி
கல்லாப் புல்லேன் கனிவறு மனத்தேன்
எல்லாப் பிழையு மியற்று மேழையாற்
சொல்லப் படுமோ சொலற்கரு நின்புகழ்
புல்லப் படுமோ புரையறு நின்பதம்
உன்னப் படுமோ உத்தம நின்னெழில்
பன்னப் படுமோ பகவ நின்னருள்
பாடப் படுமோ பண்ணவ நின்சீர்
தேடப் படுமோ சேவடி யெனினும்
அல்லுறு நஞ்சா வக்கு மத்தமும்
புல்லு முவப்புடன் புனைந்தெனக் கனிந்து
சிற்றறி வினனுரை செய்புனை
முற்று மேற்பாய் மூவர்க் கையனே. (௯)

## நேரிசை வெண்பா.

ஐய முறுமனமே யண்ணறிருக் கச்சியரன்
செய்ய மலரடியைச் சிந்தித்தி - நையாமே
இன்மையறி யாவீகை யெச்சமறி யாவாய்மை
புன்மையறி யாப்பொறையைப் பூண். (௨)

## கட்டளைக்கலித்துறை.

பூண்ட வரவ மதியை யுஞறு புரந்தருளு
மாண்ட வரவம் புரிவார் செயலை யழித்துவக்குந்
தாண்ட வரவ ரிணையடித் தாமரை தஞ்சமென
வேண்ட வரமளிப் பார்கச்சி யன்பர்க்கு மெய்யரணே. (௩)

## புயவகுப்பு.

### இரட்டை ஆசிரியச்சந்தவிருத்தம்.

தனதனன தந்தனத் தனதனன தந்தனத்
தனதனன தந்தனத் தனதான தந்தன.

க. அரணெரிய வந்தரத் தமரர்துயர் சிந்தவெற்
பினையொருது ரும்பெனச் சிலைகோலி விஞ்சின
அரவமரி கந்துசெக் கரினிலகு செஞ்சடைப்
பனிமதிய நண்புறப் புரியாம கிழ்ந்தன
அகிலபுவ னங்களுக் கமுதிடுசி ரந்தரிக்
கிடமமாவ ரங்கொடுத் தகலாத ணைந்தன
அழலுருவ மன்றுபெற் றொருபுறவ மைந்தனுக்
கொளிவடிவு தந்தருட் பொலிவானி மிர்ந்தன

உ. கரடமத கும்பமத் தககபட தந்தியைச்
சமர்பொருது வென்றுரித் ததளாடை கொண்டன
கடலமுதை யும்பருக் குதவவெழில் கந்தரத்
திலகுகறை கொண்டுதிக் கிருநால ளந்தன
களபமணி யம்பிகைக் கனகதன மின்புறத்
தழுவிவரு மங்கலச் சுவடால்வி ளங்கின
கதிர்மதிய மங்கிமுக் கணிஞெளித யங்கிடக்
கடுவுடைய திண்சினத் தரவாட நின்றன

௩. சரமழைபொ ழிந்தபற் குனனருள்பொ ருந்திடப்
பகைவர்கெடு வன்படைக் கொடையாலு வந்தன
சமரபுரி கந்தனைப் புலவருய மண்டமர்த்
திறலவுணர் பங்கமுற் றிடுமாறு தந்தன
சததளம லர்ந்தபொற் றவிசினிலி ருந்தவச்
சதுமுகன்ம றங்கெடத் தலையோட ணிந்தன
சலமிசைது யின்றசக் கரதரன லம்பெறத்
தருமவிடை யம்புறப் பரிவோடி ணங்கின

ச. இரவினவிர் திங்களிற் செலுமொளிபெ றுங்குழைக்
கவுரியிட மன்பினுற் றிடவாசை மிஞ்சின
இரணியனு ரங்தொலைத் தெழூரம டங்கலைச்
சரபவுரு வந்தரித் தமராடி வென்றன
இடபமிசை வந்துபொற் பதநசைகொ ளன்பருக்
குயர்பதவி தந்திசைப் பருமோகை கொண்டன
இனிமைதரு கம்பமுற் றருளநக வெந்தைநித்
தியநிமல சுந்தரப் பரனூர்பு யங்களே. (ச)

## ஆசிரியவிருத்தம்.

புயங்கப் பணியார் புவியுண்ட புனித விடையார் புனையின்மதி
தயங்கப் பணியார் சடையாளர் தயையின் சாலை தனைநிகர்வார்
இயங்கப் பணியார் புரமெரித்த வீசா கச்சி யிடையமர்ந்தார்
மயங்கப் பணியா ரவர்திருத்தாள் வணங்கி ரிடும்பை வற்றிடவே. (ரு)

## அம்மானை. கலித்தாழிசை.

வற்ற வளக்காஞ்சி வாழ்ந்தருளே காம்பரனூர்
செற்றூர் புரமெரித்த தீயர்கா ணம்மானை
செற்றூர் புரமெரித்த தீயரோ யாமாயிற்
கற்றூர்க ளந்தணராக் கழறுவதே னம்மானை
கழற லறுதொழில்சேர் காரணத்தா லம்மானை. (சு)

## நேரிசைவெண்பா.

அம்மானைக் கையமைத்தா னக்காலை யோடவைத்தான்
சும்மா விருந்துமதற் சுட்டெரித்தான்—பெம்மான்
பதிக்கச்சி மேய பரமன் பணிந்து
துதிக்கத் தருவன் சுகம். (எ)

## கட்டளைக்கலித்துறை.

சுகந்தரு கச்சிப் பதிவந் தடியர் துயர்களைவோர்
நகந்தரு மெல்லியற் காம விழியிரு நாழிநெல்லா
லுகந்தரு முப்பத் திரண்டற மோம்பச்செ யுத்தமர்பா
தகந்தரு துன்பொழிப் பார்பணி வீரவர் தாண்மலரே. (அ)

## ஆசிரியவிருத்தம்.

மலர்க்கஞ்சன் சிரமிழந்தான் கோப்புரக்க மலையெடுத்தான்
வன்றி யானுன்
சிலைக்கரும்பா னுருவழிந்தான் சேணியங்கு மிருகதிருஞ்
சிதைந்து நொந்த
கலக்கரிய பகைப்புரங்க ணீறுபட்ட கச்சியே
கம்பர் மேன்மை
நிலைப்படவா யாமையினன் றேமனமே புகழ்ந்தடைநி
நிமல வாழ்வே. (கூ)

## வலைச்சியார்.

### இரட்டையாசிரியவிருத்தம்.

வாளைக் கயலை நிகர்த்தவெங்கண்
வலைச்சி யீர்நும் வனப்பெவரான்
மதிக்க வமையு மரன்கச்சி
வந்தீ ரளவா மயறந்தீர்
தோளைத் தழுவிற் சுகம்பெறலா
மூட லொழிவீா நீர்க்குமிழி
சுழிதேம் புளினந் தோன்றிடுமால்
துயர முறுவே னடைகிழங்கா
ஞாளைக் கழியா திருவிதழி
னறவைப் பருக நச்சுறக்கொ
ணனக் கருப்பஞ் சிலைவேளை
நாணச் செய்வேன் மலங்குறேன்
கோளைப் போக்கற் குறவைமட
வைப்பா மகத்தைக் குழைத்தென்மேற்
கொள்வீ ரிரதத் தென்காலான்
கொடிய பகழிக் குடையேனே. (க0)

### கலிநிலைத்துறை.

ஏனங் கொன்று ரோனக் குருளைக ளிடர்தீர்த்தார்
மானங் கொன்றை வலன்வைத் துமைமா னிடம்வைத்தார
தானங் குறைவார் தானத் துறையாா தமிழ்வல்லாா
கானத் துறவார் கம்பத் திடையே மகிழ்வாரோ. (கக)

### ஆசிரியச்சந்தத்தாழிசை.

மகிழார மாவாளை மணமேவ விழைவாய்
மணியார மரவேயின் மலைபச்சை யுடையே
இகழ்ம மிசைபாடி நடமாடு மிடமா
மிகவாத தொழிலைய மில்வாழ்வொர் மலையின்
மகவாய வொருநீலி மறைவுற்ற சலத்தாள்
வரமைந்த ஞெருமாதின் வழிநின்ற திருடன்
தகவீது தெரிகாத லொழிவாயென் னுளாகேள்
தனாமீதெந் நலமெய்தி மகிழ்வாய்மின் னரசே. (கஉ)

### விருத்தம். மடக்கு.

அரசுக விதையாரும் .. ... பரசுக விதையாரும்
அடையமை மானும் .. புடையமை மானும்
வரமா சடையாரு .. .. முரமா சடையாரும்
வயமா திரத்தாரும் ... .. ... புயமா திரத்தாரும்
கரமணி வடத்தாருஞ் .. .. சிரமணி வடத்தாரும்

களிமறைப் பரியாரு ... மொளிமறைப் பரியாரும்
அரிபதி யானுருங் ... ... ... கிரிபதி யானுரும்
அடியார் மாவாருங் ... ... கடியார் மாவாரோ. (கங)

## இரட்டையாசிரியவிருத்தம்.

மாதுமையாள் பனிமலையில் வளர்ந்தாணின் மதலையரிற் கயமு கத்தோன்
வரமுனிவன் வேண்டவட வரையேட்டிற் பாரதப்போர் வரைந்தா னீயப்
போதலங்க லணிகுமரன் குன்றுதொறும் பேருவகை பூப்ப மேவிப்
புனிதவிளை யாட்டயாந்தான் கச்சியமர் புண்ணியநீ கயிலை மேரு
மாதிரத்தே வதிந்தனையென் கல்லனைய மனத்தினுடன் குடும்பத் தோடு
மருவவொரு தடையுமிலை மலைசிலையா வளைத்தநினக் கெளிதே யென்றன்
கோதுடைய மனச்சிலையைக் குழைத்தன்பி னெகிழ்வித்த லைய முன்னாட்
குருகுய்ய வுபதேசங் கூறியநீ யெனக்குரைத்தாற் குறைமட் டாமே. (கச)

## கட்டளைக்கலித்துறை.

மட்டிக்குட் டங்குங் கணுநிகர் கஞ்ச மலரனைய
தட்டிக்குட் டங்கை முருகனத் தாகச்சிச் சங்கரனே
பெட்டிக்குட் டம்பண மிட்டுவப் பார்குணம் பெட்டுவினை
கட்டிக்குட் டன்றுய ரொல்லா மகன்றிடக் கன்டருளே. (கரு)

## வெண்பா.

கண்டவளை மேவிக் கலந்துண்ட கள்வனெலி
கொண்டவளை நீர்க்கச்சிக் கோமானே—பண்டுனது
தாளை மருவுந் தகைமையிலா னுற்றதெவன்
தோளை மருவுஞ் சுகம். (கசு)

## தூது-கிளி.

## ஆசிரியவிருத்தம்.

சுகமே மறைமா வடிமே வியவெந்
றுணைவற் கெளியேன் றுயரைப் பகர்வாய்
மகமே ருசிலைக் குனிவா னலனென்
மதனன் கழையே வையம் புகைக்குஞ்
சகமே ழுயின்றோன் பெயர்கொள் ளெளியேன்
சரணு கதிசேர் தலைவேண் டினனென்
றகமே குழையப் புரிவா யெனில்யா
னயர்தீ தகலத் தருவாய் சுகமே. (கஎ)

## கலிநிலைத்துறை.

தீதறு நூலுணர் தெள்ளிய சிந்தையர் மனமூடே
காதலின் வாழே காம்பரர் முடியைக் காணவய
னேத முறக்கோ வெகின மெனப்போய் முடிகாணு
வேதனை பெற்றோ வேதனை யுற்றுள் வெளியானுள். (கஅ)

### ஆசிரியவிருத்தம்.

வெளிவீட் டானைக் காட்டானை
வியன்மா வானைச் சேவானை
ஒளிவிட் டோங்குங் கச்சியனை
யுயர்மா மறையி னுச்சியனைக்
களியுற் றுடுங் கூத்தானை
யகில மனைத்துங் காத்தானை
அளியுற் றினிது புணர்ந்திடுதற்
கநங்கன் செயலொன் றிலேமானே. (௧௯)

### இரங்கல். ஆசிரியவிருத்தம்.

மாமையை யடைந்தாய் வானக முற்றாய்
மழைக்கணீ ருகுத்திடப் பெற்றாய்
காமுற வணஞ்சேர வில்வளை விட்டாய்
கலைமதி யொளித்தலைப் பெட்டாய்
நாமுற விழிக்க மின்னிடை யானாய்
நள்ளிரு ளம்பரம் போனாய்
ஏமுறு மென்போற் கொண்டலே கச்சி
யீசனை விழைந்தனை சிறப்பே. (௨0)

### மடக்கு. விருத்தம்.

சிறுகாலின் மணமளவுந் . .. திருக்காஞ்சி யுள்ளீர்
சேயிழையாட் ககலுமிடைத் .. திருக்காஞ்சி யுள்ளீர்
மறியோடு மழுவிடமா மாசுணந்துன் புடையீர்
மங்கையணிந் திடுமுத்தம் . மாசுணந்துன் புடையீர்
வெறிதாசை கூடன்மணத் . . துறவாலங் காட்டீர்
விதிவிழைவு கண்டவிடத் ... .. துறவாலங் காட்டீர்
அறிவேலுஞ் செயலிட்டீ . . ரம்பரங்கா வணமே
அளிப்பீரங் கொன்றைமல . ரம்பரங்கா வணமே. (௨௧)

### ஆசிரியவிருத்தம்.

காரானைத் தோலுரித்த கறுப்பி னானைக்
களித்துடல நீறணிந்த வெண்மை யானை
வாரானை யூர்ந்திலங்கு செம்மை யானை
வலத்தானை யிடப்பாகப் பச்சை யானை
நீரானைச் செஞ்சடையி னெறறி யுறற
நெருப்பானைப் பொருப்பானைச் சுகத்தி ரச்சீரப்
பேரானைப் பெரியானைக் கம்பத் தானைப்
பெம்மானை யெம்மானைப் பேசு மாறே. (௨௨)

### கலிவிருத்தம்.

மாறி யாடு மலரடி மாமறை
கூற வாடுங் குவலயத் தின்னறந்

தேற வாடுந் தெளிதமிழ்க் கச்சியின்
பூற வாடு முளமகிழ் பொங்கவே. (உ௩)

**கைக்கிளை - மருட்பா.**

பொங்கு மருணயனப் பூவி னிதழ்குவியு
மிங்கு மலர்க் கோதை யிதழ்வாடு—மங்குறவழ்
மாடக் கச்சியில் வாழுமெம் பெருமான்
குறையா வளக்கழுக் குன்றி
லுறைவா ளிவள்பூ வுதித்தனூ யவளே. (உ௪)

**மறம் - ஆசிரியவிருத்தம்.**

தூதுவந்த தொழிலிலாத வாவழக்கை யறிதியோ
தொல்லைநந்த மரபினோர்கொ டுந்தரக்கு வாரணம்
பூதலத்தி னிலையெனக்க லைவிழைத்த சிலையரோ
பொன்றிணிந்த கொங்கைமான்ம கட்குறத்தி வள்ளிமுன்
போதகத்தை யேவியந்த மாதகத்தை யச்சுறப்
புரிந்தசெய்கை சாலுநுங்கு லம்புலப்ப டுத்திடச்
சூதவாழ்க்கை யார்துடிப்பி னகம்வைத்த வான்மையார்
சொன்மறைக்க வாயதாங்கொ ரேற்புணர்ந்தி சைத்ததே. (உ௫)

கட்டளைக்கலித்துறை.

இசையா ரணத்தின் முடியாா திருக்கச்சி யீசரன்பிற்
பசையா ரணங்கொரு பங்குடை யாரரி பங்கயத்தன்
மிசையா ரணங்கொழித் தோருள மேவிய மெய்யருத்தி
நசையா ரணங்குறு நானவா ஈற்பத நாடுவதே. (உ௬)

ஆசிரியவிருத்தம்.

நாடுந் தொண்டர் மகிழ்வெய்த நறுமா நீழ லமர்ந்தானைப்
பாடும் பணியே பணியாகப் படைத்தேன் பழைய வினைதுடைத்தேன்
ஓடுந் துடியுங் கரத்தமைத்தோ னேங்கா ரத்தி னுட்பொருளைத்
தேடுந் திறத்தோர்க் கறிவித்தோன் றேவி யுமையாள் காதலனே. (உ௭)

ஒருபொருண்மேல்

மூன்றடுக்கிவந்தஆசிரியத்தாழிசை.

௧. காதங் கமழுங் கடியாரு மாந்தருக்கீழ்
நாத னருளாள னண்ணியசீர்ச் செவ்வி
காதிற் பண்ணூருங் கவியின்ப மானுமே.

௨. பூவின் மணமார் புனிதநறு மாந்தருக்கீழ்ச்
சேவின் மிசைத்திகழுந் தேசனமை செவ்வி
நாவின் னமுதூறு நற்சுவையை மானுமே.

ந. மண்ணிற் சிறந்த வளமளிக்கு மாந்தருக்கீழ்
விண்ணிற் பொலிந்தான் விளங்கியுறு செவ்வி
கண்ணிணையாற் காண்பரிய காட்சியினை மானுமே. (உஅ)

வெளிவிருத்தம்.

மாக்கைக் குருகின் றமும்புற் றுரு மாவாரோ
ஆக்கைக் கயனை யமைத்திட் டாரு மாவாரோ
காக்கைக் கரியைக் கனிவித் தாரு மாவாரோ
போக்கைக் கனலைப் பொலிவித் தாரு மாவாரோ. (உகூ)

களி - கட்டளைக்கலிப்பா.

மாவி னீழல் வதிந்தருள் வாகச்சி
வாழு மின்ப மருவு களியரோந்
தேவ ரன்று சிதைந்தவ ரோமது
வாவி சீதர னுன்ன மயங்குறின்
நாவ லாந்துமெய் பேசுவ ரின்னறை
யுண்ட நன்மையர் நறபனை தெங்குசேர்
காவி டைப்பாடி யாடுவா மண்டரு
கண்ணி றைந்த வமுதை யருந்தவே. (ந0)

இதுவுமது. ஆசிரியவிருத்தம்.

அரவிந்த மலரின்கட் குடியனய னமராசுரா பானத் தாரோ
வரமுறுகா விரிநதிக்கட் குடியனே திருமருவு மார்பி னுனுந்
தரணியின்கட் குடியர்பெருந் தவமுனிவர் சித்தரும்விண் ணவர்கடாமுங்
கரவடமேன் றிருக்கச்சிக் கண்ணுதலார் பனையின்கட் குடியர் தாமே.(நக)

கட்டளைக்கலிப்பா.

கட்ட தும்புமி தழித்தெ ரியலைக்
கச்சி நாதா தருவ திலையெனிற
றுட்ட மன்மத னைங்கணை யாமணச்
சூத முல்லைய சோகம ரவிந்தங்
கெட்ட வுற்பல மஞ்செரி போல்வருங்
கிளிய னீர்மட நாணமச் சம்பயிாப்
புட்ட யங்குயி னாந்தும வைக்கினை
யோவென் றுதிரச் செம்மமு வாளர்க்கே. (நஉ)

ஆசிரியவிருத்தம்.

மழுவேந்து வலக்கரத்தர் மழையேந்து சடைச்சிரத்தர் வான்பு ரத்தா
விழவாங்கு பூதரத்தா வேளெரித்த மாவுரத்த ராத ரத்தா
தொழவாழு மாதிரத்தா நடமாடு மெரிகரத்தர் தூவ ரத்தர்
குழையாடு செவியரத்தர் கச்சியெனு மாகரத்தர் குணக்குன் றுரோ. (நந)

**சித்து - ஆசிரியவிருத்தம்.**

குன்றைக் குனித்தகச்சிக் கோமானார் சித்தவுருக்
    கொண்ட நாள்யா
மென்றைக்குஞ் சிறப்பெய்த விச்சையுடன்
    கற்றவித்தை யிற்றென் றாமோ
மின்றைக்கு முடிவேந்தர் விரும்பவொரு
    தினத்திரும்பு தனைப்பொன் செய்வேம்
இன்றைக்குப் பொன்னளித்து நாளைவெள்ளி
    யியற்றினும்பின் சனிய தாமே. (௩௪)

இதுவுமது.

சனியாகு மூழ்வலியாற் சகலகலை யறியுணர்ச்சி
    தகைபெ றாதால்
தனியாகு மெங்களுத வியைப்பெற்றுச் சாற்றும்ப
    ரடைந்தார் பொன்னில்
கனியாரும் பொழிற்கச்சிக் கண்ணுதலார் கைச்சிலம்பைக்
    கனக மாக்கிப்
பனியாருங் கடல்வண்ணன் மார்பினைப்பொன் னிருப்பாகப்
    பண்ணி னோமே. (௩௫)

கலிநிலைத்துறை.

இருப்புக்கு வெண்பொன் பசும்பொன் னகங்கொண்ட
    விறைவாவெனைக்
கருப்புக் குழன்றெய்க்க வையாம லருள்கூர்ந்து
    காப்பாய்கொலோ
பொருப்புக்கு வீழப் புவிக்காடை பொங்கப்
    புரஞ்செற்றசெந்
நெருப்புக்கு வதனத் திடந்தந்த வொருமா
    நிழற்சோதியே. (௩௬)

நேரிசைவெண்பா.

சோதிப் பரம்பொருள்வாழ் தூயவிடந் தொண்டாநெஞ்சே
வேதத் தனிமுடியோ வேள்விபுரி—மாதவர்வாழ்
தில்லையோ கூடலோ சீர்க்கயிலை மாமலையோ
தொல்லையே கம்பமோ சொல்.

**இளவேனில். ஆசிரியச்சந்தவிருத்தம்.**

பனிக்கால மேகப்ப லம்பூவி றைக்கும்
    பருவத்த ருட்கச்சி யிறையிங்கு வாரான்
குனிக்கோல நம்பன்ற ணிப்பென்ன சொல்வான்
    குன்றத்தி ருந்தானை மன்றத்து வைத்தே

தணிப்பாக வென்னைப்ப சப்பிக்க லந்த
சமயத்து ளாச்சத்தி யங்கூறி யரவை
இனிப்பாரு மொழியாள ளிதுசெய்த லழகோ
வென்றேயு டன்கேட்ப னினியென்ன குணமே. (ஙஅ)

## மடக்கு. ஆசியவிருத்தம்.

குணதிசைவெய் யோற்கலரு மரவிந்தம் பானலமே
குலைந்திடுந்தென் பொதியில்வரு மரவிந்தம் பானலமே
கணமிகுவெண் முத்துயிர்க்கு நந்தனந்தங் கயலாமே
கச்சியிறை தணத்தலின்வார் நந்தனந்தங் கயலாமே
அணங்குறவின் மதன்முளரி முலையெய்திடு மாசுகமே
ஆசற்று ரிதழ்பருக முலையெய்திடு மாசுகமே
வணமணியின் பரஞ்சுமந்த வாழிதயங் கருங்கலமே
வஞ்சருக்கென் னெஞ்சரங்க வாழிதயங் கருங்கலமே (ஙகூ)

## பாண். நேரிசையாசிரியப்பா.

கலன்பணி யுடைதோல் கலம்பலி யோடுகொண்
டிலந்தொறு மிரந்து ணிறைதரு மொற்ற
மலைவளா காதலி மங்கள வல்லி
சிலைவேட் களித்த சிற்சுக மங்கை
இழைவகிர் நுண்ணிடை யேந்திழை பங்கன்
பழைய கள்வன் பண்பினை யோர்ந்தேன்
பாணனே நின்னைப் பண்ணிசை கூட்டி
வீணையிற் பாடி விழைவை யூட்டித்
தன்வயப் படுத்தத் தந்திரங் கற்பித்
தென்வயிற் செலுத்து மிங்கிதந் தோன்றப்
பாடினை யின்புறப் பாடல் கேட்டாங்குக்
கூடிய கொற்றவன் குணமறி வாயோ
மலைப்பெணத் தரியை மகிழ்வாய் மணந்து
மலைப்பெணைச் சடையி லமைத்த தேனுளா
கம்பை நதியயல் காம நயனியா
மம்பை யருச்சனை யாற்றல்கண் டவளை
யுள்ளங் கலங்க வோங்குநீ ரழைத்துக்
கள்ளப் புணர்ச்சி கலந்து வடுப்பட்
டின்னமு மாறு தேய்ந்த தன்மை
யென்னவென் றுரைப்ப னிதுவலா தொருநாட்
டாரு வனஞ்செலீஇத் தாபதப் பன்னியா
தெருமர லுற்றுப் பருவர லெய்தக்
கோவண நீத்துத் தீவணம் பூத்தம்
மின்னிடை யாருடன் விருப்புறப் பேசித்
துன்னிய தன்மை சொல்லுந் தகைத்தோ
வனிதையர் மயங்க வளைகொணர்ந் தன்று

மதுரையில் வந்த வசையே சாலுஞ்
சாலும் பாண சாலும் பாண
யாதுங் கேளேன் யானினி மயங்கேன்
போகென வுரைத்தும் போகா யந்தோ
அன்னை யறியா தணைந்தே னவனைப்
பின்னை யுற்றிடும் பீழை நினைத்திலன்
அகலுதி பாணா வனையறி வாளேல்
தகரு நின்சிரந் தமரும் வெகுளுவர்
நெஞ்சி லிட்ட நெருப்பின் வெப்பினை
வஞ்சக னறிய வழுத்துவை பாணா
மறந்தே னன்னையை மன்னனைப் புணர்ந்து
சிறந்தன மென்றே திகைத்தே னித்துணை
பட்டது சாலும் பாணனே மடவார்க்
கிட்டது தானே யியலும் பரமனை
வெறுத்தலும் வீணே விழைவு
பொறுத்தலு மிலனினிப் புரிவ னறமொன்றே. (௪0)

## ஆசிரியவிருத்தம்.

தொண்டாக் குறவே யானைத்
தூய மறைமா நிழலானை
அண்டாக் கிறையா மடலானை
யக்கு மெலும்பு மணிவானைக்
கொண்டல் வண்ண னெண்கண்ணன்
கூறற் கருஞ்சீர் கொண்டானைக்
கண்டத் துறையு மாறுகடற்
கடுவுண் டானைத் துதிப்பாமே. (௪௧)

## தூது-மேகம். நேரிசை வெண்பா.

கடுக்கைத் தொடைநயந்தேன் காதலுடை யார்யா
னடுக்கை யுறுமா நயந்தார்—கொடுக்கைக்குச்
செல்லே சிறந்தாய் திருக்கச்சி வாணர்பால்
வல்லே தொடையிரந்து வா. (௪௨)

## கட்டளைக்கலித்துறை.

இரந்துயி ரோம்பிட வேழை மனங்கொதித் தின்னலுற
வுரந்தொலைந் தோயப் பலநோ யுடற்ற வுறுபசியால்
வருந்துபு மானமுந் தீரமு மங்கி மடிந்தொழிவீர்
திரந்தரு மேகம்ப வாணனை நீரென்கொல் சேர்கிலிரே. (௪௩)

## தூது - நெஞ்சு. நேரிசைவெண்பா.

என்னெஞ் சினுமினியா ரில்லையென வெண்ணியதைத்
துன்னற் கருங்கச்சித் தூயவர்பா—லின்னலறப்

பூங்கொன்றைத் தாரிரக்கப் போதி யெனவிடுத்தேன்
தீங்கொன்றைச் சூழ்ந்திலா தேன் (சச)

கலிநிலைத்துறை.

ஒன்று சூழின்வே றொன்றுறூஉந் துறவுணர் வுலைந்து
பின்றை யெய்திடும் பெற்றியுத் துணர்விலாப் பேயேன்
என்று நின்னரு ளிருங்கடல் குளிப்பதென் னரசே
மன்றி லாடிய குழகமா நீழல்வாழ் மணியே. (சரு)

வஞ்சித்துறை.

மாநீழ னல்லார்
ஆனேறு தொல்லார்
தேனேறு சொல்லார்
வானேறு கல்லார். (சசு)

ஆசிரியவிருத்தம்.

கல்லாலின் கீழிருந்து கலைவிரித்துப் புணாவளித்த
கள்வ னாக்குச்
சொல்லாலா யிரமுகமன் கூறுவையக் கச்சியர்க்குச்
சுகுண முண்டேல்
வில்லாடும் புயவிதழி விரும்புவையின் றேலின்றே
விழையப் பெற்றாள்
அல்லோடக் கண்டவிட மாயும்வகை யறிவளென
வறைதி மாதே. (சஎ)

நேரிசைச்சிந்தியல் வெண்பா.

மாவுடையான் வெள்ளி மலையுடையா னென்டிசையாந்
தூவுடையா னல்வேதச் சொல்லுடையான்—தாவிலறச்
சேவுடையா னெங்கள்குலத் தே. (சஅ)

ஊசல். ஆசிரியவிருத்தம்.

தேவார முதலியவைந் துறப்பும் வாழச்
சிறந்தமறை யாகமங்கள் செழித்து வாழத்
தாவாத சித்தாந்த சைவம் வாழச்
சந்தவனாச் செந்தமிழ்நூல் தழைத்து வாழ
நாவாரும் புகழ்க்கச்சி நகரிற காம
நயனியொடு முறையிறைசீா நன்கு பாடிப்
பூவாரு மலர்விழியீ ராடி ரூசல்
புத்தமுத கிகர்மொழியீ ராடி ரூசல். (சகூ)

மதங்கி. ஆசிரியவிருத்தம்.

ஆடரவ மணிக்கசைத்த வமலர்திருக் கச்சிமறு காடி மைந்த
ருடுருவு பிணைவிழியோ டிணைவாளு மோச்சிவரு மொருமதங்கீ

நாடவரு மிவைக்கிலக்கம் யாதோநும் மொழியமுத நல்கீர் விண்ணோர்
பாடமையப் பயவாரி கடைந்துகரம் வருந்தியதென் பண்டு தானே. (ருo)

**இடைச்சியார். ஆசிரியவிருத்தம்.**

பண்டுமலை கொண்டுபயோ தரத்திகலை வென்றிடுமைம்
படையா னுக்கு
மண்டுபயோ தரகிரியைக் காணிக்கை யிட்டீரால்
வள்ளல் கச்சிக்
கண்டயங்கு மிடைச்சியீ ராடைநீக் காதருசி
காண்மி னென்பீர்
கொண்டவளை யுருக்காமே கொளவிணங்கீர் ததியெண்ணீர்
நயமோர் விற்றே. (ருக)

**தூது - வண்டு.**

நேரிசைவெண்பா

ஓர்காற் செலினறுகா லுற்றனையென் பார்வளமை
ஆர்காஞ்சி மேய வமலர்திரு—மார்பாரும்
தாராய கொன்றை தரச்சேறி வண்டேயான்
பேராத வின்பம் பெற. (ருஉ)

ஆசிரியவிருத்தம்.

பெரியானைப் பேரின்ப நிறைவீட் டானைப்
பிறைமதியம் பிறங்குசடா தரனை யார்க்கு
மரியானை யடலவுணர் புரநீ றுக்க
வழலூற்று நகையானை யரனை வேழ
வுரியானைத் திருக்கச்சி யுடையான் றன்னை
யுன்னரிய குணநிதியை யொப்பில் வேதப்
பரியானை யகநிறுவித் துதிப்பா ரன்றே
பவத்து வக்கைப் பாற்றுறுமா டவர்க ளாவார். (ருங)

**வெறிவிலக்கு.** ஆசிரியவிருத்தம்.

ஆடவரும் பெண்மைவிரும் பபிராமர்க் கணங்குற்ற
வறிவி லேனைச்
சாடவருஞ் சிறுகாலுந் தழன்மதியுஞ் சாகரத்தி
னொலியு நெஞ்சம்
வாடவரு மலர்க்கணையு மறிவீய விரிந்திடுமோ
வனசத் தானுந்
தேடவரு மேகம்பா தாமத்தைக் கொணர்வீரேற்
றேறு வேனே. (ருச)

கட்டளைக்கலித்துறை.

தேரு மனத்தைத் திருப்பித் தெளிவுறச் செய்துபின்ன
ராருத மும்மை மலப்பிணி நீங்கநல் லாற்றினுய்ப்பர்

மாரு வளக்கச்சி மாநிழ லாரு வணன்றனக்குப்
பாரு தரவ மணிந்தவர் பேரருள் பாடுதுமே. (ருரு)

## கட்டளைக்கலிப்பா.

பாடு பட்டும் பயன்றரு கச்சிவாழ்
பண்ண வன்னடிப் பத்தியில் பாவிகாள்
கூடு விட்டுயிர் போம்பொழு தொன்றையுங்
கொண்டு போதலி லாமையை யுன்னிலீர்
வீடு கட்டுவிர் வெள்ளிபொன் னீட்டுவீர்
வேண்டு நன்மணி யாடையும் பூணுவீர்
ஏடு கட்டிய பாறயி ருண்ணுவீ
ரொப்ப டிப்பெறு வீர்பொற்ப தத்தையே. (ருசு)

## கட்டளைக்கலித்துறை.

பதஞ்சேர்த்துப் பாடியென் பாசத் தொடர்ப்பட்டுப் பாவையரிங்
கிதஞ்சோத்துக் கொஞ்ச மயங்கி யிடாப்பட் டிரங்குவனங்
கதஞ்சோத் தனைக்கசைத் தாய்கச்சி வாண கடையனெந்த
விதஞ்சோத னின்பதந் தாயனை யாய்கதி வேறிலையே. (ருஎ)

## கலிவிருத்தம்.

அனைத்திடமு மொளிமருவ வமைந்ததொரு விழியே
மனத்துயரை மாய்க்கவருண் மலாந்ததொரு விழியே
சினத்துலகைச் சிதைக்கவழல் சிறந்ததொரு விழியே
நினைத்துலகந் தொழுகச்சி நின்மலாமு விழியே. (ருஅ)

## ஆசிரியச்சந்தவிருத்தம்.

விழியால் விழியுறு பிறழ்வால் விதுரிகா
நுதலா னுதலுறு சிலையான்மென்
மொழியான் மொழியுறு சுவையான் முழுநல
முலையான் முலையுறு பொலிவாற்பல்
வழியாற் கணிகைய ருறவால் வலிகெட
வயர்வே னினிமருண் மருவாமே
ஒழியா நலனுற வொருமா நிழலுடை
யொளியாா சடையவ ரருள்வாரே. (ருகூ)

## சந்தத்தாழிசை.

சடைகரந்த வரவமிந்து பகைமைமாறு தகைமையார்
தரமறிந்து கருணைநல்கு தனையிறந்த மகிமையார்
மடைதிறந்த கடலையொத்த மருளகறறு மருளினா
மகிழ்சிறந்த முதல்வாதங்க மலைகுழைத்தென் விறல்மதன்

படைதுரந்து நெஞ்சிருப்பு வஞ்சரோன் குழைத்திலர்
பகரொணாத பண்பமர்ந்த பரமரின்னு மருகுரு
திடைமறந்த தென்கொலோவெ னிளமைநன் னலம்பெறற்
கெனையணைந்த கச்சிமேவு மிணையிகந்த போதரே. (௬0)

கட்டளைக்கலித்துறை.

போதவித் தேபுக லேயற வோர்க்குநம் புந்தகையாா
தீதவித் தேற்குநற் செவ்விய னேபுலத் தெவ்வடா
வேதவித் தேமிக வேசறு வேற்கு விளைந்தருணீங்
காதவித் தேன்சுர ருண்கச்சி வாழன்பாக் கண்ணியனே. (௬க)

நேரிசைவெண்பா.

அண்ணியரா னாறவோர்க் கத்த ரலரிதழிக்
கண்ணியாநூங் கச்சிநகாக் கத்தரடி - மண்ணியமுத்
தந்தம்பற் பந்தாந் தனந்தந் தனவிடையாா
தொந்தங்கொ ளென்றன் றுணை. (௬உ)

ஆசிரியவிருத்தம்

துன்னிமித்தங் கண்டுமெஞ்சா தொருதுணையும் பிணையாது
துணைந்து சென்று
பொன்னிமித்தஞ் சிலைசுமந்து முறுவலித்துப் புரமெரித்த
புனைநீ ரொந்தாய்
என்னிமித்த மென்னகத்தே குடிபுகுந்தாய் திருக்கச்சி
யிறைவா வேழை
தன்னிமித்தந் திருவுள்ளங் கனிந்ததன்றித் தகுதிமற்றென்
றருக்கி னேற்கே. (௬௩)

ஆசிரியவிருத்தம்.

தருக்குறு தெரிவையர் செருக்கிலே
தளையிடு மவாமொழி யுருக்கிலே
மருக்கமழ் குழலணி சொருக்கிலே
மனமிவ ரிளமுலை நெருக்கிலே
பெருக்குறு விழைவமர் திருக்கினேன்
பிசிதரு மறைமுதல் பிறையினோ
டெருக்கணி கச்சியி னிறைவனு
ரிரங்குறு வகையெது புகல்வனே. (௬௪)

மடக்கு. ஆசிரியவிருத்தம்.

கற்றரு மாதின் பங்குடையார்
கச்சிய ரொனதின் பங்குடையார்
சிற்றளை யுள்ளுறை வாயலவா
தென்வளி காதுறை வாயலவா

சுற்றுமு டைந்து வருந்திடோ
தோற்றுமி டைந்து வருந்திடோ
பெற்றிடு முத்தம ருங்கழையே
பேசரி யானாம ருங்கழையே. (சுரு)

**பனிக்காலம்.** ஆசிரியச்சந்தத்தாழிசை.

அழைக்காம லணுகார்வெவ் வலர்கூர மாய்வே
னையோவெ னையர்க்கு ளைப்பாரு மில்லை
கழைக்காம னெய்யுஞ்ச ரந்தைக்க நொந்தேன்
கண்ணுள ரிந்தப்ப னிக்கால மோரார்
குழைத்தாரபொ ழிற்கச்சி வாழண்ண லாரைக்
கும்பிட்ட ழைப்பீரு ழைப்பீம னத்தைப்
பிழைத்தேன வேனென்று பிச்சாக்கி யம்பீர்
பெண்பேதை யுய்யுந்தி றம்பாங்கி மாரே. (சுசு)

**மடக்கு.** ஆசிரியவிருத்தம்.

மாதனையிற் றருநறும்பூ விளைவிடுக்கும் காலம்
மதன்சினந்து மங்கையனை விளைவிடுக்கும் காலம்
காதமணங் கமழ்சோலை பண்புணரும் காலம்
கணவரிளங் கோதையாதம் பண்புணரும் காலம்
சீதமுறு கழைக்கரும்பின் கண்டழைக்கும் காலம்
சிறறிடையாா தந்தலைவாக் கண்டழைக்கும் காலம்
கோதறுசங் கினம்பழனப் பங்கமுறும் காலம்
குலவுகச்சி யார்பிரியப் பங்கமுறும் காலம். (சுஎ)

வஞ்சிவிருத்தம்.

உறுமன் கச்சி யுத்தமயான்
துறவுங் கொள்ளேன் றூய்மையிலேன்
அறமும் புரியே னமைவில்லேன்
பெறவுந் தகுமோ பேரின்பே. (சுஅ)

இன்னிசைவெண்பா.

இன்படைய வேண்டி னிகலறக - வன்பிறவித்
துன்பொழிய வேண்டினவந் துன்னறக - அன்புருவாம்
போதனருள் வேண்டுமெனிற பொய்யறக - சூதகலச்
சூதவிழ லான்கழலைச் சூழ். (சுகூ)

நேரிசைவெண்பா.

சூழுந் தளையாய தொல்லைப் பிறவியினைப்
போழு நவியமாம் புத்தேளிர்—தாழுநலம்
பொன்று வளக்கச்சிப் பூங்கொன்றைக் கண்ணியர்தம்
இன்றாட் டிடும்பச் சிலை. (எ0)

### கலிநிலைத்துறை.

பச்சைநி றப்டைந் தொடிவல மேவிய பசுபதியுள்
நச்சின ரொன்றினு மெச்சமு ருதரு ணனிகூவான்
கச்சியு றைந்தருள் கண்ணுதன் மறலிக் கண்டகனுல்
அச்சமு ருதடி யவர்முன மந்தத் தணுகுவனே. (எக)

### மடக்கு. ஆசிரியவிருத்தம்.

அணங்காறு தலையுள்ளா ரழக ரொன்மா
னணங்காறு தலையுள்ளா ரானு ரந்தோ
வணங்கூடு தலனலைப்பற் றுற்று மின்னுள்
வணங்கூடு தலனலைப்பற் றறுத்த லோரா
கணம்புரத்தைச் சாம்பருவந் திழைத்தார் கன்னற்
கணம் புரத்தைச் சாம்பருவங் குலைப்ப துன்னா
பணமொளிக்கும் பணிதரித்தா கச்சி யீசா
பணமொளிக்கும் பணிபரித்தா பான்மை யுற்றே. (எஉ)

### கட்டளைக்கலிப்பா.

உற்றுப் பாரக்கிலுன் வாழ்க்கையென் னையமே
யூரும் வெட்ட வெளியுடை தோலுனைப்
பெற்றுப் பார்க்கு ளுறுஞ்சுக மில்லையாற்
பேதை நின்னையென் பெற்றிடப் பற்றினள்
கற்றுத் தேர்ந்த பெரியவா வாழ்திருக்
கச்சி மாநகாக் கத்தவென் னத்தனே
பற்றி லாருளம் பற்றுறு பங்கயப்
பாத னேபடப் பாம்பணி காதனே. (எங)

### ஆசிரியவிருத்தம்.

படவரவ மனைக்கசைத்த பரமா வாழும்
பதிக்கச்சி மேயவிளம் பாவை கொங்கை
தடவரையே கரிக்கொம்பே சகோர மேமாந்
தளிரமேனி தமனியத்தி னொளியே கண்கள்
விடவடிவே யாசுகமே வேலே சேலே
மென்மருங்குன் முயற்கோடே விழைந்தே னெஞ்சஞ்
சுடவகைதோ புருவமதன் சிலையே துண்டஞ்
சுடாக்குடையே சுந்தரிகந் தருவ மானே. (எச)

### தவம். கட்டளைக்கலித்துறை.

மான்கொண்ட கண்ணியர் மையலற் றேதவ வன்மைமரீஇ
யூன்கொண்ட துன்பை யொழிக்கத் தலைப்படு மூத்தமர்காள்
வான்கொண்ட வுச்சி வரைமுழை யுற்று மயர்வதெவன்
கான்கொண்ட கொன்றையா கச்சியை யெய்திற் கலியறுமே. (எ(

### இரங்கல். ஆசிரியச்சந்தவிருத்தம்.

எய்தவம்பு தைக்குமுன்ன மற்றொரு பகழி தொட்டுவே
ளேழையங்க ணைந்துதேய வப்புமாரி பொழிகிறான்
செய்தவம்பு ரிந்திலாதெ னுய்யுமாறு முண்டுகொல்
திகழுமாட மதியுரிஞ்சு கச்சிமேய செம்மலார
கைதவங்க ணங்கியான்மன் மதனைவென்ற காதையென்
காதனோக்கி யின்பளிக்க நேர்வரல்ல ரோலனை
வைதவம்பு நோக்கியேனு மனமுவக்க வந்திலா
மாதர்நோவ வெய்துசெல்வ மென்னவர்க்கு மங்கையே. (எசு)

### நேரிசைவெண்பா.

என்னபிழை செய்தாலு மேழையே னுக்கிரங்கு
மன்னுபுகழ்க் கச்சியுறை வள்ளறான் - துன்னுமயன்
கம்மாள னீசன் கடையன் பொதுவனென்பேன்
கைம்மாறென் செய்வனோ காண். (எஎ)

### சம்பிரதம். ஆசிரியவிருத்தம்.

காற்றைப் பிடித்தொருசிறு கரகத்துண் மூடுவேங்
கனலைவா னெங்கவிடுவேம்
சேற்றைப் பிசைந்துசில தேவரையு மாக்குவேஞ்
சீதரனை மாலாக்குவேம்
ஆற்றைச செலுத்தியரி யேறவைப் பேமமுதை
யாவனுடன் வாரியுண்பேம்
நீற்றைப் புனைந்தவர் திருக்கச்சி போன்றதல
நோதருஞ் சத்தி யெமதே. (எஅ)

### கட்டளைக்கலிப்பா.

சட்டப் பட்டவு ளம்பெற்ற சால்பினோர்
தங்கப் பெற்றகச் சிப்பதிச் செல்வவேள்
குட்டப் பட்ட தலைவிதி யென்றலை
கொடுமை கூரொழுத் திட்டனன் மாதர்வார
கட்டப் பட்டத னம்பிறை வாணுதல்
கடுவ டங்கிய கண்ணின்ம யங்குவேற்
கிட்டப் பட்டமட் டின்பமும் வாய்க்குமோ
வீசனேயரு ணேசவி லாசனே. (எகூ)

### ஆசிரியவிருத்தம்.

அருணைப் பதியி னழலுருக்கொண்
டமைந்த கச்சி யங்கணாமுன்
பெருமைப் புரத்தை யழிவெப்பும்
பிழைத்த மதறகொல் விழிவெப்பும்

பொன்னனைய திருமேனிப் பொலிவுமே யெனமயங்கப்
புரியுங் கண்டீர்
அன்னநடைக் கன்னன்மொழிப் பிச்சியீ ரணிமுறுவ
லதிக மன்றே. (௬௧)

## ஆசிரியவிருத்தம்.

அதிக மன்றெளி யேந்துயர் புரிந்திடு மறக்கடை யாயுங்காற்
றுதிகொ ளேகம்ப வாணனர் தூயவ ரிதயவா லயத்தூடு
குதிகொ ளின்புரு வாயவர் மாதொரு கூறுடைக் கோமானர்
நதிகொள் வேணியர் நாடுவோர் தமக்கமை நலத்தினைத் தெரிந்தாரே. ()

## ஊர். நேரிசைவெண்பா.

தெரிந்தார் மலர்த்தடத்தின் றெண்ணீர் துலைக்கோல்
பரந்தாழுங் கச்சிப் பதியே—கரந்தாழ்வெண்
மாதங்கத் தானத்தன் வாரிசத்த னேடரிய
மாதங்கத் தானத்தன் வாழ்வு. (௬௨)

## ஓரொலிவெண்டுறை.

வாழ்வளிக்குந் திருவிழியார் மறையளிக்கு மருமொழியார் வணங்கி னோர்தந்
தாழ்வகற்று மலர்ப்பதத்தா தளாவகற்று மைம்பதத்தார் தண்ணந் திங்கட்
போழ்வதியும் புரிசடையா புகழ்க்கச்சி மேய
ஆழ்கருணை மாகடலை யடிபணிமின் கண்டீா. (௬௪)

## இரட்டை ஆசிரியவிருத்தம்.

கரத்தின் வளையுஞ் சுழிவளையுங்
கனிந்த மொழியாற் புனைவளையும்
கலையு மணியு மேகலையுங்
கல்வி பயின்ற கலையறிவும்
புரத்தின் வனப்பு நூபுரமும்
புனைதீ ரகத்தின் வற்புரமும்
பொலன்றே டணையும் பூவணையும்
புரியும் பணியும் பொற்பணியும்
வரத்தி னுதித்தா ளொழித்தாளம்
மடமா னுடல மொழித்தாலும்
வளமா வடியீ ருமைச்சரண
மருவப் பெற்று ளாதலினற்
சிரத்தி னலைமான் வைத்தீர்நுஞ்
செந்தா மரைத்தாட் கீழேனுஞ்
சேருந் திறத்தை யறிவாளே
சிறியாண் மதனை வென்றிடவே. (௬௫)

### இரங்கல். மடக்கு.
### எண்சீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

மதனைவென்றவர் நஞ்சமார்ந்தவர் வலியர்முண்டக முள்ளியே
மகிழ்நர்வந்திலர் மாலைதந்திலர் துயர்வதுண்டக முள்ளியே
கதமிகுந்தெழு மத்திநீர்த்துறைப் பெடைபிரிந்தில கம்புளே
கவலைகூரவு ளூற்றிமேவுறு நறைசொரிந்தில கம்புளே
மதியினெற்றரு முத்தமேயவர் தருவதென்றரு முத்தமே
மணியுயிர்த்திரை சங்கமேயிர வொன்றுபற்பல சங்கமே
நிதிதருந்தவ வங்கமேயினி யடைவதுந்தவ வங்கமே
நெடியனுந்தொழு கம்பமேயுறை நிமலாதீரப்பாகொல் கம்பமே. (௧௬)

### செவியறிவுறூஉம் மருட்பா.

கம்பத் திருந்துதவுங் கண்மணியைச் சிந்தித்து
நம்பத் திருந்துவீர் நானிலத்தீர் - வெம்பும்
பிணியு மூப்பும் பீடழி பழியுந்
தணியா வறுமைத் தாழ்வுந் தீரும்
திருவரு ணமக்குச் சிவணத்
தருவ னன்னோன் சற்குரு வாயே. (௧௭)

### இரங்கல். இரட்டையாசிரியவிருத்தம்.

குருகு நெகிழுந் திறநவில்வாய்
கழிசேர் குருகே குருகழியக்
கொங்கை திதலை பூப்பவுளங்
குலைந்தே யுடைய வுடைசோரப்
பெருகும் பாலு மருந்தனமும்
பகைக்கு மருந்தேன் றறையனமே
பழுவ மனைய குழல்பூவைப்
பரியா மையைச்சொல் பூவையே
அருகு பயின்ற இளையேயென்
இளையால் வந்த தத்தனையு
மளந்த படியே யளந்தாலு
மதுவே சாலு மளியினமே
முருகு விரிபூம் பொழிற்கச்சி
மூவா முதல்வ ரளியினமு
முறையோ வளியேற களியாமை
கேளி ரிதனைக் கேளீரோ. (௧௮)

### இரட்டை யாசிரியவிருத்தம்.

கொம்மை யுற இளையொறுப்பீர
சேத முறுவீர் கெடுமெதியாற
ஒளிவாய் வளைவின் மகளிர்யாம்
இட்டி மயங்கித் தியங்குவீர

வாளா கழிப்பீர் வாழ்நாளை
வசையே பெறுவீர் வல்வினையீர்
வளமாந் தருவா யுலகுய்ய
வந்த கருணை யார்கலியைத்
தோளா மணியைப் பசும்பொன்னைத்
தூண்டா விளக்கைத் தொழுவார்தந்
துயரக் கடற்கோர் பெரும்புணையைத்
துருவக் கிடையா நவநிதியை
வேளா டலைமுன் றீர்த்தானை
வேழ வுரியைப் போர்த்தானை
வெள்ளம் பாய்ந்த சடையானை
வேண்டிப் புரிமின் றொண்டினையே. (௯௯)

## ஆசிரியவிருத்தம்.

தொண்டர் சிரத்தின் முடிக்கும்பூ
தொழுவா ரிதய நடிக்கும்பூ
அண்டர் முடியிற் றுலங்கும்பூ
அருமா மறையி னிலங்கும்பூ
பண்டை வினைப்பற் றழிக்கும்பூ
பணிவா ரல்ல லொழிக்கும்பூ
தெண்ட னிடுவோர்க் கருள்கச்சித்
திருவே கம்பர் பதப்பூவே. (௧00)

## கச்சிக்கலம்பகம்

## முற்றுப்பெற்றது.

# நளவெண்பா

## சுயம்வரகாண்டம்.

# இலக்கண இலக்கியக் குறிப்புகள்.

---

# NOTES

## Grammatical and Explanatory.

### GENERAL REMARKS.

1. நளவெண்பா வென்னும் பெயர்க்கு நளச்சக்கிரவர்த்தியின் சரித்திரத்தை வெண்பா வென்னப்பட்ட கவிகளால்கூறிய நூலென்று அன்மொழித்தொகையின பொருள்பட அர்த்தங்கொள்ளலாம். The History of Nala in Venba metre, வெண்பாவில் நளன் சரிதையென வடமொழி வழக்கின் பாற்பட்ட ஆங்கிலேய நடையானும் முன்மொழி பின்மொழியாகப் பொருள்படும். குறள் நாலடிபோல், செய்யுட்பெயர் தனி நின்று தருமார்த்தகாமமோக்ஷ விஷயங்கட்கு ஆகுபெயராயின சாதிரிசியத்தையே, அடையடுத்த வேங்கடவெண்பா நளவெண்பாக்களுக்குங் கொள்க. முதனூல் கருத்தனளவு மிகுதியென்னும நன்னூற் சூத்திரத்துறையிலும் தத்தம் பாடசாலை உபாத்தியாய வாயுரையாலும் அவரவர் அபிருசிக்கும் இங்கிதத்திற்கும் ஏற்பமாணாக்கர் விசாரித்துங் கொள்ளக் கடவர். சாதிரிசியம்=ஒப்பு=Analogy.

2. சம்ஸ்கிருதத்தில் ஸ்ரீஹர்ஷர் பிரசாதித்தருளிய நைஷதத்தை அதிவீரராமபாண்டிய ராஜன் தமிழ்விருத்தப்பாவால் மொழிபெயர்த்தருளினார். இவர்க்குப்பிற்பட்ட காலத்தில் குலோத்துங்கச் சோழராஜன் சபையில் சகவர்த்தமானிகளாய் விளங்கிய கம்பர் புகழேந்தி முதலியவித்துவான்களுக்குள், பாண்டியன் சொன்ன நைஷதம் சிறந்ததென்று சிலரும், சிறந்த தன்றென்று சிலரும் விவாதிக்கப் புகழேந்திப்புலவர், கல்வியிற் பெரியகம்பரது கட்சிக்கெதிரியாகி நளவெண்பாவென்னும் இந்த கிரந்தத்தைப்பாடி அரங்கேற்றுகையில், கம்பர் அதனை அவமதித்துக் கூறினரொன்றாலும், பின்னர்த்தம் வீட்டினிடத்தில் மற்றவித்துவான்கள் முகத்தில் நளவெண்பாவைத் தேனென்றும் அமுதமென்றும் அதனைநினைக்கத் தமக்குப்பசியாறிற்றென்றும் நன்குமதித்தாரொன்று ஒருகதை ஐதீகமாக வழங்குகின்றது. இதுமுன்னதோ நைடதம் முன்னதோ வென்கின்ற விசாரத்திற்கும் அது அது எந்தக்காலத்ததென்கிற விசாரத்திற்கும் போந்தசரித்திரபலம் இல்லை. (விசாரம்=Inquiry) புகழேந்தியும் கம்பரும் சகபாடிகள், அங்ஙனமே கம்பரும் ஔவை

யும் சகவர்த்தமானியர். அவ்வாறே ஒவையாரும் நாயனாரும் ஏககாலத்தார். இது பற்றி எண்ணியசகாத்த மெண்ணூற்றேழன்மேல் என்று கம்பர் குறித்த வருஷக் கணக்கை ஒப்புக்கொள்ள வேண்டியதென்னில், இது கூடாது, வடராச்சியத்தி ராசாக்கள் காலக்கிரமத்துடன், தென்தேசத்தரசர் காலக்கிரமத்தையும் பாஷைகளது காலாந்தர விருத்தியையும் ஒத்துக்காணுமிடத்து, கிறிஸ்து வருஷம் - தூசா றுக்குமேல் இதநியாதி தமிழ்கிரந்தங்கள் பிறந்தனவென்று ஆங்கிலேய காலகணிதபண்டிதர் துணிகின்றனர் (conclude.) இக்கொள்கைக்கு மாறு கோளாருமுளர்.

3. காண்டம் - செய்யுட் கூறுகளிலொன்று - A Section or Canto.

4. சுயம்வரம் Marriage ceremony of the nobility or as some suppose, it is the brides' choosing her royal consort from among the many assembled under a Pandal erected for the purpose.

5. காப்பு - keeping ;—Invocation, கடவுள்வாழ்த்து in kural : தெய்வவணக்கம் in Beschi. நூதலிட்புகுதல் See 14th Sut. பொதுப்பாயிரம், Nannul

# காப்பு.

I. நேசரிதங் கூர நிலவலயந் தாங்கு நளன்
மாசரிதங் கூற வருந்துணையா - யீசன்
கரியா னனந்தான கருது புகழ்ப்பூண்ட
கரியா னனத்தான கழல.

## Analysis and Paraphrase.

1. நேசர்=நேசிக்கிறவர்கள்=அடுத்தவர்கள=subjects ;—இதம் for இதத்தை=சுகத்தை=happiness ;—கூற=கொள்ள=அடைய=to have, to obtain ;—This verb in the infinitive agrees with நேசர and governs இதம். நிலவலயம் for நிலமாகிய வலயத்தை=Land-circle=the earth (meaning his kingdoms and dominions) ;—தாங்கும்=காப்பாற்றும்=who will protect ;—Fut-Rel-Participle=எதிர காலத்துப் பெய ரெச்சம். நளன்=நளசசக்கிர வர்த்தி=Emperor Nala, in the Genitive ஆறும்வேற்றுமை=நளனுடைய ;—மாசரிதம்=மாக்கதை=பெரிய கதையை=the great history ;—கூற=சொல்ல=to relate ;—வரும் will come=Fut-Indic. agrees with கழல ;—துணையாய்=உதவியாய்=helping, guiding ; adverbial form of the noun துணை ;—ஈசன்=சிவன் Siva, கரியான=விஷ்ட்ணு=the *black one*=Vishnu, அனந்தான்=பிரமா=the Swan-vehicled ;—கருதுபுகழ்=கருதுகின்ற துதி for துதியை=the praise that (those three gods) contemplate ,—ஈசன் and கரியான் and அனந்தான் are nominatives to கருது=வினைதொகை=crude form of the verb கருதுகிறேன் ; பூண்ட=அணிந்த=who has adorned himself with ,—(governing புகழ்) ;—கரியான னத்தான் கழல்=கரியின் ஆனனத்தானுடைய கழல்=யானைமுகத் தனதும்=the foot of the elephant faced deity ; Nom to வரும.

---

## Paraphrased Reading.

அடுத்தவர்கள் அனுகூலத்தை அடைய பூசசககரததைக் காக்கும் நளனுடைய பெரிய கதையைச் சொல்ல (வரும) உதவிசெய்யும் சகாயமாய் (நின்று)—சிவனும் விஷ்ட்ணுவும் பிரமனும் பததிபண்ணுகின்ற ஸ்தோததிரததை (உவப்பாய்) அணிந்தயானை முகத்தோ (விநாயக) னதுபாதம் எனறவாறு.

### Syntactical Outline.

கூரத்தாங்கு நளன் சரிதங்கூறக் கரியான னத்தான் கழல் வரும் :—எப்படிப்பட்ட கரியான னததான் என்னில் ? ஈசனும் கரியானும் அனததானுங் கருதுகின்ற புகழைப்பூண்ட கரியானனத்தான்.

II. கலாப மயிலிருந்த பாகத்தார் கங்கை
யுலாவு சடைமே லுறையு - நிலாவை
வழியவார்த் தாலன்ன மாநீற்றார் நாகங்
கழியவார்த் தார்நமக்கோர் காப்பு.

## Analysis and Paraphrase.

கலாப for கலாபம்=கலாபமுடைய ;—மயில்=Peacock, meaning Parvati ;—Nom to the next word இருந்த=in or on which she is seated—பாகத்தார்-இடப்பக்கத்தார்=he who has the left side ;—கங்கை=சலம்=Ganges or water—Nom to the next word உலாவு=உலாவுகிற=moving—Root put for பெயரெச்சம்=வினைத்தொகை ;—சடைமேல்=சடைமுடிமேல்=over his tresses or locks of hair ;—உறையும்=இருக்கும்=that is or dwells ;—நிலாவை=சந்திரனை=the Moon ;—வழிய=வடிய=to beoverspread ;—வார்த்தால் if poured—அன்ன=போல as=as if the Moons' beams were poured - governing நிலாவை ;—மாநீற்றார்=விபூதியையுடையவர்=he who has the holy ashes ;—நாகம்=பாம்பு=பாமபுகளை=snakes ;—கழிய=மிகுதியாக ;—ஆர்த்தார் கட்டினார்=அணிந்தார்=he who wears ;—நமக்கு ;—ஓர்=ஒரு=ஒப்பற்ற=matchless;—காப்பு=காவல்=Protection.

## Syntactical Outline.

பாகத்தார் (ஆகிய) மாநீற்றார் (ஆகிய) ஆர்த்தார், நமக்கு காப்பு.

1. நமக்கு என்பதை நாம் என்றுகொண்டால் பாகத்தாரை மாநீற்றாரை ஆர்த்தாரை காப்பாக உடையோம் எனவரும்.

2. பாகத்தார் மாநீற்றார் ஆர்த்தார்=Subject. காப்பு=Predicate.

3. பின்வரும்பாட்டில், இருபெயரொட்டுப் பண்புத்தொகையே போலும் பலபெயரொட்டுப் பண்புத்தொகையுங் கொள்க வென்பதற்கு ஒருபொருட்பல் பெயர பிரிவிலவரையார என்னும் விதியைக் கொள்ளினும் அமையும்.

III. ஆதித் தனிக்கோல மானா னடியவற்காச்
சோதித் திருத்தூணிற் றோன்றினான் - வேதத்தின்
முன்னின்றான் வேழ முதலே யெனவழைப்ப
வென்னென்றா னெங்கட் கிறை.

## Analysis and Paraphrase.

ஆதி=முதல்=Original ;—தனி=சுயம்பு=தானுநிற்பவன்=Self, the Original Self ;—ஆதியாகியதனி=இருபெயரொட்டுப்பண்புத்தொகை=two nouns in apposition ;—கோலம்=உருவம்=form or manifestation ;—ஆனான்=one who became (Indic-Past 3rd Pers.—Sing Masc of the Root ஆ or ஆகு) ;—அடியவற்கா for அடியவனுக்காக=பிரகலாதனுக்காக=On account of, or, for the sake of (his) servant ;—ஆக=ஆய்=ஆ are equivalent particles ;—சோ

தி=ஒளி=brightness for bright ;—திரு=பரிசுத்தம்=holiness for holy ;—தூணில்=in or from the pillar ;—தோன்றினன=அவதரித்தவன்=one who manifested himself or (became) incarnate ;—வேதத்தின்முன்=ஆதிநூலின முன்=in the beginning of the Vedas,—நின்றான்=இருந்தவன்=he who was ;—இறந்தகாலத்து வினையாலணையும் பெயர் - an inflectional noun of the past tense ;—வேழம்=யானை=elephant, Nominative to அழைப்ப ;—முதலே=ஆதிமூலமே=O thou Original Cause (Vocative) ;—என for என்று or என்று சொல்லி=saying ;—அழைப்ப=கூப்பிட=to call (Infinitive) for when (the elephant) called (Subjunctive) ;—என் for என்ன or ஏன்=Yes here I am ;—என்றான்=என்றவன், என்றோடி வந்தவன்=he who said, or advanced readily ;—எங்கட்கு for எங்களுக்கு=நமக்கு=to us ;—இறை=அரசன, தேவன்=god or governor.

## Paraphrased Reading.

ஆதியாகிய, தனியுருவமாய் நின்றவன் ஆகிய, பக்தனுக்காக ஒளி (பொருந்திய) பரிசுத்தமான தூணினின்று வெளிப்பட்டவன் ஆகிய, முதனூல்களின்முன் இருந்தவன் ஆகிய, கஜேந்திர ஆழ்வாரானவர் ஆதிமூலமேயென்று கூப்பிட்டபோது ஏன் என்று உடனே வந்தவனாகிய விஷ்ணு, எங்களுக்குப் பெரியவன் என்றவாறு.

### Syntactical Outline.

ஆதியான் தோன்றினன் நின்றான் என்னென்றான் இறை. இருபெயரொட்டுப் பண்புத்தொகையே போலும பலபெயரொட்டுப்பண்புத்தொகையுங்காணுக.

1. என் எனகின்ற வினாச்சொல்லானது என்னவென்பதற்கும ஏன என்பதற்கும பொதுப்பகுதி. அஃது, என்னகாரியம என்று பெயரோடும ஏன் அழைத்தாயென்று வினையோடும வருவதாம என்னவேணடும், ஏனகேட்கிறாய் என்று வாராதோவென்னில், என்னகாரியம என்னவிஷயம் எனப்பெயரெச்ச முடிபாகவே தமிழ்நடை செலலுதலாலும்,—அம்முடிக்குஞ் சொல்லாகிய பெயாக்குப்பின்னரோ அவ்வினை வருமாதலாலும,—மேலேகணட விதியை ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம் ஏன்பணம் ஏன்காசு என்பதிலும், பணமேன் காசேன் என்பது சிறப்பாமென்கிற பக்ஷத்தில், இருவழியிலும் வினைகொண்டே விரியுமாதலால், அவ்விதி ஒருவாறு பொதுவிதியாயச் செல்லுமென்றறிக :—இதற்குலவழக்கியலே சாட்சி, உம் :—என்ன + அது=என்னது என்னுமிடத்திலன்றி, ஏனைய விடங்களில் என்ன என்பதற்கு துவ்வீறு எழுவாயுருபாய் வாராமல்தானே, மற்றையவேற்றுமைகளில் அத்துப்பெற்று என்னத்தைக் கொடுத்தாயென்றும் என்னத்தினால் இதைக்கண்டாயென்றும் வருதலால், ஏன் என்பது வினையுரிநீர்மைத்தேயாய், ஏனத்தை ஏனத்துக்கு ஏனால் எனவாராமையானும் வரமாட்டாமையானுமென்க.

2. இவன் எங்கட்குஇறை - இவன் எங்களுக்கு அரசனாய் இருக்கிறான். ஆதியான் தோன்றினன் நின்றான் என்னென்றான் இந்நான்கும் ஓரெழுவாய்; எழுவாய்=Subject, இறை=பயனிலை=Predicate.

## Free Rendering.

பாண்டவருள் மூந்தின அரசனுகிய தருமப்புத்திரர் ஒருகாலத்தில் தமது இராச்சியமுழுவதையும் சூதில் இழந்து, பெரியவராகிய கிருஷ்ணர்தாமே மதத்யஸ்தராகப்போய் அரசைக்கொடு என்று கேட்க, அதற்குத்தரம், மாட்டமென்று எதிர்த்தவனுகிய துரியோதனனுடைய பெரியசேனைகள் பூமியுடனே கூடக்கெட்டழியும்படியாக மனஞ்சகித்த அவர் வனத்தில் ஏகாந்தத்தில் வசித்துக்கொண்டிருந்தார் வருந்தியென்றவாறு.

## Syntax.

1. Subject பொறுத்தான். Predicate. இருந்தான்.

2. முன்றோன்றல் பொறுத்தான் in apposition.

3. பொறுத்தான் இருந்தான் may be taken for பொறுத்திருந்தான். See Sut - 32 - வினையியல் Nannul.

4. பார்முழுதும்=Object, governed by தோற்று :—தோற்றுப் பொறுத்திருந்தான்.

5. Also மாளப்பொறுத்திருந்தான்

### Subordinate and Dependent clauses.

6. Subject - ஆண்டகை. Predicate - சென்று வேண்ட. Object - அவனி.

7. மறுத்தானுடைய இருந்தானை=Nominative to போய்மாள :—as போய்மாளப் பொறுத்தான் and வேண்டமறுத்தான் are செயவென் னெச்சத்தொடர்கள்=one verb governs another in the infinitive.

## Outline.

8. a. ஆண்டகைவேண்ட மறுத்தானது தானைமாள b. முன்றோன்றல் பொறுத்தான் இருந்தான்.

9. ஆண்டகை=Quality for the Subject=அன்மொழித்தொகை=Metonymy.

10. தாம்தோற்று, அவன்மாளப் பொறுத்தார் என, வாக்கியநடையில் இடைப்பிறவரல்களால் தழாததொடர் செயகை செய்யப்பட்டு நிற்கையால, பொறுமை வெறுமையாயிடித்த தெனனும் பழமொழி வலியை வற்புறுத்துமாறு, தோற்றுப்பொறுத்தானென்பதில் தம்தோல்விக்கண்ணே சமசிந்தையாய் நின்றவர், மாளப்பொறுத்தான் என்பதில் இவன்மாளவே வேண்டுமென்னு மடங்கருதிப் பொறுத்தாரல்லர், அவன் தானேமாளுங் கெடுதிககண்ணுஞ் சமசிந்தை செய்திருந்தார் என விளங்குதலால், ஈசுவரன் தீயோர் செய்யுந்தீவினைக்குக் காரணனுகாமையைக் கூறிற்றிந் நூன்மூதற் பாட்டென்றறிக.

ஆண்டகையேவேண்டமறுத்தான் மாளுகின்றான், நாம்போய் நடுவில் வீழ்ந்து அவனை மீட்பது தருமமன்றென்று பொறுத்திருநதார் தருமனென்றுமாகும.

II. நாட்டின்கண் வாழவைத துறந்துபோய் நான்மறையோ
ரீட்டஙகள் சூழ விருநதானைக் - காட்டிற
பெருந்தகையைக் கணடாாகள் பேரொழிறறோள வேநதர்
வருநதகைய ரெல்லாருமவநது.

நாட்டின்கண (நாடு + இன் + கண)=in the country or in society ;—வாழ்வை=living ie. prosperity ;—governed by the next word—துறந்து=விட்டு=having left ;—போய=சென்று=and having gone ;—நான்மறையோர்=பிராமணா=those (to whom) the four Vedas (belong)—genitive understood=நான் மறையோருடைய ;—ஈட்டஙகள=கூட்டஙகள்=classes, assembly ;—(Nom. to the next word) சூழ=சுறறியிருகக=to surround ;—இருநதானை=him who was, ie தாமனை ;—governed by கணடார்கள் ;—காட்டில்=வனததில்=in the jungle ;—பெருந தகையை=பெரியதன்மையனை=அரசனை=the honourable one—in apposition with இருநதானை—கண்டாாகள்=பாாததாாகள்=saw or visited ;—agrees with எலலாரும்—பேரொழிறறோள் (போ great, broad, எழில் beauty, தோள shoulders)=பெரிய அழகிய புசஙகளையுடைய வேநதா=இராசாககள=kings ;—in apposition with the next word வருந்தகையா=வரததகுதியை யுடையோர்=those who are of equal honor to come to him ;—எலலாரும்=all ,—வநது=having come

ஸவதேசததில அனுபவிககவேணடிய செலவததை விட்டுப்போய, பிராமணருடைய கூட்டஙகள சூழுமபடி (இருநதவனைப் பெருந்தகையை) இருந்த பெரியோனை (தருமனை) கணடாாகள, பெரிய அழகிய தோள்களையுடைய அரசர்கள், (வநது) காணுமயோககியதையுடையோர் யாவருமவநது எறு.

## Syntactical Outline.

1. Subject=(வேந்தா வருநதகையா) எல்லாரும். Predicate=(வநது) கண்டாாகள. Object=இருநதானைப பெருநதகையை.

## Subordinate and Dependent clauses.

2. வாழ்வை=Objective governed by துறநதுபோய் ;—Nom தருமா், understood. ஈட்டஙகள Nominative to சூழ. 3. இருநதானைப பெருந்தகையைக் கண்டார்கள எல்லாரும.

4. எப்படி இருநதானை ? சூழ இருந்தானை. யார்சூழ இருந்தானை ? நான்மறையோரீட்டஙகள் மேலும் எபபடி இருநதானை ? வாழ்வைததுறநது போய் இருநதானை. கணடாாகள யாவா ? வருநதகையரெல்லாருமவநது.

5. நாட்டின் கண்வாழ்வை=எழாம் வேற்றுமைவிரி. வாழ்வைத்துறந்து போய்=இரண்டாம் வேறறுமைவிரி. துறநது போயிருநதானை=செயதெனவெசசத்தொடா. நான்மறையோ ரீட்டஙகள=ஆறும் வேற்றுமைத்தொகை, ஒன்றன் கூட்டத்துத் தற்கிழமைப் பொருள். ஈட்டங்கள சூழ, இடைப்பிறவரலாய் (dependent clause) வநத எழுவாய்த தொடா, சூழ இருநதானை=செய

தையும், யாக்கோபின் வல்லவற்கு வாசஸ்தானத்தையும் காணுமட்டும்—தன் வீட்டின் கூடாரத்திலே பிரவேசியாமலும், தன்படுக்கையின் கட்டில்மேலேறாமலும்—தன்கண்களுக்கு நித்திரையையும், தன் இமைகளுக்கு உறக்கத்தையுங்கொடாமலும் இருப்பேனென்று—கர்த்தருக்கு ஆணையிட்டு, யாக்கோபின் வல்லவற்குப் பொருத்தனை பண்ணினான்,—எனனுமித்தமிழ் வாசகநடையில், யதாப்பிரகாரமேற்றப்பட்டுள்ள இவ்யபிரோயச்செய்யுளில்,—"கர்த்தருக்கு ஓரிடம்" என்றாலும், யாக்கோபின் வல்லவற்கு வாசஸ்தானமென்றாலும் பொருள் ஒன்று, வார்த்தைமாத்திரம்வேறு, எனென்றால், கர்த்தன்தான் யாக்கோபின் வல்லவன், யாக்கோபின் வல்லவன்தான்கர்த்தன். "ஓரிடந்தான் வாசஸ்தானம், வாசஸ்தானந்தான் இடம். அங்ஙனமே வீட்டின் கூடாரத்திற் பிரவேசித்தலும் படுக்கைக்கட்டிலின்மேலேறுதலும் பொருள் ஒன்றே, சொற்கள்மாத்திரம் வேறு. அவ்வாறே கண்களுக்கு நித்திரை கொடாமையும் இமைகளுக்கு உறக்கத்தைக்கொடாமையும் பொருளில் ஒன்றுதான், பதங்களோ வேறு. அஃதேபோல் கர்த்தனுக்கு ஆணையிடுதலும் யாக்கோபின் வல்லவற்குப் பொருத்தனை பண்ணுதலும் ஒருபொருள்மேல் (பல) வேறுசொல். இதற்கும் தமிழ்க்கும் தம்முள்வேற்றுமையென்னெனில் யபிரோயநடையில் எதிரொதிர் நிரனிறை; தமிழ்நடையில் செவ்வெண்ணீர்மை. Psalm CXXXII.

7. வழிமுறை=மொழிமுறை=பரம்பரை=காணபரம்பரை=ஓரானோர்வழி=Tradition=transmission=succession.

> IV. மறைமுதல்வ நீயிங்கே வந்தருளப் பெற்றேன்
> பிறவிப் பெருந்துயர மெல்லா - மறவே
> பிழைத்தேனயா னென்றானப் பேராழி யானை
> யழைத்தேவல் கொண்ட வரசு.

மறை for மறைகளுக்கு=வேதங்களுக்கு=to or of the Vedas ;—முதல்வ for முதல்வனே=O author (voc) ;—நீ=thou,—இங்கே ;—வந்தருள=வரும்படியாக=to condescend to come ;—பெற்றேன=அடைந்தேன்=I obtained=I was so fortunate ;—பிறவிப்பெருந்துயரமெல்லாம் (பிறவி+பெருந+துயரம்+எல்லாம்)=all the great pains (resulting from) birth or transmigration ;—அறவே=தொலையவே=to end ;—பிழைத்தேன்=தப்பினேன் தப்பித்துக்கொண்டேன் I escaped, got rid of ;—யான்=நான் ;—என்றான்=என்று சொன்னான் ;—அப்பேராழியானை (அந்த + பெரிய + ஆழியானை)=சக்கரத்தவனை=him (holding) the disk, ie Krishna ;—அழைத்து=அழைப்பித்து=having sent for ;—ஏவல்கொண்ட=தூதாளாகக் கேட்டுக்கொண்ட=who engaged (him) as his messenger ;—அரசு for அரசன்=the king ie Dharma Raja.

Free Reading.

வியாசபகவானைப் பார்த்துத் தருமபுத்திரர் சொல்லுகிறார் :—வேதங்களுக்கு ஆதியே, தேவரீர் இங்கே என்னிடம் எழுந்தருள அடைந்தேன், ஜெனனத்

தின் பெரியதுக்கங்கள் எல்லாம்தொலைய நான்தப்பினேன் என்றான், அந்தப்பெரிய சக்கரத்தவனாகிய கிருஷ்ணனை (முன்னர்) அழைப்பித்துத் தூதுவக்கிரியையைத் தமக்காகச் செய்யும்படிக்கொண்ட (அரசு) தருமர் என்றவாறு.

Syntax.

1. Subject=அரசு. Predicate=என்றான். 2. மறைமுதல்வ=முதல்வனே Voc. addressing Vyasa 3. நீ agrees with வந்தருள. 4. துயரமெல்லாம் nominative to அறவே 5 யான் nominative to பெற்றேன் and பிழைத்தேன்.

Outline.

6. ஏவல் கொண்ட அரசு=என்றான். 7. மறை முதல்வநீ வந்தருளப்பெற்றேன் யான் என்றான்.

Dependents.

8 பெருந் துயரமெல்லாம் அறவேபிழைத்தேன் யான் (என்றான்.)

9. வந்தருளப் பெற்றேன் I am so fortunate that I have got your holiness to come to me. 10 பிறவித்துயரம் sorrows miseries and vicissitudes of life. 11. ஏவல் கொள்ளுகிறது to command, to engage.

V. மெய்த்திருவந் துற்றாலும் வெந்துயர்வந் துற்றாலு
மொத்திருக்கு முள்ளத் துரவோனே - சித்தம
வருந்தியவா றென்னென்றான் மாமறையா லுள்ளந்
திருந்தியவா மெய்த்தவத்தோன் றேர்ந்து.

மெய்=மெய்யான=நிலையாகிய=true, substantial ;—திரு=செல்வம்=wealth ;— Nominative to வந்துற்றாலும் = வந்து சேர்ந்தாலும் = though amass or increase ;—வெந்துயர=வெவ்வியதுக்கம்=heavy trouble ;—Nominative to வந்துற்றாலும் ;—ஒத்திருக்கும் (ஒத்து + இருக்கும்)=equal, indifferent ;—உள்ளத்து=உள்ளத்தை யுடைய=minded ;—உரவோனே=பலத்தவனே=O Thou Strong ;—சித்தம்=மனது=heart ;—Nominative to வருந்தியவாறு=சங்கடப்பட்ட காரணம்=the cause of your sorrowing ;—என் என்றான்=asked what ;—The main Verb of the Stanza agreeing with மெய்த்தவத்தோன்=Vyasa ;—மாமறையால்=பெரிய வேதங்களால்=through the Vedas ;—உள்ளம=சித்தம்=the heart ;—(Nominative to திருந்தியவா) ;—திருந்தியவா for திருந்திய ஆறே=according as it is converted and purified ;—or திருந்தி + அவாம் being sedate or quiet, thus becoming desireable, amiable to others ;—மெய்த்தவத்தோன்=நல்ல தபசி=the true devotee ;—தேர்ந்து=உணர்ந்து=having perceived (something the matter with Dharma)—Vyasa questions him.

## Paraphrased Reading.

நல்லசெல்வம் உண்டானாலும், கடுந்துன்பம் உண்டானாலும் சமசிந்தையா

யிருக்கும் மனமுடைய பலவானே, தருமரே, உம்முடைய நெஞ்சம் துக்கித்திருக்கிற வழி என்ன என்றுகேட்டார், வேதங்களால் தம் ஹிர்தயம் செலுவைப்பட்ட படிக்கேமெய்யான தவத்தையுடையோர் வியாசர்தெரிந்து என்றவாறு.

## Syntax.

1. Subject. மெய்த்தவத்தோன் Predic. என்னென்றுன.

2. (a) திரு Nom to உற்றுலும். (b) துயர் Nom to உற்றுலும். (c) சித்தம் Nom to வருந்திய. (d) ஆறு Nom (Noun-Subject) to என்=Interrogative Predicate (விஞபபயனிலை) (e) உளளம Nom to திருநதி.

3. மெய்த் தவத்தோன் தேர்ந்து என்னென்றுன். 4. உற்றுலும் either, உற்றுலும் or, என்றும் மொழிபெயர்ககலாம் 5. உரவோன்=ஞானவான்=Sage.

6. ஒத்திருககுமுளளம=சமசித்தை=equanimity. 7. சித்தம்வருந்துதல்=repentence, remorse.

8. வெந்துயர்=வேகுந்துயர், வெம்=செம்=கரும்=இவை ஒருகாலத்தில் புடைபெயர்நத வினைப்பகுதிகளாயிருநதன, குறுக்கல் முதலிய விகாரஙகளால்வெம் செம் என நின்றனவாக்கும், மைவிகுதிப்பண்புககள் என்பானேன், ஈறுபோதலாதிவிதிகள் என்னத்துககென்ருர் ஒருவா. உஙகளுக்குத்தமிழ தெரியாது, எப்படியென்றுல், அன்ன இனன எனபவை அன்னுகிறேன் இன்னுகிறேன் என்றிருநதன, அவைகள் இப்போழ்துகாணுமற் போயினவாககும, அவற்றது பெயரெசசஙகள் தாம் இவைகள், ஆனு ஆவனறு வென்னுமிடததில், அ என்க ஆ எனக என்றுகிறதென்று ஒருவர் சொன்னுராதலால உஙகளுககொன்றுந தெரியாதெனறுர். நாஙகள் பேசாதிருந்ததைத் தமமதததிற் குடமபட்டோமாகவுங்கொண்டார்·

VI. அம்பொற் கயிலைககே யாகத் தரவணிவார்
தம்பொற படைக்குத் தமியனு - வெமபியையுமுன்
போககினே னெனறுரைததான பூதலதது மீதலததும்
வாககினே றிலலாத மன.

அம்=அழகு=pretty ;—பொன்=gold or silver ;—கயிலைக்கே=கைலாசத்திற்கே=to Kailas, to the pretty silvery Kailas, the residence of Siva :—ஆகத்தரவணிவார்தம் (ஆகம் + அத்து + அரவு + அணிவார் + தம்)=of him who wears serpents over his body=சிவனுடைய ;--பொற்படைக்கு (பொன் + படைக்கு)=for or on account of (getting) a golden weapon=பொன் ஆயுதத்துக்காக ;—எம்பியை contracted for என்தம்பியை ie அர்ச்சுனனை ;—முன் before, already ;—தமியனு for தமியனுக=ஒண்டியாக alone, lonely without a companion ;—போக்கினேன் = போகச் செய்தேன்=அனுப்பினேன்=I sent ;—என்று=that or thus ;—உரைத்தான்=சொன்னுன்=said (he) ;—the main verb agreeing with மன்—பூதலத்தும்=பூதலத்திலும்=in the earth ;—மீதலத்தும்=மீதலத்திலும்=and in the upper world ;—வாக்கில்=சொல்லில்=in word, ie in truth or integrity ;—நேரில்லாத=நிகர் இ

ல்லாத=equal wanting=matchless ;—மன்=அரசன்=the king ie Dharma. Answer of Dharma to Vyasa.

## Syntax.

1. Subj : மன். Predi உரைத்தான்.

2. போக்கினேன் Verb-Predicate, (வினைப்பயனிலை) agrees with நான் understood. எம்பியை=Objective. 3 என்று conjunction *that*, connects போக்கினேன் and உரைத்தான்.

## Outline in question and answer.

இந்தப்பாட்டில் பேசுகிறவர்யார்? தருமர்=மன். எப்படிப்பட்டமன்? இல்லாதமன. என்ன இல்லாதமன்? நோ இலலாதமன். எதிலேநோ? வாக்கிலே நோ. எஙகே? பூதலத்தும மீதலததும. மன்னன் என்னசெய்தான்? உரைததான். என்ன என்றுரைததான்? போககினேன் என்று. யாரை? எம்பியை. எப்போ? முன். எப்படிபோக்கினேன்? தமியனாய். எதற்காக? பொற்படைக்காக—.யாவர்தமபொற்படை=யாருடையபடை? அணிவார்பொற்படை. எதை அணியார்? அரவை. எஙகே அணிவார்? ஆகதது=உடம்பிலே. எங்கேபோக்கினேன்? கயிலைககே போககினேன். எப்படிப்பட்ட கயிலை. அமபொறகயிலை.

1. அமபொன்=அம்மையாகிய பொன் என்விரிக்க வேண்டாத பண்புத்தொகை. அம்மை=beauty.

2. கயிலைக்கே போக்கினேன்=கையிலைக்கண் போக்கினேன், dative for locative=ஆகியின் என்றதனுல் ஏழாவதற்காகவநத நாலாவது, ஆங்கிலேயபக்ஷம்—.போதல்வருதலாகிய கமனஙகட்கு தமிழ் கூறுநல்லுலகதது வழககியல் நான்காவதே. கைலையைப்போக்கினேன் எனபது வடமொழியோா பக்ஷம்.

VII. காண்டா வனந்தீக் கடவுளுணக் கைக்கணையா
னீண்ட முகிறடுத்து நின்றாற்கு - மீண்டமரா
தாளிரண்டு நோவத் தனித்தனியே யோடியநாட்
டோளிரண்டு மனமேரு தூணை.

காண்டாவனம=காண்டாவனத்தை=காண்டாவன மென்னப்பட்ட காட்டை=the forest so called ;—தீககடவுள்=அகனிபகவான்=god of fire ;—உண for உண்ண to eat, to devour, to consume :—கைககணையால்= கையில் (இருநத) அம்பினுல்=by means of an arrow which he had in his hand ;—நீண்டமுகில் நீண்டமுகிலை=the clouds that were spread ;—தடுதது=தடைசெய்து=having prevented not to rain or pour down ;—நின்றாற்கு=நின்றவனுக்கு=to him who stood, ie to Arjuna :—மீணடு=having returned ;—அமரர் = தேவாகள் = gods ;—தாளிரணடும = இரணடுபாதஙகளும் =both the feet ;—நோவ=வருநத=வலிக்க=to pain ;—தனிததனியே= அவரவாதன்தன் வழியே=each in his own way—at random—disorderly ;—ஓடியநான for ஓடினநாளில்=காலததில் ,—தோள இரண்டும்=புசஙகள் இரண்டும = both of

his arms (shoulders) ;—அன்றோ=அல்லவோ=Is it not? Were they not?—துணை= உதவிகள்=companions or assistants.

Free Reading.

காண்டாவனத்தை அக்கினிபகவான் உண்ணும்படியாகத் தன்கையில் இருந்தபாணத்தினால் விரிந்த மேகத்தை நீர்சொரிய விடாமல் தடைசெய்துநின்ற அரசனுக்கு, தேவர்கள் திரும்பி இருபாதங்களும் கடுகஅவரவர் கூடா தோடிப் போன நாளிலே அவன்தோள்கள் இரண்டுமல்லவோ (அவனுக்குத்) துணையாய்நின்றனவென்றவாறு. This is Vyasas' comfort-giving answer to Yudhistira.

1. நின்றாற்குத்தோள் இரண்டும் துணை. 2. அனறோ? ஆம்.

VIII. பேரரசு மெங்கள் பெருந்திருவுங் கைவிட்டுச்
சேர்வரிய வெங்கானஞ் சேர்தற்குக் - காரணந்தான
யாதோவப் பாவென்று னென்றுநதன வெண்குடைக்கீழ்த்
தீதோவப் பார்காத்த சேய்.

பேரரசும் (பேர் + அரசு + உம்)=பெரிய துரைத்தனத்தையும் ;—எங்கள் பெருந்திருவும் = எங்களுடைய பெரியசெல்வத்தையும் ;— கைவிட்டு=having left from our hands=தோற்று=தோற்றுப்போய் ,—சேர்வரிய (சேர்வு+அரிய) சேர்தலரிய=சேர்தல்கூடாத=inaccessible ;—வெங்கானம for வெங்கானத்தை (வெம் + கானம்) வெவ்வியகாட்டை=hot or dreary deserts ;—சேர்தற்கு= சேர்தலுக்கு=அடைதலுக்கு = காரணந்தான்யாதோ=what was the cause then? அப்பா=அப்பனே=O father, (or dear me, in vulgar usage) ;— என்றான்=கேட்டான்=asked (agrees with சேய்),—என்றும=என்றைக்கும= எப்போதும் ;—தன்வெண்குடைக்கீழ்=under his white umbrella ie under his admininistration of justice ;—தீது=கெடுதி=அநீதி=evil, sin, injustice ;—ஓவ=ஒழிய=கெட=இல்லாமற்போக ;—பார for பாரை = earth—whole put for part=his country ;—காத்த=காப்பாற்றின=that upheld ;— சேய்=பிள்ளை=the child or son of kunti—or அரசன் king.

## Paraphrased Reading.

பெரிய இராச்சியத்தையும் எஙகளது பெரிய ஐசுவரியத்தையும் இழந்து விட்டு அண்டொணாத கொடியகாட்டை அடைந்திருக்கிறதற்கு உண்டாயிருந்த நிமித்தம்தான் எதுவோ ஐயனே என்றுகேட்டான், எப்போதும் தன்னுடைய தவளச் சத்திரத்தின் கீழ் பொல்லாங்கில்லாதிருக்கப் பூமியைககாப்பாற்றின குந்திபுத்திரர் என்றவாறு.

Syntax.

1. Subject சேய். Predicate என்றான். 2. காரணம் (தான்) Subject to யாதோ Interrogative Predicate வினைப்பயனிலை. 3. அரசும் திருவும் Accusative governed by கைவிட்டு. 4 கானம் Accusative, governed by சேர்தற்கு or சேர. 5. சேர்தற்கு has for its nominative நாங்கள், understood. 6. தீது nominative to ஓவ. 7. பார Acc. governed by காத்த.

### Outline.

8, சேய் என்றான். என்றும் தன்வெண்குடைக்கீழ்த்தீதோவப்பார்காத்த சேய், காரணம் யாதோவென்றான், கைவிட்டுவெங்கானஞ் சேர்தற்கு.

9. Dharma feeling no satisfaction from Vyasas' comfort - giving answer, asks him, somewhat annoyed, dear me, what the meaning of all this vexation is.

IX. கேடில விழுச்செல்வங் கேடெய்து சூதாட
லேடவிழ்தார் மன்னர்க் கியல்பேகாண் - வாடிக்
கலங்கலைநீ யென்றுரைத்தான் காமருவுநாடற்
கிலங்கலைநூன் மாயனெடுத்து.

கேடில் (கேடு + இல்)=கெடுதியில்லாத=கெடுதியாகாத=imperishable, inexhaustible ;— விழுச செல்வம்=high prosperity ,—கேடு = அநாத்தம= injury, damage, ruin ;—எய்து for எய்துகின்ற (Relative Participle in crude form) ;—சூதாடல் (சூது + ஆடல்)=சூதாட்டம்=gaming ;—nominative to இயல்பே—ஏடவிழ்தார for ஏடு + அவிழ் + தார்=இதழ்மலாநதமாலை = petal-opened wreaths--attributive to மன்னர் ;--மன்னாக்கு=அரசாககு ;--இயல பே=சுபாவமே=natural ,—காண்=do you see? or a particle denoting *indifference* in colloquial usage ,--வாடி=வருந்தி=fainting or pining ;--கலங கலை (ஐ=2nd person singular termination)=கலஙகாதே=despair not ;--நீ ;—என்றுரைததான்=thus said (he) ;— கா=காவனஙகள = சோலைகள்= groves topes or large gardens ,--nominative to மருவு + நாடற்கு=நாட னுககு=to him of such a land ,—இலஙகலை=இலஙகுகின்ற r அலைகின்ற= shining and moving ;--Roots used for பெயரெச்சம் qualifying நூல் ;-- for பூணூல்=sacred thread worn by Brahmins and Rishis ;—மாாயன்=மா ாபையுடையான = வியாசா=Vyasa ,—எடுதது =சுட்டி =having taken or pointed.

### Prose Reading.

கேடில்லாத விழுமிய செல்வததைக கேடெய்துவிக்கின்ற சூதாட்டமானது, இதழ்கள்விரிநத மாலை (அணிநத) இராசாக்களுககு சுபாவமேதான், ஆதலால், வருந்திககலஙகாதே என்று, சோலைகள் மருவிய (சூழ்நத) குருநாடனுக்கு (தருமனுக்கு) பிரகாசிக்கின்ற ஆடுகின்ற பூணூலைக்கொண்ட மாாயனாகிய வியாசன் சுட்டிச்சொன்னானென்றவாறு.

### Syntax.

1. Subject சூதாடல். Predicate இயல்பே. காண் Imperative Predicate governing இதை, understood ;--காண agrees with நீ, also understood.—Subject நூன்மாாயன். Predicate உரைத்தான். Object வாடிககலங்கலை நீயென்று for என்பதை. But this is Morells'=இது ஆங்கிலேயகாள்பக்ஷம. 2. கேடு

nom to இல். இல்=radical form of இல்லாத. கேடில் qualifies விழுச்செல்வம். விழுச்செல்வம் (acc. விழுச்செல்வத்தை) governed by எய்து. கேடு, also accusative governed by the same எய்து—as விழுச்செல்வத்தைக்கேட்டை எயது விக்கின்ற. 3. கேடில் விழுசசெல்வங் கேடெய்து--this phrase is to be taken as விசேஷணம் to சூதாடல். 4. எடவிழ்தார் என்பது, மன்னர்க்கு விசேஷணம். தாரையுடைய மன்னர்க்கென்று வேற்றுமைத் தொகையாகக்கொள்வதிலும், எடவிழ்தார் மன்னர்—இலஙகலை நூன் மாரபன்என compound nouns ஆகவருவனவற்றை விசேஷணமென்று கொள்வது அதிகச் சுளுவென்கிறதாக ஒருயோசனை தோன்றுகின்றது இப்படிப்பட்ட தொடர்களையும் தொகைகளையும Attributive combination எனபர் ஆங்கிலேயகாளும, மகாபாஷியத்தைப்பார்த்த பின்னர் என்றறிக. பலபெயரொட்டுக்களையும அவ்வாறே.

X. கணணிழந்து மாயக் கவறுடிக காவலாதா
மணணிழந்து போநது வன நணணி - விண ணிழந்த
மின்போலு நூன்மார்பா மேதினியில் வேறுணடோ
வெனபோ லுழந்தாரிடர்.

கண்= eye for prudence, wisdom=அறிவு=புத்தி ;--இழந்து=கெட்டு=கண்கெட்டு= having lost ;--மாய for மாயமான=மாயமுள்ள=மயக்கஞ்செய்கிற=மோசாட்டம் பண்ணுகிற=deceiving, deceitful ,—கவறு for கவறை or கவற்றை=சூதை=game ;--ஆடி=விளையாடி=having played ;—காவலாதாம் =அரசர்தாம்=protectors, guardians, kings ;—மண=earth for kingdom ;—இழந்து=having forfeited;—போநது=போய்;--வன for வனம=வனத்தை=jungle ;—நண்ணி = அணுகி= கிட்டி=அடைந்து=having come into :--விண்ணிழந்த=that descendedst from heaven=விணணி லிருந்துவாந ;—மின்போலு நூன்மார்பா (மின் + போலும் + நூல் + மாாபா)=மின்னலைநேரும் பூணூல் (பூண்ட) மாாபனே=O thou (wearing) lightning-like thread—விசேஷணம்=attributive combination—மேதினியில் = பூமியில=in the earth :--வேறு=மற்ற=others ;--உண்டோ for உண்டு + ஓ=are there any ;—என்போல்=என்னைப்போல் =like myself ;—உழந்தாா= பட்டாா= அவஸதைப்பட்டோர்=those who got into difficulties ,—இடர்=இடர்கள=சஙகடததிற்குள்=in or into pain, danger.

## Paraphrased Reading.

அறிவுகெட்டு (கூறுகெட்டு) மோசச்சூதாட்ட மாடி இராசாக்கள் தங்கள் இராச்சியத்தைத் தோற்றுப்போய்க்காட்டினுட்புகுந்து--தேவலோகத்திலிருந்திறங்கிய மின்னற்கொடிபோன்ற பூணூலையுடைய மார்பனாகிய வியாசபகவானே—இவ்வுலகத்தில் வேறுபேர் இருந்தார்களா, என்னைப்போலும் பட்டோர் சஙகடத்தை யென்றவாறு.

### Syntax.

1. Subject உழந்தார் வேறுகாவலா. Predicate உண்டோ. Object இட

ர்=இடைா or கண்ணிழந்து மாயக்கவறாடி மண்ணிழந்துபோந்து வன நண்ணி (ய) இடைா=Objective combination. 2. கண் - கவறு - மண் Accusatives governed by இழந்து ஆடி and இழந்து respectively. காவலர் is common nominative to all these, இழந்து ஆடி இழந்து போந்து நண்ணி and உழந்தார். 3. இடருழந்தார் வேறுகாவலர் உண்டோ (என்றுகேட்டார் understood) 4. விண்ணிழந்த=விண் இழிந்த=இறங்கின. மார்பா=மார்பனே=Vocative. 5. உழந்தார் காவலர் வேறு in apposition. வேறு, by the 20th Sutram வினையியல் Nannul, agrees with any gender and person : வேறு இல்லை உண்டு=ஐம்பான் மூவிடத்தன.

XI. சேமவேல் மன்னனுக்குச் செப்புவான் செந்தனிக்கோ
லூமவேற் காளை நளனென்பான் - யாமத்
தொலியாழி வைய மொருங்கிழப்பப் பண்டு
கலியால் விளைந்த கதை.

சேம for சேமம்=பத்திரம்=care, guard, safety--perhaps the Sanscrit க்ஷேமம—வேல்=for வேலாயுதம, வேலாயுததைதயுடைய (சேமவேல் adjective and noun=பண்புதொகை) ;--மன்னனுக்கு=to the king Dharma ;—செப்புவான்=சொல்லுவான் for சொல்லுகிறான் (*future* for *present* as well as *past*),--agrees with வியாசன் understood and governs the last கதை ;--செந்தனிககோல் (செம் + தனி + கோல்)=செம்மைத்தனிமைக்கோல் = upright matchless sceptre ;—attributive to நளன்--நாமவேல் (நாமம் + வேல்)=பயங்கரமான வேலாயுதம் = awful, dreaded ;—also attributive to நளன்=காளை=இளைஞன்=youth hero (in apposition with நளனென்பான் = as காளையாகிய நளன் என்பான ;—subordinate nominative to இழப்ப ;—யாமத்து= சாமத்தில் =at midnight ;--ஒலி for ஒலிக்கின்ற (Root for Rel-Participle)=roaring ;--ஆழி=கடல் for கடல்சூழ்ந்த = sea-surrounded or sea-girt ;--வையம் for வையத்தை = பூமியை=earth for kingdom ;--Objective case governed by ஒருங்கிழப்ப=ஒருங்கு for ஒருமிக்க=முழுதும்= altogether (adverb)--இழப்ப for இழக்க = to loose to forfeit--Infinitive, finishing ending or joining with விளைந்த ;—பண்டு=பூர்வம்=முன்னே= before, formerly, in ancient times ;--கலியால் = கலிபுருஷனால் = by or through the agent Kali ;--விளைந்த=நடந்த=that transpired or that was produced ;--கதை for கதையை=the story—the main Object of the stanza, which செப்புவான் governs.

## Free Reading.

பத்திரகரமான வேலாயுதமேந்தும் நளராசனுக்கு வியாசபகவான் சொல்லுவான் எதையென்னில், தன்னிகரற்றசெங்கோ லோச்சும், பயங்கரஞ் செய்யும் வேலாயுதமேந்தும், வீரனாகிய (காளையாகிய) நளனென்பவன் அர்த்தராத்திரியில்,

கோஷிக்குஞ் சமுத்திரஞ் சூழ்ந்த பூமியை ஒருமிக்க இழந்து போம்படியாக முன்னொருகாலத்தில் கலிபுருஷனாலே விளைவிக்கப்பட்ட சரித்திரத்தை எ - று.

Syntax.

1. Subject வியாசன், to be supplied by context. Predicate செப்புவான். Object கதை. 2. நளனென்பான் Nominative to இழப்ப the Verb which governs வையம்.

Outline.

3. நளனென்பான் வையமிழப்ப விளைந்தகதை (யை) மன்னனுக்கு (வியாசன்) செப்புவான். 4 கலியால்விளைந்த=கலிவிளைத்த, மூன்றும் வேற்றுமைக் கர்த்தா=Instrumental Agent. 5. சேமவேல்—செந்தனிக் கோல்=காமவேற் காளை=ஒலியாழி=இவைகள் விசேஷணங்கள்=Attributives and Epithetical Characterestics. 6. ஒருங்கு from ஒன்று=altogether, one and all. ஒருக்க ஒருமிக்க and even ஒக்க are contended to have come from ஒன்று. ஒக்ககொண்டுபோனான்=he carried off all, leaving nothing behind.

XII. காமர் கயல்புரளக் காவிமுகை நெகிழத்
தாமரையின் செந்தேன் றளையவிழப் - பூமடந்தை
தன்னாட்டம் போலுந் தகைமைத்தே சாகரஞ்சூழ்
நன்னாட்டின் முன்னாட்டு நாடு.

காமர்=அழகான ;—கயல்=கெண்டைமீன் or சேல்மீன் ;—புரள=மயங்க=தயங்க=to move in graceful turns ;—காவி=குவளை=நீலோற்பல புஷ்பம் ;—முகை=மொக்குகள் ;—நெகிழ=மலர=to open as flowers ;—தாமரையின் ;—செந்தேன் (செம் + தேன்)=நல்லதேனானது ;—தளையவிழ=(தளை + அவிழ)=கூடுகழல=கட்டுக்குலைய ;—பூமடந்தைதன் (பூ + மடந்தை + தன்) பூமிதேவியினுடைய=of the earth - goddess ;—நாட்டம் போலும்=கண்போலும்=like the eyes ;—தகைமைத்தே=தகைமையதாயிருக்கின்றது=is of such a (nature) description—(a conjugated noun=குறிப்புவினை) ;—சாகரம்=சமுத்திரம்=Ocean, Nom to சூழ் ;—சூழ் for சூழ்கின்ற=வினைத்தொகை ;—நன்னாட்டில் (நாடு=country, a *part* for the *whole*)=in (this) good earth ;—முன்=in front, as the best ;—நாட்டு for நாட்டுகின்ற=fixing=presenting—notable ;—நாடு=the country.

Explanatory Paraphrase.

அழகிய கயல்மீன்கள் புரள பூமாதேவியின் கணனென்னும் படியான தகைமையது நாடு—நீலப்பூக்கள் மொக்கு மலரும்படியான அழகு விளங்க பூமாதேவியின் நயனம் இஃதென்னும் தன்மையது நாடு—தாமரையின் செந்தேனானது கூடு கொலையும்படியான அம்மாதிரி விநோதம் விளங்க பூமாதேவியின் கண்போலுந் தன்மையது நாடு.

1. The infinitives புரள - நெகிழ - and அவிழ end with நாட்டம் போ

னும். Reduce these infinitives into (தொழிற்பெயர்) verbal nouns, and you will see what the native idea is,—as—கயல்புரளுதல், பூமடந்தைகண்போலும் தன்மை யுடையது நாடு—நீலப்பூ மொக்குகள் மலருதல், பூமடந்தை கண்போலுந் தன்மையது நாடு—தாமரையின் செந்தேன் தளையவிழ்தல், பூமடந்தை கண்போலுங் காட்டும் நாடு. 2. கயல் - நீலம் - தாமரை are camparisons to the eyes of young ladies. 3. பூமடந்தை=Lakshmi, if பூ mean Red Lotus. Sarasvati, if it signify White Lotus. The Mother Earth, if பூ denote பூமி. 4. The context requires the supply of sentences like these ;—as ஒருநாடு இருந்தது, அந்நாடு மேற்கண்ட தகைமையது, அதன்பெயர் விடதம்.

Syntax.

5 Subject நாடு. Predicate தகைமைத்து. 6 கயல் Nominative to புரள. காவி or முகை Nominative to நெகிழ. செந்தேன் or தளை Nominative to அவிழ-சாகரம் agrees with சூழ நாட்டம் for நாட்டத்தை governed by போலும. 7. தளை in botany is that, expressed by the term *cup*. தளையவிழ்தல்=the gush of mellifluous contents of a flower or fruit. 8. தன்னாட்டம் for தன் ஆட்டம் her sport - play - meaning the developements of Nature. The productions of the earth are called, *her sports*.

XIII. கோதை மடவார்தங் கொங்கை மிசைததிமிர்ந்த
சீதக் களபச் செழுஞ்சேற்றால் - வீதிவாய
மானக் கரிவழுக்கு மாவிந்த மென்பதோர்
ஞானக் கலைவாழ் நகர்.

கோதை=மாலை (விசேஷணம் of மடவார்) ;—மடவார்தம்=பெண்களுடைய ;—கொங்கை மிசை = மார்பின் மேல் ;—திமிர்ந்த—நிறைந்த = நெருங்கிய=பூசப்பட்ட ;—சீத for சீதமாகிய = குளிர்ந்த ;—களபம்=கலவை=mixture=compound=களபமாகிய ;—செழும் for செழுமையாகிய=rich ;—சேற்றால்=சேற்றினால் ;—வீதிவாய்=தெருவினிடத்தில் ;—மானக்கரி (மானம big + கரி elephants) பெரிய யானைகள் ;—வழுக்கும்=sliding, slipping, slippery —Future Relative Participle ;—மாவிந்த மென்பது=called Mavindam ;—ஓர் =ஒரு, one, only, matchless, agreeing with நகர ;—ஞானக்கலை=அறிவுநூல் for நூல்கள=literature and science ;—வாழ் for வாழ்கின்ற=living=used= improved ;—நகர் the city. எபதோர் நாடு, என்பதாகிய ஒருநாடு.

1. In that country there was a city called Mavindam. 2. மாவிந்த மென்பதோர் நகர் உண்டு. 3. Subject நகர். Predicate உண்டு or இருந்தது, understood. 4. செழுஞ்சேற்றால் வழுக்கும். 5. வீதிவாய் கரிகள்வழுக்கும்.

XIV. நின்றுபுயல வானம பொழிந்த நெடுந்தாரை
யென்று மகில்கமழு மென்பராற - றென்ற
லலர்த்துங் கொடிமாடத் தாயிழையா ரைம்பாற்
புலர்த்தும் புகைவான புகுந்து.

நின்று=standing=gathering hovering ;—புயல்=clouds=மேகங்கள் ;

—வானம்=ஆகாயத்தில்=in or from the sky ;—பொழிந்த=பெய்த=poured (agreeing with புயல்) ;—நெடுந்தாரை=நீண்ட or தடித்த மழை வீழ்வுகள்= thick streaks of water ;—Nominative to கமழும் ;—என்றும்=எக்காலத்திலும் at all times ;—அகில்=a kind of Sandal wood ;—கமழும் will smell=வாசிக்கும் ;—என்பரால் (என்பர் + ஆல்)=they say :—தென்றல்=தென்காற்று =south wind ;—அலர்த்தும்=அசைக்கும்=ஆடச்செய்யும்=causing to move or moving ;—கொடி=துவசங்களையுடைய=flags ;—மாடத்து = மாடத்திலே =உப்பரிகைகளிலே ;—மெத்தைவீட்டு மேல் மாடிகளிலே ;—ஆயிழையார் (ஆய் for ஆய்ந்த chosen, choisest + இழை=jewels)=nom to புலர்த்தும் :—ஐம்பால்=கூந்தல்களை=தலைமயிரை=hair ;—புலர்த்தும், ஆற்றும்=உலரப்பண்ணும்=உலர்த்தும்=drying ;—புகை=smoke ;—வான்=வான் வெளியில்=in the atmosphere (there in the skies) ,—புகுந்து=having entered=சென்று கலந்து.

## Free Rendering.

தடித்துப்பம்பிநின்று மேகங்கள் வான்மண்டலத்திலிருந்து பெய்த நீண்ட மழைத்தண்ணீர்த்தாரைகள் எந்தக்காலத்திலும் அகில் வாசனையே பரிமளிக்கும் என்று சொல்லுகிறார்கள், தென்காற்றானது ஆட்டுகின்ற, கொடிகள்(கட்டிய) மேல் மெத்தைகளில் ஸ்திரீ ஜனங்கள் தங்கள் தலைமயிரை ஆற்றுகிற (அகில்முதலிய) புகையானது ஆகாயவெளியில் சென்று பரவியென்றவாறு.

## Syntax.

1. Subject. உலகத்தோர் or அவ்விடத்தோர்—to be supplied. Predicate. என்பரால் (ஆல்=அசை). Object. நின்று புயல்வானம பொழிந்த நெடுந்தாரை என்றும் அகில்கமழுமென்பதை. இது ஆங்கிலேயபக்ஷம். இங்ஙனங்கொள்ளாக்கால் இவ்வகையான பாட்டுக்களுக்கு செயப்படு பொருள் இல்லை யென்றுகூறுமுடியும். 2. புயல் nom to பொழிந்த. நெடுந்தாரை nom to கமழும்=நெடுந்தாரையில் அகில் கமழும். தாரை கமழும் அகில் கமழும் என்பதில், தாரை அகிலாய்க்கமழுமென வினையுரிநீர்மையும் தள்ளப்படுவதன்று. 3. தென்றல் nom to அலர்த்தும். தென்றலானது அலர்த்துங் கொடி. 4. புயல் nom to புகுந்து.

## Outline.

4. புகைவான் புகுந்து புயல்பொழிந்த நெடுந்தாரை அகில் கமழும்=இந்தச் சங்கதியைச்சொல்லிக் கொள்ளுகிறார்கள். 5. நின்று பொழிந்த நெடுந்தாரை - தென்றல் அலர்த்துங் கொடிமாடம் - ஆயிழையார் ஐம்பாற் புலர்த்தும் புகை. 6 நிடத தேசத்தில் வீடுகள் மேகமண்டலத்தை அளாவக்கட்டியிருக்கின்றன, அம்மெத்தைமேல் ஸ்திரீ ஜனங்கள் ஸ்நானம் பண்ணுவார்கள். தலைமுழுகின உடனேதலையாற்றிக்கொள்ள வேண்டும். அதற்குச்சந்தனம் அகில் முதலிய தூள்களை நெருப்பிற்போட்டுக் கிளம்பும் புகையில் தலைமயிரை விரித்துப் பிடிப்பார்கள், இந்தப்புகை வாசனைப்புகை யாதலால் மேகங்களிடத்தில் கலந்து மழை அங்கிருந்து பூமியில் விழுந்தபோது, இங்கே அந்த வாசனை அடிக்கின்றதாம்.

7. புகை புகுந்து தாரா அகில் கமழும்=புகை புகுந்ததினால் தாரா அகில் கமழும்=காரணப்பொருட்டு. இவன் வந்து அவன் காரியங் கெட்டதென் றுல க வழக்கிலுங்காண்க.

XV. வெஞ்சிலையே கோடுவன மென்குழலே சோருவன
வஞ்சிலம்பே வாய்விட்டரற்றுவன - கஞ்சங்
கலங்குவன மாளிகைமேற் காரிகையார் கண்ணே
விலங்குவன மெய்ந்நெறியை விட்டு.

வெம்=cruel ;—சிலையே=வில்லே=bows (singular for plural) ;—கோடுவன=கோணுவன=கோணலாயிருப்பன=curved ;—மென்குழலே = மென்மையான=மிருதுவான=மெதுவானகுழலே =கூந்தலே=தலைமயிரே ;—சோருவன=தளர்வன=குலைவன=such as get loose ;—அஞ்சிலம்பே=அழகிய நூபுரமே = கச்சைக்கொலிசு என்னப்பட்ட கால் ஆபரணமே = ankle ornament ;—வாய்விட்டு=வாய்திறந்து ;—அரற்றுவன=அழுவன = புலம்புவன= such as lament or cry ;—கஞ்சம=தாமரைகள் ;—கலங்குவன=தயங்குவன =such as move tremble or despair ;—மாளிகைமேல்=மேல்வீடுகளின்மேல் =upstairs ;—காரிகையார் = ஸ்திரீகளுடைய ;—கண்ணே=கண்களே ;—விலங்குவன=விலகுவன=நீங்குவன=such as go astray, deviate ;—மெய்ந்நெறியை=the true way=from the right path ;—விட்டு=leaving or having left.

## Paraphrased Reading.

கொடியவில்லுகள் வளைவனவேயன்றி மற்றொன்றுங்கோணல் அந்நகரத்தில் இல்லை ஸ்திரீசனங்கள்=சனங்களுடைய மெல்லியதலைமயிர்குலைவனவேயல்லாமல் வேறெதுவும் சோர்தல்இல்லை தாமரைகள் தண்ணீரில் தயங்குகின்றனவேயொழிய மற்றியாரும கலங்குவதில்லை. நேர்பாதையை விலகிப்போவன உப்பரிகைமேல் பெண்களுடைய கணகளே தவிர இந்தபட்டணத்தில் வேறொன்றுமில்லை என்று.

1. சிலை குழல் சிலம்பு கஞ்சம் கண் இவை பால்பகாஅஃறிணைப்பெயர்கள்=சிலைகள் குழல்கள் சிலம்புகள கஞ்சங்கள் கணகள் எனககொள்க. 2. கோடுவன, சோருவன அரற்றுவன கலங்குவன விலங்குவன இவை எதிர்காலத்துப் பலவின்பாற்படர்க்கை வினையாலணையும் பெயர்கள=கோடும சோரும அரற்றும் கலங்கும விலங்கும் எனக் கொள்ளப்படும.

XVI தெரிவன நூலென்றுந் தெரியா தனவும்
வரிவளையார் தங்கண் மருங்கே - யொருபொழுது
மில்லாதனவு மிரவே யிகழ்ந் தெவருங்
கல்லா தனவுங் கரவு.

(a) தெரிவன=அறிவன=அறியப்படுவன,—நூல்=கலைகள்=கலைக்கியானங்கள் = books, literature, sciences ;—என்றும = எந்த வேளையிலும ;—

(b) தெரியாதனவும்=தெரியப்படாதன= கண்ணுக்குத்தோன்றாதன ;—வரிவளை யார்தங்கள்=வரிவளையார்தங்களுடைய=வரிவரியாய் விளங்கும் வளையல்களைய ணிவோர்=ஸ்திரீகளுடைய ;—மருங்கே=இடைகளே = இடுப்புகளே ;—(c) ஒருபொழுதும்=ever ;—இல்லாதனவும்=இல்லாதவை ;—இரவே=இரவுகளே= beggings for beggars ;—(d) இகழ்ந்து = அவமதித்து=despising ;—எவரும்=எல்லாரும் ;—கல்லாதனவும்=கற்காதன=படிக்காதவை ;—கரவு for கரவுகள்=திருக்கு திருட்டு முதலியவைகள்.

## Abstract.

1. நூலே தெரிவன. மருங்கே தெரியாதன. இரவே இல்லாதன. கரவே கல்லாதன. Active for Passive. 2. இடைசிறுத்திருந்தால் ஸ்திரீகளுக்கு அழகென்பது அழகுநூலின்விதி. அதுபற்றித்தெரியாதன மருங்கென்னப்பட்டது.

XVII. மாமனுநூல் வாழ வருசந் திரனசுவர்க்கி
தாமரையாள் வைகுந்தடந் தோளான் - காமருபூந்
தாரான் முரணைநகர் தானென்று சாற்றலாம்
பாராளும் வேந்தன் பதி.

மா=great=celebrated ;—மனுநூல்=Menus' institutes=மானவ தருமம் ;—nom to வாழ ;—to live in prosperity ie to be administered, upheld ;—வரு=வந்த=பிறந்த=born ;—சந்திரன்சுவர்க்கி=Chandra Swarki, a king ; —தாமரையாள்=இலட்சுமி=Lakshmi ;—nom to வைகும் ,—வைகும=உறையும்=இருக்கும் = residing ;—தடந்தோளான் = விசாலமான தோளையுடையான் ;—காமருபூந்தாரான் (கா+ மரு for மருவிய+பூ+தார+ ஆன்)=சோலைகளிற் பொருந்திய பூக்களாலாகிய மாலைகளை யணிந்தவனுடைய ,—முரணை நகர= the city of Muranai ;—தான் itself ;—என்று ;—சாற்றலாம் = சொல்லலாம= one may say, ie. it may be said ;—பார் for பூமியை ;—ஆளும்=ruling ;—வேந்தன்=of the monarch Nala ;—பதி=இராஜதானி=the Capital (acc. case).

## Paraphrased Reading.

மகத்தாகிய மானவதரும சாஸ்திரமானது விருத்தியாகி விளங்குமபடி அவதரித்திருக்கின்ற சந்திரன் சுவர்க்கி என்னப்பட்ட, இலட்சுமி வாசஞ்செய்யும விசால புசங்களையுடையானுகிய அழகுபூமாலை யணிந்தவனுடைய முரணை நகரந்தான் (இது) என்று சொல்லலாம், பூமியையாளுகினற நளசசக்கிரவாத்தியினுடைய இராசதானியை, என்றவாறு.

## Syntax.

1. Subject : ஒருவர் or நாம் understood. Predicate சாற்றலாம். Object. பதி. 2. முரணைநகர் Nom to தான் or இதுதான் (a Noun - Predicate=பெயரப் பயனிலை). 3. மனுநூல் Nom to வாழ. 4. வாழ (வரு) வந்த சந்திரன்சுவர்க்கி. 5. தாமரையாள் Nom to வைகும். 6. தாரான்தோளான் சுவர்க்கி in apposition. 7. காவிலே மருவிய பூ=காமருபூ=காயா + உ + பூ.

## Outline.

(a) நளவேந்தன்பதியை முரணைநகர் தான் என்று சாற்றலாம். (b) யாருடைய முரணைநகர்? சந்திரன்சுவர்க்கி தோளான் தாரானுடைய முரணைநகர். எப்படிப்பட்ட சந்திரன் சுவர்க்கி? மாமனுநூல் வாழும்படி வந்திருக்கிற சந்திரன சுவர்க்கி. (c) சந்திரன் சுவர்க்கி=Patron of the author புகழேந்தி. N. B. From the 12th to the 17th Stanza, the poet gives a description of நிடதம் the country, and மாவிந்தம் the capital of Nala. Now begins the story of நளன் in particular.

XVIII. ஓடாததானை நள னென் றுளனொருவன்
பீடாரும் செல்வப் பெடைவண்டோ - டூடா
முருகுடையமாதர் முலைநனைக்குந் தண்டா
ரருகுடையான் வெண்குடையா னாங்கு.

ஓடாத=புறங்கொடாத=பின்வாங்காத=that will not retreat ;—தானை=சேனை=பட்டாளம் ;—விசேஷணம் of நளன் ;—நளனென்றுள னொருவன்=நளன் என்பவன் ஒருவன் இருந்தான் ;—பீடு=பெருமை ;—ஆரும்=நிறையும்=நிறைந்த,—(agreeing with பீடு) ,—செல்வப்பெடை=செல்வமான (dear) பெண்வண்டானது ;—வண்டோடு=ஆண் வண்டோடு=with the male bee ;—ஊடா for ஊடாத=பிணங்காத=கோபிக்காத ;—முருகு=தேன் (Acc.) ;—உடைய ;—மாதர்=ஸ்திரீகளுடைய ;—முலை=தனங்களை (Acc. governed by நனைக்கும்) ;—நனைக்கும்=நீரால் நனையச்செய்யும் ;—தண்டார (தண்+தார்)=குளிர்ந்தமாலைகளை ;—அருகு = அணைவு = மார்பருகே = தோளருகே ;—உடையான் ;—வெண்குடையான்=வெள்ளைக் குடையோன் ;—ஆங்கு=ஆங்கே=அந்த பட்டணத்திலே=மாவிந்தத்திலே.

## Free Rendering.

தோற்றுப் பின்வாங்காத சேனைகளை நடாத்தும் நளனென்பவன் ஒருவன் இருந்தான் ;—பெருமைபொருந்திய செல்வஞ் (செருக்கும்) பெட்டைவண்டானது தன் ஆண் வண்டுடனே பிணங்காத - தேனையுடைய - ஸ்திரீகளுடைய ஸ்தனங்களை நனைக்கும் - நீர் நனைவுடைய குளிர்ந்த மாலைகளை மார் பருகே தோளருகே யுடைய தவளச்சத்திரத்தான், அந்த நகரத்திலே.

1. அங்கே நளனென் றொருவன் தண்டாரருகுடையான் வெண்குடையான் உளன்=இருந்தான். 2. பெடையானது ஊடாத முருகுடைய மாதர். 3. நளன் என்று=called நளன். என்று=an equivalent particle with ஆகிய=என்னப்பட்ட=என்கிற used between two nouns in apposition ; as மதுரையென்றொரு பட்டணம், மண்ட்ரோ என்றொரு கவர்னர், மகிழாருப்பியமென்றொரு பட்டணம், வர்த்தமானனென்றொரு வர்த்தகன். &c. 4. Singular உளேன்—உளாய்—உளான் or உளன்—உளாள or உளள்—உளது or உள்ளது. Plural உளோம்—உளீர் - உளார் or உளர்-உளன or உள. உண்மை or உள்பகுதி புடைபெயராந்த வினைக்குறிப்புக்கள்.

XIX. சீதமதிக் குடைக்கீழ்ச் செம்மையறங் கிடப்பத்
தாதவிழ்பூ ந்தாரான றனிக்காத்தான - மாத
ரருகூட்டுமெ பைங்கிளியு மாடற பருந்து
மொருகூட்டில் வாழ வுலகு.

சீத=சீதம்=குளிர்ந்த ;—மதி=சந்திரன் = சந்திரனபோன்ற ;— குடைக்கீழ்=குடையின்கீழ்=அரசின்கீழ் ;—செம்மை= செம்மையாக = செவ்வையாக (செவ்வன்) = conveniently ie. without molestation ;—அறம்=தருமம்=law, justice or peace ;—Nom to கிடப்ப ;—கிடப்ப for கிடக்க=இருக்க=நடக்க =to be, ie to get on, to prosper ;—தாதவிழ் பூநதாரான (தாது=pollen+ அவிழ்=shedding + பூ + தார்)=மாலையான் நளன் ;—தனி=தனிமையாக=தானே or ஒப்பில்லாமல்=independently or without a comparison ;—காத்தான்=காப்பாற்றினான் = protected or governed ;— மாதர்=ஸ்திரீகள் ; — அருகு=கிட்ட=பக்கத்தில் ;—ஊட்டும்=உண்பிக்கும்=feeding ;—பைங்கிளியும் = பச்சைக்கிளியும் ;—ஆடற்பருந்தும் = ஆடல் செய்கின்ற பருந்தும் ;— ஒருகூட்டில்= in the same cage ;—வாழ=to live together ;—உலகு=உலகத்தை.

## Prose Order of the Stanza.

தாதவிழ் பூந்தாரான் சீதமதிக்குடைக்கீழ் அறம் செம்மை கிடப்ப - மாதர் அருகூட்டுமெ பைஙகிளியும் ஆடற்பருந்தும் ஒரு கூட்டில்வாழ— உலகு தனிக்காத்தான. ஆடல்செய்கின்ற=வல்லமை செய்கின்ற. 1. தாதவிழ் பூந்தாரான் உலகு காத்தான். 2. அறம்செம்மை கிடப்பக்காததான். 3. கிளியும பருந்தும ஒருகூட்டில் வாழக்காததான். 4. குடைக்கீழ் கிடப்ப=குடைககீழ்வாழ. 5 செம்மை adverb qualifying கிடப்ப. Nouns as Adverbs ;—as ஏகதேசம, பெரும்பான்மை, சிறுபான்மை, விஸ்தாரம், விசேஷம, பரிச்சேதம், எளளளவு, இலவலேசம், அவசியம்.

XX. வாஙகு வளைகையார் வதன மதிபூத்த
பூங்குவளைக் காட்டிடையே போயினன - றேங்குவளைத
தேனாடிவண்டு சிறகுலாத்து நீாநாடன
பூநாடிச சோலை புக.

வாங்கு=radical form of வாங்குகிற=round ;—வளைக்கையார் =வளையற்கரத்தாரது=பெண்களுடைய ;—வதனமதி=வதனமாகியமதி=முகசநதிரன் ;— Nom to பூத்த ;—பூத்த = புஷ்பித்த = that produced ;—பூங்குவளை = pretty kuvalai flowers (in apposition with காட்டிடையே) or pretty eyes ;—காட்டிடையே=காட்டின் நடுவிலே ;—போயினன் ;— தேங் குவளைத்தேன் (தேம்= sweet + குவளை = of kuvalai flower + தேன்=in the honey)=மணங் கமழும் நீலமலரதுதேனில் ;—ஆடி=முழுகி ;—வண்டு for வண்டுகள் Nom to உலர்த்தும் ;—சிறகு=சிறகுகளை=feathers—acc. governed by உலர்த்தும் ;—உலர்த்தும்= காய்விக்கும்=drying ;—நீர்= தண்ணீர் வளப்பமுள்ள ;—நாடன்=

நாட்டையுடைய நளன் ;—பூநாடி=பூக்களைத்தேடி ;—சோலை = சோலையில்= காவனத்தில் or சோலையை ;—புக=போக=உள்ளே செல்ல=to enter in.

### Prose Order of the Stanza.

தேங்குவளைத்தேன் ஆடி, வண்டு சிறகு உலாத்தும் நீர் நாடன், வாங்குவளைக்கையர் வதனமதிபூத்த பூங்குவளைக்காட்டிடையே பூநாடிச்சோலை புகப்போயினன்.

## Paraphrase.

மணங்கமழும் நீலப்பூக்களின் தேனிலே வண்டுகள் நீராடி (முழுகி) தாங்கள் இறகுகளை உலர்த்திக்கொண்டிருக்கிற நதிகள் ஏரிகள் தடாகங்களாகிய நீர் வளம் பொருந்திய நாடன்=நளன், வாங்குகின்ற வளையற்கைப் பெண்களுடைய முக சந்திரனிடத்தில மலர்ந்த நீலோற்பல மென்கிற கண்களாகிய காட்டின் வழியே (அநேகஸ்திரீகள் பார்த்துக்கொண்டு நிற்க வென்கிறபடி) பூக்களைத்தேடிப் பூங்காவனத்திற் பிரவேசிக்கப் போயினன்.

1. நீர்நாடன் புகப்போயினன். 2. மதி பூத்த பூங்குவளைக்காட்டிடையே போயினன். 3. வண்டு ஆடிச்சிறகுலர்த்து நீர நாடன். 4. நீர நாடன் பூநாடிப் போயினன். 5. சோலைபுகப்போயினன். Nalan enters his orchard to gather flowers.

XXI. வென்றிமத வேடன் வில்லெடுப்ப வீதியெலாந்
தென்றன மதுநீர் தெளித்துவர - நின்ற
தளவேனன் மீதலரு தாழ்வரைசூழ் நாடற்
கிளவேனில் வந்த தெதிர்.

வென்றி=வெற்றி from வெல்பகுதி ;—மதவேடன் (ம, ம் + வேள் + தன்) or மதன் + வேடன் = cupid=fowler— Nom to எடுப்ப ;—வில்— வில்லை ;—எடுப்ப for எடுக்க ;— வீதியெலாம்= எல்லா வீதிகளிலும்= வீதியெங்கும் ;—தென்றல்= தெற்கிலிருந்து அடிக்குங்காற்று ;—Noin to தெளித்துவர ;—மதுநீர்=மதுவாகிய நீரை ;—தெளித்துவர=to sprinkle and to come=sprinkling along ;—நின்ற=that stood like a shrub ;— தளவு=முல்லை=a species of Jessamine ;—Noin to அலரும் ;—ஏனன்மீது (ஏனல்+ மீது) upon or over Millet (plants) ;—அலரும்=மலாகின்ற ;—தாழ்வரை for தாழ்வரைகள் =மலையடிகள்=valleys ;—சூழ் for சூழ்கின்ற=நாடற்கு=நளனுக்கு ;—இளவேனில் = பாலசூரியகிரணம=beams of the morning sun ;—வந்தது ;—எதிர், எதிரில்=against him.

## Paraphrase.

வெற்றிசெய்கின்ற மன்மத வேளானவன் தன் வில்லை (புஷ்பபாணங்களை) எடுக்கும்படியாகவும்,—தென்காற்றானது தேனாகிய தண்ணீரைத் தெளித்துவரும்படியாகவும், நிற்கின்ற முல்லைக்கொடிகள் தினைகளின்மேலேறி மலரும்படியான மலைச்சாரல்கள் சூழ்ந்த நாடனுக்கு எதிரிலே இளவேனில் வந்தது-என்றவாறு.

1. வேள், வில்லெடுப்ப இளவேனில் எதிர்வந்தது. 2. தென்றல், நீர் தெ

ளித்து வர, இளவேனில் வந்தெதிர ;—யாருக்கென்னில், முல்லைகள் போய்த்தி னைகளினமேலே படருந்தாழ்வரை சூழ்நீர் நாடனுக்கு=நளனுக்கு.

XXII. தேரிற் றுகளைத் திருந்திழையார் பூங்குழலின்
வேரிப் புனனனைப்ப வேயடைந்தான் - கார்வண்டு
தொக்கிருந்தா லித்துழலுந் தூங்கிருள்வெய் யோற்கொதுங்கிப்
புக்கிருந்தா லன்ன பொழில்.

தேரின்=தேரிலிருந்து=caused by (the moving of his) car ;— துகளை= தூளை= தூசியை ;— governed by நனைப்ப ;—திருந்திழையார் (திருந்து + இழை + ஆர்) of girls ;—பூங்குழலின்=பூக்களையுடைய கூந்தலின் ,—வேரிப்புனல்=வாசனைநீர்=scented water ;—Nom to நனைப்ப ;—நனைக்க=to wet in water ;—ஏ=particle ;—அடைந்தான்=வந்தான் ;—கார்வண்டு = கறுப்புவண்டுகள்=தொக்கிருந்து (தொக்கு from தொகு swarm, Imperative, + இருந்து)= கூடியிருந்து=மொய்த்திருந்து = swarming together ;—ஆலித்து = சந்தோஷித்து=joyful, cheerful (Past Participle=செய்தென்னெச்சம்) ,—உழலும்=சுழலும்=சுற்றித் திரியும்=moving to and fro ;—தூங்கிருள் (தூங்கு sleeping+ இருள் darkness)=pending darkness, ie. ever dark ;—Nom to ஒதுங்கி and புக்கு and இருந்தால் ;—வெய்யோற்கு=வெய்யவனுக்கு=சூரியனுக்கு ,—ஒதுங்கி=எட்டி+பதுங்கி ;—புக்கு=புகுந்து (creeping) ,—இருந்தா லன்ன=இருந்தாலொத்த=இருந்தால் எப்படியோ அப்படிப்பட்ட=as if it is sitting ,—Relative Participle used as an adjective ;—பொழில=பொழிலை or பொழிலில் =சோலையில்.

Prose.

(நளமகாராசன்) தன்தேரோடுதலினாலே பூமியிலிருந்து கிளம்புந்தூசிகளை ஸ்திரீசனங்களுடைய கூந்தல்களின் வாசனைநீரானது நனைக்கும்படியாக, கறுத்தவண்டுகள் மொய்த்திருந்து சந்தோஷிக்கும் நிறைநிழலிருளானது சூரியவெப்பத்திற் கொதுங்கி (ஒதுதிப்போய்) புகுந்துகொண் டிருந்தாற்போ லிருக்கின்ற சோலையை அடைந்தான் என்றவாறு. 1. நளன் பொழிலை அடைந்தான். 2. துகளைப்புனல் நனைக்க அடைந்தான். 3. தூங்கிருள்வெய்யோற் கொதுங்கியிருந்தாலன்னபொழிலை அடைந்தான். 4. கார்வண்டு தொக்கு இருந்து ஆலித்து உழலும் தூங்கிருள். 5. தூங்கிருள்=நிறையிருள்=utter darkness. 6. Singular அனையேன் - அனையாய்=அன்னாய் - அனையான்=அன்னான் - அனையாள்=அன்னாள் - அனையது=அன்னது. Plural அனையோம- அனையீர - அனையார=அனையா = அன்னர் - அனையன=அன்ன. அன்ன participial form.

XXIII. நீணிறத்தாற் சோலை நிறம்பெயர நீடியதன்
றணிறத்தாற் பொய்கைத் தலைசிவப்ப - மாணிறத்தான்
முன்னப்புட் போனவு முளரித் தவிசைவிட்டு
மன்னப்புட் போனதிறமே யாங்கு.

நீள்=long, for white,=நிறத்தால்=by colour of the swan, *white* ;—சோ

லை ;— நிறம்= its own colour—*black* ;—பெயர=மாற=to change ;— நீடிய = நீடின =நீண்ட= long for *pretty, red* ;—தன்=தன்னுடைய=its, ie the swans' ;—தாள்=தாளினது=பாதங்களினுடைய ;— நிறத்தால்=சிவப்பு நிறத்தினால் ;—பொய்கைத்தலம்= தடாகத்தின் இடம்=the site of the tank ;— சிவப்ப = செவக்க= செவப்பாக=to become red ;— மாணிறத்தான் முன் (மாண் honourable + நிறம் + character + அத்து + ஆன் + முன்)=மாட்சிமைக் குணத்தானுக்குமுனனே ;—அப்புள்=அப்புகருள=தணணீரிலே ;—தோன்றும்= appearing, grown ;—Fut-Rel-Participle ,—முளரிததலை=முளரியில்=தாமரைமேல் ;—வைகும=வசிககும=living, sitting ;—அனனப்புள் (அன்னம் + புள = bird) அம்சமாகிய பறவையானது ;—தோன்றிற்று + ஏ=appeared, was seen ;—ஆங்கு=அங்கே=there.

நீண்ட நிறத்தினால் (வெண்மை நிறததினால்) முன்னே தூங்கிருளிருந்ததென்னப்பட்ட அச்சோலையானது, தனகருநிறம மாறும்படியாகவும், நெடுகிய (செவநத) தன்னுடைய காலகளது நிறததினாலே தடாகஸ்தானம் செம்மிட்டுக்காணும்படியாகவும், மாட்சிமைககுணததோன்=நளன் கண்முன்னே, தண்ணீரில் முளைததிருககும தாமரையினிடத்தில் வசிககின்ற அம்சப்பட்சியானது காணப்பட்டது என்றவாறு 1. சோலை நிறம பெயர=சோலையில் நிறமானது பெயர=சோலையானதுநிறததிற்பெயர. 2. அனனப்புள தோன்றிற்று.

XXIV. பேதை மடவனனந தனனைப பிழையாமன
மேதிக்குலமேறி மெனகருமபைக - கோதிக்
கடித்துநதான முத்துமிழுங கங்கைநீர நாடன்
பிடிகநுத்தா வென்றுன பெயாநது.

1 பேதை=பேதையே = பெண்ணே O Maid ;— Vocative without termination=அணமை விளி. 2. மடம்=ignorance, beauty. 3. அன்னந்தன்னை=அனனததை 4 அன்னத்தை பிழையாமல் (தப்பாமல) பிடிததுத்தாவென்றுன. 5 மேதிக்குலம் = எருமைககூட்டம். 6. மென்கரும்பை=மெலலியகரும்பை 7 கோதி=உடைதது=ஒடித்து 8 உமிழும்=உதிாககும or உதிரும் =falling or shedding. 9. பெயாநது = எட்டிப்போய் =receding, moving back slowly so that he may not disturb the swan.

XXV. நாடிமட வனன்நதை நலல மயிற்குழா
மோடி வளைககின்ற தொபபவே - நீடியநற
பைங்கூந்தல வலலியாரகள பற்றிக்கொண்டு போநது
தங்கோமின் முனவைத்தார தாழ்நது.

நாடி = தேடி = யோசிதது =having thought, circumspect,—மடவன்னதைை—அழகிய அமசத்தை ;— நல்ல ;—மயிற்குழாம =மயிலகளின கூட்டம் viz. maidens ,—ஓடிவளைககின்ற தொபபவே—ஓடி வளைநது கொள்ளுகிறதுபோலவே ,—நீடிய நறபைங கூந்தல=நீணட நலல பசுமையாகிய கூநதல்களையுடைய=long fine silk-like hair ,—வலலியாரகள= வலலிககொடி போல்வார=

கொடிபோல்வார்=maidens ;—பற்றிக்கொடுபோந்து=(பிடித்து) பற்றிக்கொண்டு வந்து or போய் ,— தங்கோவின்முன் (தம் + கோ + இன் + முன்) தங்கள் அரசன் முன்னர் ;—வைத்தார்=விட்டார்=கொடுத்தார்=தாழ்ந்து = having humbled themselves, ie. obediently.

1. நாடிப்பற்றிககொடு போந்து தாழ்ந்து வைத்தார். 2. தமிழ்வினை யெச்சங்கள் ஆங்கிலேய வினையுரிகளாய் மொழிபெயர்க்கப்படும் உதாரணங்கள் செய்யுளிலும் உலகவழக்கிலும் அநேகமுண்டு ;—தாழ உரை=speak humbly. சுளிக்கச் சொல்லேல் speak not harshly. களித்துப்பாடின they sing cheerfully. 3. வளைக்கின்றதொப்ப=வளைக்கிறதுபோல=வளைத்தாற்போல=வளைத்தா லன்ன=வளைத்தன்ன=are equivalent forms, signifying *as if—like unto—like*.

4. நல்லமயில்=குறிப்புப் பெயரொச்சத் தொடர். நல்ல - பெரிய - அரிய கரிய - சிறிய - குறிய - வெய்ய - தூய - துய்ய - செய்ய-செவ்விய- நெடிய - இவைகளும் இவைபோல்வனவும், இறந்தகாலத்தும் நிகழ் காலத்தும் பெயரொச்சத்து அகரவிகுதிகொண்டமை கண்டும், பெருகிற - பெருகிய - கருகிற - கருகிய - சிறுகிற - சிறுகிய - வேகிற=வெந்த, நெடுகிற=நெடுகிய என ஒருவாறேறத்தாழத் தெரிநிலைப்புடை பெயருருவங்களாற் காட்ட இடம்பட்டுக் கிடக்கின்றமை கண்டும் ,—சிறுகினவென்பதே சின்ன, கருகினவென்பதே கன்ன, சின்னஞ் சிறுத்தவென்றால் சிறுகின சிறுத்த, கன்னங்கறுத்த வென்றால் கருகின கறுத்தவென அதிகத்தைக்காட்ட அடுக்குத் தொடாபோற் கொள்ளப்படுமாறு நோக்கியும் ;—அன்ன வென்பது அது என்ன, இன்னவென்றால் இது என்ன, என்று கூர்ந்து கோளாமாறுநோககியும ;—அதுபோல் இதுபோல் என்பவற்றிற்கு ஒரோவேளை அது என்ன இது என்ன, கார்களென்ன வருங்கருமேதிகளிற காணுமாறே, பிரதிபதங்களாய் (paraphrase) வழங்குதல்பற்றியும் ;—வேண்டுமென்கிற எதிர்காலத்துப் புடைபெயர்ச்சியே போல, முதலுமென்னும் புடை பெயர்சியுண்மையால், முதலியவென்னும் இறந்தகாலத்துப் பெயரொச்சத் துண்மையால், முதலிற்றுத்தான் இடைக்குறை முதற்று என,—அதுவாயிருக்கிறது அற்று, இதுவாயிருக்கிறது இற்றுப்போல் ஒப்புமை காட்டுஞ் சாதிரிசியங்கொண்டும் ;—குறிப்புப்பெயரொச்சங்கள் பெரும்பாலும் முன்தமிழ் நாட்டில் ஒருகாலத்துப்புடைபெயர்வினைகளாய் நின்றவற்றின் எச்சங்கள் எனவே கொள்கவென்பார், சாதிரிசியவியாகரண சமரசபாஷிய முடையோர், ஆதுநிகர். நல்ல இல்ல அல்ல உள்ள முதலிய கூட, நல்லுதல் இல்லுதல் அல்லுதல் உள்ளுதல் என நின்றாற்போலுங் கொண்டு, அந்தககொள்கைக்கு நன்று அன்று இன்று உண்டு என இறந்தகாலஞ் சாக்ஷி காட்டுவர், கொல் கொன்று வெல் வென்று என்கிற சாதிரிசியததாலும, அற்க வென்னு மெதிர்மறை வியங்கோள் விகுதி, ஸ்வயமான இடைச்சொல் அல்ல, நில்பகுதிக்கு நிற்கவியங்கோள போல், அல்பகுதிக்கு அற்க வியங்கோளானது, போகற்க நடவற்கவென்னுமிடத்து, போகமாட்டேன் நடக்கமாட்டேன் என்னுஞ் செயவென்னெச்சத்து முடிபாய், போக அற்க, நடக்க அற்கவென்று தெரிநிலை முற்றாய் வருஞ்சாதிரிசியத்தாலும்,—எதிர்மறை இலக்கணத்திறகு, ஆ

ரியபாடைகளே போல், தமிழில் அவ்வியயங்களுமல்ல பிரத்தியயங்களுமல்ல, மூற்றுவினைகளே யென்பதற்கு, இறப்பும் நிகழ்வும் இறந்தொழிந்த நடவேன் நடவாய நடவான்களாகிய எதிர்காலத்துப் புடைபெயர்ச்சி ஒன்றேதவிர, ஏனைய நடக்கல் நடக்கலன் நடக்கின்றிலன் நடக்கமாட்டே னித்தியாதிகள், பகுதிப்புடைபெயர்ச்சிகளாய்க் காட்டாது (inflected forms) சாதிபிரித்துக்காணுந் தொடர் (phrases) களாகவே காட்டுஞ் சாதிரிசியத்தாலும், மேற்கண்ட கொள்கையை வற்புறுத்துவ தொன்றறிக. இங்ஙனமெழுது மிலக்கணவிசேஷங்கள் மற்றிரிகயுலேஷியன மாணுக்காக்குப் போதப்பயன் செய்யா வாகையால் இரண்டொரு இவ்டாது விருப்பத்தை நிறைவேற்றுதற் கநேகர தபிஷ்டங் கூடாதென நிறுத்தினோம்.

XXVI அன்னந்தனைப் பிடித்தாங் காயிழையார் கொண்டுபோய்
மன்னன் திருமுன்னர் வைத்தலுமே - யன்ன
மலங்கிற்றே தன்னுடைய வானகிளையைத் தேடிக்
கலங்கிற்றே மன்னவனைக் கண்டு.

அன்னந்தனை (இன்னபிறவு மென்றதனால், தன்சாரியை)=அன்னத்தை ;—பிடித்து ;—ஆங்கு= உடனே= then and there ;— பிடித்தாங்கு = பிடித்தவுடனே ;—ஆயிழையார் கொண்டுபோய் ;—மன்னன for மன்னனுடைய ;—திருமுன்னா=சமுகத்தில்=before him, in his presence ;—வைத்தலுமே (வைத்தல் + உம + ஏ) = as soon as they kept=no sooner they kept ;— வைத்தவுடனே or வைத்ததும ;—அன்னம் ;—Nom to மலங்கிற்று and கலங்கிற்று ;— மலங்கிற்றே, moved, was terrified = நடுங்கிறது ;— தன்னுடைய ;— வானகிளையை=பெரிய இனத்தை = large company, numerous relations ;—governed by தேடி ;—கலங்கிறறே = தியங்கிறது = despaired, was troubled ;—மன்னவனைக்கண்டு= இராசாவைப் பார்த்து.

## Prose Order.

ஆயிழையார் அன்னந்தனைப் பிடித்து ஆங்குக்கொண்டு போய் மன்னன்திருமுன் வைத்தலுமே, அவ்வன்னம் தன்னுடைய வான கிளையைத்தேடி மலங்கிற்று, மன்னவனைக்கண்டு கலங்கிற்று.

## Paraphrased Prose Order.

ஸ்திரீசனங்கள் அம்சப் பக்ஷியைப் பற்றிக்கொண்டு போய் அரசன் சமுகத்தில் வைத்ததும் (வைத்தஉடன்), அவ்வன்ன மானது நடுங்கிற்றுகித தனது விஸ்தாரமான உறமுறைகளை நினைத்து இராசனைப் பார்த்துக் கலங்கிப்போயிற்று என்றவாறு. உறமுறை=உறவின்முறை.

1. ஆயிழையார் - வல்லியர்கள் - திருந்திழையார் - பூங்குழலார் - வளைக்கையர் - பொற்றொடியார்- காரிகையார்- கோதைமடவார் - வஞ்சியனையார் - பைந்தொடியார் - துடியிடையார் - மைவிழியார் - பிறைநுதலார் - கொம்பனை- கொம்பனையார் - கொம்பனார் - வேல்விழியர் - வாள்விழியர். All these and many more like these signify *women*, rather *young women*. With the plural

termination ஆர், they are generally parsed as compound nouns (தொடர்) and appellatives (வருபெயர் or காரணப்பெயர்) ;—but without ஆர், they are all either ஆகுபெயர் or அன்மொழி, which two terms comprehend under them, all such distinctions as are expressed by *Nouns of secondary intent, Synecchdoche, Metonymy, Alleosis, Trope, Figure* &c.

2. வைத்தலும்—காண்டலும்—என்னலும—கேட்டலும் இத்தியாதி வழக்கியல்களை உரையாசிரியர்கள் வினையெச்ச மென்பார் - சூத்திரகாரர்கள இதற்கு வாய்பாடு செய்தார்களில்லை இக்காலத்துப் பதிப்பாசிரியர்கள் (Editots)' நன்னூல் பதவியலில் விகுதிச்சூத்திரத்தின் கீழ் வினையெச்ச விகுதிக ளெனப்பங்க்தி (பத்தி) பிரித்து, அதன்கண் உம் விகுதியை இட்டுக்கொடுத்து அதற்குதாரணம் ,, காண்டலும்" எனக்காட்டி யிருக்கின்றனா இதற்கு எடுத்தாளும வாய்பா டில்லாமை ஒன்றே சங்கடம். செய்தென் னெச்சமென்று நன்றாய் வ்யவகரிக்கலாம், ஆனல் அது வெறும்வியாவகாரிகமேயாகும், பாரமார்த்திகமாக மாட்டாது, ஏனென்றால், சேவகன் வந்தவுடனே பணத்தை அனுப்பினேன் என்கிறபக்ஷத்தில், தக்ஷணத்தில் அனுப்பினேன என்றாலும் ஆகும, காரியா காரியங்கட்கேற்ப, அன்றைத்தினத்தில் அனுப்பினேன், அந்தவாரத்திலனுப்பினேன் ;—என்றாலுமாகும் ; காண்டலும கேட்டலு மென்பவை அப்படிக்கல்லாத நிமிஷதீவிரத்தை ஃக்ஷணிகதீவிரத்தைக் குறிக்கின்றனபோலும - இதற்கு உலகவழக்கியலே சாக்ஷி - என்னைக்கண்டது மெடுத்தா னோட்டம், சேவகன் வந்ததுதான் ஒருத்தரையுங்காணோம், இத்தியாதிவழக்கியலில உம்மைபெற்ற வினையா லணையும பெயர்களும், செய்யுள் வழக்கில் அல் தல் ஏறுமாத்திரமே பெற்றதொழிற பெயர்களும் மேலைச்செய்தெனனெச்சப்பொருட்டா வருவன அறிக. தொல்காப்பியத்துள்ளும் நன்னூலிலும் வினையெச்சத்துச் சூத்திரங்களில் இதற்கு வாய்பாடில்லையேனும், சிறப்புவிதியில் (32rd Sut. வினையியல் Tolkapiyam) பின்முனகால் கடைவழி யிடத்தென்னு மன்னமரபிற் காலங்கண்ணிய வென்னகிளவியும் அவற்றியல்பினவேயென்றார். காலங்கண்ணிய மரபிற் செய்தென் னெசசமென்றாலோ, இங்ஙனம் எடுத்தாள் வார்யாருமில்லையே யென்றது, எடுத்தாண்டு கொள்வதே நன்றெனக - அவ்வாறே செயின என் எசசத் திலக்கணத்திலும் ஒரு சங்கடமுண்டு. அஃதாவது, செய்தால் (If) முதலிய வாய்பாடுகளையும், செய்தாலும் (Although notwithstanding—nevertheless) ஆதியாகிய வாய்பாடுகளையும், செயதாலும் செய்வான் (It is likely=probable he will do) முதலிய வாய்பாடுகளையும், செய்தாலும் செய்தான் செய்யாவிட்டாலும் இல்லை (he might or might not) என்கிற வாய்பாடுகளையும், செய்தாலும் செய்யான்=கொடுத்தாலும்வரான்=இருந்தாலும் கொடான் (never—at all) என்றுவரும் வாய்பாடுகளையும் குறிப்பிக்க அல்லது எடுத்தாள, உம்மைக்குப் பெயரிட்டு உயர்வு இழிவு முதலியகருத்துக்கூர்மைகண்டு சொல்ல, இடர்ப்படுவதைக் காட்டிலும், இடர்ப்பட்டும் அவரவர் அபிருசிக்கேற்ப அர்த்தம்பண்ணி மாறுகோண் மதங்களால் வேறு கோண்படுவதைப் பார்க்கிலும், செயின் என்னெச்சம், செயினும் என்னெச்சம், செயினு

ஞ்செய்தாலெனச்சம், செயினுஞ் செய்யா னெனனெச்சம் என்றிங்ஙனமெடுத் தாண்டால் ஒருவாறு இலேசாய் விளங்குமெனவறிக.

XXVII. அஞ்சன் மடவனமே யுனறனணி நடையும்
வஞ்சியனையார் மட நடையும் - விஞ்சியது
காணப பிடித்தது கா ணென்றான களிவண்டு
மாணப பிடித்ததார மன்.

அஞ்சல்=அஞ்சாதே=அஞ்ச + அல் or அற்க=பயப்படாதே ;—மடவனமே (மடம் + அனமே) அழகன்னமே ;—உனறன (உன + தன்)=உன்னுடைய ;—அணி=அணியான= அழகான=graceful ,—நடையும=நடையையும்=gait=walk ;—வஞசி=வல்லி= வலலிகொடி=வல்லிகொடியை (யொத்த) ; governed by அனையார் =of those who resemble, *ladies*—குறிப்புவினை like உடையார் governing accusative—மணிநடையும=அழகுநடையுமம=நடையையும் ;—விஞ்சியதுகாண=மிஞ்சினதைபபாாக்க=to see which is better ;—பிடிததது for பிடிததேன்=I caught ;—காண=do you see, or (a particle denoting the common expression) *it is nothing, nothing else* ;—என்றான் ;—களிவண்டு=களிக்கின்றவண்டு—Nom to மாண—மாண=மாட்சிமைப்பட= to be proud ;—பிடித்த=கோத்த=கோக்கப்பட்ட=that was strung ;—தார் மன்=மாலையணிந்தமன் ;—Nom to என்றான். அழகன்னமே பயபபடாதே, உன்னுடைய அழகான நடையையும (நடையிலும) ஸதிரீகளுடைய அழகு நடையையும் (நடையிலும்) எதுமிஞசின தென்று பாாக்கும்படி உன்னைப்பிடித்தேனே யன்றிவேறிலலை யென்றான் தேன்வணடுகள மகிழ (மாண) மகிழுமபடியாகப்பூக்களை (அன்றுபூத்தமலாகளைக்) கோததிருக்கின்ற மாலையணிந்த நளமகாராசன் - எறு. பிடித்தல்=உண்டாககல் as பிள்ளையார பிடிததல், குடமாகப் பிடிததல், &c. in the case of பிடிதத தார.

XXVIII. செயய கமலத திருவை நிகரான
தையல் பிடிதத தனியனனம - வெயய
வடுமாறறமில்லா வரசன சொற கேட்டுத்
தடுமாறறந் தீரநததே தான.

செய்ய for செவப்பான ;—கமல for கமலம் (locative) ;—திருவை=இலட்சுமியை ;—நிகரான (நிகர்+ஆன) நிகர்த்த=நோநத=சரியான=ஒத்த ;—தையல்=பெண்=a maiden, one of the maid servants standing there ;—பிடித்த=that she caught ;—தனியன்னம்=superior swan ;—Nom to தீர்ந்தது—வெய்ய=வெம்மையாகிய=cruel ;—அடு for அடுகினற=கொல்லுகின்ற ;—மாற்றம்=மாறுதல் = மாறுபாடு = பகை=treacherous design ;—இலலா= இல்லாத ;—அரசன்=of the king ;—சொல் for சொலலை ;—governed by கேட்டு = having head (செய்தென்னெச்சம்) ;—தடுமாற்றம் = trembling, doubt, fear ;—தீர்ந்தது=got cleared ;—ஏ=particle ;—தான=expletive.

1. அன்னம்தமொற்றம் தீர்ந்தது—அன்னம் தமொற்றத்தி னின்றும் தீர்ந்தது. 2. தையல்பிடித்த தனியன்னம. 3. திருவைநிகரான தையல். 4. தனியன்னம் அரசன்சொற்கேட்டுதீர்ந்தது. 5. திருவை நிகரான=accusative governed by ஆன, on account of நிகர்.

XXIX. திசைமுகந்த வெண்கவிகைத் தேர்வேந்தே யுன்ற
னிசைமுகந்த தோளுக் கிசைவாள - வசையி
றமையந்தி யென்றோதுந் தையலாண் மென்றோ
ளமையந்தி யென்றோ ரணங்கு.

The Swan answers Nala;—திசை for திசையை=திக்குகளை=cardinal points=all over the world,—முகந்த=மோந்த=எட்டிய;—வெண் கவிகைத் தேர்=வெளளைக்கொடிரதம—விசேஷணம to வேந்தே=O king;—உன்றன்=உன்னுடைய;—இசைமுகந்த=கீர்த்திபொருந்திய—தோளுக்கு=புசஙகளுக்கு=உனக்கென்றாததம=to you;—இசைவாள=பொருந்துவாள=தகுந்தவள=proper match;—வசையில் (வசை + இல்) வசை இல்லாத=கெடுபெயர இல்லாத=wanting bad report, i e. of a good report;—தமையந்தி யெனறோதும (தமயந்தி+என்று+ஓதும்)=தமயந்தி யென்று சொல்லும for சொல்லப்பட்ட=called Damayanti;—தையலாள்=பெண்ணுள்=a girl;—மென்றோள் (மெனமைதோள்=மெல்லிய தோள்);—அமை for அமையை=மூங்கிலை=bamboo;—அந்தி=சேர்=பொருந்து=be thou joined, be thou equalled, resemble thou;—என்றோர்=என்று ஒரும்படியான;—அணங்கு=தெய்வப்பெண்=பெண்=a goddess-like girl—Nom, in apposition with தையலாள், to இசைவாள.

திசைகளை யெட்டிய வெள்ளைக்குடைகள் பொருந்திய ரதங்களையுடைய அரசனே, உன்னுடைய கீர்த்திபொருந்திய புயஙகளுக்குத தகுந்தவளா யிருப்பாள், இகழ்ச்சியில்லாத (வடுவற்ற) தமயந்தியென்று (எல்லாருஞ்) சொல்லும் தையலாளாகிய—மெல்லியதோளே நீ மூங்கிலைப் பொருந்து (நிகராகுநீ) யென்று கூர்ந்து கொள்ளும்படியான தெய்வப்பெண் - எறு.

1. அந்தி Imperative from the Sanscrit word அந்தம் *end*, some-what like சந்தி. ஒரு அந்தம் மற்றொரு ஆதியைச சேருகின்ற பக்ஷமாய்க் கொண்டால் அந்தி யென்றும், இரண்டும் வந்து பொருந்தும் பக்ஷத்தில் சந்தியென்றும் கொள்க.

XXX. அன்ன மொழிந்த மொழிபுகா முன்புக்குக்
கன்னி மனக்கோயில் கைக்கொளளச் - சொன்னமயி
லாரமடந்தை யென்று னனங்கன் சிலைவளைபப
பாரமடந்தை கோமான பதைத்து.

அன்னம்=swan, Nom to மொழிந்த=that it said;—மொழி=the word—Nom to புகா;—புகாமுன்=புகாததற்குமுன்னே=no sooner the word reached;—புக்கு=புகுந்து than she entered;—கன்னி=கன்னிகை=virgin;

—மனக்கோயில் = மனமாகிய கோவிலே = இடத்தை = அரமனையை=heart-palace ;—கைகொள்ள=ஆண்டுகொள்ள=since she took possession for full use of her authority ;—சொன்னமயில்=நீ சொன்ன பெண் ;—ஆர்மடந்தை= யாருடைய பெண் (குமாரத்தி) ;—என்றான் ;—agrees with கோமான்—அநங்கன் (அந் + அங்கன்)=அவயவ மில்லாதானாகிய மன்மதன்=cupid ;—Nom to வளைப்ப—சிலை=for சிலையை = புஷ்பபாணங்களை =flower-arrows ;—gov. by வளைப்ப—பார்மடந்தை = பூமாதேவி = பூதேவியின் = கோமான்=Koman=king ;—Nom to என்றான் :—பதைத்து =துடித்து. Nala asks the Swan whose daughter is Damayanti.

அன்னஞ் சொன்னசொல்லானது இவன் காதில் உட்படாமுன்னமே அக்கன்னிகையானவள் அவன உள்ளததரமனையில் அதிகாரங்கொள்ள வந்துவிட்டமையாலும், மன்மதன் புஷ்பபாணங்களை வளைததமையாலும் பூமிப்பெண்ணுக்குத்தலைவன் நளன் துடித்து (அவ்வளவு அவசரமென்றபடி) நீசொன்ன (மயில்) பெண், ஆருடைய மகள் அவள் என்று கேட்டான் - எறு.

1. கைகொள்ள to take possession. 2. கைக்கொள்ள - சிலைவளைப்ப - பதைத்து என்றான் கோமான்.

XXXI. எழுவடுதோண மனனு விலங்கிழையோர் தூண்டக்
கொழுநுதியிற சாயநத குவளை - யுழுநர்
மடைமிதிபபத தேனபாயு மாடொலிநீா நாடன்
கொடைவிதாபபன பெறறதோா கொமபு

எழு = எழுவை =தூணை ;--அடு for அடுகின்ற=எதிர்த்து திடிக்கின்ற ;—தோள் மன்னு=மன்னனே (voc) ;—இலங்கிழை=shining jewel, viz. the lady I referred to (அந்தபெண்ணானவள யாதென்றால்)—ஏாதூணட =ஏரை ஓட்ட ;—கொழுநுதியில்=கொழுவினது (காறு) நுனியினால் ;—சாய்ந்த=ஒடிநத, முறிந்த ; வளை=நீ லோற்பலஙகள ;—Nom to பாயும ;—உழுநர்=உழவர்கள=plough-men, farmers, Nom to மிதிப்ப ;--மடை for நீர மடைகளை ;—மிதிப்ப=மிதிக்க=to tread, to press ;—தேன்=honey (Nom, in apposition with குவளை) ;—பாயும்=ஓடும்=gushing ;—மாடு = பக்கம்= இடம்=places, sides ;—ஒலி நீர் for ஒலிக்கின்றதண்ணீர் உள்ள ;—நாடன் for நாடனாகிய ;--கொடைவிதர்ப்பன் (கொடை gifts, கொடுக்கின்ற விதர்ப்பன்)=liberal Vidarpan ;—Nom to பெற்றது--பெற்றது=பெற்றதாகிய= பெறறவளாகிய ;—ஓர்கொம்பு = பெண். அந்தஇலங்கிழையானவள் யாதென்றால், கொடை விதர்ப்பன் பெற்றவளாகிய கொம்பு. விதர்ப்பதேசத்தின் அரசன்=விதர்ப்பன்.

XXXII. நாற்குணமு நாறபடையா வைம்புலனு நல்லமைச்சா
வார்க்குஞ் சிலம்பே யணிமுரசா - வேற்படையும
வாளுமே கண்ணா வதனமதிக் குடைக்கீ
ழாளுமே பெண்மைய யரசு.

நாற்குணமும்=நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்கிற பெண்களது நாலுகுணங்களும ;—நாற்படையா for நாலுபடைகளாக=இரதம் கசம் துரகம் பதாதி என்கிற படைகளாக ;—ஐம்புலனும்=ஐந்து புலன்களும்=மெய்வாய் கண் மூக்கு செவி இவ ஐந்து இந்திரியங்களும ;—நல்லமைச்சா for நல்ல அமைச்சுக்களாக (மந்திரிகளாக) ;—ஆர்க்கும்=சப்திககும = ஒலிக்கும் ;—சிலம்பே=பாதசரமே (ankle ornament) ;—அணிமுரசா = அழகிய முரசுகளாக=பேரிகைகளாக (drums) ;—வேற்படையும் (வேல் + படை = வேலாகிய ஆயுதம்)= lances ;—வாளுமே (வாள்+உம்+ஏ)=and swords ;—கண்ணு=கண்களாக as or *for* eyes ;—வதன for வதனம=முகம=முகமாகிய ;—மதி = சந்திரன்=சந்திரனுகிய (மதிமுகமாகிய) ;—குடைக்கீழ்= under the umbrella ,—ஆளுமே (ஆளும் + ஏ)=ஆளுவாள= அதிகாரம செலுத்துவாள் ;—பெண்மையரசு (பெண்மையாகிய அரசு)=பெண் இராசசியத்தை.

1. (அவள்) ஆளும்=அவள் ஆளுவாள் - பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையிற் செல்லாதாகுஞ் செயுமென் முற்று என்பதனால், அவன் ஆளும், அவள் ஆளும் அது ஆளும அவை ஆளும் என்று வருவன செய்யுணடை. 2. ஆ for ஆக, meaning *for, as, instead of* 3. அமைச்சு=Prakrit form of ஆமாத்தியஃ 4. நாற்படையாகவும் அமைச்சாகளாகவும முரசுகளாகவும் கணகளே (வேற்படையாகவும வாளாகவும) (கொண்டு) அவள (understood) பெண்மையரசை ஆளுகின்றாள்.

XXXIII. மோட்டிளங் கொங்கை முடியச் சுமந்தேற
மாட்டா திடையென்று வாய்விட்டு - நாட்டே
னலம்புவார் கோதை யடியிணையில் வீழ்ந்து
புலம்புமா நூபுரங்கள் பூண்டு.

மோட்டிளங கொங்கை (மோடு + இளம் + கொங்கை)=கொங்கைகளை ;—முடிய=முற்றும்=முழுவதும்=எப்போதும்=all along (Infinitive adverbial) ;—சுமந்து=தாங்கி=supporting ;—ஏறமாட்டாது=cannot get up ;—agrees with இடை :—இடை=இடுப்பு Nom to சுமந்து and ஏறமாட்டாது ;—என்று=என்றுகண்டு=seeing, intending, on that account ;—வாய்விட்டு=வாய்திறந்து=உரக்க = உரத்தி = loudly ;—நாட்டேன் (நாள் of that day, today i e new + தேன் honey)=அன்றையதினத்துதேன் Nom to அலம்பு=அலம்புகின்ற=ததும்புகின்ற=நிறைகின்ற=filling, full ;—வார்=வார்கின்ற=வடிகின்ற=spilling ;—or long=நீளமான ;—கோதை for கோதையினுடைய=தமயந்தியினுடைய (the word *wreath* put for the person wearing it=ஆகுபெயர்) ;—அடியிணையில்=இரண்டு கால்களிலும் ;—வீழ்ந்து=விழுந்து ;—புலம்புமாம் (புலம்பும் + ஆம்)=will lament, for do lament ;—நூபுரங்கள்=பாதகொலிசுகள் ;—பூண்டு=போற்றி=caring, caressing, anxious.

1. தேன் அலம்புவார் கோதை=தேன் அலம்பு கோதை=தேன்வார் கோதை. 2. இடைசிறுத்து அழகு செய்கின்றாள் என்பது அர்த்தம்.

XXXIV. என்றுநடங்கு மிடை யென்ப வேழுலகு
நின்றகவிகை நிழல வேந்தே - யொன்றி
யறுகாற சிறுபறவை யஞ்சிறகால் வீசுஞ்
சிறுகாற்றுக் காற்றாது தேய்ந்து.

என்றும் = எப்பொழுது கண்டாலும் ;—நடங்குமிடையென்ப = துவளு கின்ற இடுப்பே (இவளுக்கு) என்று சொல்வார் ;—ஏழுலகும்=(ஏழு + சப்த seven + உலகும்) = சப்தலோகங்களிலும் ;—நின்ற= ஓங்கிநிற்கின்ற=prominent ;—கவிகை=குடை (6th or 3rd case)=குடையி னுடைய—குடையினால் ;—நிழல்=நிழலையுடைய or நிழலைசெய்கிற ;—வேந்தே=voc ;—ஒன்றி= வந்து=கிட்டி ;—அறுகால்=ஆறு கால்களையுடைய - sexapede ;—சிறுபறவை= சின்னபக்ஷி=வண்டுகள் Nom to வீசும் ;—அஞ்சிறகால் (அம் + சிறகு + ஆல்) =அழகு இறக்கைகளால் ,—வீசும=வீசுகின்ற =fanning ;—சிறுகாற்றுக்கு=to gentle wind, breeze ;—ஆற்றாது=தாளாது = தாளாமல்=unable ;—தேய்ந்து= சிறுகி=having become slender, ie. worne off.

உலகத்தோர், தோன்று எழுவாய். என்ப, பயனிலை. ஏழுலகு நின்றகவி கைநிழல் வேந்தே=இப்பாட்டுக்கு முன்னிலை. என்றும் நடங்குமிடையே இவளுக்கு என்பது முடிபு (construction). அறுகாற் சிறுபறவை (வந்து) ஒன் றிதத்ன் அஞ்சிறகால் வீசும் சிறுகாற்றுக்கு ஆற்றாது தேய்ந்து நடங்கும் இடை. When என்கிறாகள் or any of the inflections of the verb என், ends a sentence, it does not require conjunction என்று. So also ஆகு does not require particle ஆக or ஆய், as in எழுத்தாகும யாக்கை, பொன்னின குடமு டைந்தால் பொன்னாகும்.

XXXV. செங்தேன் மொழியாள செறியளக பந்தியின்கீ
ழிந்து முறியென் றியம்புவார - வந்தென்றும
பூவாளி வேந்தன பொருவெஞ்சிலை சார்த்தி
யேவாளி நீட்டு மிடம.

செந்தேன் மொழியாள்=நல்லதேன்போல் வார்த்தை சொல்லுவாளாகிய தமயந்தியினுடைய ;—செறியளக பந்தியின்கீழ்=நிறைந்த கூந்தலாகிய (பங்க்தி, பத்தி) வரிசையின்கீழே ;—இந்துமுறி=சந்திரனதளிர் = சந்திரனது சிறியதுண்டு =மூன்றாம்பிறைச்சந்திரன் ;—என்று, that it is ;—இயம்புவார்=சொல்லுவார் ; —வந்தென்றும் = என்றும் வந்து ;—agrees with வேந்தன் ;—பூவாளிவேந்தன் (பூ flowers + வாளி arrows + வேந்தன் lord)=மன்மதன்—Nom to வந்து, சார்த்தி and நீட்டும்—பொருவெஞ்சிலை (பொரு for பொருகின்ற + வெம் severe + சிலை bow)=எதிர்க்கின்ற (attacking) வெவ்விய வில்லுகளை (acc.) ;—சார்த்தி= சேர்த்து=இட்டு=placing, laying ;—ஏ for ஏவு (*command* for *arrow*)= ஏவு களாகிய ;—ஆளி= ஒழுங்கு = ஒழுங்கை=arrangements, meaning *many* ;— நீட்டும்=wetting ;—இடம் for இடத்தை.

1. ஆளி (ஆள்வோன்). 2. எவிளைத்திட்டும் இடத்தை இந்து முறியென்று இயம்புவார். 3. எவாளி=ஆளிஎ=many arrows 4. இந்துமுறி=முறி இந்து=young moon (*the third phace* for phace on the 3rd day after New Moon. Thus far the Swan, now the king Nala.

XXXVI. அன்னமே நீயுரைத்த வன்னத்தை யென்னுவி
யுன்னவே சோரு முனக்கவளோ - டென்ன
வடைவென்றான் மற்றந்த வன்னத்தை முன்னே
நடை வென்றுடன்பா னயந்து.

அன்னமே Voc ;--நீ உரைத்த=சொன்ன (Past Rel. Part) ;—அன்னத்தை for தமயந்தியை ;--என் ஆவி=my soul ;—Nom to உன்னவே=நினைக்கவே=to think ;—சோரும் for சோருகின்றது=longeth ;—agrees with என் ஆவி—உனக்கு ;--அவளோடு=with her ;—என்ன=what to thee with her. =How came you to know her ?—என்ன அடைவு=what acquaintance ;—என்றான் ;--agrees with அவன understood—மற்றந்த அன்னத்தை (மற்று+அந்த + அன்னத்தை)= the Swan-bird not Damayanti-swan ;—முன்னே = already ;—நடைவென்றாள் தன்பால்=நடையில் வென்ற தமயந்தியின்மேல் ;—நயந்து=இச்சித்து

1. என்னுவி அன்னத்தை உன்னவே சோரும் என்றான். உனக்கு அவளோடு என்ன அடைவு என்றான். தன்பால் நயந்து=தன்னை நயந்து. 2. இங்ஙனம் செயப்படுபொருள்குன்றாத வினைமுன், ஏழாம் வேற்றுமைக ளெல்லாம் இரண்டாம வேற்றுமைகளாகும்.

XXXVII. பூமனைவாய வாழ்கின்ற புட்குலங்கள்யா மவடன்
மாமனைவாய் வாழு மயிறகுலங்கள் - காமன்
படைகறபான் வநதடைநதான பைந்தொடியாள் பாத
நடைகற்பான் வநதடைநதே நாம்.

The Swan answers :—பூவாகிய இடத்தில் (வீட்டில்) வாழ்கின்ற (புள் + குலம்) பறவை இனங்கள் (யாம்) நாங்கள், subject agreeing with மயிற்குலங்கள் Noun-Predicate—அவளுடைய பெரிய அரமனையில் வசிக்கின்ற மயில் இனங்களாயிருக்கிறோம், மன்மதன் ஆயுததை (ஆயுதப்பழக்கத்தை) ப்பயிலும்படி வந்து சேர்ந்தான், நாங்களோ பைந்தொடியா ளாகிய அவளுடைய பாதத்தினுடைய நடையைக்கற்றுக் கொள்ளும்படி வநதுசேர்ந்தோம் (போய்ச்சேர்ந்திருக்கிறோம்) எனறு சொல்லிற்று அன்னம், எறு.

1. வாய்=ஏழாவதுருபுகளில் ஒன்று=at or in. 2. புட்குலங்கள்யாம் in apposition. 3. யாம் மயிற்குலங்கள்=பெயரொழுவாய் பெயர்ப்பயனிலே. 4. கற்பான்=கற்க=கற்கும்படி, Infinitive = செயவென்னெச்சம். 24th வினையியல் Nannul. 5. அடைந்தேம்=அடைந்தோம். See 13th Sut. பதவியல் Nannul. 6. காமன்கற்பான் வந்தான்— நாங்கள் கற்பான் வந்தடைந்தோம்.

XXXVIII. இற்றது நெஞ்ச மெழுந்ததிருங் காத
லற்றது மான மழிந்தது நாண் - மற்றினியுன்
வாயுடைய தென்னுடைய வாழ்வென்றான் வெங்காமத்
தீயுடைய நெஞ்சுடையா னொந்து

இற்றது=ஒடிந்தது, மூறிந்தது=கரைந்தது ;—நெஞ்சம்=உள்ளம்=இருதயம் ;—எழுந்தது ;—இருங்காதல் = மிகுதியான ஆசை ;—அற்றது=கெட்டது=போயிற்று ;—மானம=பெருமை=அபிமானம் respect, honor ;—அழிந்தது ;—நாண = நாணம் = கூச்சம = shame or modesty ;—மற்று = particle ;—இனி ;—உனவாயுடையது = உன்வாயில இருக்கின்றது ;—எனவாழ்வு=my success ;—என்றான் ,— agrees with உடையான ;—வெங்காமத தீயுடைய=கொடிய இச்சையாகிய நெருப்பானது பற்றககொண்ட (உடைய) ;—நெஞ்சுடையான =உளளத்தை உடையான் ;— Nom to என்றான் ;—நொந்து = நினைந்து=தீர்ந்து= having exhausted himself. 1. உனவாயுடைய தெனனுடைய வாழ்வு என்பது, நீபேசிமுடித்தால் எனக்கு அவள இசைவாள எனறு கூறியதாயிற்று. 2. உடையான—அனையான் : குறிப்புவினைகளில் இவைகள் செயப் படுபொருள குன்றாது வருவனவாம் 3. இந்தப்பாட்டிலே நளன்பேசுகின்றான். 4. இருங்காதல்=இருமைககாதல்=பெரியகாதல.

XXXIX. வீமன் றிருமடந்தை மென்முலையை யுன்னுடைய
வாம நெடும்புயத்தே வைகுவிப்பேன - சேம
நெடுங்குடையா யென்றுரைத்து நீங்கியதே யன்ன
மொடுங்கிடையா டன்பா லுயர்ந்து.

வீமனுடைய மெல்லிய மாரபினை உனனுடைய அழகிய நீண்டதோளிலே (தோளினிடத்திலே) சேர்விப்பேன் நான, ஓயக்ஷேமத்தைசசெய்யும பெரியகுடையோனே என்றுசொல்லி, போயிற்று அன்னமானது, ஒடுங்கிய = நுடங்கிய இடுப்பினை யுடைய தமந்தியினிடத்தில் எழும்பி எறு.

1. சேமநெடுங்குடையாய் Voc. 2. மென முலையை வைகுவிப்பேன் என்றுரைத்து உயர்ந்து போயிற்று. 3. உயர்ந்து=சிறகடித் தெழும்பிப் பறந்து எனறர்த்தம். 4. நீங்கியது, வினையாலணையும் பெயரேனும, நீங்கிற்று எனமுற்றாககொள்க. கொள்ளாக்கால், நீங்கிற்று நீங்கும் என்கிற இந்த இரணடு முற்றுவினைப்பெடை பெயர்சசியறிகுறிகளும் கெட்டு, ஏனைய எழு புடை பெயர்ச்சிகள எப்படி வேற்றுமைப் படுமோ அப்படி நீஙகிற்றை நீஙகுமை எனப்படவே வேண்டுமென்னும் வழக்கிற்கு உடம்படுவோமாவோம. The Swan leaves Nala to proceed to Damayanti.

XL. இவ்வளவிற் செல்லுங்கொ லிவ்வளவிற் காணுங்கொ
லிவ்வளவிற் காத லியம்புங்கொ - லிவ்வளவின்
மீளுங்கொ லென்றுரையா விம்மினா னும்மதனின்
முளுங்கொல் யானை யரசு.

இவ்வளவில் = இவ்வளவுநேரத்தில் ;— செல்லுங்கொல்=செல்லுமா ! =

போகுமா=போயிருக்குமா ;—இவ்வளவில் :—காணுங்கொல்=காணுமா= தம யந்தியைக் கண்டிருக்குமா ;—இவ்வளவில் ;—காதல்=என் ஆசையை=என் எண்ணத்தை ;—இயம்புங்கொல் (அவளுக்கு = அவளிடத்தில்) = சொல்லுமா= சொல்லியிருக்குமா ;—இவ்வளவில் ;—மீளுங்கொல் = மீளுமா = திரும்புமா= என்னிடத்தில் திரும்பிவருமா ;—என்றுரையா=என்றுரைத்து (see 24th வினையியல் Nannul);—விம்மினான்=தேம்பினான்=sobbed ;--agrees with அரசு ;—மும்மதம்=மூன்றுமதங்கள்=மூன்று மதங்களும்=+the three kinds of rut ;—நின்று for நின்றும்=நிலைபெற்றும= though unmanageable ;—ஆளும்=ஆளுகின்ற=தன்னால் ஆளப்பெற்ற ;—கொல்யானை (attributive to) ;—அரசு= அரசன், Nom to விம்மினான் கொல்லே ஐயம் அசை நிலைக்கூற்றே எனபதில் இங்ஙனம் ஐயம். 2. செல்லுங்கொல் காணுங்கொல் இயம்புங்கொல் மீளுங்கொல் என்று விம்மினான் அரசு. This stanza is the soliloquy of Nalan.

XLI. சேவல் குயிற்பெடைக்குப் பேசுஞ் சிறுகுரல்கேட்
டாவி யுருகி யழிந்திட்டான் - பூவி
னிடை யன்னஞ்செங்கா லிளவன்னஞ் சொன்ன
நடையன்னந் தன்பா னயந்து.

சேவல்=ஆண்குயில் Nom to பேசும் ;—குயிற்பெடைக்கு=பெட்டைக் குயிலுக்கு=குயிலோடு=குயிலினிடத்தில் ;—பேசும = பேசிக்கொண்டிருக்கும் ;--சிறுகுரல்=மெதுவானசத்தத்தை ;--கேட்டு ;--ஆவி=உயிரானது ;—உருகி=melting=கரைந்து ;—அழிந்திட்டான் (அழிந்து + இட்டான்)= அழிந்து போனான்=swooned ;- - பூவினிடை யன்னம் =Lakshmi-like, in apposition with the next ;—செங்காலின வன்னம்=red web-footed swan ;—Nom to சொன்ன ;--நடையன்னந் தன்பால் = தமயந்தியினிடத்தில் or தமயந்தியை ;--நயந்து=ஒன்றித்து=உள்ளங் கூர்ந்து.

1. சேவல்=ஆண் :--ஏறுமேற்றையு மொருத்தலுங்களிறும் சேவுஞ்சேவலும் இரலையும் கலையுமோத்தையுந் தகருமுதளுமப்பருமபோத்துங்கண்டியும் கடுவனும் பிறவும் யாத்த ஆண்பாற் பெயரெனமொழிப. மரபியல் 2. பெடை= பெட்டை :--பெடையும் பேடையும் பெட்டையும் பெண்ணுமூடுநாகும கடமையு மளகு மந்தியும்பாட்டியும் பிணவும்பிணையும் அந்தஞ்சான்ற பிடியொடு பெண்ணே - மரபியல். 3. சிறுகுரல்=ஆண்பெண் ஏகாந்தத்தில பேசும் இரகசியப்பேச்சின் சத்தம். 4. Nala within himself still.

XLII. அன்ன முரைத்த குயிலுக் கலசுவான
மென்மயி றன்றேகை விரித்தாட - முன்னதனைக்
கண் டாற்றுதுள்ளங் கலங்கினான். காமநோய்
கொண்டாக்கி தன்றே குணம்.

அன்னம் Nom to உரைத்த=சொல்லிய ;—குயிலுக்கு= கோகிலத்துக்கு= குயிலுக்கென்று=on account of Damayanti ;—அலசுவான் = சோம்புவான்=

ளன் ;—மென்மயில்=மெல்லியமயில்=Nom to ஆட ;—தன்தோகை=வால்=வாலை (acc.) ;—விரித்தாட=விரித்து ஆட=ஆடுகிறபோது ;—முன்=தன் முன்னே ;—அதனை=அந்த மயிலை or அந்த ஆட்டத்தை ;—கண்டு=witnessing ;—ஆற்றாது=பொறாது=தாளாமல்=envying ;—உள்ளம = இருதயம் ;—loc ;—கலங்கினான்=பேதலித்தான் ie. பேதித்தான்=lost the presence of his mind ;—Now follows a remark of the author—காமநோய்கொண்டார்க்கு இது அன்றோ குணம்! Of course, Nalan cannot come to end of his soliloquy at this rate.

1. அலசுவான் கண்டு கலங்கினான். அலசு=சோம்பு=tend to=to keep thinking. 2. மென்மயில தோகையை விரித்தாட. 3. அதனை (கண்டு) ஆற்றாது கலங்கினான். 4. அலசுவான் உள்ளங்கலங்கினான்.

XLIII. வாரணியுங் கொங்கை மடவார் நுடங்கிடைக்குப்
பெருவமை யாகப் பிறந்துடையீர் - வாரிர்
கொடியா ரெனச்செங்கை கூப்பினு னெஞ்சந்
துடியா நெடிதுயிராச் சோர்ந்து.

வார்=கச்சு (acc) ;—அணியும்=அணிந்த ;—கொங்கை மடவார் Damayanti, 6th case ;—நுடங்கிடைக்கு=நுடங்குகிற (துவளுகிற) இடுப்புக்கு ;—பெருவமையாக=பெரிய உவமானமாக (comparison) ;—பிறந்துடையீர்=பிறந்து உடையீர்= பிறந்திருக்கிறீர்கள ;—வாரிர = வம்மின் = வாருங்கள்=come ye (2nd Pers. Plural Imperative or Optative) ;—கொடியார் for கொடியாரே =கொடியீரே=கொடிகளே=creepers (voc) ;—என for என்று ;—செங்கை= செம்மை + கை=செவ்வந்தகைகளை ;—கூப்பினான்=குவித்தான் = கும்பிட்டான், Nom to நளன் understood ;—நெஞ்சம்=மனமானது ;—துடியா=துடித்து =பதைத்து ;—நெடிதுயிரா=நெடிதுlong + உயிர்த்து breathing=sighing ;—சோர்ந்து=வாடி.

1. உடையீர்=உளீர்=*having* and *being* are interchangeable in compounds. 2. கொடியார் for கொடிகள் : honorific form in a neuter word : see 28th Sut. பொதுவியல் Nannul.

XLIV. கொங்கை யிளநீராற் குளிர்ந்தவிளஞ் சொற்கரும்பாற்
பொங்கு சுழியென்னும் பூந்தடத்தின் - மங்கைநுழுங்
கொய்தாம வாசக் குழனிழற்கீ ழாறேனே
வெய்தாமக் காம விடாய்.

கொங்கைஇள நீரால்=கொங்கைகளாகிய இளநீர்களால் = tender cocoanuts ;—குளிர்ந்த + இளம் + சொல் + கரும்பால்= குளிர்ந்திருக்கிற இளமையாகி (tender) ய சொல்லாகிய (her speech or conversation) கரும்பினால் (sugar cane) ;—பொங்கு சுழியென்னும்=பொங்குகின்ற beautiful + சுழி navel + என்கிற called (connecting சுழி and தடத்தில்) ;—பூந்தடத்தின் = பூத்தடாகத்

தில் ;—மங்கை=மங்கையினுடைய=of Damayanti ;—நறும்=நல்ல (from நறுமை) ;—கொய்,கொய்த=கிளளின=ஆய்ந்த ;—தாம for தாமம்=wreath ;—வாசக்குழனிழற்கீழ்=வாசனைபொருந்திய கூந்தலது நிழலின்கீழே ;—ஆறேனோ=அடங்கேனோ may I not rest, be quenched ;—வெய்தாம்=வெய்யது ஆகும ஆகிய ;—அக்காமவிடாய்=அந்த இச்சை விடாயானது=thirsting.

1. நீரால் விடாய் ஆறேனோ. சொற்கரும்பால் விடாய் ஆறேனோ. பூந்தடத்தில் விடாய் ஆறேனோ. குழல்நிழற்கீழ் விடாய் ஆறேனோ. நான்=தோன்றா எழுவாய். 2. நான்விடாயாறினேன், பசியாறினேன, தாகந்தீர்ந்தேன் முதலியவற்றிற்கு விரிசெய்யவேண்டுமோனால் விடாயை ஆறக்கொண்டேன்=விடாயைக் கொண்டேன் என்று ஆறுவெனனெச்சத்திற்கு எழுவாயில்லாமல் வாக்கியம் அழகுபடாமையின், விடாய் ஆறககொணடேனெனக. 3. ஆறேனோ Interrogative for Optative=*May* I not.

XLV. மன்னன விடுத்த வடிவிற் றிகழுகின்ற
அன்னமபோய்க் கன்னி யருகணைய - நன்னுதலுந்
தன்னுடல விடுத் தனியிடஞ்சேர்ந் தாங்கனை
யெனனுடல் சொல்லென்றா ளிங்கு.

மன்னன் ;—விடுத்த=அனுப்பின ;—வடிவில் = ரூபத்தில்=in the shape or attire (it started from Nalan) ;—திகழ்கின்ற=பிரகாசிக்கிற ;—அன்னம போய ;—கன்னியருகு=கன்னியின் அருகே=at or near ;—அணைய=சேர=to arrive=சேர்ந்தபோது ;—நன்னுதலும் (நல் + நுதல் + உம)= Damayanti ;—தன ஆடல்விட்டு=தன்னுடைய விளையாட்டை ஒழிந்து ;—தனி இடம்சேர்ந்து=ஏகாந்தமான ஸ்தானததை உற்று ;—ஆங்கு=அங்கே ;—என் ஆடல் (ஆடல்=சொல்=செய்தி=news) என்ன செய்தி ;—சொல= tell;—என்றாள்=asked ;—இங்கு= here, now. அன்னம் போய்க்கன்னி அருகணைய நன்னுதல் ஆடல்விட்டு அதனை, என் ஆடல சொல் என்றாள்.

XLVI. செம்மனத்தான றண்ணளியன செங்கோலான் மங்கையர்க
டமமனத்தை வாங்குந் தடந்தோளான - மெய்ம்மை
நளனென்பான மேனிலத்து நானிலத்து மிக்கா
னுளனென்பான வேந்த னுனக்கு.

செம்மனத்தன்=செவ்விய மனத்தன்=good natured ;—தண் அளியன்=குளிர்ந்தகிருபையன் ;—செங்கோலான்=நீதியுடையோன் ;—மஙகையர்கள் தம் மனத்தைவாங்கும் தடமதோளான் = மகாரூபவான் என்றபடி ;—மெய்ம்மை= true, believe me ;—நளன் என்பான் = நளன் என்பவன் ;—மேல்நிலத்தும்= மேலுலகத்திலும் ;—நானிலத்தும் (நால் for நாலு=நாலுகின்ற = hanging, suspended=floating + நிலத்தும்) பூமியிலும் ;—மிக்கானுள னென்பான்=(மிகுந்தான்) பெரியவனாயிருக்கிறவன் (சக்கிரவர்த்தி) என்னப்பட்டவன ;—வேந்தன் =அரசன் ;—உனக்கு நளன் என்பான் வேந்தன் உனக்கு=Nalan is your king ie. consort. From 45th stanza, Swans' conversation with Damayanti.

செம்மனத்தன் முதலிய ஐந்தும் நளனென்பாற்கு விசேஷணம். குறிப்பு வினைகளுமாதலால செம்மனத்தான் ஆயிருக்கிறான் என்று முற்றுவினைப்பொருளாக் கியுங்கொள்ளலாம்.

XLVII. அறங்கிடந்த நெஞ்சு மருளொழுகு கண்ணு
மறங்கிடந்த திண்டோள் வலியுந் - திறங்கிடந்த
செங்கண்மா லல்லனேற் றேர்வேந்த ரொப்பரோ
வங்கண்மா ஞாலத் தவற்கு.

அறம்=தருமம் Nom to கிடந்த=இருக்கிற ;—நெஞ்சும்=இருதயமும் ;—அருள்=கடாக்ஷம்=கண்ணோட்டம், தாக்ஷிண்ணியம்,தயை=condescension ;—ஒழுகு=ஒழுகுகிற=full, pouring ;—கண்ணும் ;—மறங்கிடந்த திண்டோள்வலியும்=வல்லமை வீற்றிருக்கின்ற திண்ணிய புசங்களின் உறுதியும் ;—திறங்கிடந்த=உரிமைதங்கிய=இவ்வுரிமைகள்பொருந்திய ;—செங்கண்மால்=செந்தாமரைக்கண்களையுடையா னென்னபபட்ட விஷ்ணுவானவர், Nom to அல்லனேல்=அல்லனேயானால் ;—தேர்வேந்தர் ;—ஒப்பரோ=நேர்வரோ=சமானமாவாரோ(ஆகார்கள என்றபடி) ;—அங்கண்மா ஞாலத்து=அழகிய இடமாகிய பெரிய நால்நிலத்தில் ;—(ஞாலுதல்=நாலுதல்) ;— அவற்கு = அவனுக்கு= to him or with him. நெஞ்சும கணணும் வலியுந் தேர்வேந்தர் ஒப்பரோ அவற்கு=அவற்கு நெஞ்சு ஒப்பரோ கணணொப்பரோ வலி ஒப்பரோ என்றுகொண்டு நெஞ்சில் நெஞ்சால் ஒப்பரோ எனமுடிக்க. இஃது உம மேலேபசிவிடாய் முதலிய வற்றிற்குக் காட்டிய வண்ணமே. இவன் எனக்கு மனமொத்தானெனகிற வழக்கியலானுங் காண்க. எதிர்மறைவிடை. see 34th and 35th Sutrams, பொதுவியல், Nunnul.

XLVIII. புள்ளின் மொழியினொடு பூவாளி தன்னுடைய
வுள்ளங்கவர வொளி யிழந்த - வெள்ளை
மதி யிருந்ததாமென்ன வாய்ந்திருந்தாள் வண்டின்
பொதியிருந்த மெல்லோதிப பொன்.

புள்ளின்=பறவையின்=அன்னத்தின்=மொழியினொடு = சொல்லோடு=செய்தியுடனே கூட ;—பூவாளி=புஷ்பபாணமானது Nom to கவர ;—தன்னுடைய=her ;—உள்ளம் = உள்ளத்தை=heart ;—கவர =கிரகிக்க = இழுத்துக்கொண்டபடியால் ;—ஒளியிழந்த = காந்திபோகிய ;— வெள்ளைமதி = white moon, Nom to இருந்ததாமென்ன + (இருந்தது + ஆம் + என்ன)=that it was or as if it was ;—வாய்ந்திருந்தாள்=கொண்டிருந்தாள்=had, or assumed ;—வண்டின்=வண்டுகளது ;—பொதி—கூட்டம் swarm ;—Nom to இருந்த=that resided ;—மெல்லோதி=மெல்லிய மயிரை யுடைய ;—பொன் = gold for Damayanti.

1. பொன் வாய்ந்திருந்தாள். 2. ஒளி இழந்தவெள்ளைமதி இருந்ததாம் என்ன=so that it may be said of her=Attributive phrase qualifying வாய்ந்திருந்தாள். 3. Object வெண்ணிறத்தை.

XLIX. மன்னன் மனத்தெழுந்த மையலோ யத்தனையு
மன்ன முரைக்க வகமுருகி - முன்ன
முயங்கினாள் போற்றன் முலைமுகத்தைப் பாரா
மயங்கினா ளென்செய்வான் மற்று.

மன்னனுடைய மனதிலே எழுந்த காமநோயாகிய அத்தனையையும் அன்னமானது சொல்ல (க்கேட்டு) (தானும்) நெஞ்சினகி (த்தனைக்கட்டி) ஆலிங்கனஞ் செய்தான்போல் தன் முலைமுகத்தைப்பாரத்து மயங்கினவள் ஆனாள். Authors' remark=என்னசெய்வான் வேறு. This is what the Love Science terms பெண்பாற் கைக்கிளை. See 42nd stanza before, for ஆண்பாற் கூற்றுக்கைக்கிளை. 1. மொழியினேனும், உம்மைதொக்கது = மொழிதலு மென்னுங் காலங்கண்ணியமரபிற்செயதென் னெச்சத்தின் பொருளது, மொழியினேனும் பூவாளியானதுகவர.

L. வாவி யுறையு மடவனமே யென்னுடைய
வாவியுவந் தளித்தா யாதியாற - காவினிடைத்
தேர்வேந்தற் கென்னிலைமை சென்றுரைத்தி யென்றுரைத்தாள்
பார்வேந்தன் பாவை பதைத்து.

வாவி=குளம் = தடாகம் (locative);—உறையும்=Fut-Rel-Part;—மட அனமே=Adjective and noun;—என்னுடைய ஆவி=5th விரி, and 2nd தொகை;—உவந்து=Past Part;—அளித்தாய்=Inflectional noun 2nd pers sing=அளித்தாயாக அளித்த அன்னமாக;—ஆதி=ஆகுதி=ஆ = ஆகு = Imperative (அளித்தாயாதி=அளித்ததாக ஆகு);—ஆல் = particle;—காவினிடை (கா+இன் + இடை = உருபு புணர்சசி) 7th expressed;— தேர் வேந்தற்கு=4th or Dative;—என்னிலைமை= என்னுடைய நிலைமையை (acc. understood);—சென்று உரைத்தி=போய்ச்சொல்லு (செய்தென்னெச்சத் தொடர்=Past Participle and முடிக்கும்வினை);—என்று=Conj *that*;—உரைத்தாள் = முற்று வினைப் பயனிலை;—(யாவளென்னில்);—பார்வேந்தன்=genitive;—பாவை=picture =portrait, ie. Damayanti=Nom to உரைத்தாள்;—பதைத்து=துடித்து=Past Part; as பதைத் துரைத்தாள்.

1. உரைத்தி = சொல்லுதி = சொல்லுகிறாய் or சொல்லு 2nd person sing. Damayanti requests the Swan to go to Nala to tell him of her soliloquy. பார்வேந்தன் here, the father of Damayanti.

LI. மன்னன் புயநின் வனமுலைக்குக் கச்சாகு
மென்ன முயங்குவிப்பே னென்றனனம் - பின்னும்
பொருந்தவனபா லோதிமலர்ப் பூங்கணைகள் பாய
விருந்த வன்பாற் போன தெழுந்து.

அரசனுடைய தோள்கள் உன் அழகுமுலைக்கு ரவிக்கை ஆகும் என்னும்படியாகக் கூட்டுவிப்பேன் (சேர்ப்பிப்பேன்) யான் என்று (சொல்லி);—மேலும் (அவனுக்குமனம்) அமர பிரீதியினால் (சொல்லுவனவற்றை) சொல்லிவிட்டு, அழகி

ய புஷ்பபாணங்கள் (தன்மேல் வந்துபட) இருந்தவனாகிய நளனிடத்தில் போயிற்ற (பறந்) தெழும்பி - எ-று The swan returns to Nala.

LII. கொற்றவன்றன் றேவிக்குக் கோமகடன் றோழியர்க
ளுற்றதறியா வுள நடுங்கிப - பொற்றொடிக்கு
வேறுபா டுண்டென்றார் வேந்தனுக்கு மற்றதனைக்
கூறினாள் பெற்ற கொடி.

கொற்றவனுடைய தேவியாகிய இராணிக்கு, இராஜகுமாரத்தியாகிய தமயந்தியினுடைய தாதியாகள், அவளுக்குச் சம்பவித்ததை அறியாமல், பயந்து (உளம் நடுங்கி), பொற்றொடித் தமயந்திக்கு (யாதோ) விபரீதமுண்டா யிருக்கிறதென்றார்கள். இதை (மற்றதனை) வீமனுக்குச் சொன்னாள், தமயந்தியைப்பெற்ற கொடியாகிய தாயாரானவள் எ-று. 1. உளம் நடுங்கி=உள்ளத்துள் நடுங்கி. 2. உளமானது நடுங்கித் தோழியர்கள் என்றார்கள். 3. வேறுபாடு உண்டு= இடைப்பிறவரல். 4. தேவிக்குத்தோழியர் என்றார்;—வேந்தனுக்கு பெற்றகொடி கூறினாள்.

LIII. கருங்குழலார் செங்கையினால் வெண்கவரிப் பைங்கான்
மருங்குலவு வார்முரச மார்ப்ப - நெருங்கு
புரிவளைநின் றேங்கப் போய்ப்புக்கான் பெற்ற
வரிவளைக்கை நல்லாண் மனை.

The father Bhima comes to see her daughter into her room. கரியகூந்தலுடையோர் தோழிமார், தங்கள் செங்கைகளால போடப்பட்ட வெள்ளைச்சாமரைகளது சிறுகாற்றானது, தன் (மருங்கு) மேல்வீசவும், வாரகள்கட்டிய பேரிகைகள் முழங்கவும், நெருங்கிய முறுக்குகளுடைய சங்குகள் நின்றுகோஷிக்கவும் ஆக, போய்ப்புகுந்தான ; தான்பெற்ற-கீற்றுகள்பொருந்திய வளையல்களை யணிந்த பெண் (நல்லாளுடைய) ணினுடைய அறைவீட்டிற்குள், என்றவாறு.

1. செங்கையினால், கால் உலவ - முரசம் ஆர்ப்ப - வளை ஏங்க. நின்று=ஊதுவோர் நின்று ஊத, எனப்பிற பிறகர்த்தாக்களாய்க் கொள்ளினும் ஆம். சங்குகள் நிற்கமாட்டாமையின் நின்று ஊதுவோர் என்க. போய்ப்புக்கான் வீமன், மனை=௭ - ஃது தொகை.

LIV. கோதைசுமந்த கொடிபோ லிடை நுடங்கத்
தாதை திருவடிமேற் றான்வீழ்ந்தாண் - மீதெல்லாங்
காந்தாரம் பாடிக் களிவண்டு நின்றரற்றும
பூந்தார மெல்லோதிப் பொன்.

மாலைகளைத் தாங்கினகொடியேபோல் இடைப்புத் துவண்டசையத் தந்தையது ஸ்ரீபாதத்தின்மேல் தானேசாஷ்டாங்கஞ் செய்தாள், மேல் எங்கும் காந்தார (சுரங்கள் மிகுந்தபண்கள் போலும் பண்களைப்) பாடிக்கொண்டு தேன்வண்டுகள் இருந்து (கிண்ணென்றும் தெங்தெனன்றும்) கூவுகின்ற பூமாலைகளையுடைய அழகிய மிருதுவான தலைமயிரையுடைய பொன்னொப்பாள் தமயந்தியானவள் எ-று.

1. மெல்லோதிப் பொன் வீழ்ந்தாள். 2. வண்டுபொடிகின்று அரற்று மெல் லோதி. 3. நடுங்கவீழ்ந்தாள். 4. காந்தாரம் ;—ஷட்ஜம் ரிஷபம் காந்தாரம் மத்தியமம் பஞ்சமம் தைவதம்நிஷாதம் என்னும் இவற்றுள் காந்தார சுரங்களே அதிமிசிரமாய்ச் செய்யுங்கீதங்கள் விசேஷமென்பர் சங்கீத சாஸ்திரகாரர், ரிஷபம் வண்டுமுதலிய செந்துக்களது சத்தங்களைப் பிடித்துச் செய்கை செய்தல் திவ்வியம் என்னுங்கொள்கை யோராதலின். 5. பொன், தமயந்திக்கு ஆகுபெயர்.

LV. பேரழகு சோர்கின்ற தென்னப் பிறைநுதனமே
னீரரும்பத் தனபேதை நின்றனைப் - பாராக்
குலவேந்தன் சிந்தித்தான கோவேந்தா தமமை
மலர்வெய்ந்து கொளளு மணம்.

பெரியஅழகுதானே வடிகின்ற தொப்ப (என்ன= ஒப்புருபு= உவமவுருபு) மூன்றாம்பிறை யொத்தநெற்றியின் மேல் நீர்த்துளி (வெயர்வை) உண்டாக (பொடிக்க) தன்மகள் நின்றதைப் பார்த்துநல்ல (சூரிய) குலத்திலுதித்த வீமன் யோசித்தான், எதையென்னில், ஆண்டன்மை பொருந்திய அரசர்களை (அரசரில் ஒருவனை) மாலைசூட்டிப்பிறகு செய்துகொள்ளும் படியான கலியாணத்தை எ-று. 1. தன்பேதை நின்றனை=தன்பேதை நின்றதை or நின்றாள் தனபேதையை. 2 வேந்தர்தம்மை=அநேகரை மணத்தல் ஆகாமையின், வேந்தருள் ஒருவர்தம்மையென்க. 3 மணஞ்- சிந்தித்தான். Bhima now thinks that his daughter should be married.

LVI. மங்கை சுயம்வரநா ளாமென்று வார்முரச
மெங்கு மறைகென றியம்பினன - பைங்கமுகின்
கூந்தன்மேற் கங்கைக கொழுநதோடு நனறுடன
வேந்தர்மேற் றூதோட விட்டு.

மங்கையாகிய தமயந்தி (யின்) க்குச்சுயம்வரம் நாட்டும் நாள் ஏழு என்று கூறி, வார்கள் இறுகிய பேரிகையை எங்கணும் அடிக்க (அடியுங்கள்) என்றுகட்டளை யிட்டான், பசிய பாக்குமரத்தின் கூந்தலின்மேல் நீர்த்துளிகள் ஓடுகின்ற விதர்ப்ப தேசத்தரசன் வீமன் இராசாக்களிடத்திற்குத் தூதர்களைப் போகச்செய்து, என்றவாறு.

1. நீவிர் அறைக=வியங்கோள் ஐம்பால் மூவிடங்களுக்கும்பொது. எல்லாப்பாலையும் எல்லா இடத்தையுங் கொள்ளுதலால் வியம் (விஸ்தாரம்) கோள் என்னப்பட்டது. முன்னிலையோரைப் பெரிதுசெய்து கோடலா (optative) னும் அப்பெயர் பெற்றதென்பர். 2. உலகவழக்கில் or வழக்கநடையில், வாரும் வாருங்கள் என்பனவும் இவ்வியங்கோளெனக்கொள்க. 3. தூதை ஓட விட்டு முரசம் அறைகென்றான்=தூதை ஓடவிடுக என்றும் முரசத்தை அறைகவென்றும் ஆம், தான் தூதோட விட்டுப்பிறகு அறைகென்றான் எனினும் ஆம்.

LVII. மாமுத்த வெண்குடையான் மால்களிறான் வண்டிரைக்குந்
தாமத் தரிச்சந்திரன் சுவர்க்கி - நாமத்தார்
பாவேய்ந்த செந்தமிழா மென்னப் பரந்ததே
கோவேந்தர் செல்வக் குழாம்.

மகத்தாகிய முத்துக்கள் இழைத்த வெள்ளைக்குடையோனாகிய, பெரியபட்டத்தியானை யுடையோனாகிய, வண்டுகள் ஒலிக்கின்ற மாலையணிந்த அரிச்சந்திரன் சுவர்க்கியினது பெயர்மாலையாகிய பாவினங்களைப் பொருந்திய செந்தமிழ் ஆம் என்னும்படியாக (கோவேந்தர் செல்வக்குழாம்) செல்வக்கோ வேந்தரது கூட்டமென்கும், (பறையறை=முரசறை) பரம்பிற்று என்றவாறு.

1. நாமத்தார்=பெயர்மாலை : பிரபுவின் பெயரை ஒவ்வொருகவியிலும்வைத்துப் பாடிய பாட்டு. நாமத்தார் ஆகிய செந்தமிழ் ஆம் இந்த முரசறை என்ன. சுவர்க்கிப்பிரபுவின் நாமத்தாரானது எங்குந்தெரிந்திருக்கிறது போல, பீமன அறைவித்த தமயந்தியின் சுயம்வரத்து முரசறையும் எங்கும் எட்டிற்று.

LVIII. செந்தடையும் வண்டுறைதார் செய்யாள் வளர்மார்பன்
கந்தடையும் வேழக் கடைத்தலைவாய் - வந்தடைந்த
பூவேந்தர் தங்கள்கிளை பொன்னகரி வீமனிறந்
கோவேந்தன் மாதைக் குறித்து.

செவ்விய கவசமும், வண்டுகள் வசிக்கும் மாலையும், இட்சுமியும் இருக்கின்ற மார்பனுடைய, கம்பத்தைப்பொருந்தும் யானைத்தலைக்கடைவாயில் (வாய்=ஏழனுருபு) வந்துசேர்ந்த பூமியாளரசர்களுடைய, சுற்றங்கள் அழகிய வீமனுடைய நகரத்தில் கூடின, (கோவேந்தன்) வீமனுடைய பெண்ணைக் கருதி என்றவாறு.

1. கிளை, மாதைக் குறித்து ஈண்டிற்று. 2 தடையும தாருமசெய்யாளுமா வளர் மார்பன் 3 மார்பன் கடைத்தலைவாய். 4. கந்துஅடையும் வேழக்கடைத்தலைவாய் 5. கடைத்தலைவாய் வந்தடைந்த வேந்தர்கிளை.

LIX. புள்ளுறையுஞ் சோலைகளும் பூங்கமல வாவிகளு
முள்ளும் புறம்பினி துறைந்தார் - தெள்வரிகட்
பூமகளைப் பொன்னைப் பொருவேலவிதர்ப்பன் றன்
கோமகளைத் தம்மனத்தே கொண்டு.

(அந்த அரசர்) தெளிவான வரிகள் (பொருந்திய) கண்களை யுடைய (பூமகளைப்பொன்னைக் கோமகளை) இலட்சுமி போன்ற அழகிய, போர்செய்யும் வேலாயுதங்கொண்ட, விதர்ப்பனுடைய இராஜபுத்திரியை (royal daughter) தங்கள்தங்கள் உள்ளத்திலே உத்தேசித்துக்கொண்டு, பறவைகள் வசிக்கும் சோலைகளிலும் தாமரைத்தடாகங்களிலும் உள்ளிடங்களிலும் புறத்திடங்களிலும் சந்தோஷமாகத் தங்கியிருந்தார்கள்.

1. இனிதுறைந்தார் - பெரிது செய்தார் - முதலியவற்றை வினையுரித்தொடர்கள்என்க. குறிப்புமுற்றேவினையெச்சம். வினையெச்சங்கள் பெரும்பாலும வி

ளையுரிநீர்மையன மேலே காட்டப்பட்டது. 2. இனி துறைந்தார்=Predicate. Subject அரசர் understood. Object பூமகளை பொன்னை கோமகளை in apposition, governed by கொண்டு=கொண்டு உறைந்தார்.

LX. வழிமேல் விழிவைத்து வாணுதலா ளும
மொழிமேற் செவிவைத்து மோகச் - சுழிமேற்ற
னெஞ்சோட வைததயாவான கண்டானெடு வானின்
மஞ்சோட வனனம் வர.

Nala sees the Swan returning to him. பாதையின்மேலே தன் கண்களை வைத்துக்கொண்டு (நோக்கிக்கொண டென்கிறபடி) ஒளிாகின்ற நெற்றியுடைய தமயந்தியின் பெயராகிய சொல்லின்மேலே (சொல்லினிடததிலே) தன்காதை (ச்செலுத்தி) ச்சாய்த்துக்கொண்டு, காமமாகிய நீர்ச்சுழலிலேதன் மனம் ஓடும்படி விட்டுத் தளர்ந்திருக்கிறவனுகிய நளன் கண்டான், விரிந்த வானத்தில் மேகம் பெயர (மேகமோட) அன்னமானது (வர) திரும்பி வருதலை, எறு. 1. மஞ்சோட அன்னம்வர=மேகத்துடனே கூட அவ்வன்னம்வர. 2. விழிவைத்து செவிவை த்து நெஞ்சோடவைத்து அயர்வான் கண்டான் அன்னம்வர.

LXI. முகம்பார்த் தருணேக்கி முன்னிரநது செல்வ
ரகம்பார்க்கு மறறேனைப் போல - மிருங்காதல்
கேளா திருந்திட்டா னன்னதனைக கேளாரை
வாளால் விருநதிட்ட மன்.

முகத்தைப்பார்த்து ஈகையைக் கண்ணேக்கி எதிரே (இரந்து) சென்று or வ ங்கி தனவான்களுடைய வீட்டை (மனத்தை=நோக்கத்தை=சாடையை) பார்க் கும் இல்லாதானை (அற்றேனை) ப்போல், தன் மிருங்காதலாகிய தமயநதி சம்மதி யைக் குறித்து (அவாமிகுதியால்) அன்னததைக் கேளாதிருநதான், யாவன்? சத் துருக்களை வாளாயுதத்தினுல் பருநது முதலிய வறறிற்கு விருந்தாக (உணவாக) இட்ட மன்னன்=நளன் எறு. 1. கேளா இருந்தான் = கேட்டிருந்தான் என் றும்வரும். 2. கோளாரை வாளால் விருந்திட்டமன் அன்னத்தைக் கேளா இருந் திட்டான்.

LXII. அன்னக் குலத்தி னரசே யழிகின்ற
வென்னுயிரைமீள வெனக் களித்தாய் - முன்னுரைத்த
தேமொழிக்குத் தீதிலவே யென்றுன திருநதானை
யேமொழிக்கும் வேலா னெடுததது.

அம்சங்களின் கூட்டத்திற்கு (அரசே) சிரேஷ்டமே, (Voc.) அவலிக்கின்ற (தவிக்கின்ற) என் ஆவியைத் திரும்பவும் எனக்கு மீட்டுத்தந்தாய், (உன்னைக்கண் டதே என் ஆவிதிடப்பட்டதென்றபடி) முன்னே நீசொல்லி (ப்போன) தேன் மொழியாளாகிய தமயந்திக்குப்பொலலாங் கில்லையே யென்று கேட்டான், சத்து ருக்களை கருவம் (எம்) போக்கும் வேலாயுதமுடைய நளன் எடுத்தென்றவாறு. 1. வேலான் எடுத்து என்றுன். 2. தேமொழிக்குத் தீதிலவே யென்றுன். 3. இவ்

வகைக் கேள்வி, குசலப்பிரசினை, சமஸ்கிருதநடை. வலியளா வெனவும் கேட்கப்படுவெதுணடு. Nalan enquires the swan how Damayanti is.

LXIII. கொற்றவன்ற னேவலினுற் போயக்குலக் கொடிபா
லுற்றதுவுமாங் கவடா னுற்றதுவு - முறறு
மொழிந்ததே யனன மொழிகேட் டரசற்
கழிநததே யுள்ள வறிவு.

செயம்பொருந்தியவனுகிய நளனுடைய சட்டளேயினுல் போய் அந்த (குலக்கொடி) தமயநதியினிடததில் சேர்ந்ததையும், அங்கே அவளும்பொருந்தின சங்கதியையும் எல்லாவற்றையும் சொல்லிற்று அன்னமானது, இவ்வார்த்தையைக் கேட்டு, இராசனுக்கு (நளனுக்கு) அழிநதது உண்டாயிருந்த அறிவு (பிரஜ்ஞை) எறு 1. அன்னம் உற்றதுவும் உற்றதுவும் மொழிந்தது. 2. அரசற்கு அறிவு கெட்டது. 3. உற்றது = arrival. 4. உற்றது = what she fared or what happened to her.

LXIV. கேட்ட செவிவழியே கேளா துணாவோட
வோட்டை மனததோ டுயிர்தாஙகி - மீட்டுங்
குழியிற் படுகரிபோற் கோமான் கிடந்தான
றழலிற் படுதளிர்போற் சாயந்து.

கேட்ட=கேள்வியையேற்ற=சிரவணஞ்செய்த ;—செவிவழியே=காதின் வழியே = வழியாக = வழியாலே;— கேளாது = கேளாமலே = சொல்லாமலே ;—உணர்வுஓட = அறிவுஓடிப்போக ; — ஒட்டைமனத்சோ டுயிர்தாங்கி= உடைந்த, பொத்துப்போன, சில்லியாயின, தளாந்துபோன, மனத்துடனே ;— உயிரை ;—சீவனை ;—தாங்கிக்கொண்டு ;—மீட்டும்= மேலும்=மறுபடியும் ;— குழியில்=பள்ளததில்=படுகுழியில் ; —படு=பட்ட=விழுந்த ;—கரிபோல்= யானை என்ன : —கோமான்கிடந்தான் ;—தழலில்=நெருப்பில் ;—படு=பட்ட = அசப்பட்ட ;—தளிர்போல் = இளந்துளிர்என்ன ;—சாய்ந்து = வீழ்ந்து. Outline. உணர்வுஓட உயிர்தாங்கி மீட்டும், படுகரிபோல் படுதளிர்போல் சாய்ந்து கோமான்கிடந்தான். 1. ஒட்டை=cracked. 2. படுகுழி= pitfall.

LXV. கோதை சுயம்வரநாள் கொறறவனுக் குறறுரைப்ப
வேதமிலாக் காட்சியர்வந் தெயதினா - போதிற
பெடையோடு வண்டுறங்கும் பேரொலிநீர் நாட
னடையாத வாயி லகம்.

கோதை = கோதையினுடைய ;—சுயம்வரநாள் = சுயம்வரநாளை = ஸ்வயமேவரிக்கின்றநாளை ;—கொற்றவனுக்கு = நளனுக்கு ,—உற்றுரைப்ப = நன்ருய்ச்சொல்ல = தெரிவிக்க to give notice ;—ஏதமிலா=குற்றமற்ற=அறிக்கை செய்தலில்திறமையில்லாமை இல்லாத ;—காட்சியர் = அறிவினா=அனுபவந்தெரிந்த தூதர் ;—வந்தெய்தினா ;— எங்கேயென்ருல் ;—போதில் = புஷ

பங்களில் ;—பெடையோடு = பெண்வண்டுடனே ;—வண்டு = ஆண்வண்டா னது ;—உறங்கும்=தூங்கும் ;—பேரொலி=பெருஞ்சத்தம்= மகாகோஷம் செய்கின்ற ;—நீர்நாடன்=தண்ணீர்பாய்கின்ற நாடனாகிய நளனுடைய ;—அடையாத=சாத்தாத= மூடாத ;—வாயிலகம்= வாயிலினிடத்தில். 1. உற்றுரைப்பக் காட்சியர்வந்தெய்தினர் பேரொலிநீர்நாடன் வாயிலகம். 2. பெடையோடுவண்டுறங்கும் பேரொலிநீர். 3. கோதையினதுசுயம்வரநாளை உற்றுரைப்ப. 4காட்சி =*sight*, hence, *experience*.

LXVI. காவலன் றன்றூதர் கடைக்காவலர்க் கறிவித்
தேவலிற்போ யீதென் றியம்புதலு - மாவிற
பொலிந்ததேர் பூட்டென்றான் பூவாளி பாய
மெலிந்த தோள்வேந்தன் விரைந்து.

காவலனுடைய (அரசனுடைய, பீமனுடைய) தூதாட்கள் வாயில் காப்பாளர்க்கு அறிவித்து, கட்டளையினால் (உள்ளிருந்து கட்டளை பிறந்து வந்ததின்பேரில் (உள்ளே) சென்று, இன்னது செய்தியென்று சொன்னவுடனே, பிரகாசிக்கின்ற குதிரையின்தேர் (ஐ) பூட்டு (கட்டு) என்றான், புஷ்ப பாணமானதுபட (பட்டதனால்) வாடிப்போன புசங்களையுடைய வேந்தன் சீக்கிரமாய். 1. சீக்கிரம் பூட்டென்றான். 2. தேர்பூட்டென்றான். 3. பூவாளிபாய மெலிந்ததோள் = பூவாளிபாய்ந்து மெலிந்ததோள். 4. ஈதென்றியம்புதலும்=ஈதென்பதை=சுயம்வரநாளின் செய்தியை. 5. மாவின்தோ= குதிரைவண்டியென்பதுபோலும். 6. கடை= தலைக்கடை=gate.

LXVII. கெட்ட சிறுமருங்குற் கிழ்மகளிர் நீள்வரம்பி
லிட்ட பசுங்குவளை யோடித்த - கட்டி
களையத்தே னூறுங் கடனாடனூர்க்கு
விளையத்தே ரூரென்றான் வேந்து.

Nalan proceeds to the ceremony of Damayantis' Swayamvaram. கெட்ட =இல்லையென்னும் படியாகப் போயின ;—சிறுமருங்குல் = அவ்வளவு நுண்ணிய இடைகளையுடைய ;—கீழ்மகளிர் = பறையர் பள்ளர்களுடைய ஸ்திரீகள் (nom to இட்ட) ;—நீள்வரம்பில் = நீளமானவரப்புக்களில் ;— இட்டபசுங்குவளை=போட்டபசிய நீலமலர்களானவை (nom to ஊறும்) ;—வரடித்தகட்டி (மண்கட்டிகள்) களைய ;—தேனூறும் (a compound active verb)=தேனை யூற்றும் ;—கடனாடனூர்க்கு=கடற்கரை நாடனுடைய (பீமனுடைய) ஊருக்கு ;—விளைய=கடுக=சீக்கிரமாக ;—தேர்ஊர் = தேரையோட்டு ;— என்றான்வேந்து. 1. விளைய = Infinitive adverbial. 2. வேந்துதேர்ஊரென்றான்.

## Paraphrase.

குன்றிய நுண்ணிய இடையுள்ள அடிமை (முறிச்சியர்)ப் பெண்கள் நீண்ட வரப்புகளிலே எறிந்துபோட்ட (or போட்டு வைத்த) நீலோற்பலங்கள் (nom to தேனூறும்) கலப்பையுழுத மண்கட்டிகள் கரையும்படியாகத் தேனூறுகின்ற செய்தல் நிலத்தவனுடைய ஊருக்குத்துவரிதமாய்த்தேரோட்டென்றான் நளன் என்று.

LXVIII. சடைச் செந்நெல் பொன்விளைக்குந் தன்னாடுபின்னாக்
கடறுறை முன்னாகக் கண்டா - னடறகமைந்த
வில்லியரும் பொறமும வீமன் திருமகளா
நல வுயிரும வாழு நகர்.

சடை சடையாகப் பிடித்திருக்குஞ் செந்நெல்லானது, பொன்னை விளையச் செய்கின்ற தன்னுடைய (நளனுடைய) நிடதநாடு பின்னதாகத்தன் சேனாசமுத்திரமானது முன்னதாக நோக்கினான், எதனையெனில்? —வீரத்திற் கென்று சமைந்த (பிறந்த) விலலாளிகளும், பொன்மாலை யணிகின்ற வீமனுடைய இலக்ஷ்மியாகிய தன்னுடைய நல்ல உயிரும் (his dear life, ie. his sweet heart) வாழ்கின்ற நகரத்தை. எறு.

1. சடைச்செந்நெல் Nom to விளைக்கும் governing பொன். 2. விளைக்குந்தன்னாடு nom to பின் ஆக. 3. கடற்றுனை nom to முன்னாக. 4. ஆக ஆக ககண்டான் நகர் (ஐ). 5. வில்லியரும் and நல்லுயிரும் nom to வாழும் (பெயரெச்சம்). 6. அந்த நகரம் குண்டினபுரம். 7. பொற்றுமம் ;—மேலைப் பாட்டுக்களிலும் பின்வரும் பாட்டுக்களிலும் பொருளுக்கேற்ப அழகென்றும் பொன்மேனியென்றும் இலக்குமி சம்பந்தம் என்றும் (கண்ணை பொன்னை வென்கிற படி) பிரீதிகரமென்றும், ஆங்கிலேயக் கருத்தாகிய valuable என்று மிங்ஙனமெல்லாம் கொள்க.

LXIX. நெற்றித் தனிக்கண் ணெருப்பைக் குளிர்விக்குங்
கொற்றத் தனியாழக் குலமுனிவ - னுறறடைநதான்
றேனாடுந தெய்வத் தருவுந திருமணியும்
வானாடுங் காததான் மருங்கு.

Nalan has come to Vidarpam. In the mean while Narada goes to Indra to create some disturbance. பரமேசுவரனுடைய நெற்றியினிடத்தில் இருக்கின்ற (லலாடத்தில்) ஒப்பற்ற நேத்திரமாகிய அக்கினியை (வெம்மை தணிக்கும்) தணிக்கவல்ல, இணையில்லாத (மகதியென்னும்) வீணைக்குரிய நற்குலத்து நாரதபகவான் (nom to the next word) வந்து சேர்ந்தார் ;—யாரைவந்தடைந்தா ரென்னில் ;—தேன் ஆடும் (தேன் or வண்டுகள் + தளம்பும் பூக்களையுடைய) தெய்வலோகத்துக் கற்பக விருக்ஷமுதலிய தருக்களையும் (தரு=tree) சிறந்தரத்தினத்தையும் பொன்னாட்டையும் காப்பாற்றுவோ (இந்திர) னிடத்தென்றவாறு.

LXX. வீரர் விறல்வேந்தர் விண்ணாடு சேர்கின்று
ராருமிலரா லென றையுறறு - நாரதனார்
நன்முகமே நோக்கினா னாகஞ் சிறகரிந்த
மின்முகவேற் கையான வினாநது.

வீரராம் வலிய இராசாக்கள் (விண்ணாட்டை) தெய்வலோகத்துக்கு வருகின்றவர்கள் யாரும் இல்லையே (ஆல்=ஆசை) யென்று ஆசங்கித்து (ஐ உற்று), நாரதரிஷியினதுநல்ல (முகத்தை) வதனத்தையே பார்த்தான், யாரெனில், மலைகளை (நா

கங்களை) இரக்கைகளை (சிறகுகளை) அறுத்த, மின்னுகின்ற முகத்தைக் கொண்ட (வேலை) வச்சிராயுதத்தையுடைய கரத்தனாகிய இந்திரன் வந்து எ-று.

1. விரைந்து என்று ஐயுற்று நோக்கினன் கையான். 2. வீரர் விறல் வேந்தர் சேர்கின்றார் யாரும இலா=விண்ணாடு சேர்கின்ற வேந்தா யாரும் இலர். Indra asks Narada, how is it that I do not see any body come from the earth.

LXXI. வீமன மடநதை மணத்தின விரைதொடுத்த
தாமம புனைவான சயமவரத்து - பாமன்னர்
போயினா ரென்றான புரந்தரறகுப் பொயயாத
வாயினான மாதவததோா மன.

வீமராசனது பெண்ணினுடைய கலியாணத்தின் பொருட்டு, நல்மணம் உரிய மாலைபூண்டு கொள்ளும் படியாக ஸ்வயம் வரமென்னப்பட்ட அந்தச்சடங்கிற்கென்று (சுயம்வரததிலே மாலைசூட்டப்பெற்றுக் கொள்ளும்படி) மகத்தாகிய இராசாக்கள் (எல்லாரும்) போயிருக்கிறாகள் என்றுரைத்தா, யாவற்கு யாவா என்னில், இநதிரனுக்கு ;—பொய்யாத (பொய்போகாத) வாய்மையராகிய, மகாப்பெரியதாபதர்களுககு (உள) ப்பெரியவராகிய நாரதா எ-று. 1. வாயினான் மன், புரந்தரனுக்கு என்றான், மாமன்னர் போயினார் என்பதை. 2. மாமனனர் போயினார். 3. புனைவான் (புனைய) போயினார். 4. தாமம புனைவான். 5. பொய்யாத= infallible.

LXXII. அழகு சுமநதிளைத்த வாகத்தாள் வணடு
பழகு கருஙகூநதற பாவை - மழகளிறறு
வீமன குலததுககோர் மெயததீப மறறவளே
காமன திருவுககோர் காப்பு

The poet, not contented with the eulogistic descriptions he had already given, of Damayantis' personal perfections, introduces Narada also to speak more on the same subject. அழகைச் சுமந்து அதனால் இளைத்துப்போன சரீரத்தாள்=(வண்டுகள் பழகுகின்ற கரிய அளக முடையபாவை) பாவையொததவள் =பெண் (nom to மெய்த்தீபம்) இளையாளை யொத்த வீமராசனுடைய குலத்துக்கு ஒப்பற்ற யதார்த்தமான விளக்கு. மற்று=அசை. அவள் மேலுமெப்படிப் பட்டவளென்றால், மன்மதனுடைய ஐசுவரியத்திற்கு ஒப்பற்ற காவலாகவு மிருக்கினறாள் – எ-று. 1. ஆகததாள் கூந்தற்பாவை - மழகளிற்று வீமன், இவை விசேஷண விசேஷியங்கள். 2. காப்பு என்று நாரதர் சொன்னா= *Thus said Narada* is to be supplied. 3. பாவை=picture for *lady*.

LXXIII. மால்வரையை வச்சிரத்தா லீர்ந்தானும் வானவருங்
கோல்வளைதன மாலைகுறித் தெழுந்தார் - சால்புடைய
விண்ணாடு நீங்கி விதர்ப்பன் திருநகர்க்கு
மண்ணாடு நோக்கி மகிழ்ந்து.

மால்வரையை = பெரியமலைகளை ;—வச்சிரத்தால் = வச்சிராயுதத்தால் ;—ஈர்ந்தானும்=அரிந்தானும்=அறுத்தவனும் ;—வானவரும்=மற்றத்தேவர்களும்;—

கோல்வளைதன் = கோல்வளையினுடைய = கோலிய கைவளையினது = பெண்ணினது = தமயந்தியினது ;—மாலைகுறித்து = மாலையைக்குறித்து ;—எழுந்தார் = புறப்பட்டார் ;—சால்புடைய = நிறைவினையுடைய ;—விண்ணுடுநீங்கி = வான்நாட்டைத்துறந்து ;—விதர்ப்பன்றிருநகர்க்கு = விதர்ப்பனுடைய நகரத்துக்கு ;—மண்ணுட்டை முன்னோக்கிக்களித்து, எறு. கோல் = curved.

1. Outline. சுர்ந்தானும் வானவரும் விண்ணுடு நீங்கித்திருநகர்க்கு மண்ணுடு நோக்கிமகிழ்ந்து (கோல்வளையின்) மாலையைக் குறித்து எழுந்தார். 2. (சுர்ந்தானும வானவரும எழுந்தார = Elementary form) 3. மால்வரையை வச்சிரத்தாலீர்ந்தான் = Enlarged form. 4. எழுந்தார Predicate ;—கோல்வளையின் மாலையைக்குறித்து எழுந்தார் = Completion of the Prediate, or Objective relation. இவைவாக்கியத்தின் பிராகிருத ரூபம = Principal elements of the sentence.

LXXIV. பைந்தெரியல் வேல்வேந்தன் பாவைபாற போயினதன்
சிந்தை கெடுத்ததனைத் தேடுவான - முந்தி
வருவானபோற றோமேல வருவானைக கண்டார்
பெருவானிற றேவர பெரிது.

Indra and his companion-gods meet Nala in their way down to earth. பசியமாலைகளையும வேலாயுததையுமுடைய நளவேநதனெனவன் தமயந்தியினிடததில் முன்னரோபோய்விட்ட தன்னுடையநினைப்பை (கருத்தை or அறிவை) தடநதப்பிக் காணுது இழந்துபோய் அதைத்தேடுமபடிக்கு முநதிப்போகிறவன்போல்தன் இரதத்தின்மேல் வருகினறவனைதேவர்கள அகனறவானததில் நனருய்க்கண்டார்கள் எறு. 1. தேவர்கணடாாவருவானை. 2. வேநதன் அதனை (சிந்தையை) த்தேடவருவான் போல்வருவானை. 3. வருவானைவேந்த (னை) = வருகின்றவேநதனைக்கண்டார்.

LXXV. காவறகுடை வேநதைக் கண்ணுறறு விண்ணவர்கோ
னேவற் றொழிலுக் கிசையெனறு - னேவறகு
மனனவனு நேர்நதான மனததினுன மறறதனை
யினனதென வோரா திசைநது.

Indra engages Nalan to act as messenger in his behalf. தன்குடிகளைக் காப்பாற்றும் இராசாங்கச் சின்னமான குடையையுடைய நளனைக்கணணுக்கி, இநதிரனெனவன், தூதுவக்கிரியைக்குச்சம்மதி (நீசம்மதிக்கவேண்டும்) என்றுன். (இநதிரன்) ஏவினதூதுபோதற்கு நளனும் சம்மதித்தான், எப்படியென்றால், தன் அறிவினுல் (மற்று) இந்திரன்கேட்ட அதை, இன்னதென்று யோசியாமல் உடம்பட்டு (நேர்ந்தான்) எறு. N. B. Nala consents to the proposal without knowing what Indra meant. 1. காவற்குடை—செங்கண்மதயானை - பைந்தெரியல்வேல் – கொற்றத்தனியாழ்க்குல (முனிவன்)–கெட்டசிறுமருங்குல் – பொதியிருந்த மெல்லோதி (ப்பொன்) – கொய்தாமவாச (க்குழல்)-செங்காலிள (வன்னம்) - ஏ

மூலகு நின்றகவிகை நிழல் (வேந்தே) – மோட்டிளங் (கொங்கை) –எழுவடுதோ ண் (மன்னு) –பார்மடந்தை (கோமான்) – திசைமுகந்த வெண்கவிகைத்தோ (வே ந்தே) - செய்யகமலத் (திருவை) – வென்றிமத (வேடன்) – These and similar phrases may more conveniently be parsed (விசேஷணங்கள்) Attributes, in the sense of complex ideas as *a man on horseback*, than உருபும்பொருளு முடன் தொக்கதொகை and the like.

LXXVI. செங்கண் மதயானைத் தேர்வேந்தே தேமாலை
யெங்களிலே சூட்ட வியல்வீமனை - மங்கைபாற்
றூதாக வென்றானத் தோகையைத்தன் றாகத்தாற்
கோதாக வென்றா னக்கோ.

செம் + கண் + மதம் + யானை + தேர் + வேந்து + ஏ ;—தேம் + மா லை—எங்கள் + இல் + ஏ ;—சூட்ட ;—இயல் + வீமன் + மங்கை+பால் ;— தூது + ஆக for ஆகுக நீ ;—என்றான் ;—அ + தோகை + ஐ ;—தன் + ஆக ம் + அத்து + ஆல்=ஆகத்தால்=நெஞ்சினால்= மனோபலத்தினால் ;—கோது + ஆக=என்கிறபடி ;—வென்றான் ;—அ + கோ=நளன்.

Prose Order.

தேமாலையை, அவள் எங்களிலே யாருக்காவது சூட்டும்படி, இயல் வீமன் மங்கைபால், செங்கண்மதயானைத் தேர்வேந்தே நீ தூதனாக (ஆகு= ஒப்புக்கொ ள்ளாயா) என்றான் இந்திரன். (அப்போது) அந்த நளன் அந்தத்தமயந்தியை தன்ம னோ பலத்தினால் நீ சக்கை (துப்பி=திப்பி = மென்று உமிழ்ந்த மிச்சில்) ஆகுக (நீ கெட்டாய போவென்கிற படி) என்று நினைத்துக்கொண்டான் எறு.

Although she is the object of his affection, yet he did not hesitate to give her up when others wished the same. என்றான்=*he thought, considered or regarded* ;—when one speaks of the mind of another, என்கிறது is equivalent with *would* in English.

LXXVII. தேவர் பணிதலைமேற் செல்லுந்திரிந் தொருகான்
மேவுமிளங் கன்னிபான் மீண்டேகும் - பாவிற்
குழல்போல நின்றுழலுங் கொள்கைத்தே பூவி
னிழல்போலுந் தண்குடையா னெஞ்சு.

இந்திரன்முதலிய தேவர்களுடைய வார்த்தையைத் தன்தலையின்மேலதாகவை த்துச்செல்லுகின்றது (சிறிதுகாலம்), பூவினிழல் போலும் தண்குடையான்நெ ஞ்சானது. மற்றொருவேளை சுற்றித்திரும்பி வருகின்றது அவன்மனம். தமயந்தி யினிடத்திற்குச் சென்றுதிரும்பும் சிறிதுநேரம் அவன் உள்ளம். நெய்வோர்பாவி ல் ஓடுகுழலைப்போல் நின்று நின்று சுற்று (சற்றுச்சற்றுச் சென்றுதிரும்பு மென் கிறபடி) கின்றது தண்குடையான் நெஞ்சு. புஷ்பவிருக்ஷங்களது குளிர்நிழலைப் போன்ற குளிர்ச்சிசெய்யும் குடையினைக் கொண்டா னுடைய உள்ளமானது (இ ம்மாதிரியான) கொள்கையதாமென்றவாறு.

1. கொள்கை=மனங்கொண்ட கோள்=போங்கு. 2. செல்லுங்கொள்கைத்து நெஞ்சு, மேவுங் கொள்கைத்து நெஞ்சு, மீண்டேகுங்கொள்கைத்து நெஞ்சு, நின்றுழலுங் கொள்கைத்து நெஞ்சு என்றும வரும். Nalas' state of mind ;—he knows not what to do, he is still in Indras' presence.

LXXVIII. ஆவ துரைத்தா யதுவேதலை நின்றேன்
றேவர்கோனே யதிரு நகரிற் - காவல
கடக்குமா றென்னென்றான் காமநீ ராழி
யடக்குமா றுள்ளத் தவன.

ஆவது (என்றால் ஆகவேண்டியது) செய்யச்சொன்னாய், அதையே செய்ய உறுதி கொண்டேன், தேவா கோவாகிய உனக்கே நிகரொன்றும்படியான அந்த விதர்ப்பனுடைய (வீமனுடைய) பட்டணத்திற்குள் காவலாளரைத் தப்பிச்செல்லும் உபாயம் என்ன என்று கேட்டான், பெண்ணாசைக்கடலை (ப்பெருகொட்டாது) தாழ்த்தும் உபாயநதெரிந்த மனத்தோன் நளன் எறு. I am quite willing to obey your order, but what shall I do to pass over the guards about her palace, says Nalan.

LXXIX. வார்வெஞ் சிலையொழிய வச்சிரத்தான மால்வரையைப
போர்வெஞ் சிறகறுத்த பொறறோளான - யாருமுனைக்
காணார்போய மறறவளைக் காணெனறான காரவண்டின
பாணாறு தாரானைப பார்த்து.

கறுப்பு வண்டுகளது பண்கள பரிமளிக்கும் பூமாலையணிந்த நளனைநோக்கி ;—நீண்டகொடிய வில்லானது நீங்கலாக (without, excepting) வச்சிரத்தினாலே பெரியமலைகளை, அவற்றது போர்புரிவெமசிறகுகளை அறுத்துவிட்ட வலிய தோளான் இந்திரனானவன, ஒருத்தரும் உன்னைக் காணமாட்டார்கள், நீ (சந்தேகியாது) போய் (மற்று) அவளைக்கண்டு (பேசு) என்றான். 1. பொற்றோளான் தாரானைப்பார்த்து, யாருமுனைக்காணார் (நீ) போய் அவளைக்காண், என்றான். 2. சிலையொழிய (இல்லாமல்) வச்சிரத்தால் வரையைச் சிறகறுத்த தோளான்.

LXXX. இசைமுகந்த வாயு மியறெரிந்த நாவுந்
திசைமுகந்தா லன்ன தெருவும் - வசையிறந்த
பொன்னாடு போநதிருந்தாற போன்றதே போர்விதர்ப்ப
னனாடர் கோமா னகர்.

வாத்தியங்களை (மோந்த) உடைய ஒலிமுகவாயில்களும், (கட்டிடங்களது) சாயல் விளங்கிய மத்தியப் பிரதேசஙகளும் கீழ்த்திசைமேற்றிசைமட்டு முகந்து கொண்டிருக்கிற வீதிகளும் எப்படி இருந்தனவென்றால், வசையில்லாத பொன்னாடானது அங்கிருந்து பெயர்ந்து இஙகே இறங்கி யிருந்தாற்போ லிருந்தது, எதுவென்றால், போர்செய் விதர்ப்பநாட்டாரது கோமானுடைய நகரம் என்றவாறு. N. B. வாயும் நாவும் தெருவும் in apposition with நகா;—or வாயினையும் நாவினையும் தெருவினையும் பார்த்தால் should be supplied. Nalan is come to the capital of Bhima. He is invisibe to others.

**LXXXI.** தேங்குவளை தன்னிலே செந்தாமரை மலரப்
பூங்குவளை தாமரைக்கே பூத்ததே - யாங்கு
மதுநோக்குந் தாரானும் வாணுதலுந் தம்மிற்
பொதுநோக்கெ திர்நோக்கும் போது.

ஆங்கு=தமயந்தியின் அந்தப்புரத்தி னிடத்தில் தேனானது நோக்குகின்ற மாலையையுடைய நளனும், (வாணுதலாள்) தமயந்தியும ஒருத்தரை ஒருத்தர் வெறும் பார்வையாக (பொதுநோக்கு) எதிர்நோக்கின பொழுது, தேங்குவளையிலே செந்தாமரையானது புஷ்பித்தது, தாமரையிலே (பூங்குவளை) கருநெய்தலானது பூத்தது எறு. இரண்டு புஷ்பங்களும் கண்களுக்கு உபமானமாதலால் ஒருவர் கண்ணில் ஒருவர் விழித்தார்களென்றபடி. மலர்பூத்தது=அவள் பார்க்க அவன்பார்த்தான்.

**LXXXII.** நீண்ட கமலத்தை நீலக்கடை சென்று
தீண்டு மளவிற் றிறந்ததே - பூண்டதோ
ரற்பின்றாழ் கூந்தலாள் வேட்கையகத் தடக்கிக்
கற்பினாற்றாழ் வீழ்த்த கதவு.

நீண்ட தாமரை யொத்த நளனுடைய முகத்தை, நீலோற்பல மொத்த தமயந்தியின் கடைக்கண்ணானது தொட்டவுடனே, கற்பென்கிற தாழ்ப்பாளைத்தானே மாட்டியிருந்த கதவானது திறவுண்டது. எப்படி அடைத்திருந்த கதவென்றால், ஒப்பற்ற அன்பு பூண்டதாழ் கூந்தலாள் (தமயந்தி) தன் அவாவை உள்ளத்தில் அடக்கித்தாட் போட்டு வைத்த கதவு எறு. 1. அற்பின்=அன்பின் 5th case 2. தாழ் கூந்தலாள்=தாழ்கின்ற = தாழ்ந்துநீண்ட. 3. கற்பினாற்றாழ்=கற்பின்தாழ்=கற்பினது தாழ்ப்பாள். 4. தீண்டுமளவில்=தீண்டுதலும்=காலங்கண்ணிய மரபிற் செய்தென்னெச்சம்.

**LXXXIII.** உய்ஞ்சு கரையேற வொட்டுங்கொ லொண்டொடியா
ணெஞ்சுதடவு நெடுங்கண்கள் - விஞ்சவே
நீண்டதோ வங்ஙனே யிங்ஙனே நீண்மலரா
னாண்டதோண் மன்ன னழகு.

தமயந்தியைப் பிழைத்துக் கடத்தேற விடுமோ (இடங்கொடுக்குமோ), ஒண்தொடியாளுடைய இருதயத்தைப் போய்த்தொடுகின்ற நளனுடைய கண்கள்; மன்னனுடைய அழகானது மெத்தவே (மிஞ்ச=விஞ்ச = மிஞ்சி=மிகுந்து) நீண்டதோ=நீண்டு போயிற்றோ, அங்ஙனே தமயந்தி கண்ணிலும் இங்ஙனே நளனிடத்திலும், எறு. எப்படிப்பட்ட மன்னன்? தோள்மன். என்னதோள்? ஆண்டதோள். யார் ஆண்டதோள்? நீண்மலராள் ஆண்டதோள். 1. உய்ஞ்சு=உய்ந்து like பாய்ந்து=பாய்ஞ்சு, காய்ந்து=காய்ஞ்சு 2. கண்கள் ஒட்டுங்கொல்=Interrogative or Exclamatory sentence. 3 மன்னனழகு விஞ்சவே நீண்டதோ! the same.

Authors' remark.

LXXXIV. மன்னுகத் துள்ளழுந்தி வாரணிந்தமென் முலையும்
பொன்னாணும புக்கொளிப்பப் புல்லுவெனென - றுன்னு
வெடுத்த பேரன்பை யிடையே புகுந்து
தடுத்ததே நாணாந தறி.

மன்=மன்னனுடைய + ஆகத்துள்=அகத்துள்=மனதுக்குள் + அழுந்தி + வார் + அணிந்த + மெல் + முலையும் + பொன் + நாணும் + புக்கு + ஒளிப்ப + புல்லுவென் + என்று + உன்னு (உன்னி) + எடுத்த = கிளம்பின + பேர் = பெரிய + அன்பை + இடையே = மத்தியிலே இரண்டற்குமிடையிலே + புகுந்து = விழுந்து + தடுத்தது + ஏ + நாண்=கூச்சம்=மானம் + ஆம்=ஆகிய + தறி=தடி=கட்டை. எறு. 1. நாண் (ஆகும்) தறிதடுத்தது. 2. எடுத்த பேரன்பைததடுத்தது. 3. இடையேபுகுந்து தடுததது. 4. உன்னியெடுத்தபேரன்பைத்தடுததது. 5. புல்லுவெனென்றுன்னியெடுத்த. 6. மன்னுகத்துள்ளழுந்திப்புல்லுவெனென்று. 7. எப்படியாக? வாரணிந்த மென்முலையும் அதன்மேல் கிடக்கிறை (பொன்) முன்னூலும் (முந்நூலும்) நளன்மார்புக்குளேபுகுந்து காணாமற போம்படியாகப் புல்லுவேன் என்கிறதாக. 8. வார் = இரவிகை. பொன்நாண் = பொன்கயிறு, நூபுரம், மேகலை, சிலம்பு, கழல் = கண்டாமணி இவைகளும் இவை போல்வன பிறஆபரணங்களும் எந்தமாதிரியென்றும் இக்காலத்துப் பெயாகளில் எதனால் எதைக்கூறுவதென்றும் இககாலததில் தெரியாது. அரசாகளது அணிகள், சாதாரணர்களுடைய நகைகளின் வேறேயாமென்றுந் துணிகின்றனர். துணிந்தும, போஜன சுரமாய்க் கிடந்த போது பட்டததரைசி (மிளகு) சாத்தமுதும் பருப்புத துவையலும் கொடுவந்து வைததாளென போஜசரித்திரத்திற் கண்டாங்கே, அக்காலத்தும் இககாலத்தும் விததியாசம இல்லையென்று வீணிடர்ப்படுவொருமுணடு.

LXXXV. காவல்கடந் தெங்கள் கன்னிமாடம் புகுந்தா
யாவனோ விஞ்சைக் கிறைவனோ - தேவனோ
வுள்ளவா சொல்லென்றா னூசறகுழை மீது
வெள்ளவா ணீர்சோர விட்டு.

காவல் for காவலை = guards ;—கடந்து = தப்பி = escaping ;—எங்கள் கன்னிமாடம்=எங்கள் கன்னிகாமாடததை = அரமனைக்குள=into our ladies' apartments ;—புகுந்தாய்=thou enteredst ;—யாவனோ=நீ யாரோ=who art thou Iwonder !—விஞ்சைக்கு இறைவனோ=மந்திரத்துக்குத தலைவனோ=மந்திரக்காரனோ=மாயவித்தை பண்ணுகிறவனோ=மாயாவியோ = perhaps a magic-man !—தேவனோ=தேவலோகததானோ!—உள்ளவா=உள்ள ஆற்றினை=உள்ளபடி=மெய்யை=truth or as it is in truth ;—சொல்=சொல்லு ;—என்றாள் ;—ஊசல்=உஞ்சலாடுகின்ற=hanging and vascillating ;—குழைமீது=குண்டலங்கள்மேலே ;— வெள்ள for வெள்ளத்தின்=sea-like, prominent, brilliant, broad ;—வாள்=ஒள்ளிய=ஒளியான ;—நீர்=நீரை ;—சோரவிட்டு= வடியவி

ட்டு=letting down. 1. கைசற்குழைமீது வெள்ளவாள் நீர சோரவிட்டு=உற்றுப் பார்த்து என்கிறபடி=casting her (or his) eyes intensely, looking sharp. 2. கன்னிமாடம்=a separate lodging for unmarried young ladies. 3. உளளவா =உள்ளவாறே=உள்ள ஆக. Damayanti Speaks to Nalan.

LXXXVI. தீராதகாமத் தழலைத்தன செம்மை யெனு
நீராலவித்துக் கொடு நின்று - வாராத
பொனனுட னேவலுடன போநதவாசொலலித் தன்
னனனாடுஞ் சொனனா னளன்.

Nalan answers. தணியாத இச்சையாகிய நெருப்பைத்தன்னுடைய சத்து வ நிலையென்கிற தண்ணீரால் குளிர்வித்துக்கொண்டு ;—நமமிடத்தில் வர நம க்குயோக்கியம் போதாத தேவலோகத்தாருடைய தூதுடனே தான்வந்ததைச்சூறி த்தன் நல்ல தேசத்தின் (பெயரையும்) வெளிவிட்டான் நளன எறு.

1. தீராதகாமம்—வாராதபொனனுடர் - எதிர்மறைப்பெயரெச்சங்கள. 2. நளன், கொடுநின்று, போந்தவாசொல்லி நனனாடுஞ் சொன்றுன.

LXXXVII. என்னுரையை யாதென் றிசையா திமையவர் வாழ
பொனனுலகங் காககும் புரவலனை - மெனமாலை
சூட்டுவா யெனறான றொடையிறதேனை றுமபிக்கே
யூட்டுவா னெலலா முரைதது.

என்பேச்சை என்னமோ என்று எளனம்பண்ணுமல் சுரர்களவசிக்குஞ்சொர்ணலோகத்தை ஆளும் அரசனை (இந்திரனை) மெல்லியமாலையை அணியாய் (போடு) என்றான், தன்மாலையில் தேனை வண்டிற்கே குடிக்கத்தருபவ (ஊட்டுவோ) னாகிய நளன் (Nom to உரைத்து and என்றான்) எல்லாதமையுஞ சொலலி, எறு.

1. புரவலனுக்கு மாலையைச் சூட்டுவாய். 2 சூட்டு=ஆய்விகுதிகுன்றிய ஏவல் ;—சூட்டாய் and சூட்டுவாய்= ஆயவிகுதி கூடிய ஏவல். இஙஙனம ஏவல்கள், எதிர்காலத்து முன்னிலை யொருமைப்புடை பெயர்பதமோ வெனறும், எதிர்மறை (negative conjugation) முன்னிலை யொருமையோ வெனறும் கருத இடம்பட்டுக்கிடக்கின்றமையைப் பொருள்நோக்கங கண்டு தெளிக.

LXXXVIII. இயமர நின்றார்பப வினவளைகளி றேங்க
வயமருதோள் மன்னர் வருநத - சுயமவரந்தா
னினபொருட்டா லென்று நினைகென்றா ணீள்குடையான்
றனபொருட்டா லூனவா டளர்நது.

இதவாத்தியங்கள் நின்று சேவிக்க (கோஷிக்க) அநேகசங்கங்கள் நின்றுபிடிக்க (attributives to subject சுயம் வரந்தான் நின்பொருட்டு) வல்லமை பொருந்திய புசங்கள்பொருந்திய மன்னனே, சித்தஞ்செய்திட்ட சுயம்வரமானது உன்னைக்குறித்தே (ஆல்=அசை) யென்று நீ நினைக்கக்கடவாய் என்றாள், நீண்டகுடையுடைய நளனிமித்தம் மெலிந்து நைகினறவள். எறு.

1. *சேவித்தல், பிடித்தல்* = colloquial terms for *beating* drums and *blowing* chanks, as வாத்தியம் or மேளஞ்சேவிக்கிறது, சங்குபிடித்தான். Damayanti says that the ceremony of Swayam Varam will be performed for you, not for any other. 2. சுயம்வரந்தான் நின்பொருட்டு = சுயம்வரம் நின் பொருட்டேதான. 3. நினை, நினைக்க நினைக இரண்டற்கும் பொதுப்பகுதி ; நினைந்தேனை = நினைந்தேன். நினைப்பேன் = நினைவேன்.

Prose Order of the Stanza.

நீள்குடையான் தன்பொருட்டால் நைவாளானவள், வயமருதோண்மன்னா, சுயம்வரந்தான் இயமரம் நின்றார்ப்ப இனவளை நின்று வங்க நின்பொருட்டே ஆம் என்று நீ நினைபென்று தளர்ந்து சொன்னாள். இனவளை like English, *a number of* trumpets.

LXXXIX. போதரிக்கண் மாதரார் பொன்மாலை சூட்டத்தா
னாதரித்தார் தம்மோ டவையகத்தே - சோதிச்
செழுந்தாரா வெண்குடையாய் தேவர்களு நீயு
மெழுந்தருள்க வென்றா ளெடுத்து.

ஆதரித்தார் தம்மோடு தேவர்களும் நீயும் அவையகத்தே எழுந்தருள்க (புறப்பட்டு வாருங்கள்) இப்போது நான் மிகுதியாகச் சொல்ல மாட்டேன் என்றபடி.

1. போதரிக்கண் மாதரார் = விசேஷண விசேஷியம். போதரிக்கண் = விசேஷணம் = Attributive + மாதரார் = விசேஷியம் = Subject. போதுகண் = போதுபோன்றகண் (உவமைத்தொகை). போதாகியகண், like கண்ணான மனுஷர் - பொன்னானபிள்ளை = பண்புத்தொகை. அரிக்கண் = அரிபொருந்தியகண் = அரியை யுடைய கண் = அரியால் அழகிய கண் எனவேற்றுமைத் தொகையாகவும் அடையாகவும் வேண்டியவாறு கொள்க. அரிக்கண்ணை ஒருமொழியாகவுங் கொள்ளலாம். இரண்டுசொல் மூன்றுசொல் கூடி ஒருமொழிகளாய வருவன வற்றை compound nouns என்று சொல்லத் தமிழில் வாய்பாடில்லை. சமாசபதமென்றால் விககிரகஞ் சொல்லவேண்டும், தொகையென்றால் விரிவேண்டும், தொடரென்றால் சந்திகளிலொன்றன வாய்பாட்டில் (Syntactical construction) போய் விழும் ; விழுந்தால் அது parsing ஆயிற்று, அல்லது phrase, sentence ஆயிற்றேயன்றி ஒருமொழியென்றுவர இடங் (under a legitimate term) கிடையாமற் போகின்றது. மேலும், போது போலும் அரிபொருந்திய கண் என்று சேதிக்கையில், போது அரியினை விசேஷித்தாலென்ன வெனக்கேட்கப்படும். அதற்குப்பொருள் நோக்கத்தைக் கொள் என்றாலோ, அப்போ தநுபவக்கியானம் பிரமாணமாயிற்று, ஸ்மிருதியினால் (theory) காரியமில்லையென்று போகாவண்ணமே ஆதுநிகாள் வடநூல் வழக்கம்பற்றி, ஸ்மிருதி, அநுபவத்திற்கு வழியுந்துணையுமாகட்டுமென்று, விக்கிரகங்கள் எத்தனை விளைந்தும் ஓரே விசேஷணம் என்னத்துணிந்தனர், பஸ்சிமகண்டத்துப் பாடைகளில் தொகையே கிடையாது, தொடர்களேயிருக்கைபற்றிச் சந்திக்குள்ளும் விசேஷணச்சந்தி (attributive combination) யென்றார்.

XC. வானவர்கோ னேவல் வழிச் சென்று வாணுதலைத்
தானணுகி மீண்டபடி சாற்றவே - தேனமுரலும
வண்டாரநளன் போநது வசசிராயுதற ருெழுதான
கணடா ருவப்பக கலநது.

தேவர்க்கு அரசன் இந்திரனுடைய சந்தேசத்தின்படி போய் தமயந்தியைக்கி ட்டித்திருமபிவந்த வயணததை (தோரணியை) சொல்லுமபடி வண்டுகள் கூப்பிடு ம்வளத்தமாலை யணிந்த நளனனவன் தமயநதியை விட்டுப்போய் வச்சிராயுத னை (இந்திரனை) கும்பிட்டான் (வணஙகினன்) பார்ததோர் கலந்துகளிக்கக்கு ம்பிட்டான். சந்தேசம்=தூது=message.

1. படி (படியை=சஙகதியை=முறையை account) சாற்றப் போந்து நள ன்வச்சிராயுதனைத் தொழுதான். 2. கண்டார்கலந்துஉவப்பத்தொழுதான். 3. நா ன்முகற் றொழுதேபோலும் வச்சிராயுதற் றொழுதான் என்னும்விகாரம்.

XCI. விண்ணவர்த மேவலுடன் வீமன் றிருமகள்பா
னண்ணுபுகழ் நளனு நன்குரைத்த - பெண்ணணங்கின்
வனமொழியுந் தேவர் மனமகிழத் தானமொழிந்த
மென்மொழியுஞ் சென்றுரைத்தான் மீணடு.

தேவர்களுடைய் ஆக்ஞையைக் கொண்டு(உடன்)வீமனுடைய(திருமகள்) குமாரத்தியினிடத்தில் போய்ச்சேர்ந்து வந்த கீர்த்தியுடையநளனும் நன்றாகச்சொ ன்னஅந்தத் தெய்வப் பெண்ணினுடைய கொடிய மறுமொழியையும், அந்தத்தேவ ர்கள் உள்ளங் களிக்கத்தான் அவளிடத்தில் சொல்லிய நயவசனத்தையும (மீண்டு போய்) திரும்பிவந்து சொல்லினன் - எறு.

XCII. அங்கி யமுதந் ரம்பூவணி யாடை
யெங்குநீ வேண்டினைமற் றவ்விடத்தே - சங்கையறப்
பெற்றுயென வருண ஞகண்டலன றருமன்
மற்ருெரு மீநதார் வரம்.

அக்கினியானவன் அமுதத்தையும் தண்ணீரையும் அழகிய புஷ்பத்தையும்ஆ பரணங்களையும் வஸ்திரங்களையும் எந்த இடத்தில் நீநினைத்துக் கேட்கின்றுயோ (மற்று)அந்த இடத்தில் தடையில்லாமல் உடனே பெற்றுக் கொண்டாய்(என்றுஅ றி) என்றுசொல்ல,—வருண பகவானும் இந்திரனும் யமதருமராசனும் இன்னு முள்ள மற்றத்தேவர்களும் கொடுத்தார்கள் வரங்களை நளனுக்கு. எறு.

XCIII. அங்கவர்கள் வேண்டும் வரங் கொடுக்கப் பெற்றவர்க
டங்களொடுந் தாரவேநதன் சார்நதனனமேன் - மங்கை
வயமருவு கின்ற மனக்காவலர்க்குச்
சயம்வரந்தான் கண்டதோர் சாரு.

அங்கு + அவர்கள் + (அவன்) வேண்டும் + வரம் + கொடுக்க + பெற்று ;— அவர்கள் (தங்கள்) + ஒடும் + தார் + வேந்தன் + சார்ந்தனன் + மேல் + மங்கை + வ

யம் + மருவுகின்ற + மன for ஆசைகொண்ட + காவலர்க்கு for காவலருக்கென்று + சுயம்வரம் + தான + கண்டது for கண்டதாகிய or கண்ட=கொண்ட=நாட்டின் + ஓ + சாாபு = சாாபை = பந்தலிடத்தை=சபையகததை. எறு. 1. பெற்றுச் சாாநதனன் சாாபை, நளன் understood. 2. சார்ந்தனன்மேல்=சார்ந்தபிற்பாடு, Nala, together with Indra and others proceed to the Pandal, or the site of the Pandal.

XCIV. ¶ தூதுவந்த காதலனைச் சொல்லிச் செலவிடுத்து
மாதுவந்து பின்போன வன்னெஞ்சால் — யாது
மயிர்த்தா ளுயிர்த்தா ளணிவதன மெல்லாம்
வெயர்த்தா ளுரைமறந்தாள் வீழ்ந்து.

தூதுவனுகத் தன்னிடததில் வந்த அன்பனை, மாறுசொல்லி அனுப்பிவிட்ட தமயநதி யானவள், அப்பால் சந்தோஷித்துப் போன நளனதுகல (வல) நெஞ்சினது தனமையால், சம்பவிக்கும் எதையுஞ் சந்தேகித்தாள், பெருமூச்சுவிட்டாள், அழகியதன் முகமெல்லாம் வேர்வை கொண்டாள், இன்னதுபேச வேண்டுமென்கிற சொற்களை முறைமறந்தாள் வீழ்ந்து, எறு. மாதுஅயிர்த்தாள் உயிர்த்தாள் வெயர்ததாள மறந்தாள். The state of Damayantis' mind between the time of Nalas' message and of the Swayam Varam ceremony.

XCV. உள்ளம்போய் நாண்போ யுரைபோய் வரிநெடுங்கண்
வெள்ளம்போய் வேகின்ற மென்றளிர்போற் — பிள்ளைமீன்
புள்ளரிக்கு நாடன் திருமடந்தை பூவாளி
யுள்ளரிக்கச் சோர்ந்தா ளுயிர்.

உள்ளம் for courage, steadiness ;—போய்=having gone=being lost ;—நாண் போய்=and modesty being lost ;—உரை=speech ;—போய் ;—வரி + நெடும் + கண் + வெள்ளம் + போய் ;— வேகின்றமெல் தளிர்போல் = like tender green (young) leaves on fire ;—பிள்ளைமீன் for குஞ்சு மீன்களை = சிறியசாதி மீன்களை ; — புள் = குருவிகள் ;— Nom to அரிக்கும் ;—அரிக்கும=அரித தெடுக்கின்ற=ஆய்ந்துபோடும்படியான ,—நாடன் =நாடனுடைய= of Bhima ;—திரு மடந்தை + ஐ=(acc.) ;—பூவாளி=பூஅம்பானது ;—உள் அரிக்க=to corrode, to influence ;—சோர்ந்தாள + அவள் (understood) ;—உயிர= உயிர்சோர்ந்தாள்=she was dejected in spirit.

1. உள்ளம்போய், நாண்போய், உரைபோய், வரிநெடுங்கண் வெள்ளம்போய்=Sentences or nominatives absolute. 2. வெள்ளம்=*expansion of water* for *breadth*, and *breadth* for *brightness* of eyes. 3. வேகின்ற மென்றளிர் போல் உயிர் சோர்ந்தாள்=extension of the predicate. So also are the above sentences absolute, (either வினையெச் சத்தொடர் or பிறகர்த்தாக்களுடைய வினைகள், வாக்கியத்தின் முதற் கர்த்தாவின் வினையொடு முடிதல்.) 4. பிள்ளைமீற் புள்ளரிக்கு மென்பதில், ன், இன்னோசை நோக்கி இயல்பாயது. See 16th Sut. உருபியல் Nunnul :—also 15th தொகைமரபு of Tolkapiyan's Orthography ;—மெல்

லெழுத்து மிகுவழி வலிப்பொடு தோன்றலும், வல்லெழுத்து மிகுவழி மெலிப்பொடு தோன்றலும், இயற்கை மருங்கின மிகற்கை தோன்றலும, உயிாமிகவருவழியுயிா கெடவருதலும, சாரியையுள வழிச்சாரியை கெடுதலும், சாரியையுளவழித்தன்னுருபு நிலையலும், சாரியை யியற்கையுறழத் தோன்றலும, உயாதிணைமருங்கினொழியாது வருதலும், அஃறிணை விரவுப்பெயாக் கவவிய னிலையலும, மெயபிறிதாகிடத்தியற் கையாதலும, அன்னபிறவுந் தன்னியன் மருங்கின், மெய்பெறக்கிளந்து பொருள் வரைந்திசைக்கும், ஐகாரவேற்றுமைத் திரிபென மொழிப.
Damayanti is still within herself.

XCVI. பூவின்வாய் வாளிபுகுநத வழியே யென்
னுவியார் போனாலு மவவழியே - பாவியே
னாசை போகாதென றழிநதா ளணியாழி
னோசைபோற் சொலலா ளுயிர்த்து.

புட்பத்தின கண்வைத்து விட்ட அம்பானது என்னுள் நுழைந்த துவாரத்தின்வழியாலேயே என் உயிரானது ஓடிப்போய் விட்டாலு'', ஒருபோதும இந்நுழைவழியால் எழையே னுடைய இச்சையானது போகமாட்டாது எனறு உருகினாள், அழகிய வீணையினது இன்னோசைபோலும வாாத்தையாள பெருமூச்சுவிட்டு, எறு. 1 என் ஆவிபோனாலும பாவியேன் ஆசைபோகாது என்றாள் உயிர்த்து, என எச்சம் பினனும், முற்று முன்னுமாய வநதால், என்னென்விகோசிறப்புடைத்தாம். உயிர்த்து என்றாள எனவாராது, என்று உயிர்த்துச் சொன்னாள் எனவரும். 2. Again, it is to be noticed that ஆகு, என், இரு, and உண்டு should be taken under the doctrine of Factitives. 3. தந்தையாா, தாயார் பின்ளையார் அம்மையார் கொடியார்(ஆவியார் எலியாா புலியாா) in Panchatantram are idiomatic terminations like பெண்ணாள் தையலாள், under rules of personification.

XCVII. ¶ வையம் பகலிழப்ப வானமொளி யிழப்பப
பொய்கையு நீள்கழியும் புள்ளிழப்பப - பையவே
செவவாயவன்றி றணையிழபபச் செனறடைநதான்
வெவ்வாய விரிகதிரோன வெறபு.

உலகமானது ஒளியை இழந்துவிட, ஆகாயம் வெளிச்சத்தை இழந்துவிட, தடாகமும் நீண்டவாய்க்கால்களும (கழிக்கால்களும்) பறவைகளை இழக்க, செவந்தவாய்களையுடைய அன்றில் பட்சிகள் தங்கள் தங்கள் துணைகளாகிய பெட்டைகளை இழந்துவிடும் படியாக, வெம்மையாய் விரிந்திருந்த கிரணத்தன்=சூரியன் மெள்ள மெள்ள அஸ்தகிரியைப் போய்ச் சேர்ந்தான் - எறு. இராத்திரியாயிற்று என்றபடி-Evening came on. 1. விரிகதிரோன் வெற்புச்சென்றடைந்தான். 2. விரிகதிரோன்=Subject. 3. சென்றடைந்தான்=Predicate.

4. வெற்புச்சென்றடைந்தான்=completion of the Predicate (பயனிலைத்துணிபு). 5. இழப்ப - இழப்ப - இழப்ப-இழப்ப - செயவெனெச்சத் தொடர்களும் செய்தென்னெச்சங்களே போலும்=sentences absolute.

XCVIII. மாயிரு ஞாலத் துயிர்காண வானரங்கிற்
பாயிருளென்னும் படாம் வாங்கிச் - சேய்நின்
றறைந்தா ரணம்பாட வாடிப்போய் வெய்யோன்
மறைந்தான் குடபால் வரை.

The Poet describes night. மாயிரு = மாட்சிமையாகிய பெரிய = very large ;—ஞாலத்து=ஞாலத்தில்=in the world ;—உயிர்காண = சீவராசிகளது கண்கள் காணும்படி=that mankind and animals may witness ;—வான் அரங்கில்=on or from the platform of Space, பாயிருளென்னும் படாம்வாங்கி= பரவிய இருள் என்கிற படங்கை விரித்துத்தூரமாயிருக்கின்ற இந்தபூதலத்தில் மித்திரனுக்கு (சூரியனுக்கு) வேதசுரங்களை சங்கீதம்போலாது, (அறைந்துபாட) சொல்லி ஒத அதற்கு நடித்துச்சென்று சூரியன் அஸ்தமித்தான் மேற்குத்திசையின் மலையில், எறு. 1. வெய்யோன் படாம்வாங்கி ஆடிப்போய் குடபால்வரை மறைந்தான். 2 உயிர்காண - ஆரணம்பாட - ஆடிப்போய், மறைந்தான. 3. மாயிரு, மகரவுடம் படுமெய்க்குயகர வுடம்படுமெய்வந்தது,see 12th Sutram உயிர்புணரியல Nannul.

XCIX. மல்லிகையே வெண்சங்கா வண்டூத வான்கருப்பு
வில்லிசுனை தெரிந்து மெய்காப்ப - முல்லையெனு
மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே
புன்மாலை யந்திப் பொழுது.

மல்லிகையென்கிற புஷ்பத்தையே வெள்ளைச்சங்காக (சங்கென்று கொண்டு=for chank) வண்டுகள் ஊத (சங்குபிடிக்க),ஆகாசரூபமாயிருக்கின்ற (கரும்புவில்லியனுகிய) மன்மதனென்பவன் அம்புகளை (கணைகளை) பார்த்தெடுத்து சரீரங்களைப் பாதுகாக்க, முல்லையெனப்பட்ட மிருதுவாகிய பூமாலையானது அவரவர் தோள்களிலாட (இம்மூன்றுசெய்கைகளும் இங்ஙனம் நிகழ) மெதுவாய் (அழகாயென்கிறபடி) அலப்பமயக்கத் தன்மையுடைய அந்திப்பொழுதானது எறு.

Parsing.

மல்லிகை ,—பொருட்பெயர் . செடியைக்குறித்தால் முதற்பெயர் : பூவினைக்குறித்தால் சினைப்பெயர். ஐகார ஈற்று அஃறிணை யொன்றன்பாற்பெயர். இரண்டாம் வேற்றுமைத்தொகை மல்லிகையை=விரி இரண்டாம்வேற்றுமை யென்னும் போழ்தே என்னவிளங்கும் ? செயப்படுபொருளென்றும் செயவினையால் அவாவப்படுவதென்றும் விளங்கும். அவாவப்படுதலாவதென்ன ? வினைமுதல் வினையின் (தொழிற்) பயனை உறுவது எதுவோ அது செயப்படுபொருள்-உறுதலென்பதே அவாவுதல். செயப்படுபொருள் செயயப்பட்ட பொருள் என்பதே வெள்ளென விளங்குவது, என அவாவுதல் அவாவப்படுதல் தொழிற்பயனுறுவது முதலியவை கருக்குதலாகும். செயப்படு பொருள் எத்தனை ? ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல் ஒத்தல் ஆறு. இவற்றுள் மல்லிகையை யென்பதியாது ? ஊதச்சத்தம் ஆகின்றமையால் ஆக்கப்படுபொருள் வண்டானது மல்லிகையைச்சங்கமாக் கொண்டு திறறு, இவ்வாக்கியத்தை மல்லிகையைச் செயப்படு பொருளென்னுமல் வரும்படி எழுதுக ? மல்லிகையூதப்பட்டது ? இங்ஙனம் மல்லிகை யாவதென்ன ? எழுவாய் இஃது பண்டையோர் பக்ஷமோ ? அன்று. ஆதுனிகர்க்குள்ளும் (Moderns) தமிழர் பக்ஷமாமோ ? ஆகாது. மற்றென்னும் ? மாட்டம் செயப்பட்டதென்னுமாறே இஃது தாஉம் செயப்படுபொருளாம். இரண்டாவதாய் வந்தும் முதலாவதாய் வந்தும, செயயப்பட்டமையால் செயப்படுபொருளென்பது என்னகருத்

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்

This house is built by Jack என்னுமிடத்தில் காரியக்
து ? காரியக்கருத்து ;—This என்பதையே கருத்தா
கருத்து இல்லையாங் கொல்லோ ? உண்டு, ஆயினும் ; அன்று, என் ?
வென்பர். மல்லிகை யூதப்பட்டதில் மல்லிகை கர்த்தாவன்றோ ? தேவரீர்கேட்
மல்லிகை ஊதிற்றில்லை. பின்னையா தூதிற்று ? யாது ஊதிற்றென்று விளுவிறசெயகை
கப்படாது, வாக்கியச்செய்கையில் இல்லாத சொல்லையெடுத்து தல்லவோ செய்கை ;எத
செய்யப்படுமோ ;—வண்டினுல் மல்லிகை யூதப்பட்ட அதற்குவண்டினுல் என்போம்-
னுல் ஊதப்பட்டதென்று தேவாகேட்கவேணடும் ; அதுதான் எழு
இது மூனரும்வேற்றுமைக் கர்த்தா. முதலாவது காததா உண்டோ: செயப்பாட்டுவினை
வாயென்பது. செய்வினைகளெல்லாம் முதலாமவேற்றுமையும் செய்ய
கட்கு மூன்ரும் வேற்றுமையும் கர்த்தாவென்றறிக. செய்தபொருளுககும் ஆங்கிலேயபக்ஷத்
ப்பட்ட பொருளுக்கும் எழுவாயே, கர்த்தாவெனககொளளும் நிற்பதே
துக்குச் செய்பொருள் எனச்சூத்திரத்தில் பொதுப்படவினைததொகை
போதுமென்க.

C. புறகென்ரு ரநதி புனைமலர்க்க ணீரருப்ப
நிற்கின்ற தந்தோ நிலங்காபபான - முறகொண்
டடைகின்ற வேநதர்க்கு மாணடனுசி ஞோககு
மிடைநின்ற காலம்போ லினறு.

(புற்கு blackish gold colour + என்று)=கறுப்புக்கலந்த பொ
புற்கென்று ஆர் for ஆர்கின்ற நிறைகின்ற= assuming=அந்தி = சாயஙகால
ன்னிறமாய் ;—புனைமலர்க்கண=அழகிய புஷ்பஙகளில் தண்ணீர் (தேன்என்கிறபடி)
மானது ;—அந்தோ=ஐயோ alas ;—நிலஙகாப்பான் முற்கொ
உண்டாக ;—நிற்கின்றது ;—முந்தி + கொணடு)=நளனுக்குமுநதிகொ
ண்டு (முன் முனனே=முன்னுக=வேநதாக்குமு ;— ஆணடு ;—அஞ்சினேர்க்
ண்டு ;—அடைகின்ற=சோகின்ற ;—இடைநின்ற=மதநியில இருநத ;—காலமபோ
கும்=சநதேகித்தவர்களுக்கும் ;—(ஒன்றுந்) தோன்ருமல் ;—இன்று
ல=தெளிவுஞசந்தேகமும் திடமுமபயமுமாய்
இவறைததினத்தில்,எறு.

அரசர்க்கும் சந்தேகித்துப் பின்வாங்கும் அரசா
முந்திக்கொண்டோடுகின்ற பொன்மையுமாய் கண்ணீர்தளமப நிறகி
க்கும் மத்தியகாலம் போல கருமையும ஆா=ஆர்கின்ற=வாவரக் கறு
ன்றது ஐயோ இன்றைக்கு அநதிப்பொழுது எறு. நிற்கின்றது அந்தோ. 2. இ
ககின்றமையின். 1. ஆரநதிபுற்கென்று நீர் அரும்ப இநதக்கவியைப்பாடினவேளை ஒரு
டை நின்றகாலம் போல் இன்று நிற்கின்றது=அதேநாள் அதே சாயங்காலம் அவரவர் உள்ள
வேளை அநதிப்பொழுது போலும் ! இடைநின்ற காலம போல இன்று நிறகின்ற
மங்ஙனங்கருதியது மதேகாலம் ஆக, தென்னக்கொள்ளப்படு மநதவேளையையென்க.
தந்தோ வென்றது, இடைநின்ற இனறைக்கு என்று கூறியபடி. 4. பு
3. இன்று என்பது அன்றையதினததில் இஙஙனமிது எச்சமன்று, பொள்ளென, சுள
ற்கென்ருர்=புற்கென்று ஆகின்ற. வெடுக்கென்று இவைபோலும். என்று என்ப
ளென, செம்மிட்டு, சுறுக்கென்று, எச்சமென்று கொணடாலும் கொள்க, புறகென்று
இன்மேல் இருத்திக்கூறினுல் முடிகின்றமையின். 5. ஆரந்தி=வினைததொகை, ஆர்கின்ற ஆர்ந்
நிறகின்றதென (affirmative) ஆராத அந்தியென எதிர்ம
த ஆரும் அந்தியென்று உடம்பாட்டிலும் வினைததொகையென்று அறிக. புனைமல
றையிலும் ஆகநாலு ரூபங்களாய் விரியும் பண்பாகவும நன்ருய்க்கொள்ள
ர்க்கண் இஃதுாஉம் வினைததொகை. புனையைப் புனைமலர் முதலிய பண்புகள
லாம், இலக்கியங்களில் பெருமபாலும் புனைநிழல் விரியவேண்டின் அவவிட
போலாது வருவனவற்றைக் காலக்கிளவி அவசியம்
ங்களில்வினைததொகை யென்க.

CI. பைந்தொடியா ளாவி பருகுவா னிற்கின்ற
அந்தி முறுவலித்த தாமென்ன - வந்ததால்
மையாா்வேற் கண்ணா ளனமுலைமேலா ரழலைப்
பெய்வா னமைந்த பிறை.

பைம் for பசுமை=பசிய=பச்சையாகிய green, blue, graceful ;— மை விகுதிப் பண்புப்பெயர் ;—8th 9th Suts. பதவியல் Nannul ;—தொடியாள் (தொடி bracelet + ஆள் feminine termination)= Damayanti ;—6th Case தொகை ;—ஆவி=ஆவியை=உயிரை life, spirit ;—governed by பருகுவான= to drink, devour, suck up=குடிக்க, குடித்துவிட ;—24th Sut. வினை. Nan. Infinitive of *purpose* ;—நிற்கின்ற (நிகழ்காலத்துப்பெயரெச்சம்)=that stands, ready ;—அந்தி=மாலை=சாயங்காலமானது (Nom to) முறுவலித்தது=புன்சிரிப்புக் கொண்டது=did smile (முறுவல் tooth)=இறந்தகாலத்து முற்றுவினை ஒன்றன்பால் agreeing with அந்தி ,—ஆமென்ன (ஆம் + என்ன) ஆம் என்னும் படியாக, ஆம்போல, போலவே=*to say Yes*, that it may be said *so it is*—a phrase equivalent to any of the உவமவுருபுகள்=particles of analogy—16th பொது Nan ;—வந்ததால் (வந்தது+ ஆல்)=came on, has arisen—Past Indic. 3rd pers-sing-Neut ;—மையாா் வேற்கண்ணாள் (மை + ஆா் for ஆா்ந்த=நிறைந்த + வேல் + கண் + ஆள்)=அஞ்சனம் இட்ட - வேலைப்போன்ற விழியாளுடைய=of Damayanti ;—வனமுலைமேல் (வனம் + முலை + மேல் ;—ஆரழலை (ஆா் full, excessive, intense + அழலை)=கொடியநெருப்பை ;—பெய்வான்=பெய்ய, பெய்யும்படி, கொட்டுதற்கு= to pour, to shower down ;—அமைந்த=சமைந்த = உண்டான for =அமைக்கப்பட்ட or அமைபபுண்ட=அமையுண்ட that was formed, destined,purposed ;—பிறை (phace, *part* for *whole*) moon, (subject of the stanza, agreeing with predicate வந்தது.)

1. Paraphrased Order. பசிய வளையலாளுடைய பிராணனை உறிஞ்சுதற்கென்று நிற்கின்ற சாயங்காலமானது சிரித்ததாமென்னும்படியாக வந்து உதித்தது, ஆல்=அசை ;—யாதென்னில், கறுப்புப்பொருந்தி (யும்) வேல் (போன்றுமுள்ள) விழியினுளுடைய அழகிய மாா்பின்மீதே நிறைநெருப்பை (வாரிக) கொட்டுதற்குப் பிறந்த இளஞ்சந்திரன் எறு. 2. Colloquial Order. மையாா் வேற்கணணாளுடைய அழகுமாா் பினமேல் ஆரழலைப்பெய்தற்குப்பிறந்த பிறையானது ;—பைந்தொடியாளது பிராணனைக் குடிப்பதறகென்று நிற்கின்ற அந்திதானே (தனக்குப்பு விளங்க) சிரித்தா லெப்படியோ (அப்படி) வந்தது எறு. 3. Outline. அந்தி முறுவலித்ததாமென்னப்பிறை வந்தது.

## Parsing.

a. பைந்தொடி, பண்புததொகை. பசுமையாகிய தொடி, அதன் விளக்கம். ஆகிய=பண்பைவிளக்குமொழி. 14th பொது Nan. (Adjective and Noun, or quality and subject) b. தொடியாள், பொருளால் வருபெயா் or காரணப்பெயா். பகுபதம், தொடி + ஆள்= தொடியாள். ஆறாமவேற்றுமை=

தொடியாளுடைய. c. ஆவி, இடுகுறிப்பெயர் (காரணமென்பாருமுண்டு) இரண்டாவது தொகை. d. பருகுவான் செயவென்னெச்சம்=பருக. (செயவென்னெச்சத்துக்குச் செய்யுளிலும் வழக்கிலும் எத்தனைவிதம் ரூபங்களுண்டோ எழுதுக? பருக, பருகுவான், பருகும்படி, பருகற்கு=பருகுதற்கு=பருகுதற்காக=பருகுதற்கென்று, பருகுநிமித்தம், பருகும் வண்ணம் இத்தியாதிகளே. e. நிற்கின்ற, நிகழ்பெயரொச்சம், இது அடையின் உபயோகத்ததென்று காண்க. f. அந்தி, காலப்பெயர் or சிறுபொழுதின் பெயர். கம். வேற் முறுவலித்ததற்கு எழுவாய்: உம்;—அந்தி முறுவலித்தது. g. முறுவலித்தது, முற்றுவினை. செய்வினை. முறுவல் என்னும் பெயரடியிற்பிறந்தவினை, இறந்தகாலம், படர்க்கை ஒன்றன்பால். h. ஆமென்ன, இதனொடு சந்திக்கும்போது, முறுவலித்தது வினையாலணையும் பெயருமாகும. வினைகள்தொழிற் பெயராகின்றும, வினையாலணையும் பெயராய்நின்றும் எழுவாயேற்புடமை இரண்டாவதனையவாவுதல்முதலிய இலக்ஷணங்களைக்கொண்டே வரும். ஆமென்ன, சொல்லுவமவுருபு. முறுவலித்தது எழுவாய், ஆமென்னபயனிலை என்றுகொள்ளவுமொள்க, போலிடைச்சொல்லும் வினையுவமவுருபுகளும் எற்புடை நிலையையும (concord) அவாய்நிலை (government) யையும்கொளளககிடநத வாறே பைநதொடிமுதல் ஆமென்னகாறும் விசேஷணச்சந்தி. எனன விசேஷணச்சந்தி? வநதது எனனும கிரியைககு கிரியா விசேஷணச்சந்தி. நன்ருய்வநதது எனின் ஒருவினையுரிகொண்டது. பைந்தொடியாளாவி பருகுவானிற்கின்ற அநதிமுறுவலிததா மென்ன வந்தது என்கிறதில் பலசொற்கள் கூடி ஒரோவினையுரிப்பொருளாய்ததிரண்டு தாயேயொருசநதியாகி இந்தச் சநதி, வநதது என்வினைககு விசேஷணமாயிற்று. இடைப்பிறவரல்களான எழுவாய் முதலியசநதிசதும் தம்மாத்திரததே முற்றுப்பொருள செயயாது வந்த தென்பதோடு அடையாக அடுத்துப் பொருளைமுடிபு செய்தலால் கிரியாவிசேஷணச் சந்தியென்னும் வாய்பாட்டினையாளுவர். i. ஆல்=அசை. j. மை, பண்புச்சொல் or பெயர். எழுவாய், ஆர முதனிலைவினையொடு முடிகின்றது=மை ஆர்கண். k. மைஆர்கண், வினைத்தொகை or காலங்கரந்த பெயரொச்சம, மைஆராநின்றகண். l. வேற்கண், உவமைத்தொகை=வேல்போற்கண். m. கண்ணுள், சினையால் வருபெயர், காரணப்பெயர், கண்ணுள் சினையால்வநதும் எப்படி முதலையேயுணர்த்தி அம்முதலிற்காகவே நின்றதோ அப்படியே, மையார்கண்ணும்வேற்கண்ணுமாகிய வினைத்தொகையும் உவமத்தொகையுங்கூடி (கண்) ணுளுக்கு ஒருபணபாக (adjective=அடையாக) வந்தன. இங்ஙனம வேறுதொகைகள் கூடியவற்றையும் பண்பென்றூவது விசேஷணமென்றூவது கொள்வதேகோள். கண்ணுள், ஆரும்வேற்றுமைத்தொகை. n. வனமுலைமேல், உருபுபுணர்ச்சி இயல்பு, ஒக்கும் மன்அப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே யென்றமையால் என்க. 3rd Sutrum உருபுபு. Nannul. மேல், இடப்பொருளுருபு. o. ஆரழலை, வினைத்தொகையாகிய பண்பு. ஆரழல், ஆருயிர் முதலியவை பண்பை விளக்குமொழி விரியப்பெருது, தமிழ்கூறு நல்லுலகத்துவழக்குஞ்செய்யுளுமாயிருமுதலின் நாடியென்றதுபற்றி, பண்பாகவேகொள்ள வேண்டி நிற்கின்றமையின் வினைத்தொகையாகி

யபண்பென்னப்படும். இரண்டாவது விரி p. செய்வான், பருகுவான் போலும். ஆரமுலைஅவாவுகின்றது,அவாவியும்பாட்டின்பிராகிருதரூபமாகிய (Principal) பிறைவந்தது என்பதற்கு விசேஷணச் சந்தியாதலின், இடைப்பிற வரலான (Objective Relation) கருமச் சந்தியேயாயிற்று. q பெய்வான் அமைந்த, செயவென்னும்வாய்பாட்டு வினையெச்சத்தொடர். r. அமைந்தபிறை ;—மைமுதல்அமைந்தமட்டும் பிறையொடு முடிதலால், அத்தனை தொகைதொடர்களுங்கூடிப்பிறை என்கிறஎழுவாய்க்குக் கர்த்தா விசேஷணம் ஒன்றே. கர்த்தாவிசேஷண மென்றதனால்பெயருரி யெனலாயிற்று. கர்த்தாவின்மேல் எத்தனை ஒட்டுவந்தாலும் அத்தனையுங் கூட்டிக் கர்த்தாவுக்கு ஒரே விசேஷணம் (அடை=பண்பு=உரி) என்க மேலைக் கிரியா விசேஷணத்திலும், அப்பால் கர்த்தா விசேஷணத்திலும் உள்ள, ஆறாவது இரண்டாவது தொகைகள், வினையெச்ச பெயரெச்ச எழுவாய்த் தொடர்களும்—வினைத்தொகை உவமத்தொகை ஆறாவதுதொகை ஏழாவதுவிரி இரண்டாவதுவிரி செயவென் னெச்சப்பெய ரெச்சத் தொடர்களும ;—இடைப் பிறவரல்களாதலின் இடைப் பிறவரலினிலக் கணங் (noun sentences in complex sentences) கூறும் போது கூறுதும். பிறைவந்ததுஎனச்செயப்படுபொருள் குன்றிய பயனிலை கேவலமாய் நிற்றலின் (completion of the Predicate) பயனிலைத் துணிபும் இலலை, அதாவது செயப்படு பொருளே இல்லை, செயப்படுபொருள் இல்லையாதலால், கருமத்தை யொட்டிய ஒட்டுக்களாகிய (அடைந்த அடைகளாகிய) கரும விசேஷண மென்கிற, கருமவிசேஷணச் சந்தியென்னப்பட்ட (extension of the Predicate) பயனிலை முடிபும் இல்லை. பிராகிருதகர்த்தா பிராகிருத கருமம் பிராகிருதகிரியைகளுக்கு கர்த்தா விசேஷணம் கருமவிசேஷணம் கிரியாவிசேஷணமெனறுவரும் இடைப்பிறைவரல்கள், தத்தமவிகிர்த (Subordinate) கருத்தாவிகிர்த கருமவிகிர்தகிரியைகண்மேலும் தத்தம் விசேஷணங்களைப் பெற்றுவரும் நீண்ட விருத்தப்பாக்கள், களவெண்பாவில் இல்லையாதலால், சுருங்கிய வெண்பா மட்டில் உள்ளவற்றைக்கண்டு தெளிக.

## Catechetical Outline.

வந்தது எது? பிறை. என்னபிறை? அமைந்தபிறை. எதற் கமைந்த? பெய்வானமைந்த. எதனை? ஆரமுலை. எங்கே? வனமுலைமேல். யாருடைய? கண்ணாளுடைய. எப்படிக்கண்? வேற்கண். மேலு மெப்படிக்கண்? மையார்கண். பிறை என்ன செய்தது? வந்தது. யாங்ஙனம் வந்தது? ஆமென்ன வநதது. எப்படியாமென்ன? முறுவலித்த தாமென்ன. யாது? அந்தியானது. எப்படிப் பட்ட அந்தி? நிற்கின்ற அந்தி. எதற்கென்று நிற்கின்ற? பருகுவான் நிற்கின்ற. எதனை? ஆவியை. யாராவியை? தொடியா ளுடைய ஆவியை. எப்படித் தொடி? பைந்தொடி.

CII. கூட்டுமை போறசிறநத கூரிருளைக்கூன் கோட்டாற
கோட்டு மண கொண்ட குளிர்திங்க - வீட்டுமணிப
பூணிலா மென்முலைமேற் போதச் சொரிந்ததே
நீணிலா வெனறு நெருப்பு.

கூட்டு for கூட்டின, வேண்டு மென்று சேர்த்த = purposely mixed, pre-

pared ;—மைபோல் = like the black paste = அஞ்சனக் கறுப்புப்போல் (modifying phrase to சிறந்த ;—சிறந்த = உயர்ந்த = so excelling ;—கூரிருளை (கூர் + இருளை) = கூர்ந்த இருளை = thick darkness ;—கூன் கோட்டால் = கூனியகொம்பினால் = by or through the curved horns ;—கோட்டு for கோட்டின or கொட்டின i e. வெட்டின = cut or dug out ;—மண் for மண்ணை earth ;—கொண்ட = sustained, borne ;—குளிர்திங்கள் = குளிர்ந்த சந்திரன் (Nom to சொரிந்ததே) ;—ஈட்டு மணிப்பூண் (நெருங்கிய இரத்தின நகைகள்) jewels of studded precious gems ;—நிலாம் for நிலாவும் = நிலவும் = பிரகாசிக்கின்ற ;—மென்முலைமேல ;—போத = மிக = plentifully, abundantly ;—சொரிந்தது + ஏ = showered, poured, rained, ;—நீணிலா வெனனும் (நீண்ட கிரணமென்னப்பட்ட) called cool beams ;—நெருப்பு for நெருப்பை, fire. 1. Paraphrase வந்த எந்தப் பதார்த்தங்களைக் கொண்டு கூட்டினால் கறுப்பிலுங் கறுப்பு என்னுங்கறேயொன்னுங் கறுப்பு உண்டாகுமோ (அப்படி) கூட்டிய மையினைப் போல உயர்ந்த காரிருட்டை தன்னுடைய கோணக் கொம்பினால் கொட்டுமண்ணாக (வாரிப்போட்டுக) கொண்ட சீதமதியமானது, நெருங்க (ப்பதித்த) இரத்தின ஆபரணங்கள் (மீதுகிடந்து) சொலிக்கின்ற மிருதுஸ்தனங்கண் மீதே மிகுதியாகக்கொட்டிற்று குளிர்ந்த கிரணமென்னும் (பெயரிய) நெருப்பினை என்ற. 2. Colloquial Order. அஞ்சனங் கூட்டிய மையிலுஞ் சிறந்த காரிருட்டைத்தன் கோணிய கொம்பினாலே கொட்டுமண்ணாகத் தன்மேற் (சுறை) கொண்ட குளிர்ஞ் சந்திரனானவன், தன் நீண்டசந்திரிகை யென்கின்ற அக்கினியை, தமயந்தியின் ஈட்டுமணிப்பூண்கள் நிலவுகின்ற மென்முலைமேல், மெத்த மிகுதியாய்ப்பெய்ததுஎன்ற.

3. Parsing. a கூட்டுமை, வினைத்தொகை, கூட்டினமை. கூட்டாகியமை (mixture, composition, compound) பண்புத் தொகை b. கூட்டுமை போல் = adverbial phrase modifying சிறந்த in particular (உவமவுருபு விரிந்த தொடர் or, சிறந்தவென் வினைக்கு வினையுரி சீரமையாய வந்த—உவம வுருபு விரிந்ததொடர்) c. சிறந்த கூரிருளை, பெய ரெச்சத்தொடர். d. கூரிருளை, கூர்ந்த or கூரத்த (increased or amassed darkness) இருளை, வினைத்தொகை, கூரிருள ஆரிருள ஆரழல் ஆருயிர் and the like are real adjective compounds, not வினைத்தொகை necessarily. கூரிருளை, இடைப் பிறவரற் செயப்படு பொருள் = completion of the subordinate predicate கொண்ட. கூட்டுமை போற் சிறந்த கூரிருளை = விகிர்தகர்ம்ம விசேஷணச்சந்தி = extension of the subordinate predicate = பயனிலை முடிபு. e. கூன்கோட்டால், இஃதூஉம் வினைத்தொகை. முதல்குறுகினால் குனியென்றும். கூனிரும்பு கூன்கோடு முதலிய, காலம் விரியவேண்டாத வினைத் தொகையாகிய பண்புத் தொகைகள், கூன் பண்புப் பெயருமாதலின். கோட்டால், கருவிப் பொருள் = Instrumentality = *by, through, with.* f. கோட்டுமண் கொண்ட ie கூரிருளை க்கோட்டு மண்ணாகக் கொண்ட. வரவு வருதல், கொள்ளை கொள்ளுகிறது சொலவு சொல்லுதல் are instances of factitives in Tamil. கோட்டுமண் கொள்ளுகிறது is an idiomatic compound. இருளைக்

கோட்டுமண் கொண்டது என்னில், அதைக்கோட்டு மண்ணாகக் கொண்டது என்று, ஆக or ஆய்விகுதி குன்றி வருகின்ற நாடோடியவழக்காம். என்னைக் குறிக்கொண்டான், புதனகிழமையை நாட்பாரதிருக்கிறோம், இந்தா இதைவாய்க்கரிசிபோட்டுக் கொள், இத்தியாதிகள் அநேகம். முந்தினசொல் இரண்டாவதும் பிந்தினசொல் ஆகவென் விகுதியுமாய் அநாரிய பாஷைகளில் வருவதே,ஆங்கிலேய முதலிய ஆரிய பாஷைகளில் ஒரேவேற்றுமையில வருவதும் என்றறிக. உம். இராமம் தசரதம வித்தியென்றால் (factitive object) இராமனை தசரதனாக அறி. உலுத்தனை நான்தரித்திரனென்கிறேன் (I call a miser a poor man = உலுத்தனைத் தரித்திரனை என்கிறேன) g. கொண்ட குளிர்திங்கள், பெயரெச்சதொடராகிய வினைத்தொகை. h. திஙகள், இப் பாட்டிற்கு எழுவாய், பிராகிருத கர்த்தா. திங்கள் என்று மாத்திரம் நின்றால் தனி யெழுவாய் = கேவல கர்த்தா simple subject. குளிர் திங்கள்-கொண்ட குளிர்திஙகள் .. கோட்டுமண் கொண்ட குளிர்திங்கள் முதலியவை அடையெழுவாய், விசேஷணகர்த்தா = enlarged subject. i. சொரிந்தது, பயனிலை, பிராகிருத கிரியை=Principal Predicate. j. நெருப்பை = செயப்படு பொருள = கருமம =object or completion of the predicate.

4. Outline. திங்கள் சொரிந்ததே நெருப்பை. 5. கூரிருளைக் கொண்ட குளிர் திஙகள. 6. கூட்டுமைபோற் சிறநத கூரிருளை. 7. ஏட்டுமணிப்பூண் நிலாம் மென்முலைமேல்போத சசொரிநதது. 8. நீணிலாவென்னும் நெருப்பை.

CIII. அன்னஙகா ணீங்களுமவ் வாதித்தன ருணுமபோய
மனனும்படி யகலா வலலிரவின - மின்னு
மழைநதாளா வலலிருட்கும வாடைசகு நாஙகள்
பிழைததால் வநதே னென்னும பேர்.

அன்னங்காள்=அன்னங்களே (Voc. 51. பெயரியல் Nan.)=O Swans ;—நீங்களும்=yourselves ;—அவ் ஆதிததன் தானும்=and that sun=சூரியனும் ;—போய் மன்னுமபடி=போய் இருக்கும்படி=காணாது மறைந்துபோம்படி=that ye may not be seen ;—அகலா (த) வல்லிரவில்=நீஙகாத நள் இராவிலே=in this night which will not end so that you may be lost to me for ever, ;—மின்னு மழை=மின்னுகிறமேகத்தினுடைய=மின்னலுடன் கூடியமழையினுடைய ;—தாரை=வீழ்வுகளாகிய=streaks=நீர்த்தாரைகளாகிய ;—வல் இருட்கும்=அடையிருளுக்கும்= to thick darkness (from, out of) ,—வாடைக்கும்=வாதறகாற்றுக்கும் and from cold wind ;—நாங்கள் ;—பிழைத்தால்=தப்பினால்= if we escape or if we survive ;— வந்து= நீஙகள் நாளை காலமே திரும்பிவந்து=you may return to-morrow ;—என்=why=what is the matter=how do you do ;— என்னும் for என்னுங்கள் = என்று கேளுங்கள்=and may ask or enquire ;—பேர் for எங்கள்பேரை or எங்கள்பேரைச சொல்லிக் கூப்பிட்டு=calling at home என்கிறபடி.

1. Paraphrase. அன்னங்களே நீங்களும் (அதோ மறைந்தானே) அந்தச்சூரி

யனும் (போய் மன்னும்படி) போகவே போய்விடும்படியாக, நான் அகலேனென் றிருக்கிற இந்தப்பொல்லாத இராத்திரியில், மின்னுகிற இந்தமழையின் நீர்த்தாரை களாகிய அடையிருளுக்கும் இந்த ஊதலுக்கும் நாங்கள் தப்பிப்பிழைத்திருந்தால் நீங்கள் நாளைவந்து எங்கள்பேரைச் சொல்லிக்கூப்பிட்டு ஏன் என்று கேளுங்கள், எறு. 2. Colloquial Order. With exception of the last word போ, the rest could be read in colloquial style in the stanza itself. 3. Outline. நாங்கள்பிழை த்தால் (நீங்கள்) வந்து ஏன் என்னுங்கள். 4. இருளுக்கும் வாடைக்கும் பிழைத் தால். 5. என்னும்=2nd person plural Imperative;—also Optative in common use, as, வாரும்=வாருங்கள் please come, சொல்லும்= சொல்லுங்கள், please tell &c., &c. 6. Parsing. a நீங்களும் ஆதித்தனும்=எண்ணுமமை. போய் மன்னும்படி என்பதற்குத் தனிவெழுவாய்கள். மன்னும்படி in order to stay, an infinitive phrase= மன்ன. Also the 4th case of every verbal noun is equivalent to supine or infinitive, as மன்னுதற்கு செய்தற்கு=செய்ய. உண்ணுதற் கு வந்தான்=உண்ணவந்தான்.

CIV. செப்பிளங் கொங்கைமீர் திங்கட்சுடர் பட்டுக
கொப்புளங் கொண்ட குளிர்வானை - யிப்பொழுது
மீன்பொதிந்து நின்ற விசும்பென்ப தென்கொலோ
தேன்பொதிந்த வாயாற் றெரிந்து.

செப்பிளங்கொங்கைமீர (செப்பு + இளம் + கொங்கைமார்+ ஈர்)=சிமிள் (போலும்) இளமைய கொங்கையீரே=O ye maidens (See 13th பதவியல்and 52nd பெயரி Nan);—திங்கட்சுடர் (திங்கள் + சுடர)=திங்களதுசுடர (6th case, உறுப்பு) = moons' beams;— சுடர் nom to;— பட்டு = touching, affecting;—சுடர்பட்டு=nom absolute;—கொப்புளங்கொண்ட = புடைப்பு க்கொண்ட = கொப்புளங்களைப்பெற்ற=blistered;—குளிர்வானை = குளுந் த ஆகாயத்தை=object governed by என்பது;—இப்பொழுது=now;—noun-adverb, if இப்பொழுதில், a prepositional phrase;—மீன்=மீன்கள்=உடுக்கள் =நக்ஷத்திரங்கள்=stars;—பொதிந்து நின்ற=நிறைந்து நின்ற=பெருகியிருக் கிற=filled;—விசும்பென்பது=ஆகாசம் என்கிறது = வானை ஆகாசமென்பது factitive object)=வானை ஆகாசத்தை என்பது)=to call the blistered space a starry heaven;—என்கொலோ=என்னவோ=என்னும்=What, How, is it possible;—தேன்பொதிந்த = தேன்நிறைந்த=honey-droping;—வாயால் வாயி னுல்,—தெரிந்து for தெரிந்தும் in spite of all knowledge, against conscience.

1. Paraphrase. செப்பிளங் கொங்கைமாரே, (voc) நிலாவின் கதிரானது பட்டு (பட=பட்டதினுல்) கொப்புளங் கொப்புளமாய் எழும்பப்பெற்றிருக்கின்ற தண்ணிய வானத்தை, இப்பொழுது (நீங்கள்) நட்சத்திரங்கள் நிறைந்திருக்கிற ஆகா சமென்று (அழைப்பது) சொல்லுகிறது என்ன (நியாயம்),தேன்பொலிந்த உங்கள் வாயினுல், தெரிந்தும் எறு. 2. Prose Order. திங்கட் சுடர்பட்டுக் கொப்புளங்

கொண்ட குளிர்வானை, தெரிந்தும், தேன்பொதிந்த வாயால் மீன்பொதிந்த விசும் பென்பது என்கொலோ.

3. Parsing. என்பது, தொழிற்பெய ரெழுவாய், என்சொல், வினைப்பயனிலை. குளிர்வானைவிசும்பென்பது=Indirect Object. உன்னை புத்திமான் என்று நினைத்தேன்=உன்னை நினைததேன் புத்திமானை நினைததேன். அவளைத்தங்கையென்றிருந்தேன், கந்தன் அரசனானான், பொன்னனைப்பொய்யனாக்கினார்கள், வெள்ளையைக் கறுப்பென்றான் இததியாதிகளை யெல்லாம், பசுவைப்பாலகறநதான் என்பது போல் முதல்சினைப் பொருட்டாய்க்கொள்ளார்; ஆக்கப்பொருட்டென்றும் என்னற் பொருட்டென்று ம இருததற் பொருட் டென்றுங்கொண்டு அவற்றை factitive என்றொருசொல்லால இலககணங் கூறுவா. இந்தசசாதிரிசியம், ஆககவினைக்குறிப்பாககமினறியலா வென்பதிற் சிறிதே தோனறுவது காணக.

CV. கானுங் தடங்காவுங் காமன படைவீடு
வானுங் தோவீதி மறிகடலு - மீனக
கொடியானை வையமெலலாங கோதண்ட சாலை
பொடியாடி கொனறதெலலாம பொய.

கானும்=காடும்=forests,—தடஙகாவும்=தடத்த, விசாலித்த சோலைகளும்;—காமன் for காமனுடைய காமனுக்கு;—படைவீடு=arms-house, arsenal =ஆயுதசாலை;—வானும=வெளியும;—தோவீதி=தேர் (ஓடுகின்ற) தெருவும்= public high roads;—மறிகடலும்=அலை மறிககபபட்டிருககிற சமுததிரமும்= limited ocean;—மீன for மீனம fish=மீன உருவம் எழுதிய,—கொடியானை =துவசபடஙகளையுடைய;—வையம எல்லாம்=all over the country, every where in the world=உலகமெஙகும்=உலகத்திலெங்கும;—கோதணடசாலை =வில்லுகள் வைக்கின்றஇடம் = a depository for arrows;—inasmuch as this is the case;—பொடியாடி கொனறது எலலாம் பொய்=hence, *Says Damayanti*, that Siva had destroyed cupid is all nonsense, falsehood.

1. காடுகளும் பெரிய சோலைகளும் காமனுககு ஆயுதசாலை. ஆகாயமும் தேர்வீதியும் மறிகடலு (மாகிய) மீன் கொடிச்சீலை (பறக்கின்ற) பூமி அனைததும் வில்லு வைப்பிடம, இப்படிஇருக்க சிவன்இந்த மன்மதனைநெறறிக்கணணாலெரித்தா னென்கிற சரிததிரமெல்லாம் பொய்யாகரு மென்றவாறு. 2. a கானுமகாவும்படைவீடு, பெயரெழுவாய் பெயர்ப்பயனிலை b. வானும் வீதியும் கடலும் (ஆகிய வையம எல்லாம் (ஒட்டுப்பண்பு) எழுவாய். கோதண்டசாலை, பயனிலை. c பொடியாடிகொன்ற தெல்லாம் எழுவாய். பொய்பயனிலை. இங்கேபண்டையோர், எல்லாம் ஒன்றே எழுவாயென்பர். எல்லாம் பொய் என்பது கூடா தாகலின்பொடியாடி கொன்ற தெல்லாம் எழுவாயாக வேண்டு மென்பர் புதியோர். எல்லாமென்பது Grammatical Subject=எழுத்தெழுவாய் என்றும், பொடியாடி கொன்றதெல்லாம் என்பது Logical Subject=பொருளெழுவாய் என்றும் விதித்துளார் காண்க. The beneficent wisdom of the Almighty is visible every where=எல்

லாம் வல்லோனது காருண்ணியப்பிரகாச ஞானமானது எங்கும்விளங்குகின்றது; இதிலேஞானமே எழுவா யென்னில் அதுபொய்படும் என்பர், எல்லாவகைஞானமும் எங்கும் விளங்காதா கலின். யோக்கியமான மனுஷர் எப்போழ்தும் நன்குமதிக்கப்படுவர் என்பதில் மனிதர் நன்குமதிக்கப் படுவாரென்பது பொய்யாதல் போலும். வினைத்தொகை பண்புத்தொகை உவமைத் தொகை அன்மொழித்தொகை இருமொழியாகு பெயர் இருபெய ரொட்டு பலபெய ரொட்டு பெயரெச்சத் தொடர் (வந்துகின்றேர் முதலியவற்றிற்கு வாய்பாடில்லாத) வினையெச்சத்தொடர் இத்தியாதிகளில் ஒன்றாவது பலவாவது அடையாய் வரும் எழுவாயை விசேஷணக் கர்த்தா வென்பர். தனி யெழுவாயைக் கேவலகர்த்தா வென்பர்.

CVI. கொள்ளை போகின்ற துயிரென்னுங் கோளரவின
முள்ளெயிறோ மூரிநிலா வென்னு - முள்ளங்
கொடிதிரா வென்னுங் குழையுந் தழல்போ
னெடிதிரா வாயபுலரா நின்று.

கொள்ளை போகின்றது உயிர் = my life or spirit is plundered ;—என்னும் for என்கிறாள் or என்பாள் தமயந்தி = she says ;—கோளரவின = கோளாகிய = நவக்கிரகத்தி லொன்றாகிய இராகு கேதுவினுடைய = of Raghu, one of the nine planets of Hindu Astronomy ;—முள் = கூரான = thorn-sharp ;—எயிறோ = பல்லோ = is it the tooth ;—மூரிநிலா=முருட்டுநிலவு= the rough savage moon ;—என்னும் = she says. உள்ளம் கொடிது இரா= the night is cruel by her heart=இராத்திரியானது இருதயம் கொடியது ;—(See 26th Sut. பொது Nan) ;—என்னும் = என்பாள் ;—குழையும்=குழைவாள்= தளருவாள் = she faints ;—or குழையுந் தழல்போல் = அவியும் அக்கினிபோல் ;—நெடிது = நெடிதாய் = வெகு நேரமாய் ;—இரா for இருந்து ;—வாய்புலரா = வாய் ஓயாமல் = without ceasing ;—நின்று = நீடித்து. நெடிது இருந்துவாய் திறவாது (நிலையே) நின்று தழல்போல் குழைவாள் எனினும் ஆம். தமயந்தி என்றும், என்னுமென்கிற செய்யுமென் முற்றிற்கு என்பாள எனப் பெண்பாலீறுங் கொண்டது, அதிகாரத்தால். இலக்கணக்கொத்து ஒழிபியல் கூ-ம்சூத்திரம். அதிகாரத்தால் அவாய் நிலைதன்னால் ஓர்சொற் பொருளையுறுதற்பொருட்டால் செய்யுள் விகாரத்தாற் சிதைந்ததனால அறுவகைப் பொருளினத்தொகைதன்னால் இடையி னுள்ளன வெல்லாமறை தலால் இன்னும் பலபல வேதுவினாலும் மொழி வருவித்து முடித்தனர் கொளலே. Elakkanakkottu, 3rd Sut. Ozhipiyal. 2. மூரி from முரல் to noise, *hence,* savage, rough. மூரிநிலா கோளரவின் முள்ளெயிறோ வென்பாள். இராத்திரி உள்ளங்கொடிது என்பாள். குழைவாள். நெருப்புப் போல் நெடிதிருந்து வாய்திறவாமல் நின்று தமயந்தி இங்ஙனம் நினைவாள், 3. Outline. இரா—புலரா-நின்று-என்னும், என்னும், குழையும்.

CVII. வெங்கதிரோன் றன்னை விழுங்கிப் புழுங்கியோ
கொங்கை யனலிற் கொளுந்தியோ - திங்கள்
விரிகின்ற வெண்ணிலவால் வேகின்ற தேயோ
வெரிகின்ற தென்னே யிரா.

வெங்கதிரோன் றன்னை=சூரியனை=the sun ;—தன் (சாரியை) ;—விழுங்கி =முழுங்கி having swallowed ;—புழுங்கியோ=is it by being boiled, =வெந்தோ ;—கொங்கை அனலின் (5th ஏதுப்பொருள்)=நெருப்பினாலே ;—கொளுந்தியோ = கொதிப்பேறியோ=is it by being heated ;—திங்கள்=சந்திரன்=moon (Nom to விரிகின்ற) ;—விரிகின்ற = பரவுகின்ற = spreading :—வெண்ணிலவால்=வெண்மையான சந்திரிகையினால் ;—வேகின்றதேயோ=ஒகோவேகின்றது (agrees with இரா) ;—எரிகின்றது = burns ;—என்னே = *Exclamation* ;—இரா=இராத்திரி=Night (Nom to விழுங்கி புழுங்கி கொளுந்தி வேகின்றது and எரிகின்றது.)

1. Prose இராவானது வெங்கதிரோனை விழுங்கிப் புழுங்கியோ அனலிற் கொளுந்தியோ, திங்களது நிலவினால் வேகின்றது எரிகின்றது ! இதென்ன இது !

2. Analysis of words. a. வெங்கதிரோன், இதைப்பகுபதமென்றால் என்ன ? தொடர்மொழியைப் பகுபத மென்னப்படாது. ஒருசொல்லைப்பகுதி விகுதியாய்ப் பகுப்பதே புடைபெயர்ச்சி இலக்கணமாம் - வெம்மையில் மைவிகுதிகெட்டது. இது முன்னோர்கோள் - வேகும் என்பது ஆகும் ஆம், போகும் போமென்னுமாறே, வெம் எனவந்த தென்பர்பின்னோர் - செம=செவர் நம. கரும் = கருகும். குறும்=குறுகும. அரும்=அருகும். b. கதிரோன்=கதிரன=கதிரான், இது பகுபதம், கதிர்பகுதி + அன, ஆன=விகுதி. இப்பாட்டில பகுபதங்கள இன்னு முண்டோ ? விழுங்கி - புழுங்கி - கொளுந்தி - விரிகின்ற - வேகின்றது - எரிகின்றது இவைகளே (Divisibles are nothing more than the inflections of nouns and verbs) பகாப்பதங்களைசசொல்லு கொங்கை - அனல் - திங்கள் - வெண் or வெள் - நிலவு - என் - இரா, இததியாதி - பகுபதங்களைப்புடைபெயர்ந்த or வேற்றுமைப்பட்ட சொறகள என்று கண்டோமாதலின், பகாபபதங்களை என்னென்போம் ? பகாப்பதங்களெல்லாம் பகுதிகளேயாம்=Indivisibles are Roots. c. விழுங்கி, இதுபகுபதம், விழுங்குபகுதி, இ - செய்தென்னெசசத்து விகுதி, வந்து என உகரவிகுதி இல்லை சொல்லோ ? இயயும உவ்வும் பெருமபாலும செய்தெனெனசசதது விகுதிகள் - ஆய் போய் கூய் விராய மரீஇ இரீஇ இவை விகற்பங்கள். வேகின்றதே, வே or வேகுபகுதி. து விகுதி. கின்று நிகழிடைநிலை. அ, சாரியை. எத்தனை உறுப்புக் கூடிப் பகுபதமாகும் ? பகுதி விகுதி இடை நிலை இம்மூன்றுறுப்பும் இளவியாக்கத்திற கவசியம். எனெனில் பகுதியில்லாது சொல்லே இல்லை, விகுதியில்லாது ஐம்பால் மூவிடமில்லை, இடை நிலையின்றிக் காலமில்லை யாதலின சாரியை சந்தி விகாரமாகிய மூன்றுறுப்புகளும் இன்னோசைப பொருட்டேயாம்.

CVIII. ஊழிபல வோரிரவா யிற்றே யெனனுங்
கோழிகுர லடைத்ததோ வெனனு - மாழி
துயிலாதோ வெனனுஞ் சுடர்மதியங் கான்ற
வெயிலா லுடலுருகா வீழ்ந்து.

ஊழி for யுகங்கள்=ages ;—பல=அநேகம் ;—ஓரிரவாயிற்றே (ஒரு + இரவு + ஆயிற்று + ஒ) ஒரோராத்திரியாயிற்றே ;—என்னும=என்பாள் ;—கோழிகுரல் அடைத்ததோ என்பாள் ;—ஆழி=கடல் ;—துயிலாதோ=தூங்காதோ ;—என்பாள் ,—சுடா for சுடர்கின்ற=காலுகின்ற beaming ;—மதியம=சந்திரன் (Nom to கான்ற) ; கான்ற=காலுதலைச்செய்த=கக்கின=emitted ;—வெயிலால் + உஷ்ணத்தால் by heat ;—உடல்=உடம்பு (nom to உருகி and வீழ்ந்து);—உருகா=உருகி ;—வீழ்ந்து=சோாந்து. 1. பலயுகங்கள் ஒரு இராத்திரி ஆயிற்றே யென்பாள். கோழிகுரல் அடைத்ததோ என்பாள். ஆழி (கடல) தூங்காதோ என்பாள், கிரணங்களையுடைய சந்திரன் எறிந்த (நிலாவென்னும் பெயரிய) வெயிலினால் உருகி விழுந்து எ-று. உருகிவிழுந்து (இன்னின்னபடி) என்பாள். ஊழிபல=பலஊழி. 2. Select the particles (இடைச்சொல) in this stanza and classify them according to the 1st Sutram of இடையியல Nannul. 1. இன்-த் - ற் - த=these are காலங்காட்டும் இடைநிலைகள் Tense - Particles 2. து-உம்- து - உம்- து - உம் - are வினைவிகுதிகள்=Verbal terminations. 3. ஆல்=வேற்றுமையுருபு.

CIX. ஆடி வரிவண் டருகே பறக்கவே
வாடி மெலிவாள் வனமுலைமே - லோடிப்
பொறையாகச் சோர்வாள் பொறுக்குமோ காமத்
துறைவா யடங்காத் துயர்.

ஆடி=moving about, to and fro ;—வரிவண்டு=வரி (பொருந்திய) வண்டுகள் ,—அருகே=தன அருகிலே=near her, by her side ;—பறக்கவே (பறக்க + ஏ)=பறந்தபொழுது (Infinitive requiring *when* in English) ;—வாடிமெலிவாள்=வதங்கிளைப்பாள் ,—வனமுலைமேல் ;—ஓடி = ஏங்கியெனகிறபடி ;—பொறையாக=பளுவாக=like a great weight, heavily ;—சோர்வாள்=தளர்வாள் ;—பொறுக்குமோ=சகிப்பாளோ ;—காமத்துறைவாய்=இச்சையினது வழியின் கண் (உண்டாகின்ற) தணியாத நோயினை, எ-று. 1. இந்தப்பாட்டுக்களும் முன்போன பலகவிகளும் இனிமேல் வரும் அநேக வெண்பாக்களும அகப்பொருளில் காமத்துறைய வாதலால் அப்போப்பட்ட ஞானத்திற்கு வேண்டியமுதற்பொருள்கள் (principles—rudiments) சிலபல உண்டு, அவற்றை வெறுங்கிளவிகளால் சொன்னால், இன்னதற்கிது வென்கிற சிறப்புணாவு பிறக்கமாட்டாது. இந்நூல் ஆங்கிலேயகளுக்கும இந்துக்களில் ஆங்கிலேயமபயின்ற போகட்கும் நாளுமதஸ்தருக்கும் பொதுப்படப் பரீக்ஷைப் புஸ்தகமாய் நிற்கின்றமையால் செல்லிலக்கணமும அாததமுமாத்திரம் ஒருவாறு காட்டினோம். அந்தந்தப்பாட்

டிற்கும் ஒரு ஒரு தொனியர்த்தமுண்டு, ஆத்தாபத்தியாயும் குறிப்பாயும் சாதிரிசிய மாயும் காமக்கருத்துக்களைக் காட்டுகின்ற வெண்பாக்களுக்கு (analysis) வாக்கியா னுகம் வாக்கியசம்பேதம் ஏகவாக்கியம் பின்னவாக்கிய மிசதியாதிகளை அவ்வப்பாட் டின சங்கதியை வெளிப்படையாய்க்கூறுது விளக்குவதுங் கூடாதென்றறிக.

CX. ஈர மதியே யிளநிலவே யிங்ஙனே
சோர்குழலின் மீதே சொரிவதென் - மாரன்
பொரவளித்தான் கண்ணி யுனக்குப் புலரா
விரவளித்தா னல்லனோ வின்று.

ஈரம்=குளிர்ச்சி=chill ;—மதியே=திங்களே = நிலாவே=O moon ;—இளநிலவே=O young moon or tender beams + or இளநிலவையே (acc.) gov. by சொரிவது ;—சோர்குழலின் மீதே=சோர்கின்ற கூந்தலாளாகிய தமயந் தியின் மேலே or என்னுடைய தலையின்மேலே :—சொரிவதென்=சொரிவது= கொட்டுவது என்=why pour? ;—மாரன்=மதன் ;—பொர=போரிட to fight, to harass ; — அளித்தான் = வண்டுதான் = வண்டுகள்தாம்= there are these bees ;—கண்ணி=கண்ணியிலே=மாலையிலே=பூமாலையில் in the garlands ;—உனக்கு (நிலவாகிய) உனக்கு .—புலரா for புலராத=விடியாத=never dawning ;—இரவு=இராத்திரியை ,—அளித்தான் = கொடுத்தான் ,—அல்லனோ= அல்லவோ (or நல்லனோ, அவன் கொடியன் அல்லவோ என்றபடி) ;—இன்று=இன்றைக்கு எனக்குப் போராகப் பூமாலையிலே வண்டுகளை இட்டான், தன்கருப் புவில்லுக்கு நாண் வண்டாதலின். உனக்கு விடியாத இராத்திரியா யிருக்கவுஞ் செய்தானென்னில் இரண்டும் எனக்குக் காமோத்தீபன மென்றபடி. கண்ணி யை அளித்தானென்று சேர்த்துங்கொள்க.

CXI. தாங்கு நிலவின் றழல்போய்த் தலைக்கொள்ளத்
தேங்குழல்சேர் வண்டு சிறைவெதும்ப - வோங்குயிர்ப்பிற்
றாமங் கரியாகத் தனியே தளர்கின்றாள்
யாமங் கரியாக வின்று.

தாங்கும் = தாங்குகின்ற = தாக்குகின்ற = உறைக்கின்ற ;—நிலவின் தழல் போய்=சந்திர வெப்பமானது சென்று ;—தலைக்கொள்ள=உச்சிவரையில்ஏற ;— தேங்குழல்சேர்வண்டு=வாசனை பொருந்திய அளகத்தில் இருக்கும் வண்டுகள் ,—சிறை வெதும்ப=அவற்றது சிறகுகள் (வெதும்பிப்போக) வேக, அவ்வேக்காட் டினால் எங்கிவிட்ட மூச்சினால் பூமாலை கரியாக (தன்னந்தனியே) ஒண்டியாய் வாடுகின்றாள் அர்த்தராத்திரி சாக்ஷியாய் இன்றைய தினத்தில் என்று. 1. தாங்கும் affecting, influencing. 2. தலைக்கொள்ள to overpower, to fill, to get up to head. 3. ஓங்குயிர்ப்பு *hot breath*, sighing. 4. கரி=சாக்ஷி witness. 4. தழல்போய்த் தலைக்கொள்ள— வண்டு சிறைவெதும்ப — வண்டு ஓங்குயிர்ப்பின், தாமங்கரியாக=that the garlands be burnt to ashes (charcoal),—தளர்கின்றாள் தமயந்தி.

CXII. மையுறு கண்ணருவி வாரவளை சோரக்
கையிற் கபோலத் தலம்வைத்து - மெய்வருந்தித்
தேனிருந்த பூங்கணையே தீயாகத் தேமொழியா
டானிருந்து செய்வா டவம்.

மை=ink, black paste for eyes ;—உறு = பொருந்திய = rubbed, applied ;—கண் அருவி வார=கண்ணீர் வடிய=tears running down ;—வளை சோர =வளையல்கள் கழல ;—கையில் கபோலத்தலம் வைத்து=resting her head or cheeks upon her hand ;—மெய் வருந்தி=உடம்பு நொந்து ;—தேனிருந்த(பூங்) கணையே=honey dropping flower arrows ;—தீயாக = நெருப்பாக burning like fire ;—தேமொழியாள் (தேம் + மொழி + ஆள்)=Damayanti ;—தான= herself ;—இருந்து=sitting ;—செய்வாள்=performs ;—தவம் for தவத்தை= penance. From 97th to 125th Stanza, the poet describes night according to the principles of love-science (அகப்பொருள்). Darkness, solitude, moonlight, bees, garlands, starry sky, Andril bird, roaring ocean, cool breeze, chill wind from the north are objects of complaint. 1. அருவி=cataract, water fall. 2. கபோலம்=கன்னம் cheek. 3 கணை=அம்பு arrow. 4. கண்ணீர் வடிய கைவளை கழல கைமேல் கன்னத்தைச் சாய்த்துக்கொண்டு உடம்பு நொந்து புஷ்பபாணமே நெருப்பாயெரிய தேமொழியாளாகிய தமயந்தி தனித்திருந்து தவஞ்செய்கிருள் எ-று. A fit allegory.

CXIII. அள்ளிக் கொளலா யடையத் திரண்டொன்றாய்க்
கொள்ளிக்கும் விளங்காத கூரிருளா - யுள்ளம்
புதையவே வைத்த பொதுமகளிர் தங்க
ளிதயமே போன்ற திரா.

அள்ளிக் கொளலாய்=அள்ளிக் கொள்ளும் படியான அவ்வளவு தடிப்பாய் (குழம்பா யென்கிறபடி=so thick, so rich ;—அடையத்திரண்டு ஒன்றாய்=தடித்து ஒன்றுகூடி=being reduced to a gross mass of fluid ;—கொள்ளிக்கும் விளங்காத=கொள்ளிக்கட்டை நுனிநெருப்புக்கும் தெரியாத ;—கூர் இருளாய= thick deep impenetrable darkness that fire at the end of a fire brand could not be discerned ;—உள்ளம் புதையவே வைத்த=சித்தம் அமிழ்ந்திக் கிடக்கும்படி ஆழத்தில் வைத்திருக்கிற ,—பொதுமகளிர் தங்கள்=of common women ;—இதயமே போன்றது=is similar to their hearts kept down so deeply interred ;— இரா=this night. 1. அள்ளல்=சேறு=குழம்பு=thick fluid. அள்ளிக்கொளல் put for அள்ளல். 2. அடைய=gathered close, gross. 3. கொள்ளிக்கும் விளங்காத=not descernible even to fire brand கொள்ளி=meteor. 4. புதைய Infinitive adverbial ; secretly, treacherously, clandestinely. 5. இதயம்=இருதயம்=ஹ்ருதயம=heart.

CXIV. ஊக்கிய சொல்லர் ஒலிக்குந் துடிக்குரலர்
வீக்கிய கச்சையர் வேல்வாளர் - காக்க
விடையாமங் காவலர்கள் போந்தா ரிருளின்
புடைவா யிருள்புடைத்தாற் போன்று.

ஊக்கிய=ஏறிய daring, raised up ;—சொல்லர் =சொல்லையுடையோர்= those who speak ;—ஒலிக்கும் =சப்திக்கின்ற thundering ;—துடிக்குரலர்= உடுக்கையினது வெடித்த சத்தம்போலும் சத்தஞ் செய்வோர் ;—those making loud noise like kettle drums ;—வீக்கிய =கட்டிய = விசித்த = இழுத்துக் கட்டிய = girded ;—கச்சையர் = கச்சைகளை யுடையோர் ;—வேல்வாளர் for வேலர் and வாளர (வேலினர் - வாளினர) =those holding lances and swords ;—காக்க = ஊரைக் காப்பாற்ற ;—இடையாமம் for நடுச் சாமத்தில் in the mid of night ;—காவலர்கள்=guards, policemen (in apposition with சொல்லர் குரலர் கச்சையர வேல்வாளர) = காவற்காரர்கள் ;—போந்தார =வந்தார = புறப்பட்டார்கள் ;—இருளின் புடை = இருளோடே with darkness or against it ;—இருள் புடைத்தாற் போன்று=இருளானது இடித்தாற் போலே=மோதினாற்போல் = as if darkness hit against darkness It is midnight now. The whole nature sleeps, but Damayanti can hear policemens' voise.

இருளோடு இருள் இடித்துக் கொண்டாற் போல்காக்கப் புறப்பட்டார்கள் யாரென்றால், ஊக்கமாய வார்த்தை சொலவோ ராகிய, வெடிக்கும துந்துபி போற் குரல் காட்டுவோராகிய, இடைக்கட்டுக் கச்சைகட்டி யிருக்கிறவர்களாகிய, வேலராகிய வாளினராகிய, நடுச்சாமக்காவற்காரர்கள் என. 1. வேல்வாளர் implies, one and the same person held both. 2 இருளின்புடை &c. Either they were dressed black, or were painted so. 3 Outline. காவலர்கள் யாமங்காக்க போன்று போந்தார். காவலர்கள் =kings, for they themselves used to go with their policemen.

CXV. சேமங் களிறுபுகத் தீம்பாலின் செவ்வழியாழ்
தாமுறை ளுறைபுகுதத் தாரவண்டு - காமனார்
பூவாளி யைந்திற புகத்துயில புக்கதே
யோவாது முந்நீ ருலகு.

சேமம் (க்ஷேமம் again)=stables (loc) ;—களிறு=யானைகள் or the males of any of the lower animals ;—புக=போக to enter, to take their rest ;—தீம்பாலின்=தித்திப்பான பாலின் இனிமைகொண்ட=sweet like milk ;—செவ்வழியாழ்=the musical instrument so called ;—தாம :—உளளுறை for உறை உள=into their cases or bags ;—புகுத=புக=அடங்க=to be locked up ;—தார்வண்டு for மாலையில் வண்டுகள்=bees in garlands ;—காமன்தன் பூவாளி ஐந்தில்=into those five kinds of flower arrows of kaman ,—புக ;—துயில்புக்கதே=தூக்கத்திற் புகுந்தது=தூங்கிற்று=slept ;—ஓவாது=வருந்தாமல்=uninter

ruptedly, without care,—மூன்னீருலகு=the earth or world of three waters.

1. யானைகள் தங்கள் (சேமத்தில்=சேவகத்தில்) ஆலயத்தில் போய்ப்படுக்க (புக Infinitive, *while*) தீப்பாலபோல் (மதுரமான) செவ்வழி (ப்பண்கள்பாடும) வீணைகள் (தாம்) தங்கள் உறைகளிலே போய்ச்சேர (புகுத vulgar form) மாலையில் உள்ள வண்டுகள் காமனுடைய ஐந்து வகைப்பூ அம்பிலே போய்ப்புகுந்திருக்க நித்திரைபோகின்றது சலிப்பில்லாமல் கடல (சூழ்) உலகமானது. என்று.

2. Outline. களிறு சேமம்புக யாழ்உறைபுகுத வண்டு வாளிஐந்திற்புக உலகு துயில்புக்கது 3 துயில் புக்கது classical usage=நித்திரைபோகிறது *to go upon sleep*, is a colloquial idiom. நித்திரை பண்ணுகிறது=to make sleep. But போசனம்பண்ணுகிறது=to make food, is not *to cook* but *to eat*. 4 ஓவாது=undisturbed ;— 5. சேமம் or சேவகம்=dormitory for elephants.

CXVI. ஊனறின் றுவகையா லுள்ளவுயிர் புறம்பே
தோன்றுங் கழுதுந் துயின்றதே - தானற
றுரைசோரச் சோர வுடல்சோர வாயி
னிரைசோரக் கைசோர நின்று.

ஊன் for மாமிசம flesh, human flesh, (acc) ;—தின்று ;—உவகையால்=*by with* greediness (prepositional word for adverb)=greedily ;—உள்ள for உள்ளான (அந்தரானமான) உயிர=spirit,—புறம்பே=outward, externally ;—தோன்றும்=காணும்=visible, actually appearing ;—கழுதும்=பேயும, even devils ;—துயின்றதே=தூங்கிறதே ,—எப்படித் துயின்றதென்றால் ;—தான் (the devil itself) ;—தன் its, his ;—உரை=speech or spell (also உயரசி=height ie visible appearance) nom to சோரச் சோர = the more it diminishes ;—உடல் சோர=that the body may diminish ;—வாயின் இரைசோர=that the prey in his month may also disappear ;—கைசோர நின்று=standing quite dissatisfied. தூக்கத்திற் குளறிக்குளறி யென்றபடி.

1. ஊனே (மாமிசத்தை) தின்று (மேலும்) அதிக ஆசையால் அந்தரமாயிருக்கப்பட்ட (spiritual) தன உயிரானது பகிரங்கிருதியாய்த் காணுகின்ற பைசாசங்கூடத் தூங்கிறதே, எப்படியெனில், நின்று தூங்கிறது, எப்படி நின்று : கைசோர நின்று=leaving or slipping the piece of flesh from his hand as he fell asleep. என்கைசோர ? வாயின் இரைசோர (Infinitive causal, reducible to 5th case of Verbal noun of the same verb=சோர்ந்ததினால்). என இரைசோர ? உடல்சோர=because his assumed frame vanished. என உடல்சோர ? தான தன் உரைசோரச் சோர. 2. In spite of spells, the devil too sleeps, why cannot I sleep, *says Damayanti.*

3. This is a disputed stanza. Students anxiously desiring to know about தான் தன் உரை சோரச்சோர, are referred to the more enlightened thoughts of Europeans. See Calmets' Phantom World or the Philosophy of Ghosts.

4. உள்ள=*internal, inverse,* not *that is*, notwithstanding a Relative Participle in both ways. 5. Better is the popular interpretation, that கழுது - தான் - தன should be taken collectively, ie.a number of evil spirits in a *burning ground* (சுடுகாடு Hindu cemetry) anxious to get away soon from sorcerers' spell, devour their prey in great haste talking to each other indistinctly as they fell asleep.

CXVII. அன்றி லொருகண் டுயிலமற் றொருகண் ணாவத்தா
லின்றுணைமேல் வைத்துறங்கு மென்னுஞ்சொ - லின்று
தவிர்ந்ததே போலரற்றிச் சாம்புகின்ற போதே
யவிழ்ந்ததே கண்ணீ ரவட்கு.

அன்றில்=the Andril-bird ;—ஒருகண் துயின்று = ஒருகண் (ணால்) தூங்கி ;—ஒருகண=மற்றொருகண்ணை ;—ஆவத்தால் = அன்பினால் ;—இன்துணை மேல் வைத்து=தன் இனிய (sweet) பெட்டையின் மீது (consort) வைத்துக்கொண்டு ;—உறங்கும் என்னும் சொல்=the old saying that it sleeps as described above ,—nom to தவிர்ந்ததே ;—இன்று =to day ie to night ;—தவிர்ந்தது + ஏ=failed, became falsified ,—போல்=as if ;—அரற்றி=புலம்பி = lamenting ,—சாம்புகின்றபோதே=ஒடுங்குகின்றபோதே as she was pining ;—அவிழ்ந்தது + ஏ=loosed, fell ;—கண்ணீர் ;—அவட்கு for அவளுக்கு=to her.

1. அன்றில் பக்ஷியானது தன் ஒருகண்ணால் தூங்கி மற்றொருகண்ணை அன்பினால் தன் இனிய துணையின்மேல் வைத்துக் கொண்டு தூங்கும் (என்னும= conjunction *that* of a complex sentence) இந்தப்பழமொழியானது இன்றைய தினத்தில் பொய்த்தது அங்ஙன (போல்) மாகப்புலம்பி ஒடுங்குகின்றபோது அவளுக்குக்கண்ணீர் உதிர்ந்தது. 2. Nominative to அரற்றிச் சாம்புகின்ற போதே, is Damayanti to be supplied. 3. கண்ணீர் Principal Subject. அவிழ்ந்தது Principal Predicate.

CXVIII. ஏழுலகுஞ் சூழிருளா யென்பொருட்டால் வேகின்ற
வாழ்துயர மேதென் றறிகிலேன் - பாழி
வரையோவெ னு நெடுந்தோள மன்னவோ தின்னு
மிரையோ விரவுக்கி யான்.

ஏழ் உலகும் seven worlds (Nom to சூழிருளாய்) ; — சூழ் இருள் ஆய = சூழ்ந்த இருட்டாகி = all dark ஊனிருப்ப ,—என் பொருட்டு ஆல்= என்நிமித்தம = எனக்கென்றே = on my account ;—வேகின்ற = இருளாயவேகின்ற = burning, boiling ;—ஆழ்துயரம் ஏது என்று அறிகிலேன் = I know not whence this *deep sorrow*, heavy intolerable pain ;—பாழி (broad) வரையோ (is it a hill) எனும (*for, as, like*) நெடும் தோள மன்ன (voc) ஓ (interjection) ;—தின்னும் இரையோ = eatable prey ;—இரவுக்கு = to night ;— யான் = நான் am I ? 1. பெரிய மலையோ இதுவென்று நினைக்கும்படி நீண்ட தோள்களையுடைய அரசே (நளனே) 2. ஓ=அவலப் பொருட்டு= misery, appeal.

CXIX. கருவிக்கு நீங்காத காரிருளவாயக் கங்கு
லுருவிப் புகுந்ததா லூதை - பருகிக்கார
வண்டு போகட்ட மலர்போன மருண மாலை
யுண்டு போகட்ட வுயிர்க்கு.

கருவிக்கும்=இரும்பு முதலிய எந்த ஆயுதத்துக்கும்=to any instrument,—நீங்காத=விள்ளாத=impassable, impenetrable ;—கார் இருள்வாய்=கறுத்த இருட்டிலே ;—கங்குல் for கங்குலை=இராத்திரியை; உருவி=ஊடுருவி piercing ;—புகுந்தது=நுழைந்தது ;—ஆல்=அசை ;—ஊதை=ஊதற் காற்று = chill wind ;—Nom to உருவி and புகுந்தது ;—பருகி=குடித்து=தேனைக்குடித்து ;—கார்வண்டு ;—(Nom to குடித்து) ;—போகட்ட மலர்போல்=போகவிட்ட பூப்போல்=like the flower whose sap the black bees had sucked up and threw away ;—மருள் மாலை=love-giddy evening (Nom to உண்டு and போகட்ட) ;—உண்டு=drinking ;—போகட்ட=போகவிடப் பட்ட or போகுதலினால் (முதனிலைத் தொழிற் பெயர் - முனமுரைந்து தொகை) அட்ட=அடப்பட்ட=காய்ந்துபோன=சக்கையாகிய=withered ;—உயிர்க்கு=என் ஆவிக்கு=to my spirit. 1. கார்வண்டு (தேனைப்) பருகிப்போட்டு விட்ட பூப்போல், அந்திப் பொழுதினால் உறிஞ்சி விடப்பட்ட என் ஆவிக்கு (ஆவிக்குளளே) குளிர்வந்து புகுந்தது ;—எப்படி புகுந்தது? உருவிப்புகுந்தது எதை உருவி? கங்குலையுருவி. எதனிடத்தில்? இருளிடத்தில். எப்படி இருள? காரிருள். எப்படி காரிருள்? நீங்காத காரிருள். எதற்கு நீங்காத? கருவிக்கும நீங்காதகாரிருளினிடத்தில or காரிருள் வழியாய்க் கங்குலை உருவி என் உயிர்க்குள புகுந்தது, எறு. I was already exhausted by 6 or 7 the previous evening, much more now 2. O'clock A. M.

CXX. எழுந்திருக்கு மேமாந்து பூமாந் தவிசின்
விழுந்திருக்குந் தனுடம்பை மீள - செழுந்தரள்த்
தாேளாடு சேர்க்குந் துணையேது மிலலாதே
நாேளாடு நின்றழிவா ணைந்து.

எழுந்திருக்கும்=எழுந்திருப்பாள் ;—ஏமாந்து="மிகக்களித்து anxiously expecting ;—பூமாந்தவிசின்=பூக்கள் பரப்பியபெரிய விசிப்பலகையில=கட்டிலில் upon the flower-spread cot ;—விழுந்திருக்கும்=விழுந்து இருப்பாள ;—தன் உடம்பை ;—மீள=again=மறுபடியும் ;—செழும + தரள (ம=முத்து) த் தாண் + ஒடு=முத்துக்கள் பதித்ததாணுடனே ;—சேர்க்கும்=சேர்ப்பாள் ;—துணை எதும் இல்லாது + ஏ=யாரும் துணை (companion) இல்லாமலே ;—நாண் + ஒடும்=வெட்கத்துடன் ;—நின்று அழிவாள் ;—நைந்து=மெலிந்து. 1. துணை ஆருமில்லாமல் நைந்து நாணாேடும் நின்று அழிவாள் ஏமாந்து எழுந்திருப்பாள், பூந்தவிசிலே விழுந்திருப்பாள். தன்னுடம்பை மறுபடி செழுமையாகிய முத்துக்கள் அழுத்திய தாேணாடு சேர்ப்பாள எறு. 2 தவிசு=விசிபபலகையென்பார் சேனாட்டார்.

CXXI. விரிகின்ற மெல்லமளி வெண்ணிலவின் மீதே
சொரிகின்ற காரிருள்போற் சோரும் - புரிகுழலைத்
தாங்குந் தளருந் தழலேநெடி துயிர்க்கு
மேங்குந் துயரோ டிருந்து.

விரிகின்ற=பரம்புகின்ற மெல்லமளி=மிருதுவான சயனம் or படுக்கை for படுக்கையாகிய=bed ;—வெண்ணிலவின்மீதே=upon moon-light cot ;—சொரிகின்ற கறுத்த இருளைப்போல் ;—சோரும் for சோருவாள் ;—புரிகுழலை= சுருளாகிய - கட்டிய - அழகிய அளகத்தை ;—தாங்கும்=சுமப்பாள் or கையால் தாங்குவாள் ;—தளரும் = மெலிவாள் ;—தழலே = நெருப்பையே,—நெடிதுயிர்க்கும்=உயிர்ப்பாள்=பெருமூச்சு விடுவாள் ;—ஏங்கும் = திகைப்பாள் ;—துயரோடு=துக்கத்துடன் ;—இருந்து waiting impatiently. Stanzas the context of which sides more on the *third person* are Authors' remarks, but those susceptible of the *first person* belong to Damayanti. படர்க்கையாய்ச் சாயும் பாட்டுக்களைத் தமயந்தியைக் குறித்துப் புகழேந்தி கூறுதலாகவும் தன்மையிடந்தோன்றும் அவற்றைத் தமயந்தியே சொல்வதாகவும் கொள்க. 1. அமளி=கட்டில்=மெத்தை=cot or bed. 2. புரிகுழல்=platted hair ie. Damayanti *by secondary intent.*

CXXII. உடைய மிடுக்கெல்லா மென்மேலே யோச்சி
விடிய மிடுக்கின்மை யாலோ - கொடியனமேன்
மாகாதல் வைத்ததோ மன்னவர்த மின்னருளோ
வேகாத தென்னோ விரா.

உடைய=உண்டான=in possession=that இராத்திரி had in her command ;—மிடுக்கெல்லாம்=எல்லாமுடுக்கினையும், முறுக்கையும்+briskness ;—என்மேலே ;—ஓச்சி=ஓட்டி=செலுத்தி=having directed ;—(அங்ஙனம ஓச்சியது பற்றி) விடிய=பொழுது விடிய ;—மிடுக்கு இன்மையாலோ=சக்தி இல்லாதபடியினாலேயோ ;—கொடியன்மேல்=கொடியனாகிய மன்மதன்மேலே=upon the cruel cupid ;—மாகாதல்வைத்ததோ=(பெரிய) அதிகப்பிரியத்தை வைத்ததோ ;—மன்னவர்தம்=இராசாக்களுடைய ;—இன் அருளோ=இனியதயையோ Is it the favour of kings ? ஏகாதது=போகாதது = தொலையாதது = விடியாதது ;—என்னோ=ஏனோ=என்னமோ=என்னவோ ;—இரா or இராத்திரியானது.

1. இராத்திரியானது தன்னிடத்திலிருந்த எல்லாமுடுக்கையும் (முறுக்கையும்) என்மேலே செலுத்தி, அங்ஙன மெல்லாஞ் செலுத்தப்பட்டுத் தீர்ந்ததனால், தான்பொழுது விடியச்சத்தியில்லாமையினாலோ தொலையாமல் நீடித்துக்கொண்டிருக்கிறது ? கொடியனாகிய மன்மதன்மேலே மெத்தவும் ஆசைவைத்ததோ இராத்திரியானது ? அரசரது (or நளனுடைய) நல்லதயவோ இராத்திரி போகாதிருப்பது ? ஏனோ ! எ-று. 2 மிடுக்கு brisk, power, severe, air of consequence &c., 3. இன்மையால், வருதலால், நிற்றலால் இத்தியாதித்தொழிற்பெயா மூன்றும் வேற்று

மைகட்கு இங்கிலீஷில் because என்று மொழிபெயர்ப்பு வரும் ; வருகையில் நிற்கையில் என்னுமித்தியாதி தொழிற் பெயரோழாம் வேற்றுமைகட்கு when, while என்பன வருமாறே யென்றறிக. 4. மன்னவர்தம்=தன் - தம - இவற்றைச்சாரியையென்னாது இலக்கியத்துக்குரிய ஆறுவதுருபு என்க (classical genitive). Partitive form என்னப்பட்ட, இவாதமமுள இத்தனைபோ என்று (one of the number—two of the class boys) பிரித்தெடுக்கு மிலக்கணத்திறகு தகுந்தசொல்லாய் விளங்குகின்றன இந்த தன்–தம் என்னுஞ் சொற்கள். எந்த எழாம வேற்றுமைப் பன்மைக்கும் இநதத்தத்துவ (ஆற்றல்) முண்டென் றறிக. சுடம பாட்டில் எஙகளிலேசூட்ட, எஙகளிலே ஒருதத னுக்குச்சூட்ட என்பதை எஙகள் தம்முள் ஒருவற்கெனறு வரும வாய்பபினை யுடையது செய்யுணடைப் பெரும்பான்மையென்க. முன் ஆறுவதுருபென்றதறகுத தானதாம என்னும் விரவுபெயர்கள் (Epicenes) ஆறுவதில் தன் தம எனத் தாமே கிடக்கின்றமையால் கணடுகொள்க.

CXXIII. மயங்குந தெளியு மனநடுங்கும் வெயுறற
றயஙகும வறிதே யுலாவும - வயஙகிழைபோயச
சோரும துயிலுந துயிலாககரு நெடுஙக
ணீருங கடைசோர நின்று.

மயங்கும்=மருளுவாள்=சந்தேகிப்பாள் = doubteth ;—தெளியும=தெளிவாள்=தேறுவாள்=takes courage ;—மனமநடுஙகும=இருதயம நடுஙகுவாள்=trembeth in heart ;--வெயது உறறு = வெயதாகி or வெயதினைப்பொருந்தி=getting heat *literally* ;--being heated, extremely affected + (கொதிப்பேறியென்றபடி) ;—உயஙகும்=உயங்குவாள்=வருநதுவாள்=is vexed ,—வறிதே=வெறிதே=வறுமையாய்=வெறுமையாய்=emptily ie. stupid, stupified, madman-like,—also *incessantly* சுமமா or ஓயாமல் எனகிறபடி ;—உலாவும=உலவுவாள்=சுற்றுவாள்=walketh, roundeth :--வயஙகிழைபோய்=வயங்கு + இழை + போய் = glittering jewels being gone, ie becoming loosened + (nom absolute) ;—சோரும் = சோருவாள் is exhausted ;—துயிலும= துயிலுவாள= தூங்குவாள் = sleepeth (but a little) ;— துயிலாக்கரு நெடுங்கண்=sleepless black broad (நெடுமை) eyes ;—நீரும் (நீர்வேன் - வாய - வான் - வாள் - நீரும்) நீர்வாள்=sheds tear ;--கடை for கடைக்கண் ;—சோரநின்று = வடியநின்று ! தமயந்தி கண்நீருவாள் or தமயநதி கண்நீரும. தமயநதி எழுவாய்க்கு மற்றையசெய்யுமென் முற்றுக்களைக்கொண்டு, நெடுங்கண் எழுவாய்கு மாததிரம் நீரும் என்பயனிலையை கொள்ளாதுபோதல் கூடாதெனறு நீருவாள் என்றோம. நீர்த்தல்=நீராதல் ; கட்டிமுதலிய நீர்த்தல்போல் துயிலாக்கரு நெடுங் கண்கள் கடைசோர நின்று நீர்த்தன. இதனுள் தனித்தனிச்சிறிய வாககியங்கள் தெளியக கிடக்கின்றன.

CXXIV. விழுது படத்திணிந்த வீங்கிருள்வாயப பட்டுக்
கழுதும வழிதேடுங் கங்குற - பொழுதிடையே
நீருயிர்க்குங கண்ணோடு நெஞ்சுருகி வீழ்வார்த
மாருயிர்க்கு முண்டோ வரண.

விழுது=குழம்பிலும் செறிந்தசேறு=விழுமியது= thick liquid, paste ;— பட to be, (componnds of பட are adverbs, as, கிழமைபடவாழ் live usefully, நயம்படவுரை speak kindly, reasonably, இடம்படவீடிடேல் build not your houses spaciously, roomy) விழுதுபட = thickly condensed ;—திணிந்த=அடைந்த=நெருஙகின=compact, compressed ;--வீங்கிருள்=வீங்கிய இருள்=தடித்த இருட்டு=swollen darkness (so dark beyond expression என்றபடி) ;—வாய் in or at (locative form) ;—பட்டு for அகப்பட்டு=happening to fall ;—agreeing with கழுது ;—கழுதும் (கழுது + உம்)=even Satan who is darkness himself; வழிதேடும்=மார்க்கம் பார்க்கும்=looking for way ; feeling his steps என்கிறபடி ;—கங்குற்பொழுதிடையே=இராத்திரி வேளையில் ;—நீாஉயிர்க்கும்+ *breathing* for *watering*+கணணோடு ;—நெஞ்சு+உருகி their hearts melting ;—வீழ்வார்தம் (classical genitive) விழுவோருடைய ie கரைகிறவர்களுடைய for ஸ்திரீசனங்களுடைய ;—ஆருயிர்க்கும்=ஆவிக்கும் ;— உண்டோ = இருக்கிறதோ ;—அரண=காவல் Is there any watch over them ? No, their watch-guard is Satan himself in whose kingdom-darkness-they live !

1. Paraphrase கழுதும், (Nom) விழுது படத்திணிந்த வீங்கிருளில் அகப்பட்டு (Predicate) வழிதெரியாமல் தடவும் இராததிரிப்பொழுதிலே, கண்ணீருதிர்க்குங் கண்களும் நெஞ்சம் உருகிக கரைவாராக ளுடைய ஆருயிர்க்கும் உண்டோ (Interrogative Predicate Principal) அரண் Principal Subject. எறு. Interrogative sentence. 2. Outline. அரண் உண்டோ? இல்லையென்கிறபடி. எதற்கு உண்டோ? ஆருயிர்க்கும் ஆருடைய ஆருயிர்க்கு ? வீழ்வாருடைய : எப்படி வீழ்வா ருடைய? நெஞ்சுருகி ;—எதனோடுங கூட ? நீர் உயிர்க்கும் (உதிர்க்கும்) கண்ணோடு. எப்போ? பொழுதிடையே. எந்தப்பொழுது ? கஙகுற்பொழுது, எப்படிப்பட்ட கங்குல் ? தேடுங கங்குல். என்னதேடும் ? வழிதேடும் - எது வழிதேடும் ? கழுதும் = பிசாசும். எதிற்பட்டு ? வாயப்பட்டு- எதன்வாய்ப்பட்டு ? இருள்வாய்ப்பட்டு. எப்படிப்பட்ட இருள் ? வீங்கிய இருள்வாய். எபபடி வீங்கிருள் ? திணிந்த வீங்கிருள். எப்படித்திணிநத ? விழுதுபடததிணிந்த வீஙகிருள். இப்படிப்பட்ட இருளிலே அகப்பட்டுப் பேயும்வழிதேடும் படியான அவ்வளவு கருக்கிருட்டில், ஆருயிர்க்கும் அரணுண்டாஙகொல்லோ. The moon had set long ago. Morning comes on in the next stanza.

CXXV. ¶ பூசுரர்தங் கைம்மலரும் பூங்குமுதமும் முகிழ்ப்பக்
காசினியுந் தாமரையுங் கண்விழிப்ப - வாச
மலர்ந்ததேங் கோதையா ளாழ்துயரத் தோடு
புலர்ந்ததே யற்றைப் பொழுது.

பூசுரர்தம் (பூ earth + சுரர் gods, தம் *of* = வேதியருடைய ;—கைம் மலரும = கைகளாகிய புஷ்பங்களும் ;—பூங்குமுதமும = பூவிய=அழகிய அல்லிகளும் *moon lilies* ;—முகிழ்ப்ப = முகிழ்க்க = மூட = கூம்ப = வாட to shut, close their petals ;—காசினியும் for உலகத்தோரும் or மனுஷரும் ;—தாமரையும் = lotus or *Sun-lilies* ;—கண்விழிப்ப = விழிக்க = to open their eyes ie from their sleep ;—வாசம அலர்ந்ததேம கோதையாள் = கோதை யாளுடைய of Damayanti ;—ஆழ் துயரத்தோடு = ஆழ்கின்ற தொலைந்து போகததொடங்குகின்ற விரகதாபத் துடனேகூட ie சந்தோஷா ரம்பத்துடனே ;—புலர்ந்தது = விடிந்தது =dawned + ஏ ;—அற்றைப் பொழுது = அன்றைய இராத்திரிப்பொழுது. 1. வேதியர்க ளுடைய கரமலர்களும அழகிய அல்லிப்பூக்களும கூம்பும் படியாய் (பிராதக் காலத்தில வேதியர் தங்கள்கைகளைக் கூப்பித தொழுவாராதலின் – அல்லிகள் சூரியனுக்கு வாடுமாதலின்) உலகமும் (உலகத்தோரும்) தாமரைகளும் கண்விழிக்கும் படியாகவும், வாசனைமலர்ந்த தேன்மாலையாள் தமயந்தியி னுடைய, தொலைந்து போகின்ற விரகதாபத் துடனே (அதாவது களைவரிக்கத் தொடங்கும் சந்தோஷத் துடனே) அன்றைய இராத்திரிப் பொழுது விடிந்த தென்ற வாறு. 1. முகிழ்ப்ப-விழிப்ப-பொழுது புலர்ந்தது. 2. ஆழ்துயரத்தோடு பொழுதுபுலர்ந்தது. 3. பொழுது புலர்ந்தது = எழுவாய் பயனிலை (a bare predicative combination without any objective relation) 3. கைம் மலரும் பூங்குமுதமும nom to முகிழ்ப்ப. காசினியும் தாமரையும் விழிப்ப. 4. முகிழ்ப்ப and விழிப்ப together with their enlarged subjects are attributives (தத்தம் தனித்தனி வினைமுதல்க ளோடுகூடிய செயவென்னச் சங்கள்) to புலர்ந்தது. 5. ஆழ்துயரத்தோடு (prepositional phrase as an adverb or extension of the predicate) புலர்ந்தது. 6. சூரியனுக்கு அல்லி கூம்புதலும தாமரைமலர்தலும், காலையிற் கைம்மலர் வேதியர்க்குக கூம்புதலும், இரவும் நிலவும் பூவும் வண்டும் கரும்பும் முன்னிலவும் மன்மதனும் புஷ்பபாணங்களும் தனிமையும் தாபமும் ஆசை மிகுதியாற் சிறுபொழுதைப பெரும் பொழுதென்று புலம்புதலும், குளிர்ச்சியை நெருப் பென்னலும, மன்மதனைக் கொடியன் என்பதும்ஆகிய இத்தியாதிகளைக் குறித்தும், இவைபோல்வனவாகிய=வயங்கிழைகள் வளையல்கள் கையிற் கழன்று போதல், வறிதேயுலாவுதல், தழல்போய்த் தலைக்கொள்ளல், கையிற் கபோலத்தலம் வைத்தல், ஊதைபொருது புலம்புதல், அன்றிற்பட்சியை நினைத்துக் கூறுதல், அன்னமுதலிய வற்றிற்குசசெலவிடை கொடுத்தல், நாளைக்குப் பிழைத்திருந்தால் பார்ப்போ மென்னல், கொப்புளங் கொண்ட குளிர்வான், பொடியாடி கொன்றதெல்லாம்பொய், முலைமேற் பொறையாகச்சோர்தல், உடம்பைத் துணோடு சேர்க்குதல், இவைகளும் பிறவும் அகப்பொருளிலக் கணங்

கள். ஒவ்வொன்றும் ஒரு ஒருதுறையாம், அதற்குரிய அலங்கார இலக்கணமும் உணவு இவ்வுரை விசாரித்து இலேசாய் அறிந்து கொள்ளலாம். இவ்விசாரணைக ளால் நற்பயன்படுவோரும் படுவார், கெடுமதிப்படுவோரும் படுவார். இதுபற்றியும், நூல் நெடுகுமென்றும், இலக்கணம் பாஷை நடைமுதலிய மாத்திரமே முக்கி ய உத்தேசமென்றும், சுத்தவெள்ளை வெளிப்படையாய் விளக்காத பக்ஷத்தில்வி ளக்கவே வேண்டாவென்றும் நிறுத்தினோம். மேலும் வெண்பாக்களில் குறைஞ் சபக்ஷம் மிஅ சொல் மிஞ்சின பக்ஷம் உ௰-உஉ சொல் இருக்கும், இடைவாகிய ச்சந்தி இலக்கணங்களை முழுவதும் உதகரிக்க இடமில்லை யாதலாலும், F. A. B. A. மாணுக்கருக்கு விதித்துள்ள விராடபர்வம் நைஷதம் முதலிய நீண்டவிரு த்தப்பாக்களுக்கே அவை அவசியம் வேணுடு மாதலாலும் பெருக்காது நிறுத்தலா யிற்று. Night is over. It is morning now. The sun rises in the next stanza.

CXXVI. வில்லி கணையிழப்ப வெண்மதியஞ் சீரிழப்பத்
தொல்லை யிருளகிழிய தோன்றினான் - வல்லி
மணமாலை வேட்டிடுதோள் வாளரசர் முன்னே
குணவாயிற் செங்கதிரோன் குன்று.

வில்லி for கருப்புவில்லி ie மன்மதன் ;—கணை = தன் பூ அம்புகளை ;— இழப்ப = to loose ,—வெண்மதியம் = வெள்ளிய நிலாவானது ;—சீர் = தன் சீராகிய குணமாகிய வெண்டன் மையை ததணடனமையை ;—இழப்ப ;— தொல்லை = பழைய primeaval = துன்பமான distressful, painful, vexing ;— இருள ;—nom to கிழிய = to be torne, கெட அகல தொலைய ;—தோன் றினை = உதித்தான் = உதயமானான் = appeared, is or has risen ;—வல்லி for வல்லியி னுடைய ie தமயந்தியின் ;—மணமாலை = கலியாண மாலையை = சுயம்வர மாலையை = Swayam Varam-garland ;—வேட்டிடு = வேட்டிடுகின் ற = வேட்கின்ற=விரும்பியிருக்கிற=that expect or long for ;—தோள் for தோள்கள் =தோள்களை யுடைய ;—வாளரசா முன்னே = in the presence of those swords-holding kings ;—குணவாயில் = குணக்கில்= கிழக்கில் ;—செ ங் கதிரோன்=சூரியன் ;—குன்று=குன்றில்=உதயகிரியில். Prose. மன்மதன் தன் அம்புகளை இழக்கவும், வெண்மதியானவன் தனது சீரினை (சிறப்பை) கைவெ கிழவும, உலகத்தின (தொல்லையின்) இருள்கிழிந்து போகவும் ie கழிந்து போக வும் ஆக, தமயந்தியின் (வல்லியின்) சுயமவரமாலையினை ஆசிக்கும் தோள்களை யுடைய இராசாக்கள் முகத்திலே கிழக்கில் சூரியனானவன் உதயகிரியில் உதித் தான் எறு. The wording of this Stanza cannot but remind us of that far nobler Sun of Righteousness, the peculiar incidents of whose Advent are so graphically described, that one is tempted to take our author for a *believer*. How beautiful upon the mountains are the feet of him that bringeth good tidings, that publisheth peace ; that bringeth good tidings of good, that publisheth Salvation ; that saith unto Zion, Thy God reigneth ! Isaiah.

*S. Samuel Pillais' Manuscripts.*

Parsing in Verbal Syntax = எழுதத நோக்கத்துச் சந்தி - a. வில்லிக ணை, வில்லிக்கணை யெனவேற்று மைப்புணர்ச்சி யல்லாத அல்வழி யெழுவாயா தலின் இயல் பாயிற்று 26th உயிரீ Nan) இங்ஙனம் வில்லிகணை தழாஅததொடரொ ன்க. b. கணையிழப்ப, இரண்டாவது தொகை. உயிர இ = யி, உடம்படு மெய் 12th Sut உயிரீ Nan பொதுப் புணர்ச்சி. கணையை இழப்ப = விரி. c விலவியி ழப்ப = எழுவாய்த் தொடர். d வெண்மதியம = மெயயீறறுப் புணர்ச்சி இயல்பு. 6th Sut. மெய்யீ. Nan) அம் = சாரியை. நிதி = நிதியம்போலும். பதமுன்விகுதியு மென் சூத்திரத்தால் ஒருமொழியீறறின கண்சாரியைக கதிகாரமில்லை யெனின், வேண்டுதல் வேண்டுதலை அஞ்சுதல அஞ்சுதலை முதலிய இலக்கி யஙகளாலும்இ ன்னோரை முதலிய காரணததாலும காட்டுககள நேகமுளவா தலாலும் கொள்க. சீரைவிசேஷிதத அம் எனில், பணபெனக. e. சீரிழப்ப = உடன்மேலுயிர் &c. சீரை இழபப, இரணடாவது தொகை-விரி. f இருள் கிழிய, இயல்பு-rather உ றழ்வு, 24th மெய. Nan. g. கிழியத் தோனறினான், அல்வழி மிகுதல் - பொது விதி 15th உயிரீ Nan) h வல்விமணம, இயலபு ; பொதுப் புணாசசி 8th Sut. உயிரீ Nan. i. மணமாலை, ஈறொழிநதது 16th மெய. Nan.

CXXVII. முரசெறிநத நாளேழு முறறியபின் கொற்ற
வரைசெறிநத தோணமனனர் வநதாா - விரைசெறிநத
மாலை துவளா முடிதயங்க வால்வளையுங்
காலை முரசுங் கலநது.

முரசு + எறிந்த = பேரிகை அடிதத ;—நாள் எழும் = எழுநாளும் ;—முற் றிய + பின் = முடிந்த பிற்பாடு ;—கொற்றம + வரை = வெறறிமலை = வல்ல மைமலையின ;—செறிநத பொருந்திய ;—தோள் + மன்னர் = புசங்களையுடை ய ;—மன்னா ;—வந்தார் = proceeded, arrived ;—எப்படி வநதாா? மாலைதுவளா = மாலைகள் அசைய, எப்படிப்பட்ட மாலை? செறிந்த (பொருநதிய-நிறைநத) மா லை எது நிறைநத? விரைசெறிந்த = வாசனை நிறைநத மாலை. மேலும் எப்படிவந் தார்? முடிதயங்க. எதுதயங்க? முடிதயங்க. முடியென்றால்? கிரீடம் = crown. தயஙகஎன்றால்? துலங்க = இலங்க = விளஙக = பிரகாசிக்க = to shine, that it may shine. மேலு மெப்படி வநதாா? கலந்து வந்தார். தாஙகள் தாங் கள்கலந்தா வநதாா? அல்ல, வால்வளையும் காலைமுரசும் கலந்து. வால்வளை = white chanks. காலைமுரசு = morning drums. 1. சுததவெள்ளைச் சொல்லுக் கு ஆங்கிலேய பிரதிபதம வேண்டியதில்லை. 2. வேண்டுமேன்றே சிலபலசொ ற்களுக்கு அர்த்தமபோடாது விட்டோம், மாணக்கர் தாமேகேட்டறியவும் வே ண்டுமாதலின். 3. காமங்கண்ணிய சொற்களுக்கும ஆங்கிலேயப் பிரதிபதம்போ டவில்லை யென்றறிக. 4. பெரும்பாலும் பாட்டுநடைப்படிக்கே பதச்சேதமும் வசனரூபமும் செயப்பட்டிருககின்றன. 5. தமிழ் உலகவழக்கின்படி வாக்கி யரூபத்தை மாற்றித் தருதலை அந்வயமென்பர். அங்ஙனம் சிறுபான்மைசெய்துகா ட்டியிருக்கின்றதுங்காண்க. இதையே அந்வயமென்பது எங்கள் மதமன்று, எல்லா ம் அந்வயமே. அநவயத்திற்குக் கருத்துநடையே பிரமாணம். எல்லாச்சொல்லும்

பொருள் குறித்தனவேயென்ற சாதிரிசியத்தாலும், கடிசொல்லில்லை காலத்துப்ப டினே யெனனுஞ் சூத்திரத்திறகுச் சேனுவரையா இவைதொன்று தொட்டன வ லலவென்று கடியபபடுஞ்சொல் இல்லை, அவ்வக்காலத்துத் தோனறிவழஙகபப டுமொயினென்ற வாறென்ற சாதிரிசியததாலும வசனமார்க்கத்துவாக்கிய ரூபங்கட் கும் அநவயகயங்கள, செய்யுளின் வேறுய வல்லவெனக்கொள்க, வழக்குஞ்செ ய்யுளுமாயிருமுதலின் நாடியென்றாராதலின்.

CXXVIII. மனறலஙதாரமனனா நடுவணைய வந்திருந்தான்
கனறு குதட்டிய காாீல - முனறிற
குறுவிழிக்கு நேர்நாடன் கோதைபெருங் கண்ணின்
சிறுவிழிக்கு நோறறிருநத சேய.

Nalan is come under the canopy. மன்றல் = வாசனை=good smell; அம் = சாரியை;—தாரமன்னர் = wreaths - wearing kings;—நடு in the middle of = நடுவிலே;—அணைய = அருகேயென்றபடி=near;—or நடு அணைய or நடுவண் (also *middle*) + ஐ + அ = நடுவினன்ஆக;—வந்திருந்தான்=வநது + இருந்தான=took his seat;—agrees with சேய் the last word of the stanza;—யாரவந்திருந்தான்? சேய்வந திருந்தான். (சேய் = son= youth.) என்ன விசேஷணைததுச்சேய்? நோற்றிருநத சேய்;—தவஞ்செயதிருந் த or இதுகாறும் பொறுத்துக் கொண்டிருந்த;—எதறகென்று நோற்றிருந்த? சிறு விழிக்கு = கடைக்கண்ணுக்கு = கடாக்ஷததிற்கு = என்னைப்பாராளா வென் றபடி;—எதன் சிறுவிழிகககு? பெருங்கண்ணின் = விசாலமானகண்ணின்;— யாருடைய பெருஙகண்? கோதையினுடைய=பெணணினுடைய. யாருடைய கோதை? நாடனுடைய = விதாப்பனுடைய கோதை. எப்படிப்பட்ட நாடு? நோநாடு = தன்மையுடைய நாடு. என்னநேர் - தன்மை? குறுவிழிககும்தன் மை. (குறுவிழிததல்=முழிததுககாணுதல்=விளஙகுதல்= மினனுதல்=to shine like gems spread indiscriminately on floor) எங்கே குறுவிழிக்கும்நேர்? முன் றிலில்=முற்றங்களில்;—எவை குறுவிழிக்கின்றன? காாீலம=கருநீலரத்தினங் கள்? எபபடிப்பட்ட கார்நீலம்? குதட்டிய or குதட்டப்பட்ட = chewed or spued, குதப்பியுமிழ்ந்த கருநீலம். எது குதப்பிய? கன்றுகள், கன்றுக்குட்டிகள் எறு. 1. Outline சேய்—வந்திருந்தான். 2. மனனர்நடுவணைய வந்திருந்தான். 3. காாீலம் may be the flower itself. 4. குறுவிழிக்கு (also *noun*)= small eyes. 5. நேர்=equal. 6. சிறுவிழிக்கு=கொஞ்சம் பாராளாவென்றபடி.

CXXIX. நித்திலத்திற பொற்றோடு நீலமணித தோடாக
மைத்தடங்கண் செல்ல வயவேநதா - சித்த
மருஙகேவர வண்டின் பநதர்க்கீழ வநதா
னருஙகேழ மணிபபூ ணணஙகு.

நித்திலம் pearl. பொன்தோடு a gold ear ornament of females. நீலமணி ததோடு ஆக for or as or like emarald ear ornament; மைத்தடங்கண் black broad

eyes. செல்ல to go, to see, to direct her eyes sideway, sidewise. வயவேந்தர் (வயம் power + வேந்தர்)=of mighty fellows. சித்தம் mind, will, love. மருங்கே = கூடவே=along with. வர to come, to follow, to accompany. வண்டின் பந்தர்க்கீழ் under bees-swarming Pandal. வந்தாள் came. அரும்கேழ்=அருமையாகிய நிறம்=colour, light, shine. அருங்கேழ்மணி=நன்னிறம் பொருந்திய அரிய இரத்தினங்கள்பதித்த=gems-set. பூண்=நகைகள். அணங்கு=பெண் ie தமயந்தி. 1. Damayanti is coming. 2. நீலமணித்தோடானமை, நீலோற்பல கடாக்ஷ வீக்ஷணத்தால். 3. Outline. அணஙகு (தன்) கண்செல்ல வேந்தர் சித்தம் மருங்கேவரப் பந்தர்க்கீழ் வந்தாள்.

CXXX. பேதை மடமயிலைச் சூழும்பிணைமான் போற
கோதை மடமானைக் கொண்டணைந்த - மாதர்
மருங்கின் வெளிவழியே மன்னவர்கண் புக்கு
நெருங்கினவே மேன்மே னிறைந்து.

மிக்கழகிய மயிலைச்சுற்றிவரும் பெண்மான்கள்போல், மாலையணிந்த அழகிய பெண்ணை (த்தமயந்தியை) அழைத்துக்கொண்டுவந்த தாதிமாாகளது இடுப்பாகிய இடைவெளியின் வழியாய் அரசர்களுடைய கண்கள்புகுந்து கூடின (நெருங்கி வந்தன) மேலு மேலும் பெருகி எறு. 1. மன்னவர்கண நெருஙகின, பால் பகா அஃறிணையாதலின். 2. மேல் மேல் நிறைந்து நெருங்கின. 3. அநேகாசூழ அவள் மறைந்து செல்லுதலால் உற்று உற்றுப்பார்த்தாாகள் என்றபடி. உற்றுப்பார்த்தும் சிறிதே காணக்கிடைத்தது கருத்து, மேன்மேல் நிறைநதெனறதனுல். Princes try to have a look at her, but in vain; she is so closely surrounded by her maidens.

CXXXI. மனனர் விழித்தா மரைபூத்த மண்டபத்தே
பொனனின மடப்பாவை போய்ப்புக்காண் - மின்னிறத்துச்
செய்யதாள் வெள்ளைச் சிறையன்னஞ் செஙகமலப்
பொயகைவாய்ப போவதே போனறு.

இராசாக்களுடைய கண்களாகிய தாமரைமலர்ந்த மண்டபத்தில் (பந்தலில்=சுயம்வரசாலையில்) இலக்குமியின் அழகிய பெண்ணனவள் வந்து சேர்நதாள், ஒளிநிறமான செவந்த கால்களையுடைய வெள்ளிய இரக்கைகளையுமுடைய அம்சமானது செந்தாமரைத்தடாகத்தில் போகின்றதைப்போன்று எறு. 1. Anwaya style. பொன்னின்மடப்பாவை, மின்னிறத்துச்செய்ய தாள்வெள்ளைச்சிறை அன்னமானது செங்கமலப்பொய்கையில் போவதே போன்று, மன்னர் விழிததாமரை பூத்த மண்டபத்தில் போய்ப்புக்காள், or பாவை, மண்டபததே, அன்னம் பொய்கையிற் போவதே போன்று, போய்ப்புக்காள். 2. Outline பாவைபோய்ப் புக்காள். அன்னம் போவதே போன்று போய்ப்புக்காள்.

*Extracts from S. Samuel Pillai's Tamil Museum and Review of Oriental Philology.*

CXXXII. வடங்கொள் வனமுலையாள வாரகுழன மேலோடு
நெடுங்கட் கடைபார்த்து நின்று - னிடங்கண்டு
பூவாளி வேநதன்றன பொனனாவம் பின்னேயிட்
டேவாளி நாணினமே விட்டு.

முத்துவட முதலியவற்றைக்கொள்ளும் (அணிந்திருக்கின்றவென்கிறபடி) அழகுமுலையாளுடைய நீண்ட கூந்தலின்மேலே செல்லுகின்ற நீண்டகண்ணின் கடையை (கடைக்கண்ணை) ப்பார்த்துக்கொண்டு இருந்தான, எப்படி நின்றான் என்னில் இடஙகண்டு - வாய்ப்பான இடத்தைககண்டு அஙஙனே நின்றான், யாவன் என்னில், புஷ்பபாணப்பிரயோகியாகிய மன்மதன் ;—எப்படி நின்றான்? தன்னுடைய பொன் அம்புறாத்தூணியை முதுகின்பின விட்டுக்கொண்டு நின்றான். மேலு மென்ன செய்துநின்றான். அம்பின்மிகுதியை (number of arrows என்கிற ஆங்கிலேய நடைபபடி) த்தன்கருப்பு வில்லினது நாணினமேல் (கயிற்றின்மேல்) வைத்துச்செலுததி விட்டு நின்றான். எறு.

Anwaya Style. பூவாளிவேநதன், தன்பொன் ஆவம்பின்னே இட்டு, ஏவாளியை நாணின்மேல் இட்டு (வைத்து) இடங்கண்டு, வடங்கொள் வனமுலையாள்வார் குழன்மேலோடும (நளனுடைய or இராசாக்களுடைய) நெடுங்கட்கடையைப்பார்தது நின்றான். The order of thoughts is more clearly felt in the classical style than in the Anwayam. அம்புறாததூணி or அப்பறாதூணி=quiver.

CXXXIII. ¶. மனனர் குலமும பெயரும் வளநாடு
மினன பரிசென றியலணங்கு - முனனின்று
தார்வேநதன பெறற தனிககொடிக்குக் காட்டினா
டோரவேநதர் தம்மைத தெரிநது.

இராசாக்களுடைய சாதியையும நாமத்தையும் வளம்பொருநதிய நாட்டையும் இன்னபடியென்று சரஸ்வதியானவள், தமயந்தி முன் நின்று, or அந்த அரசர்முன்நின்று, வீமன்பெற்ற ஒப்பற்ற கொம்புக்குச் சுட்டிக் காட்டினாள், தேர்வேந்த (ர்தம்மை) ரைதெரிந்து குறிதது or தெரிவித்து எறு. Anwaya style. இயலணஙகானவள் முன்னின்று மன்னர்குலமும் பெயரும் வளநாடும் இன்னபரிசு என்று தோவேநதா தமமைத்தெரிந்து, தாா வேந்தன் பெற்றதனிக்கொடிக்குக் காட்டினாள். Anwayam seems to alter the intent of the writer. Which is the exact position of தேர்வேந்தர் தம்மைத் தெரிந்து I wonder in the Anvayam ! Saraswati has to point out to Damayanti each person as he is seated. Here follows the order of their royal highnesses, of whom the chola king is placed first by Pugazhendi, he being a Tamil sovereign.

CXXXIV. பொன்னி யமுதப் புதுக்கொழுந்து பூங்கமுகின்
சென்னி தடவுந் திருநாடன் - பொனனிற
சுணங்கவிழ்நத பூணமுலையாய சூழமறிற மன்னர்
கணங்கவிழ்நத வேலனிவன காண.

காவேரித்தண்ணீரின் புதியகொழுந்தானது அழகிய கமுகமரங்களின் உச்சி

யைத் தடவிச்செல்லும் செல்வம்பொருந்திய சோழநாட்டரசன் ;—பொன்னில் பொன்னிலே (சுணங்கு) தேமல் மலர்ந்த ஆபரணங்க ளணிந்த முலையாயே (vocative combination=மகடூஉ முன்னிலைச்சந்தி) நெருங்கியயுத்தத்தில் சத்துருக்களுடைய கூட்டம் விழுந்திடும்படி செய்த வேலாயுதன் ஆகிய இவனை, இவனைப்பார், எறு. இனைய மகடூஉ முன்னிலை இங்ஙனம் வாஸ்தவமாகவே வந்தது.

1. பொன்னிற் சுணங்கு அவிழ்ந்த பூண்முலையாய் (voc ) திருநாடன்வேலன் இவன், காண். 2. காவேரியாற்றின் அமிழ்தம்போன்ற புதுதண்ணீர் (கொழுந்து=tender, cool, soft) ரானதுபாக்குமரங்களது தலைமேல் தடவிச்செல்லும் நல்ல சோழநாட்டையுடையான், நெருங்கிய யுத்தத்தில் எதிரிகள்கூட்டமடிந்த (செயம்பொருந்திய) வேலாயுதன் (இதோ வீற்றிருக்கின்ற) இவன் ; இவனை. பொன்போல் சுணங்கு (அழகுதேமல் எனகிறபடி) பூத்திருக்கின்ற பூண்முலையோய், பார் எறு. 3. திருநாடன் வேலன் Subject இவனை Predicate. இதற்கு Principal Object இல்லை. 4 கொழுந்து Subject. தடவும் Verb. சென்னி Object. 5. துன்னூர் கணம் nom to கவிழ்ந்த. This is the king of Chola Desa or Cavery. 6. மகடூஉமுன்னிலைசந்தி or விளிதொடர்=விளி விசேஷணம் or முன்னிலையடை, not the *address* and *the addressed* as in சாத்தாவா, கொற்றுகொள.

CXXXV. போர்வாய் வடிவேலாற் போழப்படாத் தோருஞ்
சூர்வாயு மதரரிக்கட் டோகாய்கேள் - பார்வாயப்
பருத்ததோர் மால்வரையைப் பண்டொருக்கால் செண்டாற்
றிரித்தகோ விங்கிருந்த சேய்.

போர்வாய் in fight, battle ;—வடிவேலால்=வடித்தவேலால்=by lance well prepared ;—போழப்படா தோரும் = பிளக்கப்படாத வர்களும் those who are not cleft ,—சூர் for சூரை or சூரியனை fear ;—வாய் for வாயும் or வாய்க்கும், கொள்ளும் ;—மதர் for மதர்த்த proud ;—அரிக்கண்தோகாய்= வரிபொருந்திய கண்களையுடைய தோகையே=மயிலே=தமயந்தியே ;—பார்வாய்=பூமியிலே ;- -பருத்ததோர் மால்வரையைப் பண்டொருக்கால்=முன்னே ஒருகாலத்திலே=once in ancient times ;—செண்டால் for செண்டாயுதத்தால்=by a weapon called *chendu* ;—திரித்த=உடைத்த=வேருக்கிய that destroyed, demolished ;—கோ=அரசன் ;—இங்கு இருந்த=that is seated here ;—சேய்=இளைஞன் youth. 1. யுத்தத்திலே வேலாயுதத்தினுல் பிளக்கப்படாத அரசர்களும் அச்சத்தை (வாய்கின்ற) க்கொள்ளும்படியான மதர்த்தகண்களையுடைய தோகையே கேட்கக்கடவாய் ;—பூமியில் பெருத்ததாயிருந்த ஒருமகத்தானமலையை (Maha Meru) முன்னே ஒருகாலத்தில் செண்டாயுதத்தால் வேறு செய்தகோமான் இவிடத்திதோ இருக்கின்ற இளங்குமரன் எறு. 2. தோகை voc தோகாய். See 49th பெயரி Nan. 3. கேள்=நீகேள். 4. மால்வரையை governed by திரித்த. 5. செண்டால்திரித்த=கருவிப்பொருள். 6. ஒருகால்=ஒருக்கால், இயல்பும் மிகுதலுமாய்வரும். 7. இங்கிருந்த சேய் Subject. திரித்தகோ Predicate. From 134th to

149th, Saraswati mentions the names of kings present at Swayam Varam. There is no Objective case principal in any of these stanzas. The royal gallant here referred to is Pandiyan. Refer to திருவிளையாடல்=Holy Sports of Siva.

CXXXVI. வென்றி நிலமடந்தை மென்முலைமேல வெண்டுகில்போற்
குன்றருவி பாயுங் குடநாட - னின்றபுகழ்
மாதே யிவனகண்டாய மானத்தனிக கொடியின
மீதே சிலையுயாத்த வேந்து.

வென்றி=வெற்றி (from வெல்)=வெற்றிபொருந்திய= victorious ,—நிலமடந்தை (6th case) பூமிதேவியினுடைய ;—மென்முலைமேல் ;—வெண்துகில் போல=வெள்ளைத்துகில (வஸ்திரம்) போல்=like white garment ,--குன்றருவி (குன்று + அருவி) மலையருவிகள்=water-falls from mountains ;—பாயும பாயகின்ற=falling or irrigating ;--குடநாடன்=Coorg Countryman ;—நின்ற புகழ்மாதே (நின்ற that stood always ie everlasting) நிலையான கீர்த்திபொருந்திய பெண்ணே (voc) ,—இவன this one ;--கண்டாய்=did you see, do you see ;--literally *Thou hast seen* :—மான for மானமுள்ள=terrible, honourable ,—தனிககொடியின் மீதே=ஒப்பற்ற துவசத்தின்மேலே=upon the unrivalled flag ;—சிலை=வில for வில்லை=bow ;—உயாத்த= உயாத்தின = எடுத்த = எழுதின= that upheld or printed, painted ,—வேந்து for வேந்தன் king. This is king of Coorg. 1. ஜெயம பொருந்திய பூமிப்பெண்ணினது மெல்லிய முலையினமேல வெள்ளைத்தூசுபோல் மலையருவி நீர்களபாய்கின்ற குடகு நாட்டரசன, நிலையான கீர்த்திபெற்றபெண்ணே, இவன், கண்டாய, பெருமையான ஒப்பில்லாத தனது பதாகையின்மேல் வில்லை உயர்த்திய இராசன் எறு.

¶. 2. Anwaya Style. நின்ற புகழ்மாதே, இவன்கண்டாய் (யாமொன்னில்) வென்றி நிலமடந்தையின மென்முலைமேல் வெணதுகிலபோல் குன்றருவிகளபாயுங் குடநாடனாகிய, மானததனிக கொடியின்மீதே சிலை உயர்த்தவேந்தன். 3. Outline. நாடன் வேந்து இவன கண்டாய். 4 மெனமுலைமேல் here means the surface of the country itself. 5. குன்றருவி nom to பாயும். 6. பாயுங்குடநாடன = குடநாடன்பாய்ந்தான் அலலன் = குடநாடும பாய்ந்ததன்று. For *finishing terms* = முடிக்குஞ்சொல்லிலககணம, see 21st Sut. வினை Nan, in the large commentary விருத்தியுரை. 6. Here is a list of பெயரெச்சத்தொடர்கள that a student may find which is *the direct concord* and which the *indirect one*. நிலவலயந்தாங்கும் நளன், ஈசன் கருதுபுகழ், மயில் இருந்த பாகத்தார், தேன்பாடும தாரநளன், எறறு நீர ஞாலம், வந்தமறை, கோததமுனி, வெல்கொணட அரசு, ஒத்திருக்கு முளளம், நீண்டமுகில், சேர்வரிய வெஙகானம, பாாகாத்தசேய், கேடில்விழுசசெல்வம், காமருவுநாடற்கு, இலங்கு அலைநூலமாாபன், விண்ண இழந்த நூல்மாாபா, ஒ

விஆழி, சாகரஞ்சூழ் நன்னாடு, முன்னாட்டுமெம்நாடு, கரிவழுக்கும் நகர், தென்றல் அலர்த்துங்கொடி, மயிர்புலர்த்தும் புகை, மனுநூல் வாழவரு சந்திரன சுவர்க்கி, தாமமையாள் வைகும் தடந்தோளான், பாராளும்வேந்தன, மாதர் அருகுஊட்டுமெபைங்கிளி, வாங்குவளைக்கையர், வண்டுசிறகுலர்த்தும் நாடன், தளவு அலருந்தாழ்வை, கார்வண்டுழலுந் தூங்கிருள், அன்னபொழில், முத்துமிழுங் கமுகைநாடன், நல்லமயிற்குழாம், களிவண்டு, தையல்பிடித்ததனி அன்னம, திசைமுகநத வெண்கவிகை, இசைமுகந்ததோள், பாவேய்ந்தசெந்தமிழ். புள்ளுறையுஞ்சோலை, வண்டுறங்கும் நாடன், மயிலைச்சூழும்பிணைமான் ;—துன்னாகணம் கவிழ்ந்த வேலான்=Observe in this instance that a number of words are to be supplied between கவிழ்ந்த and வேலான்.

CXXXVII. ஆழிவடி யம்பலம்ப நின்றானு மன்றொருகா
லேழிசைநூற சங்கத் திருந்தானு - நீளவிசும்பி
னற்றேவர் தூது நடந்தானும் பாரதப் போர்
செற்றானுங் கண்டாயிச் சேய்.

ஆழி for ஆழியில் in the sea ;—வடியம்பு (வடி + அம்பு=the fire-arrow of Sri Rama ;—அலம்ப=அசைய to move ;—நின்றானும் = he who stood ;—அன்று ஒருகால் on that day, once ;—எழ் + இசை + நூல் + சங்கத்து + இருந்தானும்=and he who sat, presided over the conclave of musical Pundits at Madura College ;—நீள்விசும்பில் = அகன்ற வானத்தில்=in or though space ;—நல் தேவர்தூது=நல்ல தேவர்களுடையதூதனாக = as messenger of gods ie Pandavas ;—நடந்தானும் = he who walked ;—பாரதப் போர்=the great war of Mahabharata ;—செற்றானும் = செறுத்தவனும்= வென்றவனும் and he who conquered ;—கண்டாய=do you see, did you see ;—இச்சேய் this youth. 1. Outline நின்றானும் இருந்தானும நடந்தானும் செற்றானும் இச்சேய் ; இவனைக்காண். 2. செறுதல் to revenge, செற்றான is properly the past form, but செறுத்தான் in imitation of மிகுத்தான் and the like. 3. வடியம்பு nom. to அலம்ப. 4. நின்றான் இருந்தான் நடந்தான் and செற்றான் refer to one and the same person, agreeing with the Principal Predicate சேய் ;—He is a member of the Yadava-line. This is a disputed stanza too, as to the very person who it is ; evidently, it is not Krishna, but some one of his pedigree. கார்த்த வீரியார்ச்சுனன் and கிருஷ்ணன்.

CXXXVIII. தெரியிலிவன் கண்டாய் செங்கழுநீர மொட்டை
யரவின் பசுந்தலையென் றஞ்சி - யிரவெல்லாம
பிள்ளைக் குருகிரங்கப் பேதைப்புட் டாலாட்டும்
வள்ளைக் குருநாடர் மன.

தெரியில்=if properly inquired = தெரிந்தால்+=விசாரிக்கு மிடத்தென்றபடி ;—also தெரியலே=பெண்ணே (voc.) ;—இவன் கண்டாய்=இவன்யா

றொன்னில் ;—செங்கழுநீர மொட்டை = செங்கழுநீர் என்று பெயரிய புஷ்பச் செடியினது பூமொட்டினை (அரும்பை) ;—அரவின்= பாம்பின் of a snake ;—பசுந்தலையென்று=பசியதலையென்கிறதாக=for the green head of a serpant;—அஞ்சி = fearing = பயந்து ;—இரவெல்லாம் = இராத்திரி முழுவதும் = all night ;—பிள்ளைக்குருகு=இளம்பறவை=குருவிக்குஞ்சு=young of a bird ;—இரங்க=அழ to cry + when crying ;—பேதைப்புள் = பெட்டைப் பறவை = the mother-brid ;—தாலாட்டும = தாராட்டுகின்ற=rocking ;—வள்ளை =வளமை பொருந்திய or வள்ளைப்பாட்டு ஒலிக்கின்ற ;—குருநாடர் = குருதேயத்தார து or தேயத்தார்க்கு ;—மன்=அரசன். 1. தெரிந்து சொன்னால் இவன் யாரொனில், செங்கழுநீர் மொக்கினைப்பாம்பின் பசியதலை யென்று பயந்து இளம்பறவையானது அழ, இரா வெல்லாம் தாய்ப்பறவையானது தாலாட்டும் வளைப்பாட்டொலிகின்ற குருநாட்டிற்கு அரசன் எறு. 2. வள்ளைப்பாட்டு a popular song, for an explanation of which, see Beschis' சதுரகாரதி under வள்ளை or பிரபந்தம் - கூள. 3. Outline. மொட்டினை அஞ்சிப்பிள்ளைஇரங்கப்பேதைதாலாட்டும குருநாடு. 4. இவன மன்=Subj. and Pred.

CXXXIX. தேமருதாரக் காளையிவன் கண்டாய் செம்மலர்மேற்
காமருசங் கீன்றகதிர முத்தைத் - தாமரைதன
பத்திரத்தா லேற்கும படுகாப்பழனஞ் சூழ
மத்திரத்தார் கோமான மகன்.

தேம்=வாசனை = smell ;—மரு for மருவிய =பொருந்திய=having ;—தார் for மாலையினையுடைய ;—காளை=yonth ;—இவன் + கண்டாய் ;—செம் மலர்மேல்=செவ்விய or செவ்ந்த பூவின்மேல் ;—காமரு=அழகிய pretty ;—சங்கு=chanks ;—ஈன்ற = பெற்ற =produced, brought forth, begotten ,—கதிர்முத்தை=shining pearl ;—தாமரை lotus ;—தன்பத்திரத்தால் by its leaf or upon its leaf ;—ஏற்கும்=தாங்கும் receiving, taking up as by hand ;—படுகர் = பள்ளம் meadows ; பழனம = வயல் and fields ;—சூழ் for சூழ்ந்த surrounded ;—மத்திரத்தார் of the inhabitants of Matra ;—கோமான் மகன் =son of a king. 1. Outline. மத்திரத்தார கோமான் மகன், தேமரு தார்க்காளை இவன் கண்டாய். 2. தாமரை nom to ஏற்கும். ஏற்கும் governs கதிர்முத்தை. ஏற்கும் படுக்கர்ப்பழனம்= Indirect Relative Participle ending with படுகர்ப்பழனம். 3. Anvayam. காமரு சங்கு செய்மலர்மேல் ஈன்ற கதிர்முத்தைத் தாமரையானது தன்பததிரத்தால் எந்திக்கொள்ளும் பள்ளங்களும் வயல்களும் சூழ்ந்த மத்திர தேசத்தின் சனங்களுக்கு அரசனுடைய குமாரனாகிய தேமரு தார்க்காளை இவன் என்று தெரிந்துகொள். இதிலே சம்புத்தியை தமயந்தியென்று வருவித்துக்கொள்க. 4. When the paraphrased reading differs from the analysis in word or signification, the student is to take that which is agreeable to his taste. 5. Either கா + மரு for மருவு, மருவிய, or காமர் + உ=The latter not good grammar, while the former is opposed to truth.

N. B. To Yadava-family belongs Matra (வடமதுரை), and who is that referred to in the 137th?

CXL. அஞ்சாயன் மானே யிவனகண்டா யாலைவாய
வெஞ்சாறுபாய விளைந தெழுந்த - செஞ்சாலிப
பசசைத தாண்மேதிக கடைவாயிற பாலொழுகு
மச்சத்தார கோமான மகன்.

அம்=அழகிய ;—சாயல்=நிறமுடைய colour ;—மானே = மான்போலுங் கண்வாய்ந்தபெண்ணே (voc) ;—இவன்கண்டாய்=Have you seen, or do you see that this person ;—is ;—ஆலைவாய்=கரும்பாலையில்=in the sugar cane press ;—வெம்சாறுபாய=விருப்பததிற்கேற்ற இரசமானது=palatable juice ;—nom to பாய ;—பாய to flow - பாய்ந்து or பாயதலால்=Infinitive causal காரணப்பொருட்டு ,—விளைந்து எழுந்த=grown up ;—செம்சாலி=நலலநெல்லினது=of paddy ;—பச்சைத்தாள்=green blade, stalks ;—nom to பாலொழுகும் ; —மேதிக்கடைவாயில் = எருமையின் வாயின்கடையில்=by the side of their mouths ;—பாலொழுகும் = shedding milk ;—மசசததார = of the Maccha Countrymen ;—கோமான்மகன்=அரசனுடைய, குமாரன் Predicate to இவன.

1. அழகிய நிறமுடைய பெண்ணே, இவன் (கண்டாய்) யாரென்றால், ஆலையினிடத்தில் (ஆடிப்) பிழிந்த விருப்பமான (கருப்பஞ்) சாறானது தண்ணீராய்ப்பாய அதனால் ஓங்கிவளாந்த செநநெல்லினது பச்சைததாளானது எருமையின கடைவாய் வழியே பாலொழுகுகின்ற மச்சதேசதது சனங்களுககுக கோமானுக்கு மகன் எ-று. 2. Anvayam or Outline. மசசததார்கோமான மகன இவன் கண்டாய் மானே. 3. செஞ்சாலிப்பச்சைததாள=சூ ம் வேற்றுமை, உறுப்புபொருள். 4. வெம்மை=heat, meaning *desire*. 5. பச்சைத்தாள பாலொழுகும்= பச்சைததாள் ஒழுகும்=பாலொழுகும்=two nominatives to one and the same verb.

CXLI. வண்ணக குவளைமலர் வவ்விவண் டெடுத்த
பண்ணிற செவிவைத்தப பைஙகுவளை - யுண்ணு
தருங்கடா நிறகு மவநதிரா டாளு
பிருஙகடா யானை யிவன.

வண்ணக் குவளை மலர் = அழகிய or நீலவர்ணத்த குவளைப் பூவை = fine blue kuvalai -flower ;— gov. by the next word ;—வவ்வி = கவ்வி=கௌவி seizing by his mouth ;—வண்டு எடுத்த பண்ணில் = அதிலிருந்த வண்டானது தொடங்கிய இராகத்தில் in or upon the tune which it *took* ;—செவிவைத்து for செவியை வைத்து = காது கொடுத்து = placing ie inclining its ears ;— அப்பைங்குவளை = அந்த நீலோற் பலத்தை = the self same ;—உண்ணாது = உண்ணாமல்=தின்னாமலே = not having eaten or without eating ;—அருங்கடா = அரியகடா வானது = காளையானது - nom to நிற்கும — that stands

affected by the song;—அவந்தி நாடு = Avanti Country (acc.);—ஆளும்= ஆளுகின்ற ;—இரும கடாயானை=noble male elephant ie. the king;—இவன் this one. 1. கடாயானை = ஆணயானை here used to denote the sovereign of Avanti. This is a true அனமொழி, while இளநீர் is destined to denote the tender cocoanut ; and பொற்றொடி also is never mistaken for any other. Hence this கடாயானை and the like, in passages of this nature, must be parsed a classical metonymy; the others of *one word* and a *double word* being settled and known as such. 2. வண்ணமான (blue) நீலோற் பலபுஷ்பத்தைக் கவ்வி, (கவ்வினவுடனே அதிலிருந்த) வண்டு தொடங்கிய கீதத்தில் தன் காதை வைத்து, அக்கவ்விய நீலமலரை மெல்லாமலே கடாவானது சுமமா(அரும்) நிற்கின்ற (இவ அதிசயத்தை யுடைய) அவந்திதேசத்தை ஆளுகின்ற பெரிய ஆணயானை யானவன் இவன் எறு. Damayanti (voc) understood. 3 மலரைக்கவ்வினது கடா. பண்ணினை யெடுத்தது வண்டு. செவியினை வைத்ததும் கடா. கவ்வினமலரை உண்ணாது விட்டதுங்கடா. இங்ஙனம்கடாநிற்கும் அவந்திநாடு. இலக்கிய ஆகுபெயர்=classical metonymy=முன்னொட்டுப் பின்னொட்டால் இந்தசொல் இன்னதற் கென்றாக வெனக்கொள்வது இலக்கிய ஆகுபெயர். இவ்வாறே அன்மொழிக்கும் உருவகத்துக்குங் கொளக. நியதவிதிக்கும நியத உதாரணங்கட்கும வேறாயப் போன்று வருவன இலக்கியச் செய்கை.

CXLII. விடக்கதிர வேறகாளை யிவன்கண்டாய மீனின்
றொடக்கொழியப போய்நிமிர்ந்த தூண்டின - டடற்கமுகின்
செங்தோடு பீறித்தேன செங்நெறபசுந தோட்டில
வநதோடு பாஞ்சாலா மன.

விட for விஷ=poison set;—கதிரவேற்காளை=ஒளிபொருந்திய வேலாயுதத்தகாளையை யொத்தான் இவன் யாரென்றால் ;—பாஞ்சாலர்களுக்கு இராசன். எப்படிப்பட்ட பாஞ்சாலம்? வந்து ஓடும்பாஞ்சாலம். எதிலேவந்து? தோட்டிலே (தோடு என்றால் என்ன? மிகுதி அநேகம் திரட்சியென்றர்த்தம் வடு என்று மர்த்தம்.) என்னதோட்டிலே? செந்நெற்பசுந்தோட்டில். இந்தத்தோட்டின்கண் எது வந்தோடும்? தேன்வாது ஓடும். இதேது இந்ததேன்? பீறிப்புறப்பட்டதேன். எதைப்பீறி? செங்தோட்டினைப்பீறி (பீறி=pierce, lacerate) எதுபீறி? தூண்டில்பீறி. எதனுடைய செந்தோடு? மடற்கமுகின் செந்தோட்டைப்பீறி. என்ன தூண்டில்? நிமிாந்த தூண்டில் எப்படி நிமிாநததூண்டில்? போய் நிமிர்ந்ததூண்டில். எங்ஙனம்போய்? ஒழியப்போய். எது ஒழிய? தொடக்குஒழிய. தொடக்கு என்றால் என்ன? மாமிசம் அல்லது இரை. எதனுடைய இரை? மீனின் இரை. Anvayam. பாஞ்சாலத்திலே மீன்பிடிப்போர் தூண்டிலைப்போட்ட வுடனே மீனானது தொடக்கினை விழுங்கிவிட்டுத் தப்பிக்கொள்ள, அவர்கள் அகப்பட்டதாமென்று தூண்டிலை விசம்பியெடுக்க அதுபோய் மடல்களுள்ள பாக்கு மரத்தின் செவந்ததோடுகளைப்பீறி அதனால் புறப்பட்ட தேனானது வழிந்து செ

ங்கொற் பசுந்தோட்டில் வந்து ஒடுகின்றதாம், இத்தகைய பாஞ்சாலதேசத்தார்க்கு அரசன், விஷம்பொருந்திய கதிர்வேலாயுதத்தகானே எறு. தொடக்கு=bait. தோடு=the case containing the flower or the nut. தோடு=rind, bark of smaller shrubs. This is the present Panchalankurichi in Tinnevelly District.

CXLIII. அன்னந் துயிலெழுப்ப வந்தாமரை வயலிற்
செந்நெ லரிவார் சினையாமை - வன்முதுகிற
கூனிருமபு தீட்டுங் குலக்கோசலை நாடன
றேனிருந்த சொல்லாயிச் சேய்.

Anvayam. தேன் இருந்த சொல்லாய் (Voc)=தமயந்தி, இச்சேயானவன் யாவன் எனனில் கோசலைநாடன். எப்படிப்பட்ட கோசலை? சனக்கூட்டங்களை யுடைய கோசலை. யாதுசெய்கின்ற குலம்? கூனிருமபு தீட்டுங்குலம். கூனிரும்பு=அரிவாள். எதின்மேல் தீட்டுகிறாகள்? வலியமுதுகினமேல். எதனமுதுகின்மேல்? சினைகொண்ட ஆமையின்முதுகிலே. யாவாதீட்டுகிறார்? அரிவார்= அறுப்பறுப்போர். (அரிவார் குலம் எனக்கூட்டுக) எதனை அரிவார்? செந்நெல்லினை. எங்கே? வயலில். என்னவயல்? தாமரைவயல். வயலில் தாமரை எது? (வந்து + ஆம் + அனா + வயலில்) அனைவயல் நீர் நிரம்பிய வளத்தினால் தாமரையு முண்டென்கிறபடி. எப்படிததாமரை? அந்தாமரை. யாது, யாதுசெய்ய? அன்னமானது அவர்களைத்தூக்கத்தினின் றெழும்புதலைச்செய்ய எறு. குலக் கோசலைக்கு நல்லகுலம் எனவுங்கொள்க. 1. அன்னம் Nom. to எழுப்ப 2. செந்நெல் governed by அரிவார. 3. அரிவார் Nom. to தீட்டும். 4. தீட்டும் governs கூனிரும்பு. 5 தீட்டுங்கோசலை=கோசலைதீட்டாதாதலால் வேற்று முடிபு (Indirect concord) 6. Outline கோசலைநாடன் இச்சேய்.

CXLIV. புண்டரிகந் தீயெரிவ போல்விரியப் பூம்புகைபோல்
வண்டிரியுந் தெண்ணீர் மகதயாகோ - னெண்டிசையிற்
போர்வேந்தர் கண்டறியாப் பொனனூவம் பின்னுடைய
தேர்வேநதன் கண்டாயிச் சேய்.

தாமரைகள், நெருப் பெரிவன போல்மலர, அதனிடைய வண்டுகள் நல்ல புகைபோல் கலைந்தெழும்பும் (இரியும்) தெளிந்த தண்ணீர் (வளம்பொருந்திய) மகததேசத்தார்க்குஅரசன்,(ஆகிய a connective particle of nouns in apposition) எட்டுத்திக்கிலும் போர்புரி அரசர்கள்கண்டறியாத பொன் அம்புறாத் தூணியை முதுகின் மேலுடைய தேர்வேந்தன் இந்தக்குமரன், கண்டாய் தமயந்தியென் றவாறு. 1. புண்டரிகம்விரிய வண்டு இரியும் தெண்ணீர். 2. இத் தெண்ணீர் பொருந்திய மகததேசம். 3. இத்தேயத்தார்க்கு அரசன், பொன் ஆவம்பின் உடைய தேர்வேந்தன். 4. எண்டிசையிற் போர்வேந்தர் கண்டறியாப் பொன்ஆவம். இவன் அவர்கள் முதுகைக் கண்டவன். அவர்கள் இவன்முதுகைக் கண்டறியார் என்றபடி. 5. கண்டாய்=an expletive of address between equals, exactly

like *do you see, do you perceive* in English. See 28th 29th Suts. எச்சவியல் Talkapiyam. கண்டிசென்று கொண்டிசென்று சென்றதென்று போயிற்றென்று அனறியனைத்தும் வினைவொடு சிவணி நின்றவழியசைக்குங் கிளவியெனப. கேட்டையென்று நின்றையெனறு காதத்தையென்று கண்டையென்று வென்றிவனைத்து முன்னிலையல்வழிமுன்னுறக்கிளந்த வியல்பாகுமமே.

CXLV. கூன்சங்கின் பிள்ளை கொடிபபவளக கோடிடறித்
தேனகழியில் வீழத திரைககரததால - வானகடலவந
தநதோ வெனவெடுக்கு மங்கநா டாளுடையான
செநதேன மொழியாயிச சேய.

கூன் = கோண்=கோணிய= curved, round ;—சஙகின்பிள்ளை=இளஞ் சங்குகள்=young-mother of pearls ;—கொடிப்பவளக்கோடு=கொடிப்பவளம் என்னப்பட்ட பவளததின்வரமபுக்கு (வரம்பிலே or துணடுக்கு, துணடிலே)= against a piece of coral called கொடிப்பவளம=*creeping corals* ;—இடறி= hitting, knocking ;—தேன்கழியில் = இனியகழி (கால்வாயில்) ககாலில்=in canal ;—வீழ=விழ=to fall (when it fell) ;—திரைககரததால=அலைகளைககளால்=by waves-hands ;—வான்கடல்வநது=பெரிய கடலானது சநதிதது ;—அந தோ=ஐயோ என ;—எடுக்கும = எந்தும ;—அஙகநாடு=அஙகநாட்டை ;—ஆளுடையான ஆளுதலையுடையோன ;—செநதேன மொழியாய= O Damayanti (voc) ;—இச்சேய=this youth. 1. கூனிய சஙகின (வளையின்) இளம்பிள்ளையானது கொடிப்பவழததின் கிளைசகு (சிறியதுணடிறகு or குவட்டிறகு=a little hill) இடறி (இடறுண்டு) வாசனை (பொருநதிய) கழிககாலில் விழுநதுவிட்டவுடனே பெரியகடல வநது தன் அலைககைகளினால் ஐயோ என்று எடுக்கின்ற (இவ்விநதையினையுடைய) அங்கநாட்டை ஆளுதலுடையான் (அரசன) இநதககுமரன், செநதேனமொழியாளே (பார) என. 2. அஙகநாடாளுடையான இச்சேய். 3. Under which sub-division will you put அநதோ? See 1st Sut. இடைச்சொல்லியல். 4. பிள்ளை nom to இடறி and விழ. 5. What does எடுக்கும் govern? Is it expressed? Supply please. 6. பிள்ளை இடறிவிழ கடல்வநது (அதை) எடுக்கும் அங்கநாடு.

CXLVI. வெள்வாளைக காளைமீன் மேதிக்குல மெழுபபக்
கள்வார்நத தாமரையின காடுழககிப - புளளோடு
வணடிரியச செலலு மணிநீரககலிஙகா கோன
றணடெரியற றோவேநதன் றன.

1. வெள்ளிய ஆண்வாளை மீனகளை எருமைககூட்டங்கள் (இறங்கி) க்கலைக்க (கலைததபோது=கலைத்ததனால்) தேன் வடிநதிருக்கின்ற தாமரையின் காட்டை (பிருதிவை or இடத்தை=தடாகத்தை) அதுகள் கலக்கிப்பறவைகளையும் வண்டுகளையும் ஓடும்படிச்செல்லுகின்ற அழகிய ஜலம் (பொருநதிய) கலிங்கதேசத்தார்க்கு அரசனதான், இநதத்தண்தெரியலதோ வேநதன். என. 1. மீன்கள்

மேதிக்குலத்தை யெழுப்ப மேதிகள் காடுழக்கிச்செல்லும் நீர்நாடன் என்றுங்கொள்க. 2. தண் + தெரியல் garlands + தேர்வேந்தன். 3. தண்மை=chillness. 4. மீன் nom to எழுப்ப governing மேதிக்குலம், or மேதிககுலம nom to எழுப்ப governing மீன். 5. எருமைகள தண்ணீரிற்கிடாதன, வாளைகள் எருமைகளைததீண்டின, அவைகள் மிரணடு எழுமபிஉழக்கிச்செல்லும அணிநீர்.

CXLVII. அஙகைவரி வளையா யாழித்திரை கொணாநத
செங்கண மகரத்தைத தீணடிபபோய்க - கஙகையிடைச்
சேல்குளிககுங் கேகயாகோன தெவ்வாடற கைவரைமேல்
வேல்குளிக்க நின்றானிவ வேந்து.

அம் + கை + வரி + வளை + ஆய்=Damayanti (voc) ;—ஆழி + திரை =waves of the sea ;—கொணர்ந்த= கொண்டுவந்த from கொணு or கொணா= that brought ;—செம + கண் + மகரத்தை= shark, crocodile ;—தீண்டிப் போய்=தொட்டுப்போய்=having touched ;—கஙகை + இடை =in Ganges ;—சேல்=Sel-fish ;—nom to தீண்டிப்போய் governing மகரதவை, and to குளிக்கும ;—குளிக்கும்=bathing, playing, arriving at ;—கேகயா கோன் = king of the Kekayas ;—தெவ் for தெவ்வர்=enemies ;— gen-understood ;— ஆடல் =வல்லமை=powerful ;—கை + வரை + மேல்=கைம்மலை மேல்=யானைகள் மேல் = on elephants ;—வேல் his lance ;—குளிக்க=to join, to penetrate ;—நின்றான் he who stood ie who thus proved his prowess ;—இவவேந்து this king. 1. Outline. இவ்வேந்து கேகயர் கோன. (தெவ்வாடற்) கைவரைமேல் வேல்குளிக்க நின்றவன. நின்றவனாகிய கேகயா கோன் இவ்வேந்து என்றுங் கூட்டுக. 2. Anvayam. அஙகைவரிவளையாயே, சமுததிரத்து அலையானது (முகத்துவாரததில்) கொண்டுவந்து விட்டசெஙகண் முதலையை கஙகையிலுள்ள சேலானது தொட்டுபபோய் (மீண்டும்) கஙகைககேவாநது விடுகின்ற (குளிககின்ற) கேகய தேசததாாக்கு அரசனாகிய, எதிரிகளது வலியயானைகளின் மேல் தன்வேலாயுதம் நுழைய (நுழையச்செய்து) நின்றவன இநத இராசன், பார் என்றவாறு. 3. குளி=bathe, penetrate. 4. வேநது - அரசு - இறை - அமைச்சு - தையல் - பேதை - These forms are *common themes* both to singular and plural terminations ; as, வேந்து common to வேந்தன் and வேந்தா &c. (உயர்திணையிற் பெயர்=see 43rd Sut. Ozhipiyal, Elakkanakottu)

CXLVIII. மாநீர் நெடுங்கயத்து வள்ளைக்கொடி மீது
தானேகு மனனந் தனிக்கயிறறிற - போநீள்
கழைக் கோதையரோயக்குங் காநதார நாடன்
மழைக்கோதை பானேயிம் மன்.

மகத்தாகிய ஜலம் நெடுகிய கயததில் (மடுவில் =அகன்றநீர் நிலையில்) வள்ளைக்கொடிமேல் தானே (ஒண்டியாய் ஒற்றைக்கொடிமேல்) நடந்து போகின்ற அன்னமானது, தனியொற்றைக்கயிற்றின்மேல் போகின்ற நீண்டகழைக்கூத்தாடு

ம் ஸ்திரீகளை, ஒக்கும்படியாகிய காந்தாரநாடன் இம் மன்னவன், மழைக்கோதைமா னே எறு. 1. மழை cool. 2. கோதை garlands. 3. மான் damsel. 4. கழை=மூங்கில்=bamboo ;—கழைக்கூத்து=bamboo dancing of jugglers. 5. கழைகோதை=a female of that tribe. Swan's walking upon Vallai creepers, resembles jugglers' dancing upon ropes. 5. King of Kandaram.

CXLIX. அங்கைநெடு வேற்க ணாயிழையாய் வாவியின்வாயச்
சங்கம் புடைபெயரத் தான்கலங்கிச் - செங்கமலப்
பூச்சிந்து நாட்டேறல் பொன்விளைக்குந் தண்பணைசூழ்
மாசிந்து நாட்டானிம் மன்.

அம் + கை or அகம் + கை = உள்ளங்கைபோல் நீண்டவேற்கண்களை வாய்ந்த ஆயிழையே (தமயந்தியே), தடாகங்களில் (வாய=இடவுருபு) சங்குகள் இடம்பெயர (அசைய = ஆட = நீஞ்ச) (தான்) அதனால் அசையுண்டு செந்தாமரைப்பூக்கள் சிந்தின புதுத்தேனானது பொன்னை விளைகின்ற குளிர்நீர் வயல்கள் சூழ்ந்த மகத்தாகிய சிந்து நாட்டான் இம்மன்னவன் எறு. 1. வாபீ=large tank ;—Sanscrit. 2. சங்கு=சங்கம் என சாரியை. சங்கஃ பங்கஃ முதலிய ஆரியத்து அகாராந்தப் புல்லிங்க சபதங்களும், சங்கம் பங்கம் என அவ்வந்தத்து நபும்ஸகங்களைப் போலவே தமிழில்வரும். கடஃ படஃ முதலிபுல்லிங்கமும் கடம்படம் என்றேகாணக. 3. புடைபெயர to move on step after step ;—hence, the arrangement of Verbs in mood tense number and person is called புடைபெயர்ச்சி in grammar. 4. வாபிகளிலே சங்குகள் புடைபெயர்ந்தன, அதனால் தாமரைகள் அசைந்தன, அதனால் தேன்சிந்தின, அதேன்பாய்ந்து வயல்களில் நெல்விளைகின்றன. 5. பொன் for நெல் is a classical metonymy = இலக்கிய ஆகுபெயர். 6. நாள்தேறல் =to-days' honey=new honey. 7. King of Scind. 8. Outline. பெயர - கலங்கிச சிந்தும் தேறல். தேறல் பொன்னை விளைக்கும் தணபணை. தண்பணைசூழ் சிந்துநாடு. நாட்டான் இம்மன். அங்கைநெடு வேற்கண் ஆயிழையாய்=*address.*

CL. ¶. காவலரைத் தன்சேடி காட்டக்கண் டீரிருவர்
தேவர் நளனுருவாய்ச் சென்றிருந்தார் - பூவரைந்த
மாசிலாப் பூங்குழலாள் மற்றவரைக் கண்டின
ளூசலா டுற்று ளுளம்.

Thus ended Sarasvatis' information to Damayanti. Now begins a difficulty. Indra Agni Varuna and Vayu in disguise like Nalan. See 93rd Stanza. இராசாக்களை யெல்லாம் தன் தாதியானவள் சுட்டிக்காட்டக்கண்டு, நாலுபேர் தேவர்கள் நளனுடைய ரூபமாகவே வந்திருந்தார்களே, அவர்களை (மற்று=அசை) பூக்கள் எழுதிய மறுவில்லாத மெல்லிய கூந்தலாள் கண்டு (Present=as she is casting her eyes) ஊசல் ஆட்டத்தை அடைந்தாள் உள்ளத்திலே, எறு. 1. Anvayam. பூவரைந்த மாசிலாப்பூங் குழலாள், தன்சேடியானவ

ள் காவலனைக் காட்டக்கண்டு, ஈரிருவர் தேவர்கள, நளனுருவமாய் வந்திருந்தோர் (மற்று) அவனைக் காண்கிற போது இஃதியார் இஃதியார என்று உள்ளத்தில சந்தே கங்கொண்டாள், எறு 2. ஊசல்=swing. ஆடு for ஆடல்=moving. ஊசலாட ல்=vascillating. 3. உள்ளம ஊசலாடுற்றாள். 4. வனைந்த=arranged, paint ed· 5. Outline. சேடிகாட்டக கண்டு சென்றிருந்தார் மற்றவனைக் காணுகின் று உள்ளம் ஊசலாடுறுள், பூங்குழலாள். 6 ஈரிருவர்=twice two=four=நா ல்வர். see. 39 - 41. உயிரீ and 31. பெயரி Nan. 7. ஆடுற்றுள் - ஆளுடையான்- போகட்ட and the like are classical idioms, opposed to colloquial idioms.

Scanning of Venba,metre. கா+வல+னைக்=நேர்நிரை நேர் = கூவிளங் காய். (1st Foot) தன்+சே+டி=நேர நேர் நேர்=தேமாங்காய் (2nd Foot) கா ட்+டக்+கண்=நேர் நேர் நேர்=தேமாங்காய் (3rd Foot) டீ+ரிரு+வர்=நேர் நிரைநேர்=கூவிளங்காய். (4th Foot. These four feet make one line ie the first line in Venba). 2. தே+வர்=நேர் நேர்=தேமா (1st Foot) நள+னுரு +வாய்+நிரை நிரைநேர=கருவிளங்காய் (2nd Foot சீர) சென்+றிருந்+தார் =நேர்நிரைநேர்=கூவிளங்காய் (3rd Foot சீர், These three feet make the second line of a வெண்பா) பூ+வனைந+த=நேர்நிரைநேர்=கூவிளங்காய் (Independent Foot=தனிச்சீர) 3. மா+சிலாப்=நேர்நிரை=கூவிளம் (1st foot) பூஙகுழலாள=நேரநிரைநேர= கூவிளங்காய் (2nd foot) மற் + றவ + னைக்+ நேர்நிரைநேர்=கூவிளங்காய் (3rd foot) கா+ணு + கின்=நேரநேர்நேர் = தே மாஙகாய (4th foot, These four form the 3rd line), றா+சலா=நேரநிரை=கூ விளம் (1st foot) டுற் + றா=நேரநேர்=தேமா (2nd foot) ளுளம்=மலா (3rd foot; These form the last line. The last foot of the last line is to be regulated by any one of these formulas viz நாள, மலர், காசு, and பிறப்பு.

CLI. பூணுக் கழகளிக்கும பொறறொடியைக் கண்டக்கா
ணுணுககு நெஞ்சுடைய நலவேநதா - நீணிலத்து
மறறேவர் வாராதார் வானவரும வநதிருநதாா
பொறறேர் நளனுருவாயப் போர்த்து.

Author's remark on these disguised individuals. பூணுக்கு + அழகு+ அளிக்கும் + பொன்றொடியை + கண்டக்கால்=If (they) see Damayanti who lends her beauty to beauty itself (பூண் jewel for beauty) நாணுக்கு + நெஞ்சு + உடைய + நல் + வேந்தர் = kings having any honour, sense, modesty ;—நீள் + நிலத்து for நிலத்தில்=in this world ;—or நீண்ட நிலத்தி லிருந்து from distant regions ;—மற்று=அசை ;—எவர் for எவர் (வகார விகு or நீட்டல் விகாரம்) who else ;—வாராதார் = வராதவர்கள் ;—வானவரும்= inhabitants of heaven too ;—வந்திருந்தார்=have come ;—பொன்தேர் (உடைய) ;—நளனுருவாய் = in Nala's shape, assuming his appearance ;— போர்த்து = கொண்டு = taking, assuming. 1· Anvayam (அழகுசெய்யும்)

ஆபரணத்துக்கும் அழகைக்கொடுக்கின்ற பொற்றொடித் தமயந்தியைக் கண்டால், நீணிலத்திலிருந்து, நாணத்துக்குரிய உள்ளத்தினை வாய்ந்த இராசாக்கள் யார்வரமாட்டார்கள்? பொற்றோ ளனுருவாய்ப் போந்து வானவரும் வந்திருந்தாரே. எறு. 2. நெஞ்சத்தில் நாணத்துக் குடைய நல்ல வேந்தரேனும் வாராதாரயார் என்றுவது, நாணத்துக்குத் தங்களநெஞ்சம் உடைந்துபோக வாராதார யாவர் என்றுவது கொள்க. 3 கண்டக்கால் = செயின் என்னெச்சம = Subjunctive mood, like பெற்றக்கால = பெற்றால் இறந்தகாலத் தோடு காலவரின் செயின என்னெச்சமாம. காணுங்கால என எதிர்காலத்தில் கால்வரில், பொழுதென் றாதத்மாய்ப் பெயரெச்சமாய் நிற்கும என்றறிக. ஈல் ஏல ஆல் கிறபின் (காணகிற்பின) &c. are subjunctive terminations. 4. Outline கண்டக்கால் வேந்தா வாவாராதார்;—வானவரும் போந்துவந்திருந்தார். 5. நாணுக்குநெஞ்சுடைமை உடைநடை யொழுக்கங்களும நகைகளும் உணவுகளும காலத்தால் எங்ஙனம தமிழ் நாட்டில பழமையும் பசுமையுங் கெட்டனவோ அங்ஙனமே பாடைகளும் தருமங்களும் வேற்றுருககொள்ளத்தலைப் படுகின்றன. நாணுககு நெஞ்சுடைமை இன்ன கருததெனறும் தருமத்தின்பால் இன்னதரும மென்றுந துணிதற்கிட மிலலே, தற்காலத தவ்வகைய தருமங்கட் கிலக்கியம வழக்கினகண காணக கிடையாமையி னென்க.

CLII. ¶ மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா னாகிற் கடிமாலை - யன்னந்தான்
சொன்னவனைச் சூட்ட வருளென்றாள் சூழ்விதியின்
மன்னவனைத் தன்மனத்தே வைத்து.

பிரகாசிக்கும் இரத்தினங்க ளிழைத்த மாலையினை யணிந்த வீமனுடைய பழுதுபடாத மரபில் (சாதியில — முறைமை கெடாத வமிசத்தில்) சிறப்புப்பொருந்திய கன்னிகையே நான் ஆனால், வாசனையுள்ள (இந்த) மாலையை, எனக்கு அன்னம்தான் சொன்னவனை நானசூட்ட அநுக்கிரகி யென்றாள், சூழ் (சூழ்) க்கொள்ளப்பட்ட ஊழினால் நியமமாகிய அந்த நளனைத தன்னுடைய உள்ளத்தில்நினைத்துக் கொண்டு—எறு. Anvayam. தாரவீமனுடைய (தன்) மின்னும் மெய்மரபிலே நான் செம்மைசேர் கன்னிகையே யாமானால், அன்னம்தான் சொன்னவனைக் கடிமாலைசூட்ட அருள்க (என்று) சூழ்விதியின் மன்னவனை (கடவளை) த்தன்மனத்தே வைத்துச் சொன்னாள். This is what she said in her heart within herself-a prayer. 1. என்றாள் சூழ்விதியின் மன்னவனைத் தன்மனத்தேவைத்து are authors' words. 2, அவள் Subject should be supplied. 3. அவள் மன்னவனை மனத்தேவைத்து என்றாள். 4. என்றாள்=she thought, meditated, prayed, as வருவாய் என்றிருந்தேன்=I expected (thought) you would come. 5. அன்னந்தான் சொன்னவனை=அன்னத்தாற சொல்லப்பட்டவனை. 6. நான் அதைச் சொல்லியிருக்கிறேன்=என்றால் அது சொல்லப்பட்டிருக்கிறது என்றாகும்.

CLIII. கண்ணிமைத்தலா லடிகள் காசினியிற் றோய்தலால்
வண்ணமலர் மாலை வாடுதலா - லெண்ணி
நறுந் தாமரைவிரும்பு நன்னுதலே யன்னு
ளறிந்தா ளண்ணறனை யாங்கு.

(நளனுக்கு) கண்கள் இமைக்கின்றமையாலும், காலடிகள் (பாதங்கள்=உள்ளங்கால்) பூமியிலே படிகிறபடியினாலும் (பாவுகின்றமையால்) நிறம்பொருந்திய பூமாலை வதங்கி யிருக்கிறபடியினாலும் நல்லதாமரைகள் ஆசிக்கும்படியான இலக்ஷுமியை ஒத்தவள் (இவற்றையெண்ணி) யோசித்து அங்கே (அவர்களுக்குள்ளே) அண்ணலை (தன்னை=நளனை) அறிந்து கொண்டாள். எறு. 1. Anvaym and Outline. நறுந்தாமரை விரும்பும நன்னுதலே அன்னாள் தமயந்தி, அங்கே (மற்றவர்களுக்குக் கண்கள் இமைக்காமல்) நளனுக்குக்கணணிமைத்தலாலும் அங்ஙனமே கால்கள தரையிற்படிதலாலும மாலையிற்பூக்கள் வதங்குதலாலும (தர்க்கித்து) ஊகித்து அண்ணறன்னை அறிந்தாள். 2. அன்னாள் அண்ணலை அறிந்தாள். 3. ஈறும் பாட்டில் காவலனை யென்றது நளனையேயெனக்கொள்ளும் பக்ஷத்திலும், ஏனையோரோடும் அவன்சமவரிசையில் இருந்தானென்றுவது இவர் இவர் இன்னுமொன்றுவது சொன்னாரில்லையாதலாலும் ஐவரை நால்வரொன்றதனாலும், கண்ணிமைத்தலால் முதலியவற்றை அவாய்நிலையால் மற்றவர்க்கின்மைகொள்க. நைடதம் விரிநூல் ஒன்றுண்மையானும் இக்கதை உலகத்திலெங்கும் பண்டிதபாமர சமரசமாய்த்தெரிந்துள்ளதுபற்றியும் இவ் அவாய்நிலைதானும் வெளியதாயிற்று, அல்லாக்கால் ஒருவாசொல்லித் தெரிதல்வேண்டும் என்றறிக.

CLIV. ¶. விண்ணரச ரெல்லாரும வெள்கிமனஞ் சுளிக்கக
கண்ணகன ஞாலங் களிகூர - மண்ணரசர்
வன்மாலைத் தம்மனத்தே சூடவய வேந்தைப
பொனமாலை சூட்டினாள் பொன.

தெய்வலோகத்து இராசாக்கள் அனைவரும் வெளுத்து (வெட்கி) அவர்கள் உள்ளம் கோபிக்க (சுளிக்க=சுளுக்குற) வும், இடமகன்ற உலகம் சந்தோஷிக்கவும், பூமியின் இராசாக்கள் வலிய மருளை (மயக்கத்தை—கலக்கததை) த்தங்கள்மனதிற் சூட்டிக்கொள்ளவும், பெருமைபொருந்திய நளனைத் தமயந்தி (பொன்) அழகிய (பொன்) மணமாலையைச் சூட்டினாள், எறு. 1. வெள்கிச்சுளிக்க - களிகூர - சூட மாலைசூட்டினாள் பொன். 2. செயினென்னெச்சம் ஒன்றுதவிர வினையெச்சங்கள் புடைபெயர்தருமம் ஒன்று விநா, மற்றெத்திறத்தும் கிரியாவிசேஷணத்தத்துவமுடைமைகாண்க. ஸ்வயம் கிரியாவிசேஷணங்கள் புடைபெயராமைக்கு ஆரியத்துட்புடை பெயர்ந்தனவாய்நின்றும் த்வாந்தங்களும் ல்யப்புக்களும் அவ்வயப்பெயரோ பெற்றுக்கரியாகின்றமையுமறிக. தமிழின்கண்ணும் எச்சப்பெயர் அப்பொருட்கொடை யேற்புடைமைக்கு, ஆயிரக்கணக்குப் பதினாயிரக் கணக்காய் வரும் ஆகவிகுதியும் ஆய்விகுதியும் பெயர்ப்பின்னர் நின்றுதம்முள் வேற்றுமை எட்டினையுமின்றிச் செயவென்னெச்சமும் செய்தென்னெச்சமும் உரி

த்தொடர்களே போன்று, எச்சப்பெயரை இட்டாண்டு வழிசெய்த முன்னோர், பயனிலைமுடிபென்று (extension of the Predicate=வினையின் குறைகளை நீட்டு, நிறையடா வென்ற) பின்னோர் கூற்றிற்கு ஒண்ணு லொண்ணுதாழ்ந்தாரலலர் என்க. அற்றேல் உரிததொடரும செயவெனன் னெசசமொழிந்த வினையிரண்டுவினை யெச்சததொடரும் ஒன்றேவென்னில, இதற்குமேலைப்பாட்டுக்களில் இடங்கண்டு விடுக்குதூஉம. ௱௭ம-பாட்டில் விழுஙகியோ புழுஙகியோகொளுநதியோ வென்னுஙகாரணப் பொருட்டுககள், புழுங்கியதனுல் கொளுநதியதனுல் முதலிய வேற்றுமைக இளவிகளோடொதது, காண்டலுங கேட்டலுமாகிய காலஙகண்ணிய மரபிற்செய்தென்னெச்சததுச் சாதிரிசியததை யொருஙகேகொணட எழுதலோடும் வருதலோடுமென்னும் செய்தெனனெச்சப் பொருட்டு வேற்றுமைக்கிளவிகளையும உரிதொடர்களே செயயுமென்றறிக. செய்யாட்டால் நானுருபமான அழகியகருத்துவாய்ந்த வினையெச்சஙகளையும் ஆகவீறுகளையும ஆயீறுகளையும் ஓயாது இடைவேறு, வேறுவினை, பிறகர்த்தாவெனக் கூறியதையே கூறி இலக்கண நயஙகளைக் கைநெகிழ்நது விடுவோமாவோம. இலக்கணக்கொததுக் காரரை ஆது நிகாக்குள்ளிட்டோமாசகொண்டு நடந்துவந்தானது வினைமைககண்ணன்றி வினையிடஙகளில எச்சததிற்கு வினைமைகொடா தொழிக.

CLV. திண்டோள் வயவேநதர் செந்தாமரை முகமபோய்
வெண டாமரையாய வெளுததவே - யொண்டாரைக்
கோமாலை வேலான குலமாலை வேறகணணுடை
பூமாலை பெறறிருநத போது.

திண்ணிய தோள்களது வலிமைய மன்னவருடைய செநதாமரையொததமலர்ந்த முகஙகள மாறி வெணடாமரைகளாய் வெடகினவாயின, ஒளளிய (shin-ing-bright) பூக்களைக்கோதத மாலை பொருநதிய வேலாயுததத நளனுனவன, அநேக மாலைகளணிநத வேறகணணுள தமயநதியினுடைய பூமாலையை (மணமாலையை) சூட்டப்பெற் றிருநதபொழுது எறு. 1. திண்டோளவயவேநதா, செநதாமரைமுகம், வெணடாமரை, குலமாலைவேற்கண்ணுள = இவைதொடாமொழிகள். ஈசானதேவர் கருஙகுதிரைக்காலைத தொடாமொழி யெனறது பெயரியல உம் சூத்திரத்ததேனும் இலககணகொத்து ஒழிபியல் - ௯௰ - சூததிரததுனாயிடை compounds, enlarged subjects, முதலியவறறைத் தேழுக 2. முகம வெண்டாமரையாய் வெளுததது, இதனகண் வெண்டாமரையாய என்னும வெளுததத்தின் விசேஷணததை வினையுரியென்றது வெண்டாமரை எழுவாயவேறு, ஆய்பயனிலை யென்பதற்கண், முகம் ஆய்வெளுத்ததென்னுஞ் சந்திகும வெணடாமரைக்கும் உள்ள வற்புடைமையினை, ஆய்கருப் பிரதிபதஞ சொலலிவிளக்காது முடிபுகூறுதல் சொன்னதையே சொலலியதாக முடியுமேயன்றி வேறில்லை யறிக. ஆதலும் என்னலும் இலககணப் பிரதிபதமேலாமைக்கு, என்னைத்துணைசொல்லெனகிற தலுக்கரும். அவர்தம்மை ஆராகவெளிப் படுததினுரொனகிற ஐரவததையர் மாருமேசாக்ஷி. ஆயும் ஆகவும் என்றும, கிரியாவிசேஷண வாய்பாடுகளாய், வெண்டாமரையென்ன வெண்டாமரைபோல வென்கிற சாதிரிசிய வாயபாட்டு

ப் பிரதிபதமாத்திரமே கொண்டுவருமென்க. இது பற்றியே என்ன to say, அன்ன to be that, ஆக to become that, இதநியாதிகள் இலக்கிய வுவம வுருபுகளாயினமையும் (particles of analogy in classical writings, not under grammar rules), இதுபற்றியே உருவகததுக்கும் உபமானததுககும் பொதுப்புலி விசேஷணக் கொற்றனே, வினைப்படுககு மிடத்துப் புலியாய்ப் பாய்நதான் புலியென்னப்பாய்ந்தான் புலிபோறபாய்நதானெனக் கிரியாவிசேஷணமாய்த திருமபினமையுமென்க. 3. குலம்=கூட்டம=அநேகம் *many*.

CLVI. மல்லன் மறுகின மடநாகுட னுகச்
செல்லு மழவிடைபோற செமமாநது - மெல்லியலாள்
பொனமாலை பெற்ற தோளோடும புறப்பட்டா
னனமாலை வேலா னளன.

வளம் பொருநதிய வீதியில் அழகிய இளங்காளைகள் கூடவர (உடன்கூடிவர) ச்செல்லுகினற இளரிஷபம்போல் இறுமாநது தமயந்தி யாளுடைய அழகிய மாலையைத் தரித்துக்கொண்ட தோளுடனே வெளிப் புறப்பட்டான் நல்லமாலையைப் பூண்டவேலாயுத மேநதும் நளன் எறு. 1. மல்லல் rich in variety, 2. மறுகு street. 3. மடநாகு pretty big calf. 4 உடனுக in company=உடன் ஆக=கூடவர. 5. மழவிடை youthful large bull. 6. செமமாநது proud, puffed up with pride. 7. Anvayam. நல்மாலை வேலான் நளன், மெல்லியலாளது பொன்மாலையைப் பெறற புசஙகளுடனே, மல்லல் மறுகில் இளமபெண் எருமை கூடவர நடக்கும் இளஙகடாவைப் போல இறுமாநது புறபபட்டான. 8. தோளோடும்=வினையுரி நீரமையின வேற்றுமைக கிளவி=prepositional adverb ;—ஒடுவுருபு தொகாதாதலின. கையடி தடியடி வாளவெட்டுமுதலிய வற்றுககிழமையை நோக்காவிடதது, அவற்றை வினைப்படுக்கும் போழ்து கையால் அடித்தான் தடியால் அடித்தான வாளால் வெட்டினுன் எனக்கருவியாய நின்றும் வினைக்கே யோம்பட்டமையின், வினையுரி நீரமையின் வேறறுமைக கிளவியென்றும், அதற்கு ஆஙகிலேயம prepositional phrase as adverb என்றுவது, prepositional phrase as complement to a noun என்றுவது கூறுது, prepositional adverb எனச்செந தமிழியற்கை சிவணக் கூறியதுமறிக. ஒடுவுரு பொன்றே தொல்காப் பியாக்கு மதஙகணடோம், ஊசியொடு குயின்றதூசும், He cut with a knife என்பதும, கிரியாவிசேஷணம தெற்றெனக் கிடக்கையால, ஆரியத்தியற்கை யடிமுதலமைவர வாமபாகவழக்கிய லணிந்த முத்தமித்துறையின்முறைபோகியோா அதனை அநாரிய மென்பதற்கோமபடாரென்க. விகற்பத்தின் முடித்தலுநதியால் குவ்வுருபு வினையோடு தொகசு வாராமையுமுணர்க. மேலைப் பாட்டுக்களில் மத்திரத்தாாமன் முதலியவறறுள, பாஞ்சாலர்க்குமன் னென்றும் கோமானுக்குமகன்என்றும் பெயரும் பெயருமாய் வருபவையொழிய, மற்றை வினையோடு காண்புழி, கந்தன் கொடுததான் என்றால கந்தனுக்குக் கொடுத்தா னென்றுகாது, செயப்படுபொருணீரமைக கிடம்பட்டுக் கிடக்கின்றமைகாண்க.

*Extracts from S. Samuel Pillai's Tamil Museum and Oriental Philology.*

CLVII. ¶ வேலைபெறு வமுதம வீமன திருமடந்தை
மாலைபெறு தகலும வானவர்கள் - வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கு
மிருங்கலியைக் கண்டா ரெதிர்.

திருப்பாற்கடல் பெருத அமிர்தமாகிய வீமனுடைய இலக்ஷமி (தமயந்தி) யினது மணமாலையினை (ச்சூட்டப்) பெற்றுக்கொள்ளாமல் அகன்று போகின்ற தேவர்கள், சமுத்திரம் போரிடுகிற கோஷம் (பொருந்திய) நீர (சூழ்ந்த) உலகத்தைக் கெடுவழியில் (துர்தசையில்) உட்படுத்தும பெரிய கலிபுருஷனைககண்டார்கள் எதிரே எறு. Anvayam. வேலைபெருத அமுதமாகிய வீமன் திருமடந்தை தன்மாலை பெருதகலும் வானவர்கள—இந்திரன் முதலிய நாலுபேரும்–தங்கள் எதிரில் (வழியில்) இருங் கலியைக் கண்டார்கள். எப்படிப்பட்ட இருங்கலியை? உலகத்தைப் புல்லிய நெறிக்குள் ஆககுகின்ற கலிபுருஷனை.

CLVIII. ஈங்குவர வென்னென றிமையவர்தங்கோன வினவத்
தீஙகுதரு கலியுஞ செப்பினான் - நீஙகள
விருப்பான வீமன திருமடந்தை யோடு
மிருப்பான வருகின்றேன யான்.

இங்கே வந்தது என்ன என்று தேவர்களுடைய கோமான் இந்திரன் கேட்கப்பொல்லாங்கு விளைக்குங் கலியானவனும் சொன்னான்; நீங்கள் ஆசைப்பட்ட வீமன் திருமடந்தை யுடனேகூட இருககும்படி (மணமாலை பெறவென்ற படி) வருகிறேன் நான்என்று, எறு. 1. என்றிடைசசொல் தொக்கது. 2. Anayaam. இமையவர் தஙகோன், (எதிர்கண்டவனை) இங்கேநீவருகிற காரியமென்ன என்று கேடக, அதறகுத்தீங்குதருங் கலியானவன் நீஙகள் விருபபான வீமன திருமடந்தையுடனே நான் இருககும்படியாக வருகிறேன் என்று செப்பினான் எறு. 1. கோன் Nom to வினவ=when he asked. 2. வரவு Nom to என்ன Interrogative Predicate. 3. கலி Nom to செப்பினான the Objective relation of which is, நீங்கள்——யான் என்பதை. என்றிடைசசொல்லுககுமுன் வருந்தொடரை, பின்வரும் வினைக்குசசெயப்படு பொருளாககும்பொருட்டு அதனை, என்பதையென்று இரண்டாவது விரிகக. 4. வருகின்றேன் செப்பினான=வருகின்றேன் என்று செப்பினான்=என்பதைச செப்பினான.

CLIX. மன்னவரில் வைவே லளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைககொண்டான - உன்னுடைய
வுள்ளக் கருத்தை யொழிதேகுதி யென்றான
வெள்ளைத் தனியானை வேந்து.

அரசர்களில் (partitive) கூர்வேல் கைக்கொண்ட நளமகாராசன்தான், சந்திரன் என்னும்படியான முகத்தையுடைய கன்னிகையின மணமாலையை ஒப்புக்கொண்டான்; உன்னுடைய இருதயத்தின எண்ணத்தை விட்டுவிட்டுப்போ என்றான் ஒப்பற்ற வெள்ளையானைக்கு அரசன் இந்திரன எறு. Anvayam. வை

ள்ளைத்தனியானை வேந்தன் இந்திரன், மற்றமன்னரைப்பார்க்கிலும் வைவேல் நளனையே இச்சித்து மதிவதனக்கன்னியானவள் மணமாலையை அவனுக்கே சூட்ட அவன் அதைக்கைக் கொண்டான், ஆதலால் நீ உன் உள்ளக்கருத்தை ஒழித்துச் செல் என்றான். 1. வேந்து என்றான். 2. மன்னவரில்—இடப்பொருளுருபேற்றும், எல்லைப் பொருளுங்கொள்க. உயர்வும் இழிவும் (degrees of comparison) வேற்றுமைப்பட்ட பெயர்க்கே தமிழில் என்றறிக. வடமொழிக்கும் ஆங்கிலேயத்துக்கும் பெயருரிவினையுரிகளில் தாரதம்மிய நிலை நிற்குமென்றுணர்க. தனிநிலை Positive, தரநிலை Comparative, தமநிலை Superlative. தரப்பிரத்தியயம், இருமையில் ஒருமையினது உயர்விழிவுகாட்டுவது. தமப்பிரத்தியயம், மும்மையில் or பன்மையில் ஒன்றை—உயர்வு இழிவுகாட்டுவது. அதனால் தாரதம்மிய நிலைப்பெயரோ, degrees of comparison என்பதற்குச்செல்லும். இதுதமிழில் நான்காவதிலும் ஐந்தாவதிலும் ஏழாவதிலும், எல்லைப்பொருள் இதற்கிதுபொருள் பிரித்துக் கூட்டுப்பொருள் இதுதியாதிப் பெயர்களால் விளங்கும். தரதமசம்பந்தம்—தாரதம்மியம்—எல்லாமன்னரைப் பார்க்கிலுமென்று கொள்ளவுங்கிடக்கின்றமைபற்றி.

CLX. விண்ணரசர் நிறக வெறிதே மணமாலை
மண்ணரசற் கீந்த மடமாதி - னெண்ணங்
கெடுக்கின்றேன மறறவடன கேள்வனுககுங் கிழ்மை
கொடுக்கின்றே னென்றான கொதித்து.

தேவர்கள் ஒழிய (தேவர்களைவிட்டு, தேவர்கள்போக என்கிறபடி) வாசனை இனிய மாலையை பூமிக்குரிய (மண்) இராசனுக்குக் கொடுத்த அழகியபெண்ணினுடைய எண்ணத்தை (ஆசையை) கெடுக்கிறேன் (மற்று) அவள நாயகனுக்கும் துர்தசையை (பீடையை) உண்டு பண்ணுகிறேன் பார் என்றான் பொங்கி (கோபித்து என்கிறபடி) எறு. 1. விண்ணரசா நிற்க—This is a fair வேறு, not adverb necessarily. 2. நிற்க—*without*. 3. வெறிதே from வெறுமை ;—a classical adverb, as வெறிதே ஈந்தாள்—வீணேகொடுதததாள். இலக்கியவினையுரிகளாவன, செய்யுளுக்கென்று வேறு பிரித்துக் கூறிய விதிகளிலடங்காமலும் நியதவிதியின் சாதிரிசியங் கொண்டும், - புலவர் இஷ்டமே (மகாகவிப்புரோக்தத்வாத் என்கிறபடி) வழங்கிய பங்கிகள். வினைமுற்றே வினையெச்சமாகும் விதிக்குள் இது நேரே அடங்காமலேதானே, என்னைப் பெரிதுபண்ணினான் உன்னைச்சிறிது செய்தான் அவனை அரிது கொண்டான் என வினையுரி நீர்மைக்கே இடம்பட்டமையின். அங்ஙனமே வாக்கியத்தின் கதையின் முன்னொட்டுப் பின்னொட்டுக்கண்டு தெளிவார்கள் என, ஆகுபெயர் நியதியிலும் உதாரணத்திலு முன்னரோ உள்ளிட்டுக்கொள்ளாத பொன் கண்முதலிய எந்தசசொல்லையாவது இவனுக்கு அவளுக்கு அதற்கு இட்டுப்புலவன் சொல்வன இலக்கிய ஆகுபெயராம். உம் : தமயந்திக்குப்பொன் என்றும் நளனுக்கு காளை என்றும் வருவன. ாடிம் - பாட்டில் சோர்குழலின் மீதே சொரிவதென், இதில் சோர்குழலை விரக

தாபப்படுகிற எந்தப்பெண்ணுக்குஞ் சொல்லலாமாயினும் இந்நூலிலே தமயந்திக் கானமையின் இஃது உம் இதுபோல் வனவும் என்றறிக. அவ்வாறே தம் தன் ஆறும்வேற்றுமைக்கும் அத்து ஐந்தற்கும் எழற்கும் இலக்கியங்களில் இடங்கண்டு கொள்ளப்படுகிறகால், classical genitive, &c., இலக்கியத்தாறுவது இலக்கியத் தைந்தாவது ஏழாவதெனனப்படும் ; சாரியையென்றுங் கொள்ளுதற்கு இதனால் பிரதிபந்தகமில்லை.

CLXI. வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கட
டூய்மையு மறறவனறன் றோள்வலியும - பூமா
னெடுங்கறபு மறறவறகு நினறுணாததுப போனு
னடுஙகொறற வுச்சிரததா னுங்கு.

சத்தியத்தையும் நீதிமலிவினையும் உள்ளத்தில் பரிசுத்தத்தையும் (மற்று) அவனுடைய புசபராக்கிரமத்தையும் தமயந்தியின் பெரியகற்பினையும் (இங்கே தமயந்திக்குப் பூமான் பெயர்க்கொடை புகழேந்தி இஷ்டம்) மற்று அசை - கலிபுருஷனுக்கு (அவற்கு) ச்சொல்லிப் பத்திரம் என்று போயினன் நீண்டவெற்றி பொருந்திய வச்சிராயுதனாகிய இந்திரன் எறு. (ஆங்கு அஙகே=அசை) 1. வச்சிரத்தான் போனான்= ஏகவாக்கியம் = simple sentence. இஃது ஏகவாக்கியமேனும் பயனிலைத் துணிபும் பயனிலை முடிபும்பெறுது வந்தமையின் பிராகிருதரூபம் Elementary form என்னப்படும். 2. கொற்றவச்சிரத்தான் நின்றுணாத்துப்போனான். இஃதும் ஏகவாக்கியமே, ஆனால், சம்ஸ்கிருதரூபம (Enlarged form). பிராகிருதரூபத்திலும் சமஸ்கிருதரூபததிலும் இனிக்கூறப்படும் விகிர்தரூபத்திலும் அவ்விகிர்த ரூபத்தில் வினையும் பினனவாகியததிலும், எழுவாய் பயனிலை இரணடே மூலசாமககிரி. எழுவாயை சம்ஸ்கிருத ரூபமாக்கினால் அதாவது அடையடுக்க வைத்தால், இந்த அடை ஒருசாமக்கிரியும், பயனிலையை சம்ஸ்கிருதரூபமாக்கினால் அதாவது உரிதொடர்ந்துவந்தால், அஃதொரு சாமக்கிரியும் ஆக நான்குசாமக்கிரிகளும் நால்வகைச் சொற்களாகிய பெயர் வினை அடை உரிகளேயாய்த் தமிழ்ப்பாடை அசேஷமும் விளங்குவது காண்க. இடைகள் அவற்றிற்குப் பொருததுக்களு மூட்டுக்களுமாய் நிற்றலின் எல்லாச்சொல்லும் பொருள் குறித்தனவே யென்றார்க்கு இடைமைப்பொருளே பொருள்=Relations.

¶ மூலசாமக்கிரிகளை (primary elements of a sentence) விரிசெய்தல் (expansion) தமிழ்நூலாசிரியர் உரையாசிரியர்கட்கு உடம்பாடன்று. குடிகொலை யென்பதில், குடியெழுவாயை குடிக்கிற வழக்கமென்றாவது குடியாகியபாபம் என்றாவது குடித்தற்றொழி லென்றாவது விரிக்கவேண்டா வென்பர், அங்ஙனம் விரித்தவிரியில் விளங்குஞ் சொற்றொடர்க்கு, சொன்முறை நின்றாங்கே இலக்கணஞ் சொல்லக்கிடக்கையால். அப்பால் கொலை பயனிலையை, கொலையென்றும், கொல்லுதலோடொக்கும், புத்தியைக் கெடுக்கும், உடம்பை அழிக்குமென் றிவ்வாறு விரிசெய்தலும் அற்றே. ¶ எழுவாய் கேவலமாய் நின்றால் தனி யெ

ழுவாய்=simple subject Ex. வச்சிரத்தான். கொற்றவச்சிரத்தான், இஃது கே வலமாய் நில்லாது கொற்றமென்னுங் குறியைக்கொண்டதால்=Enlarged Subject=அடையெழுவாய். அடைகள் (விசேஷணங்கள்) பலவிதம், இங்கே த மிழிலக்கணம் ஒப்பிசுந்த சிறப்பின் விளங்குகின்றது. 1. வினைத்தொகையடை Ex. கொல்யானை வேந்து. 2. பண்புதொகையடை Ex. நெடுங்கொற்ற வச் சிரத்தான். 3. உவமைத்தொகையடை Ex வேற்கணணுயிழையாள். அங்கை நெடுவேற்கண்ணு யிழையாள் என வருதாலோவென்னில் அடை யிலக்கணங் களைத்தொகை வகைவிரிசெய்யும்போது அஃது விளங்கும். தமிழில் பிராகிரு தருபமானது (அதாவது தனியெழுவாயைத் தனிப்பயனிலையை) சமஸ்கிருத ரு பமாங்கால் அதன் அழகும் சிறப்பும புலமையும் விரிவும் விளங்கவே, Morell என்கிற ஆங்கிலேய சாஸ்திரியர், தம் வாக்கியமார்க்க சித்தாந்தத்தை ஏற்படுத்தினுர் போலும். 4. உம்மையடை Ex. See. 137th Stanza. உமமைத் தொகைய டை = இருபெயரொட்டாம். இது complements to a noun என்னப்படும். பெயர்கள், பெயர்ப்பெயரும் ஒட்டுப்பெயரும என இருவகைப்படு மென்றார் நச் சினார்க்கினியராதலின். இனி பெட்டாணடின் பின்னர் எழுத இருக்கும் இன் னுருமொரேனுடைய வாககியசித்தாந்தங்களெல்லாம தமிழ் உரை நூல்களில் முன்னரோ வந்திருந்தும, வரிசைமுறை யின்மையின் விளங்காது கிடககின்றன. 5. அன்மொழித தொகையடை, மெலலோதியவள் மெல்லோதிக் கன்னியெனின் வேறறுமைத்தொகை யென்றுவது இருபெய ரொட்டென்றுவது செல்லும். இஃதுஉம் விளக்குழி விளக்குதூஉம். 6. எழுவாய்தொடர் = இதுதான் பி ராகிருதருபம். எழுவாய்த் தொடரடையெனில், இடைப்பிறவரலும வேறுவி னையும் பிறகர்த்தாவும் விகிர்தவிசேஷண (Subordinates) மும் என்றுகிப் பிரா கிருதக்கிரியைக்குக் கிரியாவிசேஷணமாய் வரும். இங்ஙனமே மற்றயவைக ளையுங் காண்க.

CLXII. செருக்கதிர்வேற கண்ணியுடன் றேர்வேநதன கூடி
யிருக்கத் தரியே னிவரைப - பிரிக்க
வுடனுக வென்று னுடனே பிறநத
விடநாக மனனுன் வெகுணடு.

போர்புரியுங் கிரணங்கள் பொருந்திய கண்ணுள் தமயந்தியுடனே, தேர்வேந் தன் நளனுனவன் சேர்ந்திருக்க நான் பொறுக்கமாட்டேன், இவ்விருவரையும் பி ரித்துவிட இப்போதே (உடனே) ஆகக்கடவது என்றுன், இப்போதே பிறந்த (உதித்த) விஷப்பாம்பை ஒத்தவன் கலிபுருஷன் கொதித்து எறு. 1. Anvayam உடனே பிறந்தவிஷநாக மன்னுன், செருக்கதிர்வேற் கண்ணியுடன் தேர்வேந் தன் கூடி இருக்கப்போறேன்யான் (என்று) வெகுண்டு இவரைப்பிரிக்க (பிரித் தல்) உடனே ஆகுக (என்றுன்) என்று சொன்னுன். 2. செருக்கு அதிர்வேல் என்றும்கொள்க. 3. தரியேன் I will not reat ie I cannot suffer, tolerate. 4. Outline. அன்னுன் வெகுண்டு என்றுன். நான் தரியேன். இவரைப்பிரிக் க உடன் ஆக. கண்ணியுடன் வேந்தன் கூடியிருக்கத்தரியேன்.

CLXIII. ¶ வெங் கதிரோன்றானும் விதர்ப்பன் றிருமடந்தை
மங்கல நாண்காண வருவானபோற - செங்குமுதம்
வாயடங்க மன்னறகும வஞ்சிக்கு நன்னெஞ்சிற்
றீயடங்க வேறினன் றோ.

The sun is rising far above the horizon as if he is advancing towards the marriage Pandal. சூரியனுங் கூட விதர்ப்பன குமாரத்தியினுடைய (மங்கலநாணை) தாலிக்கயிற்றைக் காணும்படி வருகிறவனைப்போல், செவ்வல்லிகள் வதங்கிப்போக, நளனுக்கும் தமயந்திக்கும் தங்கள் உள்ளங்களில் காமத்தீ அவிந்துபோகவும் தன் எழ்குதிரைத்தேர் மேலேறினன் எறு. Outline. செங்கதிரோன் தானும் வருவான்போல் தேர ஏறினன். செங்குமுதம் வாயடங்க தீ அடங்க ஏறினன்.

CLXIV. இன் னுயிர்க்குநேரோ யிளமுறுவலென் கின்ற
பொன் னழகைத்தாமே புதைப்பபோனபோன - மென்மலருஞ்
சூட்டினா சூடிக் துடிசேரிடை யானைப
பூட்டினா மினனிமைக்கும பூண்.

இனிய உயிருக்குஞ்சமானமோ இளமுறுவலென்கின்ற (தமயந்திப்) பெண்ணின் அழகைத்தாதியாகள் தாங்களே புதைத்து விடுகிறதுபோல் மெல்லிய புஷ்பங்களை அணிவித்தார்கள், அணிவித்து உடுக்கைபோலும இடுப்புவாய்ந்த அந்த தமயந்திக்கு கதிர்வீசும் ஆபரணங்களைப் பூட்டினார்கள் எறு.

CLXV. ¶ கணிமொழிந்த நாளிற கடிமணமுஞ் செய்தா
ரணிமொழிக்கு மண்ண லவறகும - பணிமொழியார்
குற்றேவல் செய்யக் கொழும்பொன னறைபுக்கார்
மற்றெவரு மொவ்வார மகிழ்ந்து.

Marriage ceremony now. கணிதன் (புரோகிதன் - சோதிடன்) சொன்ன சுபதினத்தில் கடிமணத்தையும (கலியாணத்தை = கைப்பற்றலை = பாணிகிரகணத்தை) செய்தார் = நிறைவேற்றினா, ஆருக்கென்றால், அணிமொழிக்கும் = தமயந்திக்கும் (இங்ஙனம் இந்த அன்மொழியும இலக்கிய அன்மொழி = தமயந்திக்குப்புகழ்ந்தி கொண்டாங்கே வேறுபுலவன் ஒருவன் வேதத்திற்கென்றும் மற்றொருவன் குறளுக்கென்றும் வேறொருவர் தாயதந்தையர் உரைக்கும் புத்திமதிகட்கென்றுமாகக் கிடக்கின்றமையின்) அண்ணல் நளனுக்கும் மணஞ்செய்தார். ஏவல்செய்யும் தாதிமார் சிறியகட்டளைகளை நிறைவேற்றும பொருட்டுச் செழும்பொன்மணவறையிற் பிரவேசித்தார்கள். எல்லாரும ஒத்துமகிழ்ந்தார் எறு. ஒவ்வார் என்பதற்கு இங்ஙனம் யாரும் மகிழ்ந்து அறியார் என்று கொள்ளக்கிடக்கின்றமைகாண்க. மற்றெவரும் ஒவ்வார் மகிழ்ந்து, இந்நடை ஆரியநடை. தமிழ்க்கு வியாக்கியாதருத்துவம் வரம்பின்றி ஒருவாபோனவழி ஒருவர்போகாமையின் தமிழது ஆரியபாவம் அவரவர் அநாரியபாவத்தையே கொண்டுபோயதுஉமறிக.

CLXVI. செந்திருவின் கொங்கையினுந் தேர்வேந்த னாகத்தும்
வந்துருவ வாசிலையைக் காலவளைத்து - வெந்தீயு
நஞ்சுந தொடுத்தனைய நாமமலா வாளி
யஞ்சுந தொடுத்தா னவன்.

செந்திருவின் = தமயந்தியின் கொங்கைமீதும் தேர்வேந்தன் நளனுடைய உடம்பு மீதும் (உள்ளத்துள்ளும்) பட்டு உருவும்படியாய் (நுழைய) நீண்டகருப் புவில்லினைக் கால்வளைத்து, வெவ்வியநெருப்பையும் விஷத்தையும கலந்தாற்போ லொத்த பயங்கரமான புஷ்பபாணங்கள் ஐந்தையும் எய்து விட்டான் அந்த மன் மதன். எறு. 1. கால்வளைத்தல்=to bend a bow. கால்=the two ends of a bow. 2. தொடுத்தனைய=இஃதுாஉம் ஆரியநடை. தொடுததல் என்றும் தொடுத்தது எ ன்றும் கடைக்குறையென்றும் இரண்டாவது தொகையென்றும் உடைய அனைய இரண்டும் குறிப்பு வினைகளுள் செய்ப்படுபொருள் குன்றாதனவென்றுங் கொள் ளுவார். ஆரிய நெறிக்கிது வேண்டா. வந்தப்புடைபெயா பதத்தோடெது பொ ருந்துமோ அப்பொருந்திய வழியே இலக்கணமாமென்க.

CLXVII. ஒருவ ருடலி லொருவ ரொதுங்கி
யிருவரொனுந தோறற மினறிப - பொருவெங்
கனறசேயும வேலானுங் காரிகையுஞ் சேர்ந்தார்
புனறகே புனலகலநதாற போன்று.

ஒருத்தருடைய உடம்பினுள்ளே ஒருத்தர்புகுந்து (நெருங்கி=இறுகியென்ற படி) தாஙகள் இரண்டுபேர் என்கிற பிரஜ்ஞையும் இல்லாமல்கொதிக்கின்ற(பொ ருகின்ற=fighting=warring) வெவ்விய நெருப்புக்கே (எயும்) சமானமாகும் வேலாயுத நளனும அழகியா (காரிகை) ளாகிய தமயந்தியும் தண்ணீரிலே தண்ணீ ரைக் கலநதாற்போலப் புணர்ந்தாரென்றவாறு. 1. Outline வேலானுங்காரிகை யும் ஒதுங்கி இனறி போன்று சேர்ந்தார். 2. புனற்கே புனல்=தருதிப்பொருட் டு=புனலொடுபுனல்=உடனிகழ்ச்சிப்பொருட்டு = புனலிற்புனல்=இடப்பொ ருள்=புனலும் புனலும்=ஐக்கியம் = புனலைப்புனல்=ஆக்கம், அடைவு, ஒப்பு or கூட்டுறவு. புனற்கே மணல்முதலியவேறு பொருள்கலந்தாற்போலென்றால் இ ருவரொனுந் தோற்றமினறி யென்பதோடு முரணுவதறிக.

CLXVIII. குழைமேலுங் கோமா னுயிர்மேலுங் கூந்தன
மழைமேலும் வாளோடி மீள - விழைமேலே
யல்லோடும வேலா னகலத்தொடும் பொருதாள்
வல்லோடுங் கொங்கை மடுத்து.

குண்டலங்கள் முதலிய ஆபரணங்கள் மேலும் (அவற்றை நோக்கியென்கிற படி) கணவனுடைய பிராணன்மேலும் (முகத்தை மூக்கையுற்று நோக்கினரெ ன்றபடி) கூந்தலாகிய கருமையழகின்மேலும் (மேகம்போற்கரிய அளகத்தின்மீது) வாள்போலுங்கண்கள் (கண்வாள்) ஓடிமீள=ஓடிவர = கண்டுகண்டு ;—நூலின்

மேலே மதிலேறும் நளனுடைய மார்பினுடன் போர்செய்தாள், சூதாகேருவிதோ ற்றேடுகின்ற கொங்கையை இட்டு=கலந்து எறு. N. B நூலேணிமேல் அலங்க மேறுதல் அரசர்க்குரியது - வேலாளெடு முடியின் ஒருகையில் வேலும் ஒருகை யால் நூலேயும் பற்றி யேறுதலென்ருகும. அகலத்தொடு முடியின் இருகையுந்து ணேசெய்யாது மார்புசார்பு கொண்டேறுதல். For an explanation of this subject, see Eiyanaridanar's Venba Malai, Tandavaraya Mudaliyars' Edition, under நொச்சி காஞ்சி உழிஞை தும்பை &c., (ஐயனரிதனர் வெண்பாமாலை)

CLXIX. வீரனகலச் செறுவின் மீதோடிக் குங்குமத்தி
னீர விளவண்ட லிட்டதே - நேர்பொருதக்
காராரு மெலோதிக் கனனியவள் காதலென்னு
மோராறு பாய வுடைந்து.

வீரனுகிய நளனுடைய மார்பென்கிற சிறுவயலில் மேலோடி (overwhelmed =overflowed) குங்குமத்தின் குளிர்ந்த இளவண்டல் (இளகிய குழம்பு) ஆக இட்டது (பாய்ந்தது=பரந்தது=நின்றது) ;—எது இளவண்ட லிட்டதென்ருல் (ஆக்கத்தொகை=factitive nominative ;—தமிழில் ஆக்கக்குறிப்பெழுவாயும வரும், ஆகக்குறிப்புச் செயப்படுபொருளும் வரும். இதுமுன்னர்காட்டியாயிறறு) நோ நேர் போரிட (கைகலந்து சண்டைசெய்யவெனகிறபடி = போரிட்டமையால்) மேகம் குடிகொண்ட மெல்லிய தலைமயிருடைய தமயந்தி (அவள் = classical genitive) யினுடைய அன்பென்கிற ஒப்பில்லாத (பெரிய) நதியானது உடைந்துபாய (அது) இளவண்ட லிட்டது. எறு.

CLXX. கொங்கை முகங்குழையக் கூநதன்மழை குலேயச்
செங்கயறக ணேடிச செவிதடவ - வங்கை
வளை பூசலாட மடநதையுடன சேர்நதான
விளைபூசற கொல்யானை வேநது.

முலைமுகங்கள் குழையும்படியாயும் கூந்தல்மேகம் கலைந்து அவிழும்படியாயும் செவ்விய சேல்க்கண்கள் செவியைத் தடவும்படியாயும் கையின்கண்வளையல்கள் கலகலென்று பெரிதொலிக்கவுமாக தமயந்தியுடன் கூடிஞன், யாவன் என்னில், விளைந்தபோரில் மேல்விழுந்து கொல்லுகின்ற யானையாகிய நளன் எறு. 1. The student is hereby referred to திருஷ்டாந்த சங்கிரகம் or உபமானசங்கிரகம் an epitome of *what* is compared to *what*, in which he will find every aid on the subject of *similarity comparison resemblance* &c., of *eyes nose hands feet face* and of various other items. 2. In the construction of Venba metre, the syntactical context of the last word of the stanza is the most difficult subject. Do not sing but read as you do in English prose. The last word above referred to may be an attribute to some distant word, or a modifying phrase to a remote verb. It may be a noun-subject to a noun predicate to be supplied, or might agree just with its

penultimate word. To ascertain and adjust the position, in the Anvayam order, of a *Venba Final, the poets' tiger*=terror (புலவர்க்கு வெண்பாபுலி) is a mark of high scholarship. Disregard no expletive when it ends a Venba. It has always a *significancy* though not a *definite signification.* See Senavarayars' Scolium on எல்லாச்சொல்லும் பொருள்குறித்தனவே, you will find an expletive (ஆங்கு ஈங்கு and the like) to be the very extension and completion of the sentiment itself. An orthodox Tamil scholar =அசையென்று தள்ளாதிசை யென்பான் பண்டிதன். 3. Past Participles ending in உ, are generally Venba Finals. When they modify the main verb, it is comparatively easy to fix its position in the Anvayam Order, but if it is purposely employed by the author to be the modifying term of a subordinate clause, you *must* think. 4. There is no classical Dictionary in Tamil. The mythological references are to be gathered from கிருஷ்ணன்தூது=Krishnas' Embassy, பாரதவசனம்=Prose-Bharata, நளச்சக்கிரவர்த்தி சதை=Prose-History of Nalan, and Bhagavatam. 5. Venba is also called முதற்பா. 6. Apply Morells' method in analysing Tamil sentences and bring Nannul terms in parsing after his mode, you will certainly find that Morells' is to Nannul what Nannul is to Tolkapiyam. 7. Try to write out a catechism of every Stanza.

**CLXXI.** தைய லளிர்க்கரங்க டன்றடக்கையாற் பற்றி
வையமுழுது மகிழ் தூங்கத் - தூய்ய
மணந்தான் முடித்ததற்பின் வாணுதலுந் தானும்
புணர்ந்தார் நெடுங்காலம் புக்கு.

தையலினுடைய தளிர்போற்கைகளைத் தன்னுடைய விசாலமான கையால் பிடித்து உலகமெங்கும் களிப்பு விளங்கசுத்தூய்மைய விவாகம் நிறைவேறிய பிற்பாடு வாணுதலும (பெண்ணும்) தானும் (நளனும்) கூடிவாழ்ந்தார் வெகுகாலம் இருந்து என்று. 1. What is said about கரங்கள் and கையால் in this Stanza? Why plural in one instance and singular in the other? பற்றி= having held is a past participle, but what would it be if expressed as a noun? Explain the principal part of Hindu Marriage in full.

மேலைவெண்பாட்டுக்களிலும் பதச்சேதங்களிலும் ஆங்கிலேயப் பிரதி பதங்களிலும் வசனரூபங்களிலும் பிராகிருத ரூபங்களிலும் அந்வய நடைகளிலும் இலக்கண விசேஷங்களிலும் ஆஸ்வாசவரிசையிலும் எழுத்துப்பிழை முனபின் முறை பிறழ்வுமுதலிய குறைபாடுகளை மாணுக்கர் நோக்காது காரியத்தையே நோக்கி ஒப்புக்கொள்ளக்கடவர். ஆஸ்வாச வரிசையில் சிலபலபிழைகள கண்டன. அங்ஙனமே இயல்பேகாண் என்பதற்கு இயல்போ எனக்காணப் படுகின்றதறிக. மற்றோரிடத்தில் புடைபெயர்ந்த வினைப்பதங்களுக்குப் புடைபெயர் பகுதிகள

னைக் கிடக்கின்றது. சிலேஷார்த்தமாக (slesha=two fold construction)க் கொள்ளக் கூடிய இடங்களில் தனித்து உரையாதும் விட்டோம். எல்லாப்பாட் டுக்கும் எல்லா வகையாலும் உரைத்தோமில்லையேனும் உரைத்தவை கொண்டு ம ற்றவற்றிறகும் உணர்க. கலிதொடர்காண்டத்துள் பூக்கொய்தல் புனலாடல் பொ ழிலுறைத லாதியா யவற்றுள்ளும் விரித்துரையாது கேட்டறிகவென்றோம். பாட் டிற்குச் சொல்லர்த்தமும எழுவாய் முதலியமுடிபுகளும் பிராதம்மியமாதலின் அ வற்றை இந்நூலாற்கணடு கொண்ட பின்னாக்காலம் அதிகமே இருக்கும், அதற் குள்ளே கதைகளையும் கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் விசாரித்துக்கொள் க. ஆசானுரைதத தமைவரக்கொளினுங்காற் கூறல்லது பற்றலனுகும் என்றூராத லால் ; 1. ஒவ்வொருவெண்பாவிலும் உள்ளதொகை தொடர்களை ஒருபத்திரத்தில் இருபத்தி பிரித்து ஒருபத்தியில் நன்னூற் படிக்கு இலக்கணமெழுதுக. மறுபத்தி யில் ஆஙகிலேயப்படிக்கு parsing எழுதுக. 2. ஒருதலையானே செய்யுட்சொற்களா ய்க காண்பவற்றை யெல்லாம் வேறே எழுதி அவற்ற தர்த்தங்களையும் கேட்டு அக ராதிகளிற் பார்த்துங்கொள்க. 3. ஒவ்வொரு வெண்பாவினையும் அதனுட் காணு ம் பொருளைச்சங்கதியை வினவும் விடையுமாம்படி எழுதுக. 4. பாட்டிற்சொல் லின் கிடக்கையே அகத்து நினைவுநடை யாதலால் அப்படிக்கே ஆஙகிலேயப்பி ரதிபதமொழி பெயர்ப்புச்செய்து (paraphrastic translation) செய்து தாரதம்மிய வைஷம்மியஙகளைக் கண்டுகொள்க.

---

# THE
# SECOND CANTO
# கலிதொடர்காண்டம்.

## INVOCATION.

CLXXII. ¶. செக்கர் நெடுவானிற திங்கணிலாத தளும்பி
யுககதெனச் சடைமே லும்பாநீர் - மிககொழுகும்
வெள்ளத்தான வெள்ளி நெடுங்கிரியான மெய்யனப
ருள்ளததா னெங்கட் குளன.

செக்கர் red. நெடுவான் long space, infinite. திங்கள் நிலா mcon's beams. தளும்பி = தளம்பி overflowing. உக்கதென=உகுந்ததுபோல் showered. சடைமேல் upon, over the tresses. உம்பாநீர் = waters of the firmament. மிகக ஒழுகும் falling abundantly. வெள்ளத்தான்= கஙகையான் Ganges - bearing. வெள்ளி (நெடும்) கிரியான் residing at the silvery-kailas. மெய்யன்பர் உள்ளத்தான் dwelling in the hearts of the truly devoted. எங்களுக்கு உளன் he is to us=we have him.

செந்நிறத்த நெடிய ஆகாசத்தில் சந்திரனுடைய சந்திரிகையானது தளம்பிக் கொட்டுண்டது என்னும்படியாகத்தனது சடாமகுடத்தின்மீது ஆகாச கங்கை

யானது மிகவும் பாய்கின்ற வெள்ளத்தாராகிய வெண் பொன்மயமான கைலாசத் தவராகிய மெய் அன்பர்களுடைய ஹிருதய கமலத்தே வாசஞ்செய்யும் பரமேசுவர ர் எங்களுக்கு இருக்கின்றார் எறு.

CLXXIII. தவளத் தனிக்குடையின் வெண்ணிழலுந் தையல்
குவளைக் கருநிழலுங் கொள்ளப - பவளக்
கொழுந்தேறிச செந்நெற குலைசாய்கக நாடன்
செழுந் தேரிலேறினை சென்று.

தவளம் white. தனிக்குடை superior, unequalled, royal umbrella; genitive classical, for, இன் is a சாரியை. வெள்நிழலும் white shade, for *grace* upon, *favour* to, *love* of his subjects. தையல் for தையலுடைய (Damayantis'. குவளைக்கருநிழலும் and the blue shade (agreeable, maternal affection). கொள்ள to take for, to cast upon. பவளக்கொழுந்து tender coral creeper. ஏறி ascending for *creeping upward*. செம்நெல்குலை bunches of rich ears of red paddy (acc). சாய்க்கும் bending for yielding, producing (தள்ளும்). நாடன் for நிடதன் Nalan, (subject.) செழு (மை) தேரில் in his royal, state carriage. ஏறினன் mounted, got up. சென்று = போய் = going. 1 வெள்ளிய வீறியகுடையின் வெண்மைய நிழலும் தமயந்தியின் நீலமலரனைய கண்களது பச்சைநிழலும்பட (பட்டதனால் = எறிக்க) பவளகொழுந்துகளான வை (Sub nom to சாய்க்கும் governing நெற்குலை) படர்ந்தேறி செந்நெல்க் குலைகளைத்தள்ளும் நிடதநாடன் நளன் (Principal subject பிராகிருத கருததா) செழுமையான தேர்மேல் ஏறினன் போய் எறு. 2. Anvayam. ஒப்பில்லாத தவளச்சத்திரத்தி னுடைய தாவள்ளியமான தூயசந்திரிகையும் தையலாகிய தமயந்தியின் நீலோற்பல நேத்திரத்தின் அழகிய நிழலும்பட்டுப் பவழக்கொழுந்து படர்ந்து நெல்லை விளைவிக்கும் நிடதநாடன் போய்த்தேரில் ஏறினன். 3. தவளத்தனிக்குடை = இருபண்பு. தனிக்குடை ஒருபண்பு என்க. செருக் கதிர்வேற்கண்ணி, வெள்ளைத் தனியானை வேந்து, வெள்வாளைக் காளைமீன், மீனக்கொடியாடை வையமெல்லாம், இவைபலபண்பு. அருங்கேழ்மணி, மனறலந்தார்மன்னர் இருபண்பு. பண்புத் தொகைகள் செஞ்சொற்பண் பென்றும், வினைதொகை விரவிய பண்பென்றும் இருவகையிற் கூர்க. தமிழ்நடையையும் ஆங்கிலேய நடையையும் தாரதம்மிய வைஷம்மிய விசாரம்பண்ணும் (Comparative Syntax) சந்நூலில் இவற்றையு மிவைபோல்வனயாவற்றையும் பரப்பிக்கூறுவாம், வெண்பாவாதலிற் செஞ்சொற் பலபண்புகள் அநேகமில்லை யாதலால்.

CLXXIV. மங்கையர்கள் வாச மலர்கொய்வான் வநதடையப்
பொங்கி யெழுந்த பொறிவண்டு - கொங்கோ
டெதிர்கொண் டணைவனபோ லேங்குவன முத்தின்
கதிர்கொண்ட பூண்முலையாய் காண்.

மங்கையர்கள் young ladies. வாசமலர் (ஒருபண்பு=one adjective quali-

fying a noun) = வாசமலரை. கொய்வான்=பறிக்க to pluck. வந்துஅடைய=வந்துசேர=அணுக=to approach, as they came near. பொங்கி alarmed or hissing. எழுந்த rising. பொறிவண்டு spotted bees. செங்கோடு=தேனுடனே with honey. எதிர்கொண்டு meeting, advancing towards one's presence by way of honouring him. அணைவனபோல் as if embracing. ஏங்குவன they sing, noise, hum, hymn=இரைகின்றன. முத்தின் pearl. கதிர் ray. (acc. gov. by) கொண்ட having, emitting. பூண் jewels. முலையாய் (voc). காண் see. 1. முத்தின் கதிர்கொண்ட பூண் முலையாய்=Vocative combination=விசேஷணவிளி. முலையாய் காண் = விளித்தொடர். 2. Anvayam. முத்தின்கதிர்கொண்ட பூண்முலையோய், ஸ்திரீகள் வாசனையுள்ள புஷ்பங்களைப் பறிக்கும்படி வந்து அணுக (உடனே) பறந்தெழும்பின புள்ளிவண்டுகள் தேனுடனே கூடவே எதிர்கொண்டு வருவனபோல் இரைகின்றனபார் 3. பொறிவண்டு அணைவனபோல் ஏங்குவன = ஏங்குவன வற்றைப்பார்; ஏங்குகின்றனவேபார். 4. மங்கையர்கள் nom to கொய்வான் and வந்தடைய. 5. பொங்கியெழுந்த பொறிவண்டு = enlarged subject= அடையெழுவாய். (எச்சத்தொடரடை = Participial Adjectival attribute ) 6. ஏங்குவன Predicate. 7. வண்டு Singular for plural, being a பால்பகா அஃறிணைப்பெயர். 8. Nalan and Damayanti conversing as they were driving homewords to Nidata. The subject of conversation is பூக்கொய்தல் flower-gathering and புனல்விளையாட்டு playing in water=bathing.

CLXXV. பாவையர் கைதீண்டப பணியாதார் யாவரே
பூவையா கைதீண்டலுமப் பூங்கொமபு - மேவியவர்
பொன்னடியிற் ருழநதனவே பூங்குழலாய் காணென்ருன்
மினனெடுவேற கையான விரைநது.

பாவையர் females. கை. தீண்ட to touch தொட. பணியாதார்=தணியாதார்=வணங்காதார்=those who do not oblige=எதிர்மறை வினையாலணையும்பெயர், யாவரே=யார் + ஏ=who are there? no one. (An Interrogative Sentence) பூவையர் ladies (Gen) கை. தீண்டலும் no sooner they touched=தீண்டினவுடனே = தீண்டின மாத்திரத்தே = தீண்டினதும் = தீண்டினதுதான் (காலங்கண்ணிய மரபிறசெயவெனனெச்சம்) பூங்கொம்பு flower-twigs (Plu) மேவி=பொருந்தி for வளைந்து bending. அவர்பொன்னடியில்=அவர்களுடைய அழகிய பாதத்தில் at their feet. தாழ்ந்தனவே =விழுந்தன + ஏ fell. பூங்குழலாய்=*address* or *vocative*= O Damayanti. காண் look at என்ருன்= thus said (he) agreeing with மின்நெடுவேல் கையான் = glittering-long-lance-handed - (Nalan). விரைந்து quickly. 1. What does விரைந்து qualify? Answer. காண், not என்ருன். 2. ஸ்திரீகளுடைய கைப்பட்டால் இசையாதவர்கள் யார் இருக்கிருர் (உண்டு). பூங்குழலாய்! பூவையரு (mina bird resembling) டைய கரங்கள் தொட்டமாத்திரத்தில் புஷ்பச்செடியின் கிளைகள்

அவர்களுடைய காலடியில் தாழ்ந்து விழுந்தன, சீக்கிரம்பார் (என்று) மின்னெடு வேல்க்கையான் சொன்னான். 3. This Canto will begin from the 32nd to state about the misery into which the royal couple were forced by Kali, but up to the 30th stanza, their(வழ்வு= இல்லறம்) happy life is described.

CLXXVI. மங்கை யொருத்தி மலர்கொய்வாள வாண்முகத்தைப்
பங்கயமென் றெண்ணிப் படிவண் டைச் - செங்கையாற்
காத்தா ளக்கைமலரைக் காந்தளெனப் பாய்தலுமே
வேர்த்தாளைக் காணென்றான் வேந்து.

மங்கை ஒருத்தி a certain lady. மலர் கொய்வாள் = பூப்பறிக்கிறவளுடைய (in apposition with the foregoing word)=of a flower-gatherer. வாண்முகத்தை fair face (red face = shing countenance). பங்கயம் என்று எண்ணி thinking (taking it for) that it is a lotus. படி=படிகிற=வந்து உட்கார்ந்த that rested, வண்டை bee, governed by காத்தாள். செங்கையால் by her red (*rosy* perhaps) hand. காத்தாள்=அணைத்தாள் embraced or தட்டினாள் prevented, agrees with மங்கையொருத்தி. அக்கைம்மலரை=அந்தஅவளுடைய கையாகியபூவை=her hand, காந்தள் என taking it for கார்த்திகைப்பூ (kantal or kartikai Pu.) பாய்தலுமே பாய்ந்தவுடனே=as soon as darted, struck, rushed upon. வேர்த்தாளை=பயந்தவளை her who feared, was frightened (உயர்திணைப் பெண்பால் வினையாலணையும் பெயர்) gov. by காண் = look at. என்றான் வேந்து. 1. பூக்கொய்வாளாகிய ஒருமங்கையின் தெள்ளிய முகத்தை தாமரையென்று நினைத்து அதனிடத்தில் அமரவந்த வண்டினை அவள் தன் செங்கையினால் தடுத்தாள், அவளது அந்தக்கையாகிய பூவைக் காந்தளென்கிற பூவென்று சீறினவுடனே அதற்குப் பயந்தவளைப்பார் என்றான் வேந்தன் (நளன்) எறு. 2. வாள்=வால் white, bright. 3. படிto rest, to sit, to light upon like birds. 4. வேர்த்தல் to sweat, perspire.

CLXXVII. புல்லும் வரிவண் டைக் கண்டு புனமயில் போற
செல்லு மடந்தை சிலம்பவித்து - மெல்லப்போ
யம்மலரைக் கொய்யா தருந்தளிரைக் கொய்வாளைச்
செம்மலரிற் றேனே தெளி.

புல்லும் = புணரும் ;—வரி lines, strokes. வண்டைக் கண்டு. புனமயில் போல் like a native peacock. செல்லும் going (Fut. Rel. Part) மடந்தை= பெண் lady. சிலம்பு=நூபுரம், நூபுரத்தைஅவித்து=stopping, silencing ஒலிக் கொட்டாமற் செய்து. மெல்லப்போய்=மெதுவாய்ச் சென்று. அம்மலரைக் கொய்யாது=அந்தப்பூவைப் பறிக்காமல். அருந்தளிரைக் கொய்வாளை=பக்கத்தில் இருக்கும் அரியதளிரைக் கிள்ளுகிறவளை. செம்மலரில் தேனே O sweet honey= Domayanti. தெளி=அறி=பார் see. Anvayam. செம்மலரில் தேனே=தமயந்தியே (ஒரு செடியில்) புணர்ந்துகொண்டிருக்கிற ஒரு வரிவண்டைக் கண்டு

காட்டுமயில்போல் செல்லுகிற ஒருமடந்தையானவள் தன் பாதகொலிசு சத்தஞ் செய்யாது அதனை ஒய்வித்து மெள்ளப்போய் அந்த வண்டு இருக்கின்ற அந் தப்பூவைக் கிள்ளாமல் சிறிய துளினை (மாத்திரம்) கிள்ளுகிறவளைத் தெளிந் துபார் எ-று.

CLXXVIII. கொய்த மலரைக் கொடுங்கையி ஞலணைதது
மொய்குழலிற் சூட்டுவான் முன்வநது - தையலாள்
பாதார விநததே சூட்டினன பாவையிடைக
காதார மில்லா தறிந்து.

கிள்ளினபூவைக் கொடுங்கையினுல் அணைத்துக் கொண்டுவந்து முன்கட் டிச் சொருகியிருக்குங் கொண்டையில் வைக்க எதிரில்வந்து தையலாளது கா லில் (கால்த்தாமரையில்) தரித்தான், யாவன் என்னில், பொம்மைபோல்வாள் இடுப்பிற்கு ஆதாரமில்லாமையைக் கண்டு அவள் கணவனுனவன் எ-று. Anvayam. கணவனொருவன் தான் கொய்தமலரைக் கையில் அணைத்து தன் தையலது மொய்குழலில் சூட்டும்படி முன்வந்து நின்று, அவளது இடைக்கு ஆதாரமில்லை யே யென்று கண்டு அதனை அவள் பாதாரவிந்தத்தில் சூட்டினன் எ-று. தலையிற் சூட்டினல், இடுப்பு ஒடியுமே யென்றபடி.

CLXXIX. ஏற்ற முலையார்க் கிளைஞரிடும் புலவித்
தோற்ற வமளியெனத் தோற்றுமாற் - காற்றசைப்ப
வுக்க மலரோ டுகுத்தவளை முத்தமே
யெக்கர் மணன்மே லிசைந்து.

ஏற்ற loaded ஏறிய. முலையார்க்கு to ladies பெண்களுக்கு. இளைஞர் youths. இடும் causing உண்டாக்கும். புலவி=ஊடல = பிணக்கு a slight offence. தோற்ற for தோற்றம் = *risen*, அமளி bed. என *for* or *like*. தோற் றும் appears. ஆல் (particle). காற்று அசைப்ப wind blowing. உக்க for உகுந்த shed, fallen. மலரோடு=பூக்களோடு together with flowers. உகுத்த= உகுவித்த caused to fall. வளை of chanks. முத்தமே pearls. எக்கர் emi- nence, sandhill. மணல்மேல் upon sand. இசைந்து being naturally arranged. இளம் பெண்களுக்கு இளைஞர் உண்டாக்கின பிணக்கத்தின் உருவமான படுக் கையாமென்று காண்கின்றது, யாதென்னில், காற்றினுல் அசையுண்டு உதிர்ந்த பூக்களோடேகூடச் சங்கின் முத்துக்களும் உயர்ந்தமணல்த் திடங்களில் இசைந்து அந்தவக்கர்த்திடமானது (தோன்றுகிற தென்றவாறு.) 1. எக்கர் மணல் Nom to தோற்றும். 2. Anvayam. காற்று அசைக்க உக்கமலரோடு உகுத்த சங்கின் முத் துக்களே மேல் இசைந்து எக்கர் மணலானது, ஏற்றமுலையார்க்கு இளைஞர் இட் ட புலவித் தோற்றமான அமளியென்னத் தோற்றும்.

CLXXX. அலர்ந்த மலர்சிந்தி யம்மலர்மேற் கொம்பு
புலர்ந்தசைந்து பூவணைமேற் புல்லிக் - கலந்தொசிந்த
புல்லென்ற கோலத்துப் பூவையரைப் போன்றதே
யல்லென்ற சோலை யழகு.

இருட்டென்று (சொல்லப்படும்) சோலையின் அழகானது யாரைப்போன்ற தென்றால், பூவையரை=ஸ்திரீகளைப் போன்றது. எத்திறத்துப் பூவையரை? கோலத்தை (அழகை - புறத்துருவத்தை) யுடைய பூவையரை. என்னகோலம்? புல் என்றகோலம். புல் grass புல் embrace புல்=புல்லிய of mean appearance. எப்புல்? கலந்து ஒசிந்த=கூடி அதனால் ஒடிந்த=குழைந்த. எப்படிக்கலந்து? புல்லி=புணர்ந்து. எங்கே? பூவணைமேல்=flower cot, எவ்வாறு புல்லி? புலர்ந்து அசைந்து புல்லி. எது? கொம்பு=twig or the lady. எதன்மேல்? அம்மலர் மேல். எம்மலர்மேல்? அலர்ந்த (full blown, opened, or withered) மலர்சிந்தி (இருக்கின்ற) அம்மலர்மேல். மலர்ந்த or வாடின பூக்கள் சிந்தி அந்தப்பூக்களின்மேல் பூங்கொம்பானது (or பெண்ணானவள்) வாடிஅசைந்து பூக்களாகிய படுக்கைமேல் (பரப்பின்மேல்) பொருந்தி புணர்ந்து கலந்து ஒடிநத (வதங்கின) புல்லிய (புன்மய = அலங்கோலமான) உருவத்தினையுடைய ஸ்திரீகளைப் போன் றிருந்தது, (அல்) இருள் என்னப்படத்தக்க சோலையின் அழகு எ-று.

CLXXXI. கொங்கை முகத்தணையக் கூட்டிக்கொடுங் கையா
லங்கணைக்க வாய்நெகிழ்ந்த வாம்பற்பூ - கொங்கவிழ்தேன
வார்க்கின்ற கூந்தன் முகத்தை மதியென்று
பார்க்கின்ற தென்னலாம் பார்.

கொங்கையானது (or ஐ) பூ முகத்தில் பொருந்தச்சேர்த்துக் கொடுங்கையினால் அங்ஙனம் அணைக்க (அதனால்) வாய்மலர்ந்த குமுதப்பூவானது, வாசனை விரிகின்ற தேன்வடிகின்ற கூந்தலையுடைய முகத்தை சந்திரன் என்று பார்க்கின்ற தென்னலாம், நீ இவ்விந்தையைப்பார் எ-று. Outline. ஆம்பற் பூவானது முகத்தை மதியென்றுபார்க்கின்றது என்று சொல்லலாம், பார்.

CLXXXII. கொய்த குவளை கிழித்துக் குறுநுதன்மே
லெய்தத் தனிவைத்த வேந்திழையாள் - வையத்தா
ருண்ணாக் கடுவிடத்தை யுண்ட வொருமூன்று
கண்ணனைப் போன்றனளே காண்.

கிள்ளிய நீலப்பூவைக்கிழித்துத் தன்நெற்றியின்மீது பொருந்தும்படி தானே வைத்துக்கொண்ட ஏந்திழையாள் (ஏந்திய=தாங்கிய ஆபரணத்தாள்) ஒருத்தி, உலகத்தார் உண்ணாத உண்ணக்கூடாத கொடிய (ஆலகால) விஷத்தை உட்கொண்ட திரிநேத்திரத்துச்சிவனை ஒத்திருக்கின்றனள்—காண் எ-று. 1. ஏந்திழையாள் கண்ணனைப் போன்றனள் காண். 2. தனி = தானே or ஒப்பில்லாமல் peculiarly. 3. பேர்ல் அடியிற்பிறந்தவினை, இரண்டாவதை வேண்டியே வருதலில் வினையடியும் அதுவேயென்பார்க்கு ஆக்ஷேபனையில்லை யறிக.

CLXXXIII. கொழுநன் கொழுந்தாரை நீர்வீசக் கூசிச்
செழுமுகத்தைத் தாமரைக்கே சேர்த்தாள் - செழுமியவக்
கோமகற்குத் தானினைந்த குற்றங்க ளத்தனையும்
பூமகட்குச் சொல்லுவாள் போல்.

கணவனானவன் கொழுந்தாரைமேல் தண்ணீரைவாரி இறைக்க (இறைத்தபோழ்து) நாயகியானவள் கூச்சங்கொண்டு (பட்டு) தன்செழுமையான முகத்தைத் தாமரையில் ஒத்திக்கொண்டாள், or கவிழ்ந்துகொண்டாள், இஃது யாது போலுமமெனில, தன உரிய அந்தக்கோமகன்மேல் தான் நினைத்த (ஐயப்பட்ட) எல்லாக்குற்றங்களையும் பூமிதேவிக்கு or இலக்ஷ்மிக்கு சொல்லுகிறவள்போல் தாமரைக்கேதன் முகத்தைச சேர்த்தாள் எறு. கொழுமைய தாரைகளாகிய நீர் என்றும கொள்க.

Scanning again with தளை. கொழு+நன்=நிரைநேர்=புளிமா. மா முன்நிரைவருதல் வேண்டும். இயற்சீர் வெண்டளை. (1st Foot) கொழுந்+தா+ரை=நிரைநேர்நேர்=புளிமாங்காய. காய்முன்னேர் வரவேண்டும். வெணசீர் வெண்டளை. (2nd Foot) நீர்+வீ+சக=நேர் நேர் நேர்=தேமாங்காய். காய்முன் நேர்வரும் வெண்சீர் வெண்டளை. (3rd Foot) +கூ+சி=நேர் நேர்=தேமா. மாமுன் நிரைவரும. இயற்சீர். (4th Foot) These four feet compose the first line. 2nd Line. செழு + முகத் + தைத்=நிரை நிரை நேர் = கருவிளங்காய். காய்முன் நேர்-ஆம். வெண்சீர். (1st Foot) தா + மரைக் + கே=நேர் நிரைநேர் = கூவிளங்காய். காய்முன்நேர்= வெண்சீர் வெண்டளை. (2nd Foot) சேர்த்+தாள்=நேர் நேர் = தேமா. மாமுன் நிரை இயற் சீர். (3rd Foot. These 3 form the second line. Now the independent foot :—செழு+மிய+வக்=நிரை நிரைநேர்=கருவிளஙகாய். காய்முன்நேர் வெண்சீர். Now the 3rd line :—கோ+மகற்+குத்=நேர் நிரை நோ=கூவிளங்காய். காய்முன்னேர் வெண் சீர். (First foot) தா+னினைந்+த = நேர் நிரை நேர் = கூவிளங்காய். காய் முன் நேர் = வெண்சீர் (2nd Foot) குற்+றங்+க=நேர் நிரை நேர்=கூவிளங்காய். காய் முன்நேர் வெண்சீர். (3rd Foot) ளத்+தனை+யும்=நேர் நிரை நேர்=கூவிளங்காய். காய் முனநேர் வெண்சீர் வெண்டளை. (4th Foot) These four belong to the 3rd line ;—பூ+மகட்+கு=நேர் நிரை நேர்=கூவிளங்காய். காய்முன்நேர் வெண்சீர். சொல்லுவாள் = நேர் நிரை நேர்=கூவிளங்காய். காய்முன்நேர்வெண்சீர். போல்=நாள் - formula.

CLXXXIV. பொய்தற் கமலத்தின் போதிரண்டைக் காதிரண்டிற
பெய்து முகமூன்று பெற்றாள்போ - லெய்த
வருவாளைப பானொன்றான் மாறாளை வென்று
செருவாளைப் பார்த்துவக்குஞ் சேய.

மகளிர் விளையாட்டின் கண், தாமரையின் பூக்கள் இரண்டினை தான்தன் இரு காதுகளிலும் (காண்புஷ்பங்களாக) வைத்துக்கொண்டு மூன்று முகம் உடையவள்போல் வர, அங்ஙனம் வருகின்றாளை (தமையந்தி நீ) பார் என்றான், யாவன்

என்றால், சத்துருக்களைசெயித்து தான் போர்வாளா யுதத்தை நோக்கிக் களிக்கும் இளங்குமாரனாகிய நளன் எறு. 1. பொய்தல்=ladies' play 2. சேய் என்றன. 3. வருவானைபபார் என்றான். பொய்தலாக=விளையாட்டிற் கென்றபடி.

CLXXXV. பொன்னுடைய வாசப் பொகுட்டு மலரலையத்
தன்னுடனே மூழ்கித் தனிதெழுந்த - மின்னுடைய
பூணுதிருமுகத்தைப் புண்டரிகமென்றயிர்த்துக்
காணு தயர்வானைக் காண்.

இலக்ஷமியினுடைய நிவாசமாகிய தாமரைப்பூக்கள் அலைய அசையும்படியாக (கணவன்) தன்னுடனே நீராடி நீரிலிருந்து தனியே யெழும்பின தன்நாயகியாகிய ஒளிபொருந்திய ஆபரணத்தாளுடைய முகத்தை தாமரையல்லவோ இது என்று சந்தேகித்து (விபரீதித்து) அவளைக்காணேமே யென்று அசந்து நிற்பானைப் பார் தமயந்தியே எறு. 1. இப்பாட்டில் உள்ள எச்சங்களைச் சொல்லு. a உடைய =பெயரெச்சம். b அலைய=செயவென் னெச்சம். மூழ்கி தனிதது அயிர்த்து இவைசெய்தென் னெச்சங்கள் c காணுது = காணமல்=காணமே=காணமை= எதிர்மறை வினையெச்சம். d. எழுந்த பெயரெச்சம். e என்று= இது, வினைபெயர் குறிப்பு இசை எண் பண்பு ஆறனுள் எது? see sut 5 இடையியல், and give your own examples for each of those six items.

LCXXXVI. சிறக்கின்ற வாண்முகமுஞ் செங்காந்தட் கையான்
முறுக்கு நெடுமூரிக் குழலுங் - குறிக்கிற்
கரும்பாம்பு வெண்மதியைக் கைக்கொண்ட காட்சி
யரும்பாம் பணைமுலையா யாம்.

சேயநன்மலர்மிசைத்திசைமுகன்மான்முத
லாயபண்ணவர்மனக்காருயிர்த்தொகையினுக்
கேயபல்கணவருகெத்திறத்தோர்க்குநீ
நாயகம்புரிதியானல்லருட்டன்மையால். (௧௫௩)

காறுறுங்கரடவெங்கயமுகத்தவனெனுந்
தானவன்வன்மையைச்சாடியேதண்டுறாய்
வானவர்சிறுமையுமாற்றியேவருகென
வானையின்முகவனுக்கைம்முகனருள்செய்தான். (௧௫௪)

மோனமேகுறியதாமுதலெழுத்தருளிய
ஞானமாமதலைபானண்ணவேபூதவெஞ்
சேனையாயினவருள்செய்துசிற்பரையொடு
மானமாமுகனொடுமமலன்மீண்டருளினான். (௧௫௫)

புங்கவர்க்கிறைவனும்புதல்வனைநோக்கிடா
நங்கடைத்தலையினீயகம்புரிகென
வங்கருத்தியொடிருத்தினனணிக்கோயிலுட்
சங்கரக்கடவுள்சுந்தரியொடுமருவினான். (௧௫௬)

ஐந்திமாமுகமுடைத்தனயனங்கணுகியே
முந்துபாரிடமெலாமொய்த்துமுன்சூழ்தர
நந்திவந்தனைசெயநான்முகன்முதலினோ
வந்துவந்தடிதொழுமகிழ்வொடேவைகினன. (கருஎ)

அன்னதற்பின்னரேயாயிரமபெயருடைப்

மின்னுதண்சுடாவிடும்வெள்ளிமால்வரைமிசைத்
துன்னிஞாலயச்சூழன்முன்னனுகினன். (கருஅ)

அந்தியாாசடைமுடியண்ணறனனருளினு
ணநதிதேவுய்த்திடநவகையோாபங்கனு
மெந்தைபாலெயதியேயிணைமலாத்தாடொழாப்
புநதியார்வத்தொடும்போற்றிசெய்தருளவே. (கருகூ)

வேறு.

ரிருத்தனவ்விடைதனினேமியான்றனை
யிருததியென்றருள்புரிநதிடத்தின்மேவிய
வொருததியைநோக்கியொன்றுரைப்பங்கேளனு
வருத்திசெய்யாடலொனறருளிறகூறுவான. (கசூ0)

சூதினையெம்மொடேபொருதிதோற்றனை
யாதியேனிபுனையணிகள்யாவையு
மீதியால்வென்றனையெண்ணினெம்மொரு
பாதியாஞ்சசிமுதறபலவுஙகோடியால. (கசூக)

எனனலுமுமையவளிசைவுகோடலு
மனனதொரெல்லையினரியைநோககியே
தன்னிகரில்லவனிதறகுச்சான்றென
மன்னினையிருததியானமாயநீயென்றனை. (கசூஉ)

பறறிகலின்றியேபழவினைபபயன
முறறுணாநதுயிாகளைமுறையின்வைபபவன்
மறறிதுபுகறலும்வனசக்கணணினு
னறறிறமிஃதெனநவினறுவைகினன். (கசூங)

இநதவாறுயிடைநிகழுமெலலையி
சுநதரன்முதலியவுமையாசுறறினே
ரந்தமில்பெருங்குணததாதியேவலி
றநதனாகாசெ[illegible]பலகைதனனையே. (கசூச)

அதுபொழுதண்ணலுமரியைநோக்கியிம்
பின்வைக்கெனக்

கெதிருறுகென்றுமுன்னிருத்தினனரோ. (கசூ[illegible]

லவற்றினைபபின்னுறவவளுமுய்த்தன
டவற்றியல்பல்லதோர்வல்லசாரியா
லெவற்றினுமேலையோரினிதினுடினர். (கசூசு)

பஞ்செனவுரைசெய்வர்பாலையென்பரி
ரஞ்செனமொழிவரஞ்செனபரன்றியுந்
துஞ்சலினடமென்பர்துருத்தியீதென்பர்
விஞ்சியமகிழ்வொடுவெடியென்றேறுவார். (௧௬௭)

அடிமிதுபொட்டையீதெனபரஃதென
முடிவிலகுழூஉக்குறிமுறையின்மூதுறக்
கடிதினிற்கழறினர்கவறுசிந்திறா
னொடிதருகருவிகளைதிரினோக்கினார். (௧௬௮)

வேறு.

ஏற்றானவனைய்தியவின்னருள்யாவதேயோ
தேற்றாமஃதியார்க்குமளப்பருஞ்செய்கையாலே
மேற்றானெதிராவுடன்றாடியமெல்லியற்குத்
தோற்றானெடுமாலயனுடவுந்தோறறிலாதான். (௧௬௯)

ஒன்றாயபரஞ்சுடரோனுமைதன்னைநோக்கி
நன்றாயதுநின்வலியென்றுநகைத்துநம்மை
வென்றாயலைதோற்றனைமுன்னர்விளம்புமாறு
னின்றொடுபூணுமெமகதினிநேர்தியென்றான். (௧௭௦)

மூன்றாமுலகங்களுமாருயிர்முற்றுமன்ன
மீன்றாளதுகேட்டலுந்தாணிகலாடலஞ்சி
வான்றாவியபேரடிமாயனைவல்லைநோக்கிச்
சான்றாமெனவைகினைநீயிதுசாற்றுகென்றாள். (௧௭௧)

சொல்லுமளவிற்சுடர்நேமியன்கூறுடையபோரா
வெல்லுந்தகையோன்பரனென்றுவிளம்பலோடு
நல்லுண்மைசொற்றாய்திறநன்றிதுநன்றிதென்னாச்
செல்லுண்டவைம்பாலுமையாற்றச்சினம்புரிந்தாள். (௧௭௨)

பாராயலைகண்ணனுமாயினைபாலினுற்றாய
தேராததுவொன்றிலையாவருந்தேரவொண்ணா
பேராதியோனவைகூறினுநீயிதுபேசலாமோ
காராமெய்யென்பர்மனமுங்கரியாய்கொன்மன்னோ. (௧௭௩)

ஏம்பாலிதுசொற்றனையாதலினென்றுமாயை
யோம்பாவருவாயுறுகைதவத்தூற்றமிக்காய்
பாம்பாதியெனனப்பகர்ந்தாளபகாகின்றவெல்லை
யாம்பாலுருவமஃதங்கணடைந்ததன்றே. (௧௭௪)

அவ்வாறவன்பாலணைகின்றதொர்போழ்திலாழிக
கண்டுகவற்சியெய்திச்
செவ்வானுறழுமுடியோனடிசென்றுதாழா
வெவ்வாறெனக்கிவ்வுருநீங்குமிசைத்தியென்றான். (௧௭௫)

காலாயவெளியாயபுனலாய்க்கனலோடுபாராய
மேலாகியுள்ளபொருளாயெவற்றிற்கும்வித்தாய
நாலாய்வேதப்பொருளாகிநண்ணுற்றநாதன்
மாலாயவனுக்கிஃதொன்றுவகுத்துரைப்பான். (௧௭௬)

என்பால்வருமன்பினிசைத்தனையீதுபெற்றாய்
நின்பாலவருமின்னலைநீக்குவனீங்குகின்றாய்
தென்பாலுலகந்தனிலன்னதொராதேயமீதின
முன்பாலவனம்மெனவொன்றுளமொய்ம்பினமிக்காய். (கஎஎ)

ஆங்கேயினிநீகடிதேகினையன்னகானிற
பாங்கேயொருதொன்மரநின்றதுபார்த்ததுண்டே
யூங்கேபராரையின்மேயபொந்தொன்றினூடு
தீங்கேகுறப்போய்ப்பெருமாதவஞ்செய்துசோதி. (கஎஅ)

அஞ்சேலவணீயுறைகின்றதொர்காலையானே
யெஞ்சேயவனுங்கயமாமுகனெய்துவானச
செஞ்சேவகனுக்கெதிர்கொண்டனைசென்றுகாண்டி
மஞ்சேயனையாயுனக்கிவ்வுருமாறுமன்றே. (கஎகூ)

வேறு.

என்னுமளவிற்பெருமுழுதிறைஞ்சியினிதேத்தி
யன்னதொர்வனத்திடையமர்ந்ததொன்மரத்திற
றன்னுவனெனக்கடிதுசொல்லுதலுமயார்க்கு
முன்னவனுமேகெனமுராரியைவிடுத்தான. (கஅ0)

விட்டிடுதலுங்கயிலைநீங்கினன்விரைந்தே
கட்டழகினமேதகையகாமனதுதாதை,
சிட்டர்கள்பயின்றுறைதென்னதுபுலநண்ணி
மட்டொழுகுதொன்மரவனத்தினிடையுற்றான. (கஅக)

நன்மதியுடைப்புலவர்நால்வர்களுமுய்யச்
சின்மயமுணர்த்தியருடேவனமர்தாருத்
தன்மையதுபெற்றுநனிதண்ணிழல்பரப்பு
தொன்மரவியற்கையதனிற்சிறிதுசொல்வாம். (கஅஉ)

பசுந்தழையிடைந்தவுலவைத்திரள்பரப்பி
விசும்பளவுநீடியுயர்வீழினிரைதூங்கத்
தசும்பனையதீங்கனிகடாங்கியதுதாளால்
வசுந்தரையளந்தநெடுமாயவனைமானும். (கஅங)

அண்டநடுவாயவுலகேழினையுமங்கா
ளுண்டருளியொல்லைதனிலோர்சிறுவனாகிப
பண்டுகரியோன்றுயில்கொள்பாசடைகடன்பாற்
கொண்டவடமன்னதொருகொள்கையதுடைத்தால. (கஅச)

மழைத்தபசுமேனியதுமாதிரவரைப்பில்
விழுத்தகையவீழினிரைவீசுவடதாருத
தழைக்குலமருப்புமிசைதாங்கியிடைதூங்கும்
புழைக்கைகொடுமால்களிறுநாடுகரிபோலும். (கஅரு)

பாசடைதொடுத்ததபடலைப்பழுமரத்தின்
வீசிமிர்கின்றபலவீழின்விரிகற்றை
பூசலிடுகூளியொடுபூதநிரைபற்றி
யூசல்பலவாடியுணலூக்கியனவன்றே. (கஅசா)

ஆல்வரையின்வீழ்நிரைகளாசுகமுடற்றப்
பால்வரையினேற்றிவருமாதிரவிபாகன்
கால்வரையினேகவெழுகந்துகமதென்னு
மால்வரையின்வீசுபலமத்திகையதொத்த. (௧௮௭)

ஆசறுதெனுதிசையாளுமிறையெண்ணில்
பாசமொடுநின்றதொருபான்மையஃதன்றேல்
வாசவனுமாகமிசைமாலிகையுமாமால்
வீசுபழுமாமரவிலங்கலுமவ்வீழும். (௧௮௮)

மாநிலமெலாந்தனைவழுத்தவருமன்னற்
கூனமுறுகாலைதனிலொண்குருதிவாரி
வானமுகில்கான்றனையமாண்டதொனமரத்தின்
மேனிதருசெய்யபலவீழின்விரிமாலை. (௧௮௯)

இம்பருறையாலமிசையெம்முருவுகொள்ளா
வம்புலவுதண்டுளவமாயன்வருமென்று
வெம்பணிகடம்பதியின்மேவுவனபோலாந
தம்பமெனவேதரைபுகுந்ததனிவீழ்கள். (௧௯0)

கடித்தனவெயிற்றினழல்காலவரவின்மே
னடிக்குமொருகட்செவிநமைக்குறுகுமென்றுத்
துடித்தனவெனத்தலைதுளக்கினவுரோமம்
பொடித்தனநிகர்த்துளபுனிற்றினுறுபுன்காய். (௧௯௧)

கிளர்ப்புறுகவட்டிலைகிடைத்தகிளையாவு
மளப்பில்புகைசுற்றிடவனறகெழுவுகற்கற
துளக்குறுதரக்குழுவுதோன்றியதுபோன்ற
விளக்கழனிகர்த்துளவிரிந்தமுகையெல்லாம். (௧௯௨)

செருப்புகுசினத்தெதிர்செறுத்தமதவெற்பின்
மருப்பினையொசிப்பவன்வரத்தினியல்காணு
விருப்பமலிவுறறதன்விழிதொகைகளொக்கும்
பரப்பியநிகர்த்துளபயங்கெழுவுபைங்காய். (௧௯௩)

வெள்ளிபடுகின்றமதிவின்படர்விமானங்
கள்ளிபடுபால்கெழுகவட்டினிடைதேய்ப்பத்
துள்ளிபடுகின்றளவிலோர்திவலைதொத்தப
புள்ளிபடுமாறுமுயலென்பர்புவிமேலோர். (௧௯௪)

காவதமொரேழுளபராரைகணிப்பின்முற்
ருவறுமுயர்ச்சியதனுக்குமதிசான்றே
பூவுலகமெங்குநிழல்போக்கிநெடிதோம்புங்
கோவதெனநின்றதுயர்கோளியெனுங்குன்றம். (௧௯௫)

அவ்வகையதாருவினைநோக்கினனனைந்தான்
பவ்வநிறவண்ணறுயில்பாசடைகடம்மோ

வெவ்வரவினுக்கிறைவன்மேவியதுமான. (௧௯௬)

அந்தமில்பெருங்கடல்வளாகமனைத்துந்தன்
னுந்தியிலடைந்ததெனவோங்கல்கெழுமொள்வாள்
வந்துறையினிற்புகுவதென்னவடதாருப்
பொந்தினிடையேயணுகினானுலகுபூத்தோன். (ககஎ)

சத்தியுரையாலரிதனிப்பணியதான
வித்திறமிசைததனயினிச்சுரரைவாட்டு
மத்திமுகவெய்யவனையாதியருளசெயயும்
வித்தகமுதற்புதலவன்வெனறமையரைபபாம். (ககஅ)

வேறு.

முந்துவேழமுகத்தவனேவலா, னொந்துயிரதைநணங்கியதேவரு
மிநதிராதிபர்யாவருமைங்கரன், வநததோாகதுமகிழ்ச்சியின்மேயினர். (ககக)

ஏதமின்மகிழ்வெய்தியவிந்திர, னாதியோர்கயிலாயத்தணுகியே
போதகத்துபபுகர்முகப்புங்கவன், பாதமுறறுப்பணிந்துபரவினர். (உ௦௦)

பரவல்செய்திடுபான்மையைநோக்கியே, கருணைசெய்துகயமுகத்தெம்பிரா
னுரையுறுங்கட்குறுகுறையென்றலும், வரன்முறைபபடவாசவன்கூறுவான். ()

தொல்லைநாண்மதிசூடியசோதிபா, லெல்லைநீங்கும்வரந்தனையெய்தினன், கல்
லென்வெஞ்சொற்கயாசுரனென்பவ, னல்லல்செய்தனனாறறவுமெங்களை. (உ௦உ)

பின்னுநங்களைபபிடறவைகலுந், தன்னைவந்தனைசெயயவுஞ்சாற்றினா, னன்ன
செயதனமனறியுமெங்கள்பான், மன்னவேபுதிதொன்றுவகுத்தனன்.(உ௦௩)

கிட்டித்தனமுனகிடைதனுழிநெறறியிற், குட்டிக்கொண்டுகுழையிணையிற்கரந்
தொட்டுத்தாழ்ந்தெழச்சொறறனனாகதும், பட்டுப்பட்டுப்பழியிடைமூழ்கினேம்.

கறுத்துமற்றவன்கட்டுரைக்கின்றசொன், மறுத்தலஞ்சிவருமபழிதன்னையும், பொ
றுத்துநாணமும்போகவின்றந்தமுஞ், சிறப்பிலாவச்சிறுதொழிலசெய்தனெம். ()

ஆங்கவன்றனதாவியொடெங்குறை, நீங்குவித்திடநீவருவாயெனா
வோங்கனலகுமுமையவடன்னொரு, பாங்காவைகும்பராபரன்கூறினன். (உ௦௬)

ஆதலானின்னடைந்தனமெம்முடை, யேதமாறறுதியென்றுவழிபடஇ
மோதகாதிகண்முன்னுறவார்த்திடப, பூதநாதனருளிறபுகலுவான். (உ௦எ)

அஞசலஞ்சலவுணர்க்கரசனும, விஞசுவேழமுகமுடைவீரனைத்
துஞ்சுவித்துந்துயர்தவிர்ப்போமெனக், குஞசரத்திருமாமுகனகூறவே. (உ௦அ)

இறைவனோடுமிமையவரெம்முடைச், சிறுமைநீங்கினசெல்லலுநீங்கின, மறு
மையின்பமுமவநதனவாலினிப, பெறுவதொனறுளதோவெனப்பேசினர். (உ௦க)

வேறு.

துன்பினையுழந்திடுசுரர்களிவ்வகை
யின்புறுகாலையிலீசன்றந்திடு
மன்புடைமுன்னவனானைமாமுக
முண்டனையடுவதுமுன்னினனரோ. (உக௦)

பொருகெனத்தவிசினின்றெழுந்துபூதர்க
ணொருகருறுவாய்தவினெய்தினீள்கதி
ராருக்கனிலகியவசலனென்பவன்
றருக்கியபுயத்தினமேறசரணவைத்தேறினன். (உகக)

ஏறியங்கசலன்மேலிருந்துசெல்லுழிக்
காறெருடர்முகிலினங்கவைஇயகாட்சிபோன
மாறில்வெம்பூதர்கள்வந்துசுற்றியே
கூறினரவன்புகழ்குலாயகொள்கையார். (உகஉ)

சாமரைவீசினர்தணப்பில்பன்மணிக்
காமருதண்ணிழற்கவிகையேந்தினர்
பூமருமதுமலர்பொழிதன்மேயினே
ரேமருபூதரிலெண்ணிலோர்களே. (உகங)

துடியொடுசெல்லரிதோமிறண்ணுமை
கடிபடுகரடிகைகணையஞ்சல்லிகை
யிடியுறழ்பேரிகையிரலைகாகளங்
குடமுழவியம்பினர்கோடிசாரதர். (உகச)

சிந்தையிலுன்னினாத்மைத்ரபபவன்
வந்திடுகாலையின்மகத்தின்வேந்தனு
மந்தரவமரருமடைந்துபோற்றியே
புந்திகொளுவகையாறபோதன்மேயினூர். (உகரு)

தாருவினறுமலர்தத்தங்கைகொடு
பேரருணுதல்விழிப்பிள்ளைமீமிசை
சேருறவீசியேபுடையிற்சென்றனர்
காரிணையடைதருகடவுள்வில்லென. (உகசு)

விரைந்தெழுசாரதவெள்ளமெண்ணில
நிரந்தனசூழ்தரநிமலன்மாமகன்
பெருந்தரையேகியேபிறங்குதோன்முகன்
புரந்திடுமெதங்கமாபுரமுன்போயினூன். (உகஎ)

ஆயதுகயமுகத்தவுணறகோடியே
வேயினாபுகறலும்வெருட்சிகொண்டெழீஇ
யேயதன்படையெலாமெடுத்துமற்றவன்
சேயுயர்தனதுபொற்றேரிலேறினூன். (உகஅ)

பல்லியமியம்பினபரிகள்சுற்றின
சில்லிகொளாழியந்தேர்கள்சூழ்ந்தன
வெல்லையில்பகிரையாவுமொய்த்தன
வலலியலவுணர்கள்வரமபின்றீண்டினூர். (உகக)

ஆயிரவெள்ளமாமணிகளுஞ்சுற்றிடக்
காய்கனல்விழியுடைக்கயமுகாசுர
னேயெனுமளவையிலேகிக்கண்ணுத
லுயகன்மதலைதன்படைமுனண்ணினூன். (உஉ0)

நண்ணியகாலையினவையில்பூதரு
மண்ணலங்கழலடியவுணருங்கெழீஇப்
பண்ணினர்பெருஞ்சமர்படையின்வன்மையால்
விண்ணவர்யாவரும்வியந்துநோக்கவே. (உஉக)

புதிதெழுவெயிலுடன்பொருவருபேரிரு
ளெதிர்பொருமாறுபோலினங்கொடானைவ
ரதிர்கழற்பூதரோடமர்செய்தாற்றலா
கதுமெனவழிந்தனராகலங்கியோடினார். (உஉஉ)

ஓடினரளப்பிலருயிரைச்சிந்தியே
வீடினரளப்பிலர்மெய்குறைந்துபி
னாடினரளப்பிலரகல்தறுகிடந்
தேடினரளப்பிலர்தியக்கமெய்தினார். (உஉங)

ஒழிந்தனகரிபரியுலப்பிறேர்நிரை
யழிந்தனவிதத்திறமவுணர்தம்படை
குழிந்திடுகணனுடைக்குறளவெம்பூதர்கள்
மொழிந்திடவரியதோர்விசயமுற்றினார். (உஉச)

உயர்தருதானவருடைந்ததன்மையும்
புயவலிகொண்டுளபூதர்யாவருஞ்
சயமுடன்மேல்வருதகவுநோக்கியே
கயமுகவவுணர்கோன்கனலிற்சீறினன். (உஉரு)

உளத்தினில்வெகுண்டுசென்றொருதன்கைச்சிலை
வளைத்தனனத்துணைவளைத்துப்பேரமர்
விளைத்தனர்பூதர்களனையர்மெய்யெலாந்
துளைத்தனன்கணைமழைசொரிந்துதண்ணென. (உஉசா)

அரந்தெறுபகழிகளாகம்போழ்தலும்
வருந்தினர்திறலொடுவன்மைநீங்கின
ரிரிந்தனர்பூதர்கள்யாருமோடினார்
புரந்தரனிமையவர்பொருமலெய்தவே. (உஉஎ)

கணந்திரைசாய்தலுங்கண்டுமற்றது
மணிகிளர்கிம்புரிமருப்புமாமுக
னிணையறுமசலனமேலேகிவல்லையி
லணுகினனிபமுகத்தவுணர்கோனையே. (உஉஅ)

காருடையிபமுகக்கடவுண்மேலையோ
னேருறவருதலுநின்றதூதரைச
சீருறுகயமுகத்தியனோக்கியே
யாரிவண்பொருவுறற்கணுகுற்றானென. (உஉகூ)

பரவியவொற்றர்கள்பணைமருப்புடைக்
கரிமுகமுடையன்முக்கண்ணனைங்கர
னுருகெழுபூதனமேலுறுகின்றான்சிவன்
பெருமகனுக்கிளைப்பிள்ளைதானென்றார். (உங0)

அன்னதுகேட்டலுமவுணன்சீறியே
பன்னருங்கலைதெரிபாகைநோக்கிநம்
பொன்னிரதத்தினைப்புழைக்கைமாமுகன்
முன்னுறக்கடவுதிமொய்ம்பொடென்னவே. (உஙக)

கேட்டிடுவலவையோன்கிஞ்சுகக்குரத்
தாட்டிறம்பரியினாதன்னினமத்திகை
காட்டினன்றவுதிலாக்கனகத்தேரினை
யோட்டினனைங்கரத்தொருவன்முனனுற. (உ௩உ)

ஆயிடைக்கரிமுகத்தவுணனைங்கரத்
தூயனையழல்விழிசுழலநோக்கியே
காயெரியெயிறுகக்கறைகொள்பற்களாற்
சேயிதழதுக்கியேயினையசெப்புவான். (உ௩௩)

நுந்தையென்மாதவநோக்கிமுன்னரே
தந்திடுபெருவரந்தன்னைத்தேர்கிலை
யுய்ந்தனைபோதிநின்னுயிர்கொண்டென்னெதிர்
வந்தனையிறையுமதியிலாய்கொலோ. (உ௩௪)

அன்றியுமாசெயவமைதியென்னினும்
வன்றிறலுனக்கிலைமைந்தவென்னெதிர்
பொன்றினரல்லதுபோர்செய்தென்னைமுன்
வென்றவரிவரெனவிளம்பவல்லையோ. (உ௩௫)

தேன்பெறுதருநிழற்றிருவின்வைகிய
வான்பெறுதேவரான்மக்களாலவ
ரூனபெறுபடைகளாலொழிந்திடேனிது
நான்பெறுவரத்தியனவிலக்கேட்டியேல். (உ௩௬)

பின்னரும்பலவுளபெற்றதொல்வர
மென்னைவெல்பவரெவரிந்திராதிபர்
தன்னிடர்தணிப்பவர்போலச்சார்ந்தனை
யுன்னைவென்றன்னவருயிருமுண்பனால். (உ௩௭)

பொருதெனைவென்றனைபோகவல்லையேல
வருதியென்றுரைத்தலும்வானுலாவிய
புரமெரிபடுத்தவனபுதல்வனவ்விடை
யருளுடனொருமொழியறைவதாயினான். (உ௩௮)

வேறு.

நிரந்தபல்படையுநாளுநிலைபெறநினக்குத்தொன்னாள்
வரந்தருகின்றவெந்தைவல்லைநின்னுயிரைவவ்விய
புரந்தரன்முதலினோர்க்குப்பொன்னினாடுதவியன்று
ரரந்தையுமகற்றிச்செல்கென்றருளினனெனக்குமன்றே. (உ௩௯)

உன்னுயிர்காத்தியென்னிலுறுதியொன்றுரைப்பன்கேண்மோ
பொன்னகரதனையிந்தப்புரந்தரன்புரக்கநல்கி
யிந்நிலத்தரசுசெய்தேயிருத்தியஃதிசையாதென்னி
னின்னுயிர்முடிப்பானேர்ந்துநின்றனனினைவென்னென்றான். (உ௪0)

என்னலுமவுணன்பொங்கியெரியுகவிழித்துச்சென்றோர்
பொன்னெடுஞ்சிலையைவாங்கிப்பொருக்கெனப்புரிநாணேற்றி
மின்னுடைவடிம்பின்வாளிவீசலும்விமலனல்கு
முன்னவனெழுவொன்றேந்திமுரணொடுசிந்தினின்றான். (உ௪௧)

பொற்றனுமுரிந்துவீழப்புழைக்கையிற்பிடித்ததண்டா
லெற்றினனனையகாலையிபமுகந்தசுரனென்போன்
மற்றொருசிலையைக்கையால்வாங்கினன்வாங்குமுன்னர்ச்
செற்றனனதனைமைந்தன்றிசைமுகன்முதலோரார்ப்ப. (உசஉ)

திண்டிறல்பெற்றவீரசசிலைமுரிந்திட்டபின்னர்த்
தண்டமொன்றேந்தியீசன்றனயனையெதிர்தலோடும்
விண்டதுசோரும்வண்ணமவெய்தெனப்புடைத்துமாயாக்
கண்டகனுரத்திற்றாக்கக்கலக்கமுறவெய்தினன்றன். (உசங)

நடுங்கினன்சிந்தையொன்றுநவில்கிலனுணர்த்தாலே
யொடுங்கினன்கயவெருக்கூரனுலந்தனன்போலநின்று
னடும்பரிகளிறுதிண்டேர்கெழுதானையாரிற
படும்படிநினைந்துமுன்னோனைபாசமொன்றுய்த்தானன்றே. (உசச)

விட்டவெம்பாசமங்கணவெய்யதோர்சேனைமுற்றுங
கட்டியதாகமைந்தனசண்டசியுமுதறபினைவ
வட்டாலதனைநோக்கியாடினரமராதானை
பட்டனவுணர்ந்துதீயோனபைபதைத்துயிர்த்துநொந்தான. (உசரு)

முந்துதன்கரத்திலுள்ளமுரண்கெழுபடைகளியாவுஞ்
சிந்தினனவைகளெல்லாஞ்சோர்ந்தனதிங்களசூடு
மெந்தையைவலஞ்செய்தேத்திவேலிளையனறமாதோ
வெந்திறலவுணன்மேன்மேல்வெகுளித்தீக்கனலநின்றான். (உசசு)

நின்றவனறனைநோக்கிநெடியபல்படைகளேவிற
சென்றிவனறன்னைக்கொல்லாசிவனருளவரத்தினீரா
லின்றியிசசெயவதென்னென்றிறைவரையுன்னியெந்தை
தன்றிருக்கோட்டிலொன்றுதடக்கையின்முரித்துக்கொண்டான். (உசஎ)

தடக்கையிலேந்துகோட்டைத்தருதியாமவுணன்மீது
விடுத்தலுமனையனமார்பைவெய்யதெனக்கீண்டுபோகி
யுடற்படிமிசையேவீழ்ந்தியொல்லையிலோடித்தெண்ணீர்க்
கடற்படிந்தமலனமைந்தனகரததிலவந்திருந்ததன்றே. (உசஅ)

புயலினதொகுதியொன்றிப்புவிமிசைவழுக்கியன்றென்னக்
கயமுகத்தவுணன்முன்னாக்கடலுடைந்தெனனவார்த்திட
டியலுடைநதேர்மேல்வீழாவெய்யதுதனனவனறன்மார்பில
லியனறிதந்தாரையென்னவிரிந்தனகுருதிவெள்ளம். (உசகூ)

ஏடவிழலங்கற்றிண்டோளிபமுகத்தவுணன்மார்பி
னீடியகுருதிச்செந்நீர்நீத்தமாயொழுகும்வேலை
பாடுறவருங்காளன்றிற்பாத்தவினதுவேசெய்ய
காடெனப்பெயர்பெற்றின்றுங்காண்டகவிருந்ததம்மா. (உருo)

ஆய்ந்தநல்லுணர்வின்மேலோரறிவினுமணுகாவண்ண
லீந்ததொல்வரத்தானமாயாவிபமுகத்தவுணன்வீழ்ந்து
வீந்தனனபோன்றுதொல்லைமெய்யொரீஇவிண்ணுமண்ணுந்
தீக்கிடவெரிகண்சிந்தச்சீற்றத்தோராகுவானான். (உருக)

தேக்கியநதிசேர்கின்றசென்னியன்றெம்மறன்னைத்
தாக்கியவருதலோடுஞ்சாரதன்றோளினீங்கி
நீக்கருங்குப்பின்றாக்கிநீகமைச்சமத்தியென்று
மேக்குயர்பிடரிற்றாவிவீற்றிருந்தூதலுற்றான். (௨௫௨)

மற்றதுகண்டதேவர்வாசவன்முதலோர்யாரு
மிற்றனன்கயவெஞ்சூரனெம்மிடர்போயிற்றன்றே
யற்றதெம்பகையுமென்றுவாடினார்பாடினாரா
சுற்றியகலிங்கம்வீசித்துண்ணெனவிசும்புலாத்தார். (௨௫௩)

காமருபுயலின்றோற்றங்காண்டலுங்களிப்பின்மூழ்கி
யேமருகலாபமஞ்ஞையினமெனகுலவுகின்றா
தேமருமிதழியண்ணல்சிறுவனைத்தெரியாவண்ணம்
பூமலர்பொழிந்துநின்றுபுகழினைப்போற்றலுற்றார். (௨௫௪)

காப்பவனருளுமேலோன்கண்ணகன்ஞாலம்யாவுந்
தீப்பவனனைச்செய்கைசெய்திடுமவனுநீயே
யேப்படுஞ்செய்கையென்னவெமதுளமவெருமபுமின்ன
னீப்பதுகருதியன்றேநீயருள்வடிவங்கொண்டாய். (௨௫௫)

உன்னிடைப்பிறந்தவேதமுன்பெருநிலைமைதன்னை
யின்னதென்றுணர்ந்ததில்லையாமுனையறிவதெங்ங
னன்னையும்பயந்தோனன்றுமாயினையதனைமைந்தா
பன்னியபுகழ்ச்சியாவும்பரிவுடன்கேட்டிபோலாம். (௨௫௬)

என்றிவரெகினமூருமிறையொடுமிறைஞ்சியேத்தி
நன்றிகொள்சிந்தையோடுநகைசெயொளிமுகத்தராகி
மன்றவர்குமரனதன்பால்வந்தனாசூழ்தலோடு
மொன்றியகருணைநோக்காலவரபிலாவருள்புரிந்தான். (௨௫௭)

உய்ந்தனமினிநாமென்றுவோதிமமூர்ந்தோன்வெள்ளைத
தந்தியன்யாரும்போற்றிச்சார்தலுஞ்சமரின்முன்னம்
வெந்தொழிலவுணன்காயவீந்திடுபூதர்தம்மை
யெந்தையங்கினிதுநோக்கியெழுகிரெனவருளிச்செய்தான். (௨௫௮)

அவ்வகையருளலோடுமரவெனவெழுந்துபோற்றி
மைவரைமிடற்றுப்புத்தேண்மைந்தனைவணங்கியேத்தி
யெவ்வமில்பூதர்யாருமீண்டினாரினையவெல்லாஞ்
செவ்விதினுணர்ந்துகொண்டான்றேசிலாநிருதர்க்கீசன். (௨௫௯)

மந்திரியோடுஞ்சூழ்ந்தவருந்தினன்புலம்பிமாழ்கி
யுய்ந்தனன்போவல்யானென்றுன்னியோர்பறவையாகி
யந்தரத்திறந்துபுள்ளோடணுகியப்பதியைநீங்கிச்
சிந்தையிற்செல்லல்கூரச்செம்பொன்மால்வரையிற்சென்றான். (௨௬௦)

தாழுறுசாரலூடுதபனனுமுணராத்தாருச்
சூழலொன்றுண்டாலங்கட்சுருங்கையோடிருந்தசேமப்
பூழையுட்புலம்பியுற்றான்பொன்னகரிறைக்குமங்க
ணூழிவெங்காலிற்சூழுமுலப்பில்பூதர்க்குமஞ்சி. (௨௬௧)

வானவர்பகைஞனந்தமதங்கமாபுரியைநீங்கிப்
போனதோர்காலைமறைப்புகருமோராபுளதாகித்
தானுறையுலகுநண்ணித்தவமறைந்தல்லதாற்றி
யூனுடலோம்புவாரபோலொருபடாயோகிலுற்றான். (உகூஉ)

பூதருமன்னவேலைபுரிசைசூழ்நகரம்போகி
நீதியிலவுணராகிநிறங்கிளர்படைகொண்டோரைக்
காதிவெஞ்சினப்போர்முற்றிக்களத்திடைவருதலோடு
மாதிநந்தருநுமைந்தனவ்விடையகன்றுமீண்டான். (உகூங)

மீண்டுசெங்காட்டிலோர்சாரமேவிமெய்ஞ்ஞானத்தும்பர்
தாண்டவம்புரியுநாதனைநனைந்துருந்தாபித்தேத்திப்
பூண்டபேரன்பிற்பூசைபுரிந்தனன்புவியுளோர்கட்குக்
காண்டகுமனையதானங்கணபதீச்சரமதென்பார். (உகூச)

புரமெரிபடுத்தோன்றனைப்பூசனைபுரிந்தபின்ன
ரெரிவிழிசிதறுமாறுவெருததமேலினிதினேறிச
சுரபதியயனவினோர்கடொழுதுடன்சூழ்நதுபோற்ற
வரவெனமாலோன்கையைசமாலமாவனந்திறபுக்கான். (உகூரு)

கயமுகனுற்பத்திப்படலமுற்றிற்று.

ஆ. திருவிருத்தம் க, சஎஉ.

---

# அனந்தன்சாபநீங்குபடலம்.

---

புக்கதொருபொழுதிலங்கண்முந்நோராலம்பொதிமிடையிருந்தமலனடிபொற்றுளுன்னி, மிக்கதவம்புரிமாலைங்கரந்துமுன்னோன்மேவியதுமனங்கொண்டுவிரைவினிங்கே, யக்கணமேயெதிர்சென்றுவழுத்திக்காணவம்மையளித்தருள்சாபமகறலோடுஞ், சக்கரமேமுதலியவைம்படைகளேந்தித்தணுதுதொலைப்பேருருவந்தன்னைப்பெற்றான். (க)

மாலோன்றொல்லுருவுதன்பான்மேவக்கண்டுமகிழ்சிறந்துசிவனருளைமனங்கொண்டேத்தி, மேலோனறனைமுன்னரெய்திவணக்கஞ்செய்துமீண்டுமவன்றனைத்துதித்துவிமலநீயென, பாலோங்குபூசனைகொண்டருளல்வேண்டும்பணித்தருள்கவாதிபராபரத்தினைபாலாய, மூலோங்காரப்பொருளாயிருந்தாண்முன்னமொழிந்தருளசாபந்தொலைத்தமுதல்வவென்றான். (உ)

ஐங்கரன்றனமாலுரைத்தமாற்றங்கேளாவன்னதுசெய்கெனவருளியங்கண்மேவக், கொங்குலவுமஞ்சனநீர்சாந்தமாலைகொழும்புகையேமுதலியனகொண்டுபோந்து, சங்கரனார்மதலைதனையருச்சித்தன்பாற்றுவறுபண்ணியம்பலவுஞ்சாலப்பீந்து, பொங்கியபாலவியினொடுமுன்னமார்த்திபோற்றியேயஃதொன்றுபுகலலுற்றான்.

வின்றும்புகல்கின்றதிங்கடன்னின்மிக்கமதிதனிலாரும்பக்கமாரு, மிநாளில்
யானுன்னையருச்சித்திட்டவியறகைபோல்யாருமினியிறிலாவுன், பொன்னருமலரா
டியேபுகலென்றுன்னிப்பூசைபுரிந்திடவுமவர்புன்கணெல்லா, மந்நாளேயகற்றிநீ
யுலவாச்செல்வமளித்திடவும்வேண்டுமிஃதருள்கவென்றான். (௪)

மாயனுரைகேட்டலுநீமொழிந்தற்றுகமகிழ்ந்தனநின்பூசையெனமதித்துக்கூ
றி, யாயவனுமயன்முதலாவுள்ளோர்யாருமன்பினொடுவாழ்த்திசைப்பவாருவென்
னுந், தூயதொருர்தியிலெய்திக்கணங்களாமேனோர்சூழ்ந்துவரக்கயிலையெனுநகட
ர்வெற்பி, னேயமுடன்போநதரனைவணக்கஞ்செயதுநீடருள்பெறறேநொல்லி
லயக்துற்றான். (௫)

வேறு.

அற்றைநாளிலரியயனாதியோர், நெற்றியநகணிமலன்பதங்களின்
முற்றுமன்பொடுமுமமுறைதாழ்ந்தருள, பெற்றுநீங்கினர்பேதுறனீங்கினா. (௬)

கரிமுகம்பெறுகண்ணுதற்பிள்ளைதாள், பரவிமுன்னம்பணிந்தனாநிற்புழி
யருள்புரிந்திடவன்னதொர்வேலையிற, பரிவினலொரபரிசினைசகூறுவார். (௭)

எந்தைகேண்மகியெம்மையலைத்திடுந், தந்திமாமுகத்தானவற்செற்றியா
ஙய்ந்துநாங்களுனதடியோமிவண், வந்துநல்குகைமமாறுமறறில்லையே. (௮)

னென்னல்காறுநிகரில்கயாசுரன், முன்னராற்றுமுறைப்பணியெந்தைமுன், னி
ன்னநாட்டொட்டியற்றுதும்யாமென, வன்னசெய்திரென்றனருணீர்மையான்.

இத்திறம்படுமெல்லையினின்றிடு, மத்தலைச்சுரர்யாவருமன்புறீஇக்
கைத்தலத்தைக்கபித்தமதாக்கியே, தததமததகநதாக்கினாமுமமுறை. (௧௦)

இணைகொள்கையையெதிரெதிர்மாற்றியே, துணைகொள்வார்குழைதொட்டன
ர்மும்முறை, கணைகொளகாலுங்கவானுஞ்செறிநதிடத், தணிவிலன்பொடுதாழ்ந
தெழுந்தேத்தினா. (௧௧)

இணங்குமன்புடன்யாருமிதாற்றியே, வணங்கிநிற்பமகிழ்சிறநதான்வரை
யணங்கின்மாமகனவ்வியனோக்கியே, கணங்களாாத்தனகாாக்கடலாமென. (௧௨)

நின்றதேவர்நிமலனைநோக்கியே, யுன்றன்முன்னமுலகுளாயாவரு, மினறுதொ
ட்டெமைப்போலிப்பணிமுறை, நன்றுசெய்திடநல்லருள்செய்கென. (௧௩)

கடனிறத்துக்கயமுகனத்திற, நடைபெறும்படிநல்கியமரர்கோ
னெடியமாலயனின்றுளருக்கெலாம், விடைபுரிநதுவிடுத்தனனெனபவே. (௧௪)

அம்புயக்கணரியயன்வாசவ, னும்பரவ்வரையொல்லையினீங்குறுத்
தம்பதந்தொறுஞ்சார்ந்தனர்வைகினர், தும்பியின்முகத்தோன்றலருளினால். (௧௫)

முந்தைவேதமுதலெழுத்தாகிய, வெந்தைதோற்றமியம்பினமிங்கினி, யந்தமில்
குணத்தாண்டகைக்கோாகுணம், வந்ததென்னென்றிமற்றதுகேட்டிநீ. (௧௬)

வேறு.

நற்குணமுடையநல்லோருநாடொணுச்
சிற்குணனுருமச்சிவன்பராபரன்
சொற்குணமுவகைத்தொடர்புமில்லதோர்
நிர்க்குணனவன்செயனிகழ்த்தற்பாலதோ. (௧௭)

பரவியவுயிர்க்கெலாம்பாசநீக்குவா
னருளினுருகியேயமலன்மாலயற்
கிருதொழின்முறையினையீந்துமற்றவைக்
குரியனகுணங்களுமுள்ளவாக்கினான். (௧௮)

முடித்திடலியற்றுமெம்முதல்வனத்தொழி
றடிப்பரும்வெஞ்சினநதன்னின்முற்றுமா
லடுத்தவப்பானமையாலதன்கட்டாமதம
படுத்தினனதற்றமபலருநசோவரால். (௧௯)

மாமறையளப்பிலவரம்பிலாசமந்
தோமறவுசவிர்யாரதொன்மரபிடைச்
காமருமுனிவராகணங்கட்கன்னவை
தாமதகுணத்தனெறசாற்றவல்லரோ. (௨௦)

வாலியநிமலமாம்வடிவங்கண்ணுதன்
மேலவனெய்துமோவேதம்விருசையின்
மூலமென்றவனையேமொழியுமோவிரு
சீலமில்லாக்கெவன்றோற்றுமவன்னரோ. (௨௧)

இமையவர்யாவருமிறைஞ்சுநாயனுசல்
விமலனன்றிருதியைவிளைக்குமபணபிறுற
றமகுணனெனறியதகனமைசெய்கையா
லமைகுணமியறகுணமறியறபாலரோ. (௨௨)

ஈததலுமளித்தலுமியற்றுவோர்களுா
சாத்திகராசதநதததஞ்செய்கையின
மாத்திரையலலதுமறறவாககவை
பார்த்திடினியற்கையாப்பகரலாருமோ. (௨௩)

அக்குணமானவையளிக்குஞ்செயகையாற
ருக்குறுமியற்கையத்தொல்லையோர்களபா
லிக்குணமல்லதோரிரண்டுஞ்சேருமான்
முக்குணநெறிசெலுமுனிவர்தேவர்போல். (௨௪)

நேமியாறகுருவெலாநிலமாயனுந
தோமறுகடலிடைத்துயில்கொளபான்மையு
மேமுறுமகந்தையுமபிறவுமெடடுமேற
ருமதராசதந்தானுமுறறவே. (௨௫)

அறிவொருங்குற்றுழியனையன்கண்ணுத
லிறைவனைவழிபடஇயேத்தியின்னரு
ணெறிவருதனமையுநீடுபோதமும்
பெறுதலிறசாத்திகமுறையும்பெற்றுளான். (௨௬)

மேனிபொற்கென்றலின்விமலவான்பொரு
ளுனெனுமருட்கையினவையிலீசனைத்
தானுணர்தெளிவினிற்றவத்திற்பூசயி
லானதுகுணனெலாமயனறனக்குமே. (௨௭)

ஆகலின்விருப்புடனல்லதெய்தினோ
ரோதியகுணவித்தருவர்கண்ணுத
னுதனுக்கனையதுனனுகுறுமையாற
பேதைமைமையொருதணமவன்கட்பேசுதல். (௨௮)

மூன்றெனவுளபொருள்யாவுமுன்னமே
யீன்றவன்கண்ணுதலென்னுநான்மறை
சான்றதுவாகுமாற்றவத்தர்க்கெனினு
மான்றதோரவன்செயலறியற்பாலதோ. (௨௯)

செங்கண்மான்முதலியதேவரேனையோ
ரங்கவரல்லவையகத்துள்ளவையே
யெங்குமாயவையுமியற்றுகின்றதோர்
சங்கரனொருவனைச்சார்பின்மேவுமோ. (௩0)

ஈறுசெய்முறையினையெண்ணித்தாமத
கூறினரல்லதுகுறிக்கொண்மேலையோ
வேறொருசெய்கையினைவிளம்பினாரல
ராறணிசெஞ்சடையமலனுக்கதோ. (௩௧)

வேறு.

என்றிவைபலவுந்தூயோனிசைத்தலுமினையவெல்லாம்
வன்றிறல்வெறுக்கையெய்திமயங்கலாற்றக்கனென்னும
புன்றொழில்புரியுந்தீயோனபொறுத்திலன்புந்திமீது
நன்றெனவறிதரேற்றுனொருசிலநவிலலுற்றான். (௩௨)

முனிவகேள்பலவுமீண்டுமொழிவதிறபயனென்னவெளிப்
பனிவரையுறையுநங்கோன்பகவனேயெனினுமாக
வனையவன்றனக்குவேள்வியவிதனையுதவேனீயு
மினியிவைமொழியல்போதியெனச்செயன்முடிப்பனென்றான். (௩௩)

வேறு.

வளங்குலவுதக்கனிதுபுகன்றிடலுந்ததீசிமுனிமனத்திற்சீற்றம்
விளைந்ததுமற்றவ்வளவில்வெருவியதுவடவையழல்விண்ணோர்நெஞ்சந்
தளர்ந்ததுபொன்மால்வரையுஞ்சலித்ததந்தககுலகிரியுநசரிப்பின்றாகி
யுளைந்தனவேலைகளேழுமொடுங்கியனநடுங்கியதிவ்வுலகமெல்லாம். (௩௪)

அக்கணமேமுனிவரன்றன்பெருஞ்சீற்றந்தனைநோக்கியாதோவென்று
மெக்குவடுமெக்கிரியுமெக்கடலுமெவ்வுலகும்யாவும்யாரு
தக்கனொருவன்பொருட்டாற்றளர்ந்திடுமோவெனமுனிவுதணிந்ததற்கு
ழொக்கலொடுமவணெழுந்துசிறுவிதியின்முகநோக்கியொன்றுசொல்வான். (௩௫)

சங்கரனைவிலக்கியின்றுபுரிகின்றமகஞ்சிதைகதக்கனின்றே
டிங்குறையுமமரரெலாமழிவுறவினையேயென்றுவிசைத்துப்பின்ன
ரங்கணுறுமறையோர்தம்முகநோக்கியந்தணரிலழிதூவானீ
ருங்கள்குலத்தலைமைதனையிழந்திட்டீர்கேண்மினெனவுரைக்கலுற்றான். (௩௬)

பேசரியமறைகளெலாம்பராபரனீயெனவணங்கிப்பெரிதுபோற்று
மீசனையுமன்பரையுநீற்றொடுகண்டிகையினையுமிகழ்ந்துநீவிர்
காசினியின்மறையவராயெந்நாளும்பிறந்திறந்துகதியுறாது
பாசமதனிடைப்பட்டுமறையுரையாநெறியதனிற்படுதிரென்றான். (௩௭)

இனையநெறியாற்சாபம்பலவுரைத்துத்தந்தமுனியிரண்டுபோது
முனிவர்தொகைத்தாக்குத்தசாலையுமாசிரமமுனளிச்சென்று
னனையவனறன்பினருற்றதவங்களெனபோனபெருந்தகவுமாற்றுநோன்பும்
புனைபுசமுஞ்செயுந்திருவுமாற்றமாமனைச்சேருக்கிரமபோயிற்றன்றே. (௯௰)

அனந்தன்சாபநீங்குபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க[illegible]௦.

# தானப்படலம்.

போனதோர்பொழுதிலவனறவசமிராமகதனுனிறபொருக்கெனறெயதிக
காறலாவியகொடியுக்கொ[illegible]மிடை[illegible]னபாருங்கலாகத்தானே
மானமாரவேதவல்லிமயங்கலதானறுவகுப்ப[illegible]மைமறந்தசனமை
யானதோர்தன[illegible]மித்பலவணடானமுடிவோர்னகணமையருமோ. (க)

வேறு

[illegible]சயாறுதன்னிம[illegible]ாகளபரிசு[illegible]டைவுரு
[illegible]செயகிலனபிறவஞமரு[illegible]னைநீயான
றநதத்தனையு[illegible]னறனயாயுங்கவான
[illegible]துபூ[illegible]னபுரி[illegible]னனமுசமனகளமொழிடா. (உ)

மா[illegible]றவானவுயாகா[illegible]
லெரறுவேண்டியவகையயலா[illegible]டயிதாபின
பொறமயகையாசமகு[illegible]மாமருகா[illegible]மபெரிது
மறையிலைலதோ[illegible]மயகலதசொலலிறபபளிததான. (௩)

ராலுமாமுகச[illegible]டவனசெயிதசெ[illegible]
மாலுமடாவருயகாதநடை[illegible]சதொழின மருசெய
வேலோகங்கியேதொடங்கினனயவிடை[illegible]விச
சாடுதனவிச[illegible]முநதனசாறறுவனறயியேன. (௪)

முனனரேதககனேவலுமவினைசெயனமுறையான
மனறுரெறுவோராடகசசாலியினமாடே
பொனனினமாலைவ[illegible]நவெசாவெளளியமபொருபபை
யனனதாமெனவனமாமயிறவசலயளிதத. (௫)

[illegible]தரீசுகியதிய பாலடிய லுமெனமல
பெசமாகியமுதுரை பிணைமயுமயிறவா
[illegible]மாதனஙகளுமவிரறலவிறாகவேயுலகின
மயகிரஙகளிறதுபசுரியாமெனவகுதத. (௬)

[illegible]டைளாபவிரைசெ[illegible]றுணடிகணிவிக
[illegible]ரும்பெம வுாகமுாயபபுறசசுமுமி
வெ[illegible]சாவியசா[illegible]சயமசதொறுமே
மைடலயா[illegible]ச[illegible]மெனவுயககிரறமாசேர. (௭)

அண்ணல்சேரவெருவதைதோயவைநொலையலேயாதிப்
பணணியஙகளுந்தாரமுஙகனிவலகபலவு
மண்ணின்மேலுறுகிரியெலாஙகுலகிரிமருங்கு
நண்ணிறெலனத்தொகுததனயாவருநயப்ப. (அ)

விருந்தினோர்கொளவிழுதுடன்பாறயிர்வெள்ளந்
திருந்துகங்கையும்யமுனையுமாமெனச்செயத
வருந்துமுண்டிகள்யாவையும்வழஙகுகோவதனிற
பொருந்துகின்றதுதந்ததெனமுலதுபுகழோ. (௯)

தாவில்பாளிதமான்மதஞ்சாநதுதண்பனிநீர
நாவிவெள்ளடைசெழும்பழுக்காயொருநறைமென்
பூவுமேனையபொருளகளுநலகினபுகழ்சோ
தேவர்கோமகன்பணிபுரிகின்றதோரதேநது. (௧0)

ஆவதிவ்வகையாவதுநல்கியேயஙகண்
மேவுகின்றதுமணியுமச்சஙகமும்வியன்சோ
காவுமமபுயநிதியமுநதககளுஙகடிபோ
னேவலாலருட்சாலையிலடைநதனவிமைப்பில. (௧௧)

கணிதமில்லதோர்பரிதிகணமேனியிறகளுலு
மணிகளோர்புடைதொகுததனவாடகவரைபோ
லணிகொளகாஞ்சனமோாபுடைதொகுத்தனவமபொற
பணிகளாடைகளோர்புடைதொகுத்தனபடைத்தே. (௧௨)

மற்றும்வேண்டியபொருளெலாமுதவியம்மருங்கி
லுறறவேலையத்தககணதேவலினெமுகா
நிறறல்போறறியமுனிவராயாவருநிலததோாக்
கிறறெலாமிவண்வழங்குதுமயாமெனவிசைததார். (௧௩)

வேறு.

இன்னவேலையிலிச்செயல்யாவையு, முன்னமேயுணர்முப்புரிநூலினர்
துன்னியேமனந்துணடவநதொலலையி, லனனசாலைதனையணைநதாரரோ. (௧௪)

சாலைகாண்டலுந்தக்கனையேத்தியே, பாலர்தன்மையிறபாடினராடினர்
கோலமாாபிற்குலாவியவெண்டுகில, வேலையாமெனவீசினின்முர்த்துளாா. (௧௫)

மிண்டுகின்றவவ்வேதியர்தங்களைக், கண்டுவம்மின்கதுமெனநீரெனுக்
கொண்டுசென்றுகுழுவொடிருததியே, யுணடிதன்னையுதவுதன்மேயினா. (௧௬)

மறுவில்செம்பொன்மணிகெழுதட்டைக, ளிறுதியில்லனயாவர்க்குமிட்டுமே
னறியவுண்டிகணல்கியின்னோர்தமக், குறவினுரெனவூட்டுவித்தாரவண். (௧௭)

அன்னகாலையரும்பசிதீர்தரத், துன்னவுண்டுஞ்சுவையுடைத்தாதலா
லுன்னியுன்னியிவ்வுண்டிகள்சாலவு, மினனம்வேணடுமெனவுரைப்பார்சிலா. ௧௮

குற்றமொன்றுளகூறுவதென்னினி, நற்றவஞ்செய்துநான்முகனுலிவ
ணுறறவுண்டியெலாமுணவோர்பசி, பெற்றிலோமெனப்பேதுறுவாசிலா. (௧௯)

வீறுமுண்டிமிசைந்திடவேண்டும்வாய், நூறுநூறதெனநுவல்வார்தமை
யேறவெண்டுமிதிலமையாதெனச, சீறியேயிகல்செய்திடுவார்சிலா. (௨0)

புலவர்கோனகர்போற்றியதேனுவக், தலகிலிவ்வுணவாக்கியதாமெனாச்
சிலர்புகன்றனர்தேக்கிடவுண்மிரோ, வுலவலீரெனவோதுகின்றார்சிலர். (உக)

அறிவிலாதவயன்மகன்யாகமின், றிறுதியாமென்றிசைத்தனரன்னது
பெறுதியேனுமிப்பேருணவேநமக், குறுதிவல்லேயிலுண்மினென்பார்சிலர். (உஉ)

உண்டிலேமிவணுண்டதிலீதுபோற், கண்டிலேமொருகாட்சியுமின்பமுங்
கொண்டிலேமின்றுகொண்டதிவீசனால்,விண்டிலேமெனின்மேலதென்பார்சிலர்

எல்லையில்லுணவீயுமித்தேனுவை, நல்லநல்லதொர்நாண்கொடியாத்திவண்
வல்லைபற்றிநம்மாநகரிற்கொடு, செல்லுதும்மெனச்செப்புகின்றார்சிலர். (உச)

மக்கள்யாவரும்வானவர்யாவரு, மொக்கல்யாவருமுய்ந்திடவாழ்தலாற்
றக்கனேற்றதவத்தினுமுண்டுகொண், மிக்கதென்றுவிளம்புகின்றார்சிலர். (உரு)

மைந்தனிட்டனமாந்திடநான்முகன், றந்திலன்வயின்சாலவுமாங்கவன்
சிந்தைமேலழுக்காறுசெய்தானெனு, நொந்துநொந்துநுவலுகின்றார்சிலர். (உசு)

குழுவுசேர்தருகுய்யுடையுண்டிகள், விழைவினேடுமிசைந்தனமாற்றவும்
பழுதிலாவிப்பரிசனர்தம்மொடு, மெழுவதெப்படியென்றுரைப்பார்சிலர். (உஎ)

இந்தநல்லுணவீண்டுநுகர்ந்திட, நந்தமைந்தரைநம்மனையாங்கொடு
வந்திலம்மினிவந்திடுமோவெனாச், சிந்தைசெய்தனர்செப்புகின்றார்சிலர். (உஅ)

அன்னபற்பலவார்கலியாமெனப், பன்னிநுங்கும்புனவர்கள்கேட்டன
ரென்னமற்றவையாவையுமார்தர, முன்னளித்துமுனிவரருத்தினர். (உகூ)

அருத்திமிச்சிலகற்றியருந்தவ, விருத்திமேவியவேதியர்தங்களை
யிருத்திமற்றெரிருக்கையில்வாசநீர், கரைத்தசந்தின்கலவைவழங்கினர். (௩0)

நளிகுலாவியநாவிரதம்வெண், பளிதம்வெள்ளடைபாகுடனேனவை
யளியுலாவுமணிமலர்யாவையு, மொளிறுபீடிகையுய்த்தனர்நல்கினர். (௩க)

அரைத்தசாந்தமணிந்துமெய்யெங்கணும், விரைத்தபூந்துணர்வேய்ந்துபைங்கா
யடை, பரித்துநின்றபனவர்புத்தேளுறுந், தருக்களாமெனச்சார்ந்தனரென்பவே.

ஆனபான்மையிலந்தணர்யாவரு, மேனகாதலின்வெய்தெனவேகியே
வானமண்ணிடைவந்தெனவேர்கெழு, தானசாலேதனையடைந்தார்களே. (௩௩)

அடையும்வேலேயயனருள்காதலன், விடையினலங்கண்மேவுமுனிவர, ரிடைய
றுதவர்க்கீந்தனரீந்திடும், கொடையினெலணணில்கொண்டலேப்போன்றனர். ()

பொன்னேநல்கினர்பூணொடுபூந்துகி, றன்னேநல்கினர்தண்சுடரோனென
மின்னேநல்கும்வியன்மணிநல்கினர், கன்னியாவுங்கறவையுநல்கினர். (௩௫)

படியிலாடகப்பாதுகைநல்கினர், குடைகணல்கினர்குண்டிகைநல்கினர்
மிடையும்வேதியர்வேண்டியவேண்டியாங், கடையாநல்கினாங்கைகள்சேப்பவே.

இந்தவண்ணமிறையதுந்தாழ்க்கிலர், முந்துநின்றமுனிவராண்டுறு
மந்தணாளர்க்கவினியொடாம்பொரு, டந்துநின்றுதயங்கினரோர்புடை. (௩௭)

அற்றமில்சிறப்பந்தணராயிடைப், பெற்றபெற்றபெருவளன்யாவையும்
பற்றிமெல்லப்படர்ந்தனர்பற்பல, பொற்றைசெய்தனர்போற்றினரோர்புடை. ()

வரத்தினாலும்லூரம்பில்வெறுக்கைதம், புரத்தினுய்த்திடும்புந்தியிலன்னவை
புரத்தினற்றமக்கொப்பரும்வேதியர், சிரத்தின்மேற்கொடுசென்றனரோர்புடை.()

அரிதனூர்தியுமன்னமுங்கிழ்த்திசை, யரிதனூர்தியுமாங்கவன்மாக்களு
மரிதனூர்தியுமாருயிர்கொண்டிடு, மரிதனூர்தியுமார்ப்பனவோர்புடை. (௪௦)

தானமீந்துதயங்கியதேவரு, மேனையோர்களுமிவ்விடையீண்டலின்
மீனமார்தருவிண்ணெனவெண்ணிலா, மானகோடிமலிகின்றவோர்புடை. (௪௧)

நரம்பின்வீணைஞரானுறும்வேய்ங்குழல், பரம்புதண்ணுமைபண்ணமைபாடனூல்
வரம்பினேய்ந்திடவானவர்நாடவே,யரம்பைமார்கணின்றுடினரோர்புடை.(௪௨)

தேவர்மாதருஞ்சிற்சிலதேவருந், தாவிலாமகச்சாலையின்வைகிய
காவுதோறுங்கமலமலர்ந்திடு, மாவிதோறுமுற்றுடினரோர்புடை. (௪௩)

வேதவல்லிவியப்புடனல்கிய, காதன்மாதருங்காமருவிண்ணவர்
மாதராருஞ்சசியுமகத்திரு, வோதிராடியங்குற்றனரோர்புடை. (௪௪)

இனையபற்பலவெங்கணுமீண்டலிற், கனைகொள்பேரொலிகல்லெனவார்த்தன
வனையன்வேள்விக்ககன்கடல்யாவையுந், துனையவந்தவணசூழ்ந்தனபோலவே.()

ஊனமேலுறும்பருமிம்பரு, மேனகாதலின்மிக்கவணீண்டுவ
வானயாறுவருநதியும்புவித், தானயாறுந்தழீஇயினபோன்றவே. (௪௬)

தானப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க, உ௫௬.

# வேள்விப்படலம்.

இகந்தசீர்பெறுமிப்பெருஞ்சாலையி, லகந்தைமிக்கவயன்பெருங்காதலன்
மகம்புரிந்ததுமற்றதுசிந்திடப், புகுந்தவாறும்பொருக்கெனக்கூறுகேன். (க)

வேறு

மீருத்துழாய்முடிமாலயன்பாங்குறமகத்தின்
கருத்தனாகியதீயவன்முன்னமேகருதி
வரித்தமேலவர்தங்களைநோக்கியேமரபி
னிருத்துமுத்தழலென்றலுநன்றெனவிசைந்தார். (உ)

முற்றுகாடியவிருத்திறோரணியின்முறையா
லுற்றவங்கியைவேதிகைப்பறப்பைமேலுய்த்துச்
சொற்றமந்திரமாயினுற்பரிதிகள்சூழ்ந்து
மற்றுமுள்ளதோர்விதியெலாமியற்றினர்மன்னோ. (௩)

ஆங்குமுத்தழல்விதிமுறைசெய்தலுமயன்சேய்
பாங்கருற்றிடியிருத்தினர்யாரையும்பாரா
வீங்கணுங்களுக்காகியசெய்கையைநினைந்து
தூங்கலின்றியேபுரிமினோகடிதெனச்சொன்னான். (௪)

சொன்னவாசகங்கேட்டலுமிருத்திஞேர்தொகையின்
முன்னமாகியவம்மகந்தனக்கவிமுழுதும்
வன்னியாதியாஞ்சமிதையுந்தருப்பையுமற்று
மின்னபோல்வதுங்கொடுவழங்கினர்களாறிருவர். (ரு)

அந்தவேள்விசெய்வித்தனரொருவராலவிக
ளெந்தையல்லவர்கொள்ளவேயவரவர்க்கிசைத்த
மந்திரந்தனைப்புகன்றனரொருவரவ்வானோர்
தந்தமைக்குறித்தழைத்தனரொருவர்பேர்சாற்றி (சு)

மற்றவர்க்கெலாமமைந்திடுமவிகளைமலர்க்கை
பற்றியங்கிவாயளித்தனரொருவரப்பரிசி
னற்றநோக்கியேயிருந்தனரொருவரங்கதற்கு
முற்றுநல்லருள்புரிந்தனரொருவரம்முதல்போல். (எ)

இருத்திஞேர்களும்பிறருமீதியற்றுழியாக
கருத்தறுகியதக்கனதேவரைக்கருதிப்
பரித்துநுங்குதிரென்றவிபுரிதொறும்பகர்ந்தே
யருத்தியுற்றனன்கடவுளர்தமக்கெலாமமுதின். (அ)

திருந்துகின்றநற்சுவையினூற்றூய்மையாற்றிகழு
மருந்துபோன்றனவென்னினுமுயிர்தொறுமனத்து
மிருந்தவெம்பிரானன்றியேமிசைதலினிமையோர்க்
கருந்துநீரலாநஞ்செனலாகியவவிகள். (கூ)

வேள்விப்படலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் க, உசுரு.

---

# உமைவருபடலம்.

---

பேசுமிவ்வேள்விபிதாமகன்மைந்த, னுசம்விளைந்திடநாடியியற்ற
மாசறுநாரதமாமுனியுற்றே, காசினிமேலிதுகண்டனனன்றே. (க)

கண்டனனலமர்கண்டனைநீககிப், புண்டரிகந்திகழ்புங்கவன்மைந்த
னண்டருடன்மகமாறறினனன்னுன், றிண்டிறல்சொல்லிதுசெய்திடலென்னு.(உ)

எண்ணியநாரதனெவ்வுலகுஞ்செய், புண்ணியமன்னதொர்பூங்கயிலாய
நண்ணிமுன்னின்றிடுநந்திகளுய்ப்பக், கண்ணுதல்சேவடிகைதொழுதுற்ருன்.(ங)

கைதொழுதேத்தியகாலையன்னுனை, மைதிகழ்கந்தரவள்ளல்கண்ணுற்றே
யெய்தியதென்னிவணிவ்வுலகத்திற், செய்தியதென்னதுசெப்புதியென்ருன். (ச)

எங்கணுமாகியிருந்தருள்கின்ற, சங்கரனிமமொழிசாற்றுதலோடு
மங்கதுவேலையிலம்முனிமுக்கட், புங்கவகேட்டியெனப்புகல்கின்ருன். (ரு)

அதிர்தருகங்கையதன்புடைமாயோன், விதிமுதலோரொடுமேதகுதக்கன்
மதியிலியாயோர்மகம்புரிகின்றான், புதுமையிதென்றுபுகன்றனனம்மா. (௬)

ஈங்கிதுகூறலுமெம்பெருமான்றன், பாங்கரின்மேவுபராபரைகேளா
வீங்கவன்மாமகமன்பொடுகாண்பா, னோங்குமகிழ்ச்சியுளத்திடைகொண்டாள்.()

அங்கணனல்லருளாலனையான்றன், பங்குறைகின்றனள்பாங்கரினீங்கி
யெங்கள்பிரானையெழுந்துவணங்கிச், செங்கைகுவித்திதுசெப்புதலுற்றாள். (௮)

தந்தையெனப்படுதக்கனியற்று, மந்தமகத்தினையன்பொடுநோக்கி
வந்திடுகின்றனன்வல்லையிலின்னே, யெந்தைபிரான்விடையீகுதியென்றாள். (௯)

என்றலுநாயகனேந்திழைதக்க, னுன்றனையெண்ணலனும்பர்களோடும்
வன்றிறலெய்திமயங்குறுகின்றா, னின்றவன்வேள்வியிலேகலையென்றான். (௧௦)

இறையிதுபேசலுமேந்திழைவேதாச், சிறுவனெனப்படுதியதோர்தக்க
னறிவிலனுறுமவன்பிழைதன்னைப், பொறுமதியென்றடிபூண்டனண்மாதோ. (௧௧)

பூண்டனள்வேள்விபொருக்கெனநண்ணி, மீண்டிவண்மேவுவல்வீடருள்செய்யுந்
தாண்டவநீவிடைதந்தருளென்றாள், மாண்டகுபேரருள்வாரிதிபோல்வான் (௧௨)

மாதிவைகூறலும்வன்மைகொடக்கன், மேதகுவேள்வியயற்பினைநோக்கும்
லையெலதுகண்டனைவலலலே, போதுதியென்றுபுகன்றனன்மேலோன். (௧௩)

வேறு.

அரன்விடைபுரிதலுமம்மையாங்கவன்
றிருவடிமலர்மிசைசென்னிதாழ்ந்தெழா
விரைவுடனீங்கியோர்விமானத்தேறினாள்
மரகதவல்லிபொன்வரையுற்றாலென. (௧௪)

ஐயைதன்பேரருளனைத்துமாங்கவன்
செய்யபொன்முடிமிசைநிழற்றிச்சென்றெனத்
துய்யதோர்கவரிபாற்சுமாலிமாலினித்
தையலார்மதிக்குடைதாங்கிநண்ணினார். (௧௫)

துவரிதழ்மங்கலசமனையாதியோர்
கவரிகளிரட்டினர்கவுரிபாங்கரி
விவர்தருமோதிமமெண்ணிலாதவோ
ரவிர்சுடர்மஞ்ஞையாலடைவதாமென. (௧௬)

கால்செயும்வட்டமுங்கவின்கொள்பீலியு
மால்செயுநறுவிரைமல்கவீசியே
நீல்செயும்வடிவுடைநிமலைபாற்சிலர்
வேல்செயும்விழியினர்மெல்லவேகினார். (௧௭)

கோடிகமடைப்பைவான்சூல்வுகண்ணடி
யேடுறுபூந்தொடையேந்தியம்மைதன்
மாடுறவணுகியேமானத்தேகினார்
தோடுறுவரிவிழித்தோகைமார்பலர். (௧௮)

நாதனதருள்பெறுநந்திதேவியாஞ்
சூதுறழ்பணைமுலைச்சுகேசையென்பவண்
மாதுமைதிருவடிமலர்கடீண்டிய
பாதுகைகொண்டுபின்படர்தன்மேயினாள். (௧௯)

கமலினியனிந்திதையென்னுங்கன்னிய
ரமலைதன்சுரிகுழற்கானபூந்தொடை
விமலமொடேந்தியேவிரைந்துசெல்கின்றார்
திமிலிடுகின்றதொல்சேடிமாருடன். (௨௦)

அடுத்திடுமுலகெலாமளித்தவம்மைசீர்
படித்தனரேகினர்சிலவர்பாட்டிசை
யெடுத்தனரேகினர்சிலவரேர்தக
நடித்தனரேகினர்சிலவர்நாரிமார் (௨௧)

பாங்கியர்சிலதியர்பலருமெண்ணிலா
வீங்கியபேரொளிவிமானத்தேறியே
யாங்கவள்புடையதாயணுகிச்சென்றன
ரோங்கியநிலவுசூழுடுககள்போன்றுளார். (௨௨)

தண்ணுறுநானமுஞ்சாந்துஞ்சந்தமுஞ்
சுண்ணமுங்களபமுஞ்சுடரும்பூணகளு
மெண்ணருந்துகில்களுமிட்டமஞ்சிகை
யொண்ணுதலார்பரித்தம்மைபின்போயினார். (௨௩)

குயில்களுங்கிள்ளையுங்குறிக்கொள்பூவையு
மயில்களுமஞ்சமுமற்றுமுள்ளவும்
பயிலுறவேந்தியேபரைமுன்சென்றன
ரயிலவிழியணங்கினரளப்பிலார்களே. (௨௪)

விடையுறுதுவசமும்வியப்பின்மேதகு
குடைகளுமேந்தியுங்கோடிகோடியா
மிடியுறழ்பல்லியமிசைத்துமம்மைதன்
புடைதனில்வந்தனர்பூதரெண்ணிலார். (௨௫)

அன்னவளடிதொழுதருள்பெற்றொல்லையிற்
பன்னிருகோடிபாரிடங்கள்பாறபட
முன்னுறவேகினன்மூரியேற்றின்மேற்
றொன்னெறியமைச்சியற்சோமநந்தியே. (௨௬)

இவரிவரித்திறமீண்டவெல்லைநீர்
புவனமுமுயிர்களும்புரிந்துநல்கிய
கவுரியம்மானமேற்கடிதுசென்றரோ
தவனுறுவோன்மகச்சாலைநண்ணினாள். (௨௭)

எலுறுமானநின்றிழிந்துவேள்வியஞ்
சாலையுளேகியேதக்கன்முன்னுறும்
வேலையினுமைதனைவெகுண்டுநோக்கியே
சீலமிலாதவனினையசெப்பினான். (௨௮)

வேறு.

தந்தைதன்னெறிந்தாயிலாதவன், சிந்தையன்புறுந்தேவியானநீ
யிந்தவேள்வியாணியற்றும்வேலையில், வந்ததென்கொலோமகளிர்போலவே. (உகூ)

மல்லல்சேருமிம்மாமகந்தனக், கொல்லைவாவெனவுரைத்துவிட்டது
மில்லையீண்டுநீயேகலாகுமோ, செல்லுமீண்டுநின்சிலம்பிலென்னவே. (௬0)

மங்கைகூறுவானமருகர்யார்க்குமென், றங்கைமார்க்குநீதக்கதக்கசீ
ருங்குநல்கியேயுறவுசெய்துளா, யெங்கடம்மையோரிறையுமெண்ணலாய். (௬க)

அன்றியும்மிவணுற்றும்வேள்வியிற், சென்றவென்னையுஞ்செயிர்த்துநோக்குவாய்
நன்றதோவிதோர்நவையதாகுமா, லுன்றனெண்ணம்யாதுரைத்தியென்னவே. ()

ஏயமுக்கணத்தியலுஞ்செய்கையுட், டீயதொல்குணச்செய்கையாற்றியே
பேயொடாடல்செய்பித்தன்றேவியாய், நீயுமங்கவனிலைமையெய்தினாய். (௬௩)

அன்னவன்றனோடகந்தைமேவலா, லுன்னையெள்ளினனுன்றுபின்னுளோர்
மன்னுகின்றவென்மருகர்யாவரு, மெண்ணினும்மெனக்கினியர்சாலவும். (௬௪)

ஆதலாலியானவர்கள்பாங்கரே, காதலாகியேகருதுதொல்வளன்
யாதுநல்கினனிந்தவேள்வியி, லோதுநல்லவியுளதுநல்கினேன். (௬௫)

புவனியுண்டமால்புதல்வனாதியா, மெவரும்வந்தெனையேத்துகின்றனர்
சிவனுநீயுமோர்சிறிதுமெண்ணலீ, ருவகையின்றெனக்குங்கள்பாங்கரில். (௬௬)

ஏற்றின்மேவுநின்னிறைவனுக்கியா, னூற்றும்வேள்வியுளவியுமீகலன்
சாற்றுகின்றவேதத்தின்வாய்மையு, மாற்றுகின்றனன்மற்றென்வன்மையால். (௬எ)

அனையதன்றியீண்டடுத்தநிற்கும்யான், றினையின்காறுமோர்சிறப்புஞ்செய்கல
னெனவியம்பலுமெம்பிராட்டிபாற், றுனையவந்ததாற்றோமில்சீற்றமே. (௬அ)

சீற்றமாயதீச்செறியுயிர்ப்பொடே, காற்றினோடழல்கலந்ததாமெனத்
தோற்றியண்டமுந்தொலைவிலாவியு, மாற்றுவானெழீஇமலகியோங்கவே. (௬௯)

பாருமுட்கினபரவுபௌவமுந், நீருமுட்கினநெருப்புமுட்கின
காருமுட்கினகரிகளுட்கின, வாருமுட்கினரமரராயுளார். (௭0)

பங்கயாசனப்பகவன்றானுமச், செங்கண்மாயனுஞ்சிந்தைதுண்ணென
வங்கணுட்கினாரென்னினுங்கவள், பொங்குசீற்றம்யார்புகலவல்லரே. (௭க)

வேலையன்னதில்விமலையென்பவள், பாலினின்றதோர்பாங்கிதாழ்ந்துமுன்
ஞாலம்யாவையுநல்குமுன்றனக், கேலுகின்றதோவினையசீற்றமே. (௭உ)

மைந்தர்யாரையும்வளங்கடம்மொடுந், தந்துநல்கியதாய்சினங்கொளா
வந்தமாற்றுவானமைந்துளாயெனி, னுய்ந்திடுந்திறமுண்டுபோலுமால. (௭௩)

அறத்தையீங்கிவனகன்றுளானெனச், செறுத்தியன்னதோர்சீற்றம்யாரையு
மிறைக்குமுன்னரேயீறுசெய்யுமாற், பொறுத்தியீதெனப்போற்றன்மேயினாள். ()

போற்றிகிற்றலும்புனிதைதன்பெருஞ், சீற்றமாயெழுந்தீயையுள்ளுற
மாற்றிவேள்விசெய்வானைநோக்கியே, சாற்றுகின்றனளினையதன்மையே. (௭௫)

என்னைநீயிவணிகழ்ந்ததன்மையை, யுன்னலேனெனையுடையநாயகன்
றன்னையெள்ளினாய்தரிக்கிலேனதென், கன்னமூடிசெல்கவேபோலுமால். (௭௬)

நிர்க்குணத்தனேநிமலனன்னவன், சிற்குணத்தனாய்த்திகழ்வானொரு
சொற்குணத்தனோதொலைக்குநாளடு, முற்குணத்தினைமுன்னுமாறலால். (சஎ)

துன்றுதொல்லுயிர்தொலைவுசெய்திடு, மன்றுதாமதத்தடுவதன்றியே
நன்றுநன்றதுஞானநாயகற், கென்றுமுள்ளதோரியற்கையாகுமோ. (சஅ)

தீயதன்றடுஞ்செயலுநல்லரு, ளாயிலாவிகளழிந்துந்தோன்றியு
மோய்விலாதுழன்றலைவுறுமலை, மாய்வுசெய்திறைவருத்தமாற்றலால். (சகூ)

ஆனவச்செயலழிவிலாததோர், ஞானநாயகற்கன்றிநாமெனு
மேனையோர்களாலியற்றலாகுமோ, மேனகாவலும்விதியுமென்னவே. (ருo)

முன்னரேயெலாமுடித்தநாதனே, பின்னுமத்திறமளிக்கும்பெற்றியா
னன்னவன்கணேயனைத்துமாகுமா, லின்னபான்மைதானிறைவன்வாய்மையே.

தோமிலாகமஞ்சுருதிசெப்பியே, யேமவிஞ்சைகட்கிறைவனாகியே
நாமறும்பொருணல்குமெந்தையைத், தாமதன்னெனச்சாற்றலாகுமோ. (ருஉ)

ஆதலாலவனனைவருக்குமோர், நாதனாமரோவவற்குநல்லவி
யீதல்செய்திடாதிகழ்தியஞ்சியே, வேதம்யாவையும்வியந்துபோற்றவே. (ருங)

சிவனெனுந்துணைச்சிறெழுத்தினை, நுவலுவோர்கதிநொய்திலெய்துவா
ரவனையெள்ளினாரிதாற்றுவா, ரவனையுய்குதியிழுதைநீரைநீ. (ருச)

வேறு.

முண்டகமிசையினோன்முகுந்தனாடியே
பண்டுணர்வரியதோர்பரனையாதியாக்
கொண்டிலரெள்ளியகொடுமையோர்க்கெலாந்
தண்டம்வந்திடுமெனமறைகள்சாற்றுமால் (ருரு)

ஈதுகேள்சிறுவிதியிங்ஙனோர்மகம்
வேதநாயகன்றனைவிலக்கிச்செய்தனை
யாதலானுனக்கும்வந்தடைகதண்டமென்
றோதினானுலகெலாமுதவுந்தொன்மையாள். (ருசு)

இன்னனகொடுமொழியம்பிவேள்விசெ
யந்நிலமொருவியிவ்வகிலமீன்றுளாள்
முன்னுளபரிசனமுறையின்மொய்த்திடப்
பொன்னெழின்மானமேற்புகுந்துபோந்தனள் (ருஎ)

அகன்றலையுலகருளயன்றன்காதலன்
புகன்றனவுன்னியுட்புழுங்கியைந்துமா
முகன்றிருமலையிடைமுடுகிச்சென்றனள்
குகன்றனைமேலருள்கொடிநுசுப்பினாள். (ருஅ)

ஒருவினளோர்தியையுமைதன்னாயகன்
றிருவடிவணங்கினள்சிறியதொல்விதி
பெரிதுனையிகழ்ந்தனன்பெருமவன்னவ
னரிதுசெய்வேள்வியையழித்தியென்னவே. (ருகூ)

எவ்வமில்பேரருட்கிறைவனாகியோ
னவ்வியங்கரமுடைநாதனாதலி
னவ்வுரைகொண்டிலனாகவம்பிகை
கவ்[illegible]யொடிணையனகழறன்மேயினாள். (௬௦)

மேயினகாதலும்வெறுப்புநிற்கிலை
யாயினுமன்பினேற்காகவன்னவன்
றீயதோர்மகத்தினைச்சிதைத்தல்வேண்டுமென்
ணாயகனேயெனாநவின்றுபோற்றினாள். (௬௧)

உமைவருபடலமுற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௧,௩௨௬.

# வீரபத்திரப்படலம்.

அந்தவெல்லையுமையாளுடையவண்ணலகிலந்
தந்தமங்கைதனதன்பினைவியந்துதளருஞ்
சிந்தைகொண்டசெயன்முற்றியிடுமாறுசிறிதே
புந்தியுள்ளுறநினைந்தனனினைந்தபொழுதே. (௧)

பொன்னின்மேருவினிருந்திடுபொலங்குவட்டெலா
மின்னும்வெள்ளிமுலைமேற்கொடுவிளங்கியதென
மன்னுதண்சுடர்மதிக்குறைமிலைச்சுமவுலிச்
சென்னியாயிரமும்வான்முகடுசென்றொளிரவே. (௨)

விண்டலந்தனிலிலங்குசுடரின்மிடலினைக்
கண்டலந்தரவொதுங்குவனபோற்கதிருலா
மண்டலந்திகழ்முகந்தொறும்வயங்குபணியின்
குண்டலங்களிணைகொண்டகுழைகொண்டுலவவே. (௩)

ஆன்றதிண்கடல்வறந்திடவிறந்ததனிடைத்
தோன்றுகின்றதொர்மடங்கல்வலியின்றுதொலைய
மூன்றுகண்கண்முகமாயிரமுமேவிமுனிவாற்
கான்றவங்கிகளினண்டமுழுதுங்கரியவே. (௪)

சண்டமாருதமுமங்கியுமொதுங்குதகவாற்
றுண்டமீதுறுமுயிர்ப்புடனெழுந்தசுடுதீ
யண்டகோளமுடனப்புறமுமாகியழியாக்
கொண்டலூடுதவழ்மின்னுவெனவேகுலவவே. (௫)

மலரின்வந்துறையுநான்முகன்முகுந்தன்மகவான்
புலவர்தம்புகழனைத்தையுநுகர்ந்தபொழுதிற்
சிலவொழுங்கொடிதழின்புடைகள்சிந்தியெனவே
நிலவுசெய்தபிறைவாளெயிறுநின்றிலகவே. (௬)